பஞ்சமரபில் இசைமரபு

அங்கயற்கண்ணி

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

பஞ்சமரபில் இசைமரபு

பஞ்சமரபில் இசைமரபு

முனைவர் (திருமதி) பொ.சா. லோச்சன்
என்கிற அங்கயற்கண்ணி
விரிவுரையாளர், இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN: 81—7090—140—5

NR 441
N89

தமிழ்ப் பல்கலைக்கழக இணைக்காப்பக இலக்கம்
166643
சென்னை-600 008.

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 113

திருவள்ளுவர் ஆண்டு 2020 ஆவணி-செப்டம்பர் 1989

நூல்: பஞ்சமரபில் இசைமரபு

ஆசிரியர்: பொ.சா. லோச்சன் என்கிற அங்கயற்கண்ணி

பதிப்பு: முதற்பதிப்பு

விலை: ரூ. 30/-

அச்சு: கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ்

பொருளடக்கம்

பக்கங்கள்

முன்னுரை ...vii

இயல் – ஒன்று: பஞ்சமரபு பற்றிய ஆய்வுச் செய்திகள் ...1 – 33

நூல் அமைப்பு
பதிப்பும் ஓலைச்சுவடியும்
தலைப்பு விளக்கம்
உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டும் பஞ்சமரபு வெண்பாக்கள்
இசை நூல்களில் பஞ்சமரபு வெண்பாக்கள்
பஞ்சமரபு – ஒரு தொகுப்பு நூல்
– ஆசிரியர்
– உரையாசிரியர்
– காலம்

இயல் – இரண்டு: யாழ்மரபு ...34 – 62

யாழ் வகைகளும் நரம்புகளும்
யாழுக்குரிய மரங்கள்
வில்யாழ்
பேரியாழ்
மகரயாழ்
சகோடயாழ்
சீறியாழும் செங்கோட்டியாழும்
யாழும் வீணையும்
யாழிசைத் தொழில்முறை.

இயல் – மூன்று: பாலை இலக்கணம் ...63 – 89

ஏழிசை
இசைபுணர் குறிநிலை
பாலை
வட்டப்பாலையின் அமைப்பும் அதில் ஏழிசை இசைதலும்

ஏழு பாலைகளின் பிறப்பு
வட்டப் பாலையில் நாற்பெரும்
பண்கள் பிறக்கும் முறை

இயல் - நான்கு: பண் இலக்கணம் ...90 - 133

பண் - திறம்
103 பண்களின் வகைப்பாடு
பண்களும் பாடுவதற்கேற்ற காலங்களும்
மங்கலப் பண்கள்
தேவாரப் பண்கள்
பாலைப் பெரும் பண்ணும் - திறங்களும்
- அவற்றின் வகைகளும்
குறிஞ்சிப் பெரும் பண்ணும் - திறங்களும்
- அற்றின் வகைகளும்.
மருதப் பெரும் பண்ணும் - திறங்களும்
- அவற்றின் வகைகளும்
செவ்வழிப் பண்ணும் - திறங்களும்
- அவற்றின் வகைகளும்

இயல் - ஐந்து: வங்கிய மரபு ...134 - 144

வங்கியம் செய்வதற்குரிய மூலப் பொருள்கள்
மரத்தின் இலக்கணம்
வங்கியத்தின் வடிவ இலக்கணம்
வங்கியத்தில் இசை பிறத்தல்

இயல் - ஆறு: கண்ட மரபு ...145 - 163

ஐம்பூதங்களும் மனித சரீரமும்
பத்து (தச) நாடிகள்
பத்து (தச) வாயுக்கள்
சரீரத்தில் ஓசையினளவு
சரீரத்தில் ஓசை பிறத்தல்
ஆளத்தி இலக்கணம்
ஆளத்தி வகைகள்
பண் நீர்மை
பாடுவதற்குரிய இன்னொலிகள்

மிடற்றுக் கேற்றவை - ஏலாதவை
பாடுதற்காகாத ஒலிகள்
அரங்கில் பாடத் தகுதியுடையவர்
- தகுதியிலாதவர்
பஞ்சமா சத்தம்.

இயல் - ஏழு: இசைப்பாக்களும் இசை புணர்த்தலும் 164- 192

நிறங்கள்
மூவகை நிறமும் நிற வேற்றுமைகளும்
நிறங்களின் வகைப்பாடு
இசைப்பாக்கள்
இசைப்பாக்களின் வகைப்பாடு
இசைப் புணர்ப்பு
இசை நுளைபு
இசை புணர்ப்பவனின் தகுதிகள்
இசைக்குரியவர்கள்.

இயல் - எட்டு: ஆய்வு முடிபுகள் ...193 - 199

பிற்சேர்க்கைகள்:

ஏழிசையின் விவரம் ...200
பண்களின் விவர அட்டவணைகள் ...201

கலைச்சொற்கள்: ...222

முன்னுரை

தற்கால வழக்கில் இருக்கும் கருநாடக இசை என்னும் தமிழிசை, இலக்கியம், இலக்கணம் என்ற இரண்டு பாகுபாடுகளைக் கொண்டது. பண்டைக் காலத்தில் இசைத் தமிழ் இலக்கண நூல்கள் செய்வதற்குப் பல இலக்கியங்கள் அடிப்படையாக இருந்தன என்பது தெரிந்ததே. சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றிலுள்ள இசைக் குறிப்புகளும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திலுள்ள இசைச் செய்திகளும், இதன் உரைகளான அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் இசைத்தமிழ் இலக்கணக் கருவூலங்களாகும்.

சங்க காலத்தில் முத்தமிழுள் ஒன்றான இசைத்தமிழின் இலக்கணங்கூறும் நூல்கள் பல இருந்தன. சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் தம் உரைப்பாயிரத்தில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம் முதலிய நூல்களும், பரதம், அகத்தியம் முதலாகவுள்ள நாடகத்தமிழ் நூல்களும் இறந்தொழிந்தன எனவும், செயிற்றியம், குணநூல் என்பனவும் வழக்கிலிருந்து மறைந்தன எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், சிகண்டியார் இயற்றிய இசை நுணுக்கம், யாமளேந்திரர் செய்த இந்திர காளியம், அறிவனார் செய்த பஞ்சமரபு, ஆதி வாயிலார் செய்த பரத சேனாபதியம், பாண்டியன் மதிவாணனார் செய்த மதிவாணர் நாடகத் தமிழ் நூல் என்னும் ஐந்து நூல்களும் தம் காலத்தில் வழக்கிலிருந்தன எனவும், இவை ஐந்தும் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள இசை நாடக நுட்பங்களை விளக்குவதற்கு முழுதும் துணை செய்வன அல்ல எனினும் இவற்றை ஓரளவு துணையாகக் கொண்டு தமது உரை அமைந்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

வடமொழியில் பரத முனிவர் இயற்றிய நாட்டிய சாத்திரத்தின் (2 ஆவது நூற்றாண்டு) சில பகுதிகளும், இதனைப்பின்

பற்றி இயற்றப்பட்ட மதங்கரின் பிரகத்தேசி (7 ஆவது நூற்றாண்டு) நாரதரின் சங்கீத மகரந்தம் (9 ஆவது நூற்றாண்டு) பார்ச்வ தேவரின் சங்கீத சமயசாரம் (11 ஆவது நூற்றாண்டு) சாரங்கதேவரின் சங்கீத ரத்னாகரம் (13ஆவது நூற்றாண்டு) ஆகிய இசை நூல்கள் தமிழ்நாட்டில் வழங்கிவந்த இசையின் அடிப்படையில் எழுந்த இசை இலக்கண நூல்களாக விளங்கின. இந்நிலையில் தமிழிசையைப் பற்றித் தமிழில் எழுதப்பட்டுள்ள தாலும், அடியார்க்கு நல்லார் காலத்தில் வழக்கிலிருந்த நூல் என்கிற வகையிலும் "பஞ்சமரபு" என்னும் அரிய நூல் முக்கியத் துவம் பெறுகிறது. இந்நூல் தற்காலத்தில் மூலத்துடனும் பழைய உரையுடனும் பதிப்பாசிரியரின் அடிக்குறிப்புகளுடன் இரண்டு பகுதிகள் சேர்ந்ததோர் புத்தகமாக 1975–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வரிய நூலின் ஏட்டுச்சுவடியைத் தேடிப் பாதுகாத்து வைத்துப் பதிப்பித்த பெருமை திரு வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களையே சாரும். மற்றும் இந்நூலினை வெளியிடுவதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்ட பொள்ளாச்சி திரு நா.மகாலிங்கம் அவர்களும், இசைத்தொடர்பான குறிப்புகள் பலவற்றைச் சேகரித்துத் தொகுத்தளித்த மறைந்த திரு குடந்தை சுந்தரேசனார் அவர்களும் இந்நூல் புத்தக வடிவம் பெறக் காரணமாக இருந்தவர்கள். இந்நூற்பதிப்பிற்குப் பயன்பட்ட ஓலைச்சுவடியொன்று கோயமுத்தூரிலுள்ள பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சீவக சிந்தாமணி, கல்லாடம் முதலிய தமிழ் இலக்கியநூற் குறிப்புகளிலிருந்து 'இசைமரபு' என்றதொரு நூல் பழங்காலத்தில் இருந்ததாகவும், பின்னர் அது இறந்துபட்டதாகவும் தெரிகிறது. உரையாசிரியர்கள் இந்நூலிலிருந்து சில செய்யுட்களை மேற்கோள் காட்டியிருக்கின்றனர்.

தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள 'பஞ்சமரபில் இசை மரபு' என்னும் தலைப்பிலான இவ்வாய்வு நூல் 1975–ஆம்

ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட பஞ்சமரபு நூலின் இசைமரபினை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. பஞ்சமரபு - இசை மரபில் கூறப்பட்டுள்ள பண்டைய இசைத்தமிழின் அடிப் படை இலக்கணங்களைச் சிலப்பதிகார உரையிற் கூறப்பட்ட விளக்கங்களோடு ஒப்பிட்டும், இவற்றைத் தற்கால வழக்கி லுள்ள இசை இலக்கணங்களோடு தொடர்புப்படுத்தியும் தெளி வாக அறிவது இவ்வாய்வு நூலின் முக்கிய நோக்கமாகும்.

பஞ்சமரபு நூலாசிரியரைப் பற்றியும், இந்நூல் இயற்றப் பட்ட காலத்தைப் பற்றியும், இதில் அடங்கியுள்ள செய்தி களைப் பற்றியும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இக்கருத்தினை ஒன்றுதிரட்டி அவற்றைப் பல கோணங்களில் ஆராய்ந்து தெளிவான முடிவைக் கொடுக்க வேண்டுமென்பது இவ்ஆய்வின் மற்றொரு நோக்கமாகும்.

இந்த ஆய்வில், இசையின் அடிப்படை இலக்கணங்களான பாலை, பண், ஆளத்தி, இசைப்பாக்கள், இசை புணர்த்தல், இசைக்கருவிகள் ஆகியவற்றை அப்பதிப்பில் உள்ளவாறே அமைக்காமல், பஞ்சமரபு நூலில் ஆங்காங்குக் காணப்படும் இச்செய்திகளைத் துணையாகக் கொண்டு இவற்றைத் தற்கால முறையுடன் ஒப்பிட்டுத் தனித்தனி இயல்களில் கொடுக்கப்பட் டுள்ளன.

இவ்வாய்வு ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்டதொரு நூலினை மையமாகக்கொண்டு திகழ்வதால், இவ்வாய்வுக்காகப் பஞ்சமரபு-மூலமும் உரையும் அடங்கிய ஓலைச்சுவடியின் இசை மரபுப் பகுதி முழுமையாகப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. மற்றும் பல இசை நூல்களிலிருந்தும், தமிழிலக்கியங்களிலிருந் தும், சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் தேவாரப் பண்ணா ராய்ச்சிக் கூட்ட அறிக்கைகளிலிருந்தும் ஆய்வுக் குறிப்புகள் சேகரிக்கப்பட்டு அவற்றால் எட்டு இயல்களில் இவ்வாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

முதல் இயல் பஞ்சமரபு பற்றிய ஆய்வுச்செய்திகள் என்னுந் தலைப்பில் அமைந்தது. இதில் பஞ்சமரபின் நூலமைப்பு

பஞ்சமரபு பதிப்பினை ஓலைச் சுவடியின் இசை மரபோடு ஒப்பிடுதல், பஞ்சமரபின் தலைப்பு விளக்கம் ஆகிய செய்திகளும்; அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர்' நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டும் பஞ்சமரபு வெண்பாக்கள்—பரத சங்கிரகம், தாள சமுத்திரம், இசைமரபு போன்ற இசை நூல்களிற் காணப்படும் பஞ்சமரபு வெண்பாக்கள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புக்களும்; பஞ்சமரபு ஆசிரியர், உரையாசிரியர் குறித்த செய்திகளும் பஞ்சமரபின் காலம் குறித்த பல அறிஞர்களின் கருத்துக்களும் ஆராயப்பட்டுள்ளன.

'**யாழ்மரபு**' என்னும் தலைப்பினை உடைய இரண்டாம் இயலில் பஞ்சமரபின் வெண்பா, உரைகளிற் கூறப்பட்டுள்ள யாழ் வகை, அவற்றில் பயிலும் நரம்புகள், யாழ் செய்வதற்குரிய மரங்கள், வில்யாழ், பேரியாழ் சகோடயாழ், சீறியாழ், செங்கோட்டி யாழ் ஆகியவற்றின் உறுப்புக்களும் அவற்றின் இலக்கணங்களும், யாழ்-வீணை ஒப்பீடு, யாழிசையின் தொழிற்கைகள் (இசைக்கரணம்) கலைத்தொழில் ஆகிய செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.

மூன்றாம் இயல், '**பாலை இலக்கணம்**' என்னும் தலைப்பில் அமைந்து உள்ளது. இதில் ஏழிசையின் விவரம், பாலை என்பதன் பல்வேறு பொருள்கள், வட்டப்பாலையில் 12 இராசிகளை அமைத்தல், 12 இராசிகளில் ஏழு நரம்புகள் இசைதல், செம்பாலை, படுமலைப்பாலை முதலான ஏழு பாலைகளின் பிறப்பு, வட்டப்பாலையில் நாற்பெரும் பண்கள் பிறக்கும் முறை ஆகிய விவரங்கள் அடங்கியுள்ளன.

இயல் நான்கு, '**பண் இலக்கணம்**' என்னும் தலைப்புடையது. இதில், பண், திறம், என்ற சொற்களின் விளக்கமும், 103 பண்கள் எவ்வாறு வகைப் படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்த செய்திகளும் பஞ்சமரபின் அடிச்சுவட்டில் ஆராயப்பட்டுள்ளன. மேலும் இதில் 103 பண்களும் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை என்னும் தமிழகநிலப் பாகுபாட்டின் அடிப்படையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

'வங்கிய மரபு' என்னும் ஐந்தாம் இயலில் வங்கியம் செய்வதற்குரிய பொருட்கள், வங்கியம் செய்வதற்குரிய மரத்தின் இலக்கணம், பிண்ட இலக்கணம், துளையளவு இலக்கணம், வங்கியம் இசைக்கும் முறை ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

'கண்டமரபு' என்னும் ஆறாம் இயலில் பஞ்சமரபின் கண்ட மரபிலுள்ள செய்திகள் மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. முதற் பிரிவில், மனித சரீரத்தைப் பஞ்ச பூதங்களுடன் ஒப்பிடுதலும், பத்து (தச) வாயுக்கள், பத்து (தச) நாடிகள் குறித்த செய்திகளும் அடங்கியுள்ளன. இரண்டாம் பிரிவில் சரீரத்தில் ஓசை பிறத்தல், ஆளத்தி இலக்கணம், ஆளத்தி வகைகள் ஆகிய பொருள் விளக்கங்கள் அடங்கியுள்ளன. பிரிவு மூன்றில், பாடுதற்குரிய இன்னொலிகள், மிடற்றுக் கேற்றவை, ஏலாதவை, பாடுதற்கல்லாத ஒலிகள், அரங்கில் பாடத் தகுதியுடையவர், தகுதியில்லாதவர் ஆகிய செய்திகள் அடங்கியுள்ளன.

'இசைப்பாக்களும் இசைபுணர்ப்பும்' என்னும் தலைப்புடைய ஏழாம் இயலில் 'இசை' என்பதன் பெயர்க்காரணம், நிறம், நிறங்களின் வகைப்பாடு, எட்டு வகையான இசைப்பாக்கள் ஆகிய விளக்கங்களும், இசைப்புணர்ப்பு, இசை நுலளபு, இசை புணர்ப்பவனின் தகுதிகள், இசைக்குரியவர்கள் ஆகிய செய்திகளும் அடங்கியுள்ளன.

இயல் எட்டு, **ஆய்வு முடிவுகளைத்** தொகுத்துக் கூறுவதாக அமையப்பெற்றுள்ளது.

பிற்சேர்க்கையில், பஞ்சமரபு வெண்பா, உரைகளிற் கண்ட ஏழிசையின் விவரங்களும், 103 பண்களின் விவரங்களும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

இசைத்துறையில் இவ்வாய்வுப்பணியினை மேற்கொள்ள வாய்ப்பளித்தமைக்குத் தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய். சுப்ரமணியம் அவர்களுக்கும் இந்நூலைத் தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடாக

வெளிக்கொணர்வதற்கு அனுமதியளித்த இந்நூல் துணை வேந்தர், மாண்புமிகு முனைவர். ச. அகத்தியலிங்கம் அவர் களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஆய்வின் தட்டச்சுப் படிகளை முழுவதும் படித்து, பயனுள்ள ஆலோசனைகளை வழங்கியும் சில திருத்தங்களைச் செய்தும் உதவிய தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர், பேரா .து.ஆ. தனபாண்டியன் அவர்களுக்கும், பாவல ரேறு பேரா. ச. பாலசுந்தரம் அவர்கட்கும் நன்றியுடையேன். என்னை ஆய்வுப்பணயில் ஈடுபடுத்தி, அவ்வப்போது ஒருசில அரிய ஆலோசனைகளை அளித்து என்னை உற்சாகப்படுத்தி வரும், என் ஆசிரியையும் சென்னைப் பல்கலைக் கழக இசைத் துறைப் பேராசிரியையுமான முனைவர் எஸ். சீதா அவர்களுக் கும் என் நன்றியுரியது.

இந்நூலை வெளியிடும் முயற்சியில் பலவகையிலும் ஊக்க மளித்துக் குறுகிய காலத்தில் இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை உதவி இயக்கு நர் திரு செ. இரெ. செயச்சந்திரன் அவர்களுக்கும் என் நன்றியுரியது.

தஞ்சாவூர்.
7-9-89

இ. அங்கயற்கண்ணி.

இயல் - ஒன்று

பஞ்சமரபு பற்றிய ஆய்வுச் செய்திகள்

தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள[1] பஞ்ச மரபு என்னும் நூல், 'பஞ்ச' என்னும் வடமொழிச் சொல்லாலும், 'மரபு என்னும் தமிழ்ச் சொல்லாலும் ஆக்கப்பட்டுள்ளது. 'பஞ்ச' என்பதை 'ஐந்து' எனவும், மரபு என்பதை 'வழக்கு' எனவும் பொருள் கொள்ளலாம். மரபு அல்லது வழக்கினை நூல்வழி வந்த வழக்கு, செவிவழி வந்த வழக்கு, தொன்மை முறை அல்லது தொன்று படு முறை, வம்புறு மரபு என்றிவ்வாறு வகைப்படுத்திக் கூறலாம். இசை, வாச்சியம், தாளம், நிருத்தம், அவிநயம் ஆகிய ஐந்து பொருள்களை இம் மரபுகளின் வாயிலாகத் தொகுத்துக் கூறுவதற்காக எழுந்ததே 'பஞ்ச மரபு' என்னும் இந்நூல் எனக் கொள்ளலாம்.

பஞ்சமரபு - நூல் அமைப்பு

தற்போது வெளியிடப்பட்டுள்ள 'பஞ்சமரபு' என்னும் நூல் பெரும்பிரிவு, சிறு பிரிவு என்ற இரு வகைகளில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இசை, வாச்சியம், நிருத்தம், அவிநயம், தாளம்' என்னும் ஐந்து பெரும்பிரிவுகளும், அவற்றுள் பல உட் பிரிவுகளும் அடங்கியுள்ளன. இந்நூற்றொடக்கத்தில் 'பாயிரம்' என்னுந் தலைப்பில் ஆறு செய்யுள்கள் காணப்படுகின்றன. இப் பகுதியில் காப்புச் செய்யுளும், அவையடக்கமாக நூற் பெயர், காரணம், நூலாசிரியர், நூலினளவு, பயன் ஆகிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

முதற் பெரும்பிரிவான இசை மரபில், (அ) யாழ்மரபு, (ஆ) வங்கியமரபு, (இ) கண்டமரபு, (ஈ) திருத்த மரபு, அல்லது நிறத்த மரபு (உ) வகையொழிபு மரபு என்னும் ஐந்து சிறு பிரிவுகளும், இரண்டாம் மரபான வாச்சிய மரபில், (அ) முழவு மரபு, (ஆ) பிண்ட மரபு, (இ) எழுத்து மரபு,

என்னும் மூன்று சிறு பிரிவுகளும் இந் நூலின் முதற் பகுதியில் அடங்கியுள்ளன.

நூலின் இரண்டாவது பகுதியில் மூன்று பெரும் பிரிவுகளும், பிற்சேர்க்கையும் காணப்படுகின்றன. மூன்றாவது பெரும் பிரிவான நிருத்த மரபில் (அ) நிருத்த வகை மரபு. (ஆ) தாண்டவ மரபு, (இ) அகமார்க்கப் பொருள் சதி வரலாறு மரபு, (ஈ) அகமார்க்கப் பொருள் தரு வரலாறு மரபு, (உ) கூத்திலக்கண மரபு என்னும் ஐந்து சிறு பிரிவுகள் அடங்கியுள்ளன. நான்காவது பெரும் பிரிவான அவிநய மரபில் (அ) ஒற்றைக்கை மரபு, (ஆ) இரட்டைக்கை மரபு. (இ) அங்கக் கிரியை மரபு, (ஈ) காற்றொழில் மரபு, (உ) அரங்க விலக்கண மரபு, (ஊ) பிரம்பிலக்கண மரபு என்னும் ஆறு சிறு பிரிவுகள் அடங்கியுள்ளன. ஐந்தாவது பெரும் பிரிவான தாள மரபில் (அ) தாள மரபு வரலாறு, (ஆ) அட்டகண மரபு, (இ) தாள நூற்பா மரபு என்னும் மூன்று சிறு பிரிவுகளும். பிற்சேர்க்கையாகத். 'தாண்டவப் பொதுவியல்' என்னும் பிரிவும் அடங்கியுள்ளன.

பஞ்சமரபின்[2] ஐந்தாவது பாயிரவுரையிலிருந்து இந்நூல் இருநூற்று நாற்பது வெண்பாவால் முற்றுப் பெற்றது என்று அறியலாம். ஆனால், இந் நூற் பதிப்பில் 203 வெண்பாக்களே காணப்படுகின்றன. அதிலும் சில வெண்பாக்கள் வேறு நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. வெண்பா எண்ணமைப்பில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றைத் திருத்திச் சரியான எண்கள் கொடுக்குமிடத்து 208 வெண்பாக்கள் என்னும் அளவில் அமையும்.

பிற்சேர்க்கையான தாண்டவப் பொதுவியலில் 33 வெண்பாக்கள் காணப்படுகின்றன. அவை 208 வெண்பாக்களுடன் சேரும்போது மொத்தம் 241 வெண்பாக்கள்ஆகத், தற்போதுள்ள பதிப்பில் அடங்கியுள்ளன என்று கொள்ளலாம்.

பஞ்சமரபு – பதிப்பும், ஓலைச்சுவடியும்

ஓலைச் சுவடியினின்றும் பதிப்பிக்கப்பட்டதான பஞ்சமரபின் சுவடி, எங்கு, யாரால் எழுதி வைக்கப்பட்டது என்ற

விவரமும், இச்சுவடி எவ்வாறு பதிப்பிக்கப் பட்டஃது என்ற விவரமும், இந்நூற் பதிப்பாசிரியரான திரு தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களின்[3] கையேட்டுப் பிரதியிலும், பஞ்சமரபு பதிப்பு முன்னுரையிலும் காணப்படுகின்றன.

'கொங்கு நாட்டின் காங்கேய நாட்டு மடவளாகம்' என்னும் ஊரில் சுமார் 85 ஆண்டுகட்கு முன்பு (பிலவங்க வருஷம் ஐப்பசி மீ ஏழாந்தேதி எழுதி முடிந்தது) அவ்வூர் பச்சோட நாதர்தேவஸ்தான தர்மகர்த்தாவாயிருந்த இலட்சுமண பாரதி யாருடைய குமாரன் தம்பான் புலவன் வெள்ளச்சி புத்திரன் என்பவரால் எழுதி வைக்கப்பட்டது (பிரதி செய்யப்பெற்றது). இச்சுவடி அகத்திய பரதம் என்ற நூலின் சிற்சில பகுதிகளும், பஞ்சமரபு மூலமும் உரையும், தாண்டவச்சிந்து என்னும் நூலின் பகுதி கூறும் தாளமரபு நூல்களிரண்டுடனும் கூடியதாகவும்; இது முறை பிறழ்ந்தும், பிழைமலிந்தும், குறைவுற்றும் காணப் பட்டதாகவும் பதிப்பாசிரியர் கூறுகிறார். மேலும் இதன் நல்ல பிரதிகள் வேறு பலவிடங்களில் எங்கேனும் கிடைக்கலா மென்று பல நாள் தேடியும் கிடைக்கவில்லை என்றும் கிடைத்த இச்சுவடியைக் காகிதப் பிரதி எடுத்து நன்கு பரிசோதித்து, பல அடிக் குறிப்புகள் சேர்த்து ஒரு நூலாக வெளியிடப்பட்டிருப்ப தாகவும் பதிப்பாசிரியர் கூறுகிறார்.

பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்தின் பொறுப்பில் இருக்கும் பஞ்சமரபு மூலமும் உரையும் அடங்கிய[4] ஓலைச்சுவடியைப் பற்றியும், அதனைத் தற்போது பதிப்பில் வெளிவந்துள்ள நூலோடு ஒப்பிட்டும் ஆராய்தல் பொருந்தும்.

ஓலைச்சுவடியின் படிகள் ஒன்றுடன் ஒன்று வித்தியாசப்படு கின்றன. சில பழைய படிகளாகவும், சில புதியனவாகவும் காட்சியளிக்கின்றன. இப்படிகளின் கையெழுத்தும் வித்தியாசப் படுகின்றது. ஒவ்வொரு மரபின் இறுதியிலும் காணப்பெறும் 'குரு வாழ்க' 'சிவாசலசகாயம்' போன்ற சொற்கள் வேறுபடு கின்றன.

இதிலிருந்து, இந்தச் சுவடி முழுமையும் முன்னர்க் கூறிய வெள்ளச்சிபுத்திரன் என்பவரால் எழுதி வைக்கப்பட்டதாகக் கொள்ளவியலாது. சுவடியின் ஒரு பகுதி மட்டுமே இவரால் எழுதப்பட்டிருக்கலாம். இந்தச் சுவடி ஒரு குறிப்பிட்ட ஆசிரியரால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதப்படவில்லை என்றும், இச்சுவடி பலரால் எழுதப்பட்டிருக்கும் என்றும் தெளியலாம்.

ஓலைச்சுவடியின் இசைமரபுப் பகுதியில் காணப்படாத சில செய்யுள்களும் தற்போதுள்ள பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை வருமாறு

1. மால்பாடும் பாட்டினையும் - பாயிரம் 2 பக். 6
2. ஏற்றான் புள்ளூர்ந்தான் - இசைமரபு பக். 9
3. பூதமுதற் சாதனத்தாம் - இசைமரபு-பக் 70 (கண்டமரபு)
4. செப்பிய பூதங்கள் ,, பக் 71
5. செப்புங் குறிலைந்து (முதலிரண்டு வரிகள் மட்டும்) - இசைமரபு பக் 120 (வகையொழிபு மரபு)

சுவடியில் இருக்கும் சில வரிகள் பதிப்பில் 'வேறுபாட'மாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பாயிரம் 5 – ஆவது செய்யுளில் 'சேறை வாழ் சேதிபனார் செய்தாக்கப்பட்ட தொகை' என்று காணப்படுகிறது. இவ்வரி பஞ்சமரபு நூலில், [5]'சேறையறிவனார் செய்தமைத்த ஐந்து தொகை' என்று காணப்படுகிறது பதிப்பாசிரியரின் குறிப்பில் 'சேறைவாழ் சேதிபனார்' என்பது வேறுபாடமாகக் காட்டப்பட்டுள்ளது.

இதிலிருந்து பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் சுவடியே திரு தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சுவடி என்று கூற இயலாது. தற்போதுள்ள பஞ்சமரபு பதிப்பிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் பயன்பட்டிருக்கும் எனலாம்.

சுவடியில் சில பிழைகள் காணப்படுகின்றன.உதாரணமாக, பண்-வியாளக் குறிஞ்சி என்று ஓரிடத்தும், வியாழக் குறிஞ்சி என்று மற்றோரிடத்தும் காணப்படுகிறது. மேலும், பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் முதலியவற்றிற்குரிய வடமொழிப் பெயர்களில் குழப்பம் காணப்படுகிறது. சம்பூர் ணம், சாடவம், ஒளடவம், சதுர்த்தம் என்ற பெயர்களை, சாட்பளம், அடுவிகம், சவாத்தம் என ஏடெழுதுவோர் பிழை பட எழுதியுள்ளனர்.

வகையொழிபு மரபில் தாளம்- அத்தராட்டம் என்று பிழைபட உள்ளது. அத்தராட்டம் என்பது 103 பண்களில் ஒன் றான திராடம் என்பதாகும்.

பஞ்சமரபு தலைப்பு விளக்கம்;

இசைமரபின் உட்பிரிவான வகையொழிபு மரபு, முதல் வெண்பாவில் 'பஞ்சமரபு' என்ற சொல்லும் அதற்குரிய காரண மும் கூறப்பட்டுள்ளன. பொதுவாக, நூலில் விடுபட்ட செய்தி கள் வகையொழிபு மரபில் சேர்க்கப்படும். பாயிரத்தில் நூற் பெயர், நூலாசிரியரின் பெயர், எல்லை, நூலின் அளவு ஆகிய வற்றைக் காட்டுதல் இயல்பு. 'பஞ்சமரபு' என்னும் சொல் பாயிரத்தில் காணப்படாமல் வகையொழிபு மரபில் இருப்ப தால் இது நூலாசிரியர் சொல்லியதா அல்லது பின்னுள்ளோர் இணைத்ததா என்னும் ஐயப்பாடு எழுகிறது.

'[6] ஆதியயன் படைத்த வாழி யுலகத்து
ளோதிய கீத வழியெல்லாம்-நீதியினா
லைந்து திறனும் விரவி வருதலால்
பஞ்ச மரபென்று பார்''

என்னும் வகையொழிபு மரபு வெண்பா, பிரமனால் படைக்கப் பட்ட உலகத்துள் பாடப்பட்ட கீதங்களின் திறமைந்தும் விரவி வருதலாற் பஞ்ச மரபென்று வழங்கப்படுகிறது என்று உணர்த்துகிறது. [7]கீதங்களின் ஐந்து திறங்கள் யாவை என்பதை மூன்றாவது பாயிர வெண்பாவுரையிலிருந்து அறிய முடிகிறது.

இசையு முழவுந் தாளமுங் கூத்து
மசைவி லவினய மஞ்சுறுப் பாகும்''

இதிலுள்ள 'அஞ்சுறுப்பு' என்னும் சொல், நூலிற் குறிப்பிட்ட 'ஐந்து தொகை' என்ற சொல்லிற்கு ஒத்தமைகின்றது தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு என்னும் ஐந்திடங்களில் தோன் றும் இசையினைப் பஞ்சமாசத்தம் என்று கூறுவதால் மேற் குறித்த ஐவகை இசை மரபுகளைக் கூறுதலின் 'பஞ்சமரபு' என்று பெயராயிற்று என்று பெயர்க் காரணம் கூறுவதுமுண்டு. எனவே பஞ்சமரபு என்பதை இசை,நாட்டியம் ஆகிய இவற்றின் உயிர்நாடியாய் விளங்கும் இசை,வாச்சியம், தாளம், நிருத்தம், அவிநயம் ஆகிய ஐந்துறுப்புக்களைத் தொகுத்துக் கூறும் நூல் எனக் கொள்ளலாம். பஞ்சமரபு நூல் உரையில் ஆங் காங்குக் காணப்படும் 'ஐந்தியல்','ஐந்திறன்', 'அஞ்சுறுப்பு' 'ஐந்து தொகை'ஆகிய சொற்கள் 'பஞ்சமரபு' என்ற சொல்லி னைக் குறிப்பனவாகக் கொள்ளலாம்.

இயற்றமிழ் இலக்கணம் எவ்வாறு எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்னும் ஐந்தியலாகப் பெயர் பெற்றதோ அவ்வாறே பஞ்சமரபும் இசை, வாச்சியம், நிருத் தம், அவிநயம், தாளம் என்னும் ஐந்து பகுதி உடையதாய், இசையைந் தியலாய்ப் பஞ்சமரபு' என்னும்பெயர் பெற்றதாகக் கருதலாம்.

உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டும் பஞ்சமரபு வெண்பாக்கள்

பஞ்சமரபின் '[8]தாரத்துள் தோன்றும் உழை' என்ற செய்யு ளைச் சிலப்பதிகாரத்தின்[9] அரும்பதவுரையாசிரியர் மேற் கோள் காட்டியுள்ளார்.

அடியார்க்கு நல்லார்[10] கடலாடு காதையுரையில் பஞ்சமர பில் வருகின்ற 'செப்பரிய சிந்து திரிபதை' எனத் தொடங்கும் பாடல் முழுமையும் சிற்சில வித்தியாசங்களுடன் தந்து 'என்றார் பஞ்சமரபுடைய அறிவனார் என்னும் ஆசிரியர் என்க' என்று கூறுகிறார். இப்பாடலைத் தவிர, சிலப்பதிகார

அரங்கேற்று காதையுரையிலும், பிற பகுதிகளிலும் காணப் படும் முப்பது மேற்கோள் பாடல்கள், பஞ்சமரபு-இசைமரபின் உட்பிரிவுகளான யாழ்மரபு, கண்டமரபு, வங்கியமரபு ஆகிய வற்றில் காணப்படுகின்றன. இப்பாடல்கள் இன்னநூலைச் சார்ந்தவை என்று அடியார்க்கு நல்லாரால் குறிப்பிடப் படா மையால், இவற்றைப் பாதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் அவர்கள், '‘[11]விளங்கா மேற்கோளகராதி' என்னுந் தலைப்பில் கொடுத்துள்ளார். ஆனால் இந்நூலின் அனுபந்தத்தில் '[12]பஞ்ச மரபு பற்றிய ஒரு குறிப்பு' என்ற தலைப்பில் பஞ்சமரபில் காணப்படும் 23 பாடல்கள் அடியார்க்கு நல்லாருரையில் மேற் கோள் காட்டப்பட்டிருப்பதாகப் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள், பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு எழுதியனுப்பியது, இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிய பாடல்கள் பஞ்ச மரபுக்குரிய வெண்பாக்கள் என எடுத்துக் கொள்ளலாம்.

[13] சீவக சிந்தாமணி உரையில் நச்சினார்க்கினியர் காட்டும் இசைமேற்கோள் பாடல்களில் நான்கு பஞ்சமரபு வெண்பாக் கள். அவை வருமாறு:

1. பேரியாழ் பின்னு
2. ஒன்றும் இருபதும்
3. ஓங்கிய மூங்கி
4. துய்யமொழி மென்

இவற்றுள் 'பேரியாழ் பின்னு' 'ஓங்கிய மூங்கி' என்னுமிரு பாடல்களும் அடியார்க்கு நல்லாராலும் காட்டப் பெற்றவை என்பது குறிப்பிடத் தகுந்தது.

இதிலிருந்து அடியார்க்கு நல்லாரால் இசைத் தமிழுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அறிவனாரின் பஞ்சமரபு என்ற நூல், அடியார்க்கு நல்லார்க்கு [14] 200 ஆண்டுகளுக்குப் பின்னால் வாழ்ந்த நச்சினார்க்கினியர் காலத்திலும் வழக்கிலிருந்திருக் கிறது. பிற்காலத்தில் தான் இது எப்படியோ வழக்கற்றுப் போய்விட்டது என்ற உண்மை தெரிகிறது.

பஞ்சமரபுக்கு உரியவையான முப்பது பாடல்களின் விவரங்களைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

தொடர் எண்	பாடல் முதற் குறிப்பு	சிலப்பதிகாரம் காதை	பக்கஎண்-*	பஞ்சமரபு பக்க எண்	
1.	பேரியாழ் பின்னும்	அரங்கேற்று காதை	100	9	மரயாழ்பு
2.	ஒன்றும் இருபதும்	,,	,,	10	
3.	ஓங்கிய மூங்கில்	,,	,,	65	வங்கிய மரபு
4.	உயர்ந்த சமநிலத்தின்	,,	,,	66	
5.	சொல்லு மிதற்களவு	,,	101	67	
6.	இருவிரல் கணீக்கி	,,	,,	67	வங்கி மரபு
7.	வளைவாயருகொன்று	,,	,,	68	
8.	சரிகமபத நி யென்	,,	,,	68	

9.	பூத முதற் சாதனத்தாம்	,,	102	70	கண்ட மரபு
10.	மண்ணுடனீர் நெருப்பு	,,	,,	71	
11.	செப்பிய பூதங்கள்	,,	,,	71	
12.	மெய்வாய் கண், மூக்கு	,,	,,	73	
13.	பசி சோம்பு மைதுனம்	,,	,,	73	
14.	ஓங்கும் வெகுளி	,,	,,	73	
15.	ஒப்பார் பிராணன்	,,	103	74	
16.	இடைபிங்கலை சுழுனை	,,	,,	75	
17.	பூத வகைகளோரைந்தாய்	,,	,,	78	
18.	துய்ய வுடம்பளவு	,,	104	79	
19.	ஆதாரம் பற்றியசைவ	,,	,,	79	
20.	ஐவகைப் பூதமுமாய	,,	,,	80	
21.	மகரத்திெனொற்றாற்	,,	,,	81	
22.	குன்றாக் குறிலைந்துங்	,,	105		

23.	பாவோடணைத்தலிசை	,,	,,	91	திருத்த மரபு
24.	ஆயஞ்சதுரந் (முதலிரண்டு வரிகள்)	ஆய்ச்சியர் குரவை	449	16	யாழ் மரபு
25.	சாணளவு கொண்டதொரு	,,	,,	18	
26.	எதிரு மிராசி வலமிடமாக	,,	,,	20	
27.	ஏத்து மிடப மலவ	,,	,,	31	
28.	குரறுத்த நான்கு	,,	,,	21	
29.	தாரத்துழை தோன்ற	,,	,,	30	
30.	குரலிளியிற் பாகத்தை	,,	,,	29	

* உ.வே.சாமிநாத ஐயர் பதிப்பிற் கண்டபடி

இனி, பஞ்சமரபு நூலின் தொடர்ச்சி இசை நூல்களில் எவ் வாறிருந்தது என்பதைப் பற்றி ஆராயலாம்.

இசை நூல்களில் பஞ்சமரபு வெண்பாக்கள்:

இசைத்தமிழ்த் தொடர்பான நூல்களில், [15]**'பரத சங்கிரகம்'** என்ற நூல் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவ ராகக் கருதப்படும் 'அறம் வளர்த்தான்' என்பவரால் இயற்றப் பட்டது. இது 1954-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகத்திரு வெள்ளை வாரணனாரைப் பதிப்பா சிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.

பஞ்சமரபின் இசைமரபு, தாளமரபு, நிருத்தமரபு ஆகிய பகுதிகளில் காணப்படும் வெண்பாக்களுள் ஏறக்குறைய 45 பாடல்களும், சில உரைச்செய்யுள்களும் சிற்சில வித்தியாசங்களு டன் பரத சங்கிரகத்தில் காணப்படுகின்றன. நிருத்தமரபின் உட்பிரிவான 'அகமார்க்கப் பொருள் தரு மரபு' என்ற பகுதி யிலுள்ள செய்யுள்கள் பஞ்சமரபில், வெண்பா யாப்பிலின்றிக் கட்டளைக் கலித்துறை விருத்த யாப்புகளில் அமைந்திருக் கின்றன. இப்பகுதி 'தரு' என்னும் தலைப்பில் வேறுவகை யாப் பில் பரத சங்கிரக நூலில் காணப்படுகிறது. பிற்சேர்க்கையாகப் பஞ்சமரபில் தரப்பெற்றுள்ள தாண்டவப் பொதுவியல்-ஒழிபு மரபு என்ற பகுதியும் 'பிரம்பிலக்கணம்' என்ற பகுதியும் பரத சங்கிரகத்திலும் காணப்படுகின்றன. இது தவிர, பஞ்சமரபு உரையில் சொல்லப்பட்டுள்ள சில சூத்திரங்களும் பரத சங்கிர கத்தில் காணப்படுகின்றன.இவையனைத்தும் பஞ்சமரபிலிருந்து தொகுக்கப்பட்டவை என்பது பஞ்சமரபு பதிப்பாசிரியரின் கருத்து.

பஞ்சமரபின் இசைமரபுப் பகுதியில் ஏறக்குறைய பத்துப் பாடல்கள் சிற்சில பேதங்களுடன் அறம் வளர்த்தானின் பரத சங்கிரகத்தில் காணப்படுகின்றன. இப்பாடல்களின் விவரங் களைப் பின்வரும் அட்டவணையிற் காணலாம்.

எண்	பாடல் முதற் குறிப்பு	பஞ்ச மரபு	பஞ்ச மரபு பக்க எண்	பரதசங்கிரக பக்க எண்
1.	மால்பாடும் பாட்டினையும்	பாயிரம்	6	25
2.	சங்குகுயிலோடி	இசை மரபு (யாழ்மரபு)	24	47
3.	பண்ணோர் பதினேழாம்	,,	37	53
4.	மகரத்தினொற்றால்	,,	80	39
5.	குன்றாக் குறிலைந்தும்	,,	81	49
6.	இடையுயீ தொட்டுக்கோள்	திருத்தமரபு	92	55
7.	மிக்க குடிப்பிறந்தோன்	,,	96	11
8.	சொல்லிடு நற்றோல்	வகையொழிபு மரபு	101	66
9.	தக்கேசி காந்தாரங்	,,	118	53
10.	சுத்தமறையோர்க்காம்	,,	121	54

பரதசங்கிரகம் பக்கம் 55 இல், சங்கீத ரத்னாகர லட்சணம் முற்றும் என்ற குறிப்பு காணப்படுகிறது. இத்தொடரால் பரத சங்கிரகத்திலுள்ள 1-இலிருந்து 145 பாடல்கள் வரையிலான இசைப்பகுதிகளுக்குச் 'சங்கீத ரத்னாகரம்' என்னும் இசை நூல் ஆதாரமென்பதை ஆசிரியர் புலப்படுத்துகின்றார் என்று இந் நூலின் அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் திரு க. வெள்ளைவாரண

னார் கூறுகிறார்.சங்கீத ரத்னாகர மென்பது 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாரங்கதேவர் என்னும் வடநாட்டு ஆசிரியரால் வடமொழியில் இயற்றப்பட்ட இசை நூலாகும். இந்நூலாசிரியர் நம் தமிழ்நாட்டிற்கு வந்து இங்கு வழங்கும் தேவாரப் பண்களாகிய இசைத்தமிழ் இயல்பினை நன்குணர்ந்து அவற்றுள் சிலவற்றைத் தம் நூலில் இனிது விளக்கியுள்ளார். சாரங்க தேவர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது இசைத்தமிழ் இலக்கணம் கூறும் பஞ்சமரபும் வழக்கில் இருந்திருக்கலாம். அதனைத் தம் நூல் இயற்றுவதற்குரிய துணை நூலாப் பயன் படுத்தியிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

பரத சூடாமணி என்பவரால் இயற்றப்பட்ட [16] **தாள சமுத்திரம்** என்ற நூல் 1955 ஆம் ஆண்டு தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடாக வந்துள்ளது. இந்நூலில் பஞ்சமரபில் உள்ள 10 வெண்பாக்கள் சிற்சில வேறுபாடுகளுடன் காணப் படுகின்றன. அவை தாளமரபிலுள்ள வெண்பாக்களில் ஐந்தும் அட்டகண மரபிலுள்ள வெண்பாக்கள் நான்கும் ஆகும். தாள நூற்பா மரபு என்ற பகுதியின் முதற் பாடலான 'தென்றல் வடிவும்' என்ற பாடலும் தாள சமுத்திரத்திலுள்ளது.

[17] **இசைமரபு** என்றதொரு நூல் திரு கா. சங்கரனார் அவர் களின் விளக்க உரையுடன், திருநெல்வேலி நெல்லை சங்கீத சபையினரால் 1968 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந் நூல் ஆசிரியரின்பெயர், காலம் முதலிய செய்திகள் அறிந்து கொள்ள இயலவில்லை. இந்நூற் பதிப்பாசிரியரான திரு கா. சங்கரனார், தம்மிடமிருந்த ஏட்டுப் பிரதியில் முதல், நடு இறுதி காணாமல் சில பாடல்களே இருந்தன என்றும், அவை சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரால் மேற்கோள் காட்டப்பட்டிருக்கும் சிகண்டியாரின் இசை நுணுக்கப் பாடல்களை ஒத்திருக்கின்றன என்றும் கூறுகிறார். பஞ்ச மரபு – இசைமரபின் கண்டமரபு நிறத்தமரபு ஆகியவற்றின் பாடல்கள் முழுமையும் சிற்சில வித்தியாசங்களுடன்'இசைமரபு, என்ற நூலில் காணப்படுகின்றன. அப்பாடல்கள் வருமாறு:

எண்	பாடல் முதற் குறிப்பு	இசை மரபு பக்க எண்	பஞ்ச மரபு பக்க எண்
1.	பூதமுதற் சாதனத்தாம்	1	70
2.	மண்ணுடனீர் நெருப்பு	8	70
3.	செப்பிய பூதங்கள்	8	71
4.	மெய்வாய்கண்	9	71
5.	நல்ல நரம்பிறைச்சி	10	72
6.	பசிசோம்பல் மைதுனம்	10	73
7.	ஓங்கும் வெகுளி	11	73
8.	ஒப்பார் பிராண	11	73
9.	இடைபிங் கலை	11	74
10.	பூதவகைகளோ	12	75
11.	துய்ய வுடம்பளவு	15	78
12.	ஓசையு மீசனு	16	78
13.	ஆதாரம் பற்றி	16	79
14.	ஐவகைப் பூதமு	16	79
15.	மகரத்தினொற்றாற்	19	80
16.	குன்றாக் குறிலைந்தும்	20	81
17.	மாத்திரைக ளொன்பானுந்	27	82
18.	ஆதியுடன் சுத்தஞ்	32	86
19.	வங்கியமே வீணை	38	89
20.	பண்பாற் கிரியையாற்	39	90
21.	பாவோ டிணைதலிசை	41	91
22.	ஓரிசை முன்னிசை	56	94
23.	நெய்தல் முகத்தல்	56	95
24.	ஒருக்கண்ணன்	57	95
25.	மிக்க குடிப்பிறந்தோன்	57	96

26.	துய்ய மொழி மென்	58	96
2 .	கிச்சிலி பூனை குட	58	98
28.	பெருக்குரல் கட்டை	59	96
29.	ஒட்டுதலுங் கட்டுதலு	60	98
30.	தூய சுருதியுடனனிடாயம்	60	99
31.	திப்பிலி தேன்மிளகு	61	99
32.	நகைபுகையெட்	62	100

இப்பாடல்களில் 'நூலுணர்ந்தோரே', 'என்றுரைத்தார்', 'சொல்லும் வழக்கு' என்ற சொற்கள் காணப்படுவதால் 'இசை மரபு' என்ற நூல் தொன்றுதொட்டு வழங்கிவந்த இசைமரபின் வழிநின்று இயற்றப்பட்டும், பயிலப்பட்டும் வந்த அரிய கருத்துக்களைக் கொண்டது என்றறியலாம்.

பரதசங்கிரகம், தாள சமுத்திரம், இசைமரபு ஆகிய மூன்று நூல்களும் ஏட்டுச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பட்டவை. இவை பஞ்சமரபு வெளிவருவதற்கு முன்னரே பதிப்பிக்கப் பெற்றவை. இந்நூல்களில் பஞ்சமரபு செய்யுள்கள் காணப்பட்டாலும், பஞ்சமரபு ஆசிரியரான அறிவனாரைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை.

இலக்கிய உரையாசிரியர்களால் பயன்படுத்தப்பட்ட பஞ்ச மரபின் சில பகுதிகள் பின்னர் 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப் பட்ட பரதசங்கிரகம் போன்ற இசை நூலாசிரியர்களுக்கும் கிடைத்திருக்கும்.இவர்கள் பஞ்சமரபு ஆசிரியரின்பெயர் அறியாதவர்களாய் இருந்திருக்கலாம். இவர்கள் தமக்குக் கிடைத்த நூலுடன், தம் காலத்து இருந்த இசை நாடக வளர்ச்சியையும் சேர்த்து இந்நூல்களைச் செய்திருக்கலாம்.

பஞ்சமரபு ஒரு தொகுப்பு நூல்

[18]மன்னுபொதி யத்திருந்த மாதவத்தோன் றாள்
வாழ்த்திப்
பன்னு பனுவற் றொகையினுடன்-துன்னருஞ்சீர்ச்

சேறை யறிவனார் செய்தமைத்த வைந்துதொகை
கூறுத லிந்நூற் குணம்''

என்கிற பாயிர வெண்பாவில் சேறை நாட்டைச் சேர்ந்த அறிவனார் என்பவரால் செய்தமைத்த ஐந்து தொகையைக் கூறுதல் இந்நூற் குணம் என்று காணப்படுகிறது. ஆசிரியர் அறிவனார் பனுவற்றொகை' என்னும் மற்றொரு நூலையும் இயற்றி இருப்பதாக இதிலிருந்து அறியமுடிகிறது. பனுவற்றொகை என்பதற்கு 'நூல்களின் தொகுப்பு' என்றும் பொருள் கொள்ளலாம். இதனை அறிவனார்அவர் காலத்தின் முற்பட்ட தமிழ் நூல்களிலுள்ள இசை நாட்டியத் தொடர்பான செய்திகளைத் தொகுத்து இயற்றியிருக்கலாம்.

இந்நூற்[19] பதிப்பாசிரியர் தம் முன்னுரையில் நூலாசிரியர் காலத்தைப் பற்றிய குறிப்பில் பனுவற்றொகை, ஐந்தொகை ஆகிய இரு நூல்களை அறிவனார் இயற்றியுள்ளார் என்றும், அவற்றின் சாரமாக அமைந்ததே இந்நூல் என்றும் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பின்படி பஞ்சமரபு, அறிவனாரால் இயற்றப்பட்ட மூன்றாவது நூல் என்றாகிறது. இவற்றுள் பஞ்சமரபு பற்றிய குறிப்பு மட்டுமே அடியார்க்கு நல்லாருரையில் காணக்கிடைக்கிறது. மற்ற இரு நூல்களைப் பற்றிய குறிப்பும், அவற்றில் அடங்கியுள்ள செய்திகளும் கிடைக்கப் பெறவில்லை. எனவே பனுவற்றொகை, ஐந்தொகை ஆகிய இரு நூல்களில் கூறப்பட்ட. செய்திகள் பஞ்சமரபில் அடங்கும். இதனையே அடியார்க்குநல்லார் துணை நூலாகக் கொண்டார் எனத் தெளியலாம்.

[20] திரு க. வெள்ளை வாரணனார், பஞ்சமரபு பற்றிய தம் நூல் மதிப்புக் கட்டுரையில் (Book review) "சேறையறிவனார் செய்தமைத்த ஐந்து தொகை எனப்படும் 'பஞ்சமரபு' என்னும் நூல்வேறு என்பதும், அந்நூலின் பொருளைத் தொகுத்துக்கூறும் முறையில் அமைந்ததே இந்நூல்'' என்றும் கூறியுள்ளார். மேலும் அறிவனார் செய்த பஞ்சமரபு முதலிய முன் நூல்களிலிருந்து ஐவகை மரபுகளைக் கூறும் செய்யுள்களை இங்குள்ள முறையில் தொகுத்து அமைத்தவர் சேறையறிவனார்க்குக்

காலத்தாற் பிற்பட்ட மற்றோராசிரியர் என்னும் கருத்தையும் துணிந்து கூறியுள்ளார். முன்னர்க் குறிப்பிட்ட பாயிர வெண் பாவின் பொருளமைப்பை நோக்குகையில் இத்துணிபு பொருத் தமே என்று தோன்றுகிறது.

முன்னோர்கள் செய்து வைத்த நூலினைப்பின்பற்றித் தம் காலத்து இருந்த வளர்ச்சியையும் சேர்த்து ஒரு நூலாக இயற்று வது என்பது இசை நூல் ஆசிரியர்களின் மரபு. இம்மரபுக்கேற் பப் பரதசங்கிரகம் போன்ற நூல்கள் செய்யப்பட்டிருக்கலாம். தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபும், இதேபோல் அறிவனாரின் பஞ்சமரபின் சில பகுதிகளையும், வெண்பா வடிவில் அமைந்த சிகண்டியாரின் 'இசை நுணுக்கம்' என்ற மற்றொரு பண்டைய இசை நூலின் சில பகுதிகளையும், சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு ஆகியவற்றிலுள்ள இசைச் செய்திகளையும், வடமொழியிலமைந்த இசை நூல் மரபு களையும் சேர்த்து ஒரு நூலாகப்பிற்கால இசையாசிரியர் ஒரு வரால் இயற்றப்பட்டதாகக் கருதலாம்.

பஞ்சமரபு ஆசிரியர்

[21] அடியார்க்கு நல்லார் உரைக் குறிப்புப்படி பஞ்சமரபு ஆசிரியர் பெயர் அறிவனார் எனத் தெரிகிறது. இந்நூலா சிரியர் பெயர், அவருடைய ஊர் ஆகிய குறிப்புக்களை மேலும் இந்நூற் பாயிர வெண்பாக்களிலிருந்தும், பாயிரவுரையில் இருந்தும் அறிய முடிகின்றது. இந்நூலின் [22]பாயிரம் ஐந்தாவது வெண்பாவில் வரும் "சேறையறிவனார் செய்தமைத்த ஐந்து தொகை" என்பதும், அதனுரையில் 'இந்நூல்யாராற் செய்யப் பட்டதோ வெனின்? ஐந்தியலுமுணர்ந்த அறிவனாராற் செய் யப்பட்டது' என்பதும் பஞ்சமரபு ஆசிரியரைக் குறிக்கின்றன.

இவ்வுரையில் சேறை என்பதற்கு விளக்கம் கிடைக்க வில்லை. இந்நூற் பதிப்பு முன்னுரையில் 'சேறை என்பது பாண்டி நாட்டுச்சேற்றூர் என்பதன் மரூஉ மொழியாகும்" என்று காணப்படுகிறது. சோழநாட்டிலும் சேறை என்னும் ஊர் இக்காலத்துமுள்ளது. அவ்வூர் திருச்சேறை என வழங்கப்

படுகிறது. திருச்சேறை என்னும் ஊர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பெற்ற சிவாலயத்தையும், திருமங்கை யாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருமால் ஆலயத்தையும் கொண்டது. இந்த இருஊர்களுள் ஆசிரியர் எந்த நாட்டின் ஊரைச் சேர்ந்தவர் என்பது ஆய்வுக்குரியது. [23]இசையும் நாடகமும் மலிந்த சோழ நாட்டிலுள்ள திருச் சேறை என்ற ஊராகவே இருக்க வேண்டுமென்பது பேராசியர் திரு மு.அருணாசலம் அவர்களின் கருத்து. ஆனால் பாண்டிய மன்னனை 'மன்ன திருமாற' 'வண் கூடற்கோமானே!' என்பது போன்று சில வெண்பாக்களில் விளித்துப் பாடியிருப்பதால் இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

நூலெங்கும் இவர் முன்வந்தோர் கருத்தை எடுத்து மொழிவதாகவே சொல்கிறார். 'செப்பினர் இவை என்றார்' 'கிளை என்றார்' 'சொன்னா ரிசைப்புலவோர்' 'முத்தமிழோ ரெல்லாம் மொழிந்தார்கள்' முற்றுணர்ந்த மெய்த்தமிழோர் ஓதினார்' என்றெல்லாம் இவர் கூறுபவை காணத்தக்கன. ஆகவே இவர் முந்தையோர் கருத்தை எடுத்து நூலாக மொழிந்தார் என்று அறிகிறோம். 'ஒத்துக் கவுத்துவமே' எனத் தொடங்கும் பாடல் 'பூங்கா வகத்தியனார் போந்து' என முடிகிறது. [24]திரு மு. அருணாசலம் அவர்கள், இதில் பூங்கா' என்று பிழைபட அச்சிடப்பட்டுள்ளது என்றும், பூந்தார் அகத் தியனார் போந்து' என்றிருக்க வேண்டுமென்றும், வேறு நூல் களில் அகத்தியரைக் குறிப்பிடுகையில் பூந்தார் அகத்தியனார் என்றே சொல்லப்பட்டுள்ளது என்றும் தம்முடைய 'தமிழ் இலக்கிய வரலாறு 9 ஆம் நூற்றாண்டு' என்னும் நூலின் அடிக் குறிப்பில் குறிப்பிடுகிறார். இதனால் நூலாசிரியரான அறிவ னார், அகத்தியர் நூலையுணர்ந்து பாடுகிறார் என்பது தெளிவு. இவ்வகத்தியனார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து பல மாணாக்கர்களுக்கு ஆசானாய், இலக்கணம், பாட்டியல் நூற்பகுதிகள் பல செய்தவர். அவருடைய மாணாக்கர் பரம் பரையில் அறிவனாரும் வருகிறார் என்று கருத வாய்ப்புண்டு.

ஆசிரியர் வைணவ சமயத்தைச் சார்ந்தவராக இருக்க லாம். இதனைக் 'கார்மேனிச் செங்கட் கடவுளை யான்

பணிந்து பார்மேல் ஓதுவன் இப்பண்பு' என்று காப்புச் செய்யுளிலும், 'கார்மேனிக் கண்ணனை முன் வைத்துக் காப்புரைக்க' என்றும் 'திரு நெடுமாலைப் பணிந்து செப்புவேன்' 'தண்டமிழாற் பாடத் தருவாய் பெருவாக்கு வண் துளபத்தார் மாதவா' என்றும் பிற இடங்களிலும் கூறுவதால் அறியலாம்.

[25]பஞ்சமரபின் நிருத்த மரபைப் பரதமுனிவர் வடமொழியில் செய்த பரத நாட்டிய நூற் பொருளைத் தொகுத்துத் தமிழ் மொழியிற் செய்தனர் என நிருத்த மரபில் வரும் முதற் காப்புச் செய்யுளால் தெரிகிறது. [26]வாச்சிய மரபின் உட்பிரிவான எழுத்து மரபினைச் சான்றோர்கள் ஆராய்ந்து செய்த 'சவுதபத்து' 'சவுத ரத்னாவலி' என்னும் நடன நூல் நெறியினைப் பின்பற்றிச் செய்தனரென அம்மரபில் வரும் காப்புச் செய்யுளால் தெரிய வருகின்றது. இதிலிருந்து பஞ்சமரபின் தொகுப்பாசிரியர் வடமொழியில் நல்ல தேர்ச்சி பெற்று வடமொழி நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர் என்று தெரிகிறது.

பஞ்சமரபு – உரையாசிரியர்

இந்நூலின் உரையாசிரியர், அவரது பெயர் முதலிய செய்திகளை இந்நூலிலிருந்து தற்போது தெரிந்துகொள்ள முடியவில்லை.பஞ்சமரபின் இவரது உரைப்போக்கால், இவர் இயலிசை நாடக, இலக்கண நூல்களை நன்கு பயின்று தேர்ச்சி பெற்ற வல்லுநர் என்பது புலனாகிறது. இவர் ஏறக்குறைய 100 மேற்கோள் தருகிறார். குறட்பா, நூற்பா, வெண்பா, தாழிசை கலிப்பா முதலான பல பாக்களும், பாவினங்களும் இவற்றுள் அடங்கும். இதில் 6 பாடல்கள் இடம் விளங்குபவை. ஏனைய விளங்காதன. மேற்கோள் பாடல்களுள்21 பாடல்கள் மட்டுமே 83 ஆம் நூற்பாவுரையில் வரும் இலக்கிய மேற்கோள் பாடல்களாகும். பிறயாவும் இசை நாடகத்தமிழ் பற்றிய மேற்கோள் பாடல்கள். இசை நாடக நூல்கள் பிற்காலத்தில் வழக்கொழிந்தன. உரையாசிரியர் அவற்றை நன்கு அறிந்து சொல்வதால் இந்நூல்கள் வழங்கிய காலத்தில் இவர் இருந்திருக்கலாம் என்பது [27]பேராசிரியர் மு. அருணாசலம் அவர்களின் கருத்து.

மேலும், இவர், ஒருகால் நூலாசிரியரே உரையும் செய்திருக்கலாம் என்று கூறி அதற்குரிய காரணங்களையும் குறிப்பிட்டுள்ளார். (1) ஓரிடத்தும் இவ்வுரை, நூலாசிரியரைப் பற்றிக் குறிப்பிடவில்லை (2) இவ்வுரை, மூலத்துக்குத் துணையாக அதில் சொல்லாத பொருளை மட்டும் எடுத்துக்காட்டிச் செல்வதாக உள்ளது. இக்கருத்தினைச் சிறிது மாற்றிப் பஞ்சமரபு நூலின் தொகுப்பாசிரியரே இந்நூலுக்கு உரையும் செய்திருக்கலாம் என்றும் கூறலாம். மேற்கோள் பாடல்களில் பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம், யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல்கள், கொன்றைவேந்தன் காப்புச் செய்யுள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவ்வுரையின் பல பகுதிகள் அடியார்க்கு நல்லார் உரையுடன் பொருந்துகின்றன. எனவே இவ்வுரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உரையைத் தொகுத்து இந்நூலில் அளித்துள்ளாரா அல்லது இவ்வுரையைப் பின்பற்றி அடியார்க்கு நல்லார் எழுதியிருப்பாரா என்ற ஐயப்பாடும் எழுகிறது.

நூலில் வகையொழிபு மரபு கூறும் பாடலுரையில் பாணர் புணர்த்த வண்ணத்திற்கு [28]இராசராசன் பெயர் அமைந்த பாடலொன்றினை மேற்கோள் காட்டுவதால் இவ்வுரை இராசராச சோழன் காலத்திற்குப் பிற்பட்டது என்பது அறிஞர்களின் கருத்து. அஃதாவது 11 – ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்டது எனக் கருதலாம்.

உரைமேற்கோள் பாடல்களில் ''செப்பிய சிந்து'' எனத் தொடங்கும் பாடலுரையில் பெருவண்ணத்திற்குச் செய்யுளாக

எஃகுமே லிலங்கு கொய் சுவற்புரவி ...... 'எனப் பதிற்றுப் பத்தினுள் சான்றோர் பாடின வண்ணங்கள் நூறுங்கண்டு கொள்க' எனக் கூறுதலால், இவ்வுரையாசிரியர் காலத்தில், கொய்சுவற்புரவி எனுந் தலைப்புடைய பதிற்றுப்பத்துச் செய்யுளும் அழிந்துபடாமல் விளங்கியதாகத் தெரிகிறது. எனவே இவ்வுரை பழமையான உரையாகவே விளங்குகிறது. அடியார்க்கு நல்லார் உரையின் காலத்திற்கு முற்பட்டதாகவே இருக்கும் எனக் கருதலாம்.

பஞ்சமரபு - காலம்

இந்நூல் இயற்றப்பட்ட காலத்தைப் பற்றி இருவிதமான கருத்துக்கள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. சங்க காலத்து நூலே என்று சிலரும், ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னும், 12-ஆம் நூற்றாண்டுக்கு முன்னுமாகவும் எழுதப்பட்ட நூல் என்று சிலரும் கருதுகின்றனர்.

பஞ்சமரபின் காலத்தைக் குறித்து (1) இதில் பயின்றுள்ள வடமொழிச் சொற்கள் அடிப்படையிலும் (2) பண், இராகக் குறிப்புக்களைக் கொண்டும், பிற இசைக் குறிப்புக்களைக் கொண்டும், (3) நூலின் செய்யுளமைப்பை ஒட்டியும் ஆராய லாம்.

பஞ்சமரபில் வடமொழிச் சொற்கலப்பு:

சங்க காலத்தில் இயற்றமிழ் நூல் செய்தோர் பலரும் கூடியவரையில் வடசொற்கள் மிகுதியும் தமிழில் கலவாதபடி கவனத்துடனே செய்துள்ளனர். இந்நூலில் வடசொற்கள் மிகுதி யாக வந்துள்ளமையால், குறிப்பாக, 'பஞ்சமரபு' என்னும் இந் நூல் தலைப்பிலேயே வடசொல் கலந்து வந்துள்ளதால் இது சங்க காலத்தைச் சேர்ந்த நூலன்று என்னும் கருத்துப் பெரும் பாலோரிடையே உள்ளது.

ஆனால் இந்நூற் பதிப்பாசிரியரோ[29] (திரு தெய்வசிகா மணிக்கவுண்டர்) இது கடைச்சங்க காலத்துப் பாண்டியன் திரு மாறனை, "தார் பொலிந்த மன்ன திருமாற! வண் கூடற் கோமானே;" (பஞ்சமரபு - இசைமரபு, பக்கம், 9) என்று முன் னிலைப் படுத்திப் பாடியுள்ளதால் இஃது கடைச்சங்க காலத்து நூலென்பதில் எத்துணையும் ஐயமில்லையென்றும், சங்கப் புல வர்களில் ஒருவரான அறிவுடையரனார் என்ற புலவரே அறிவனாராக இருத்தல் பொருந்தும் என்றும் கருத்துக் கொண் டுள்ளார். பதிப்பாசிரியர் மேலும், மேற்கூறிய வெண்பாவில் வரும் திருமாறன், முடத்திருமாறன் என்னும் பாண்டியன் ஆவான்; இவன் இடைச் சங்கத்து இறுதிக் காலத்தில் நிகழ்ந்த இரண்டாம் கடற்கோளால் கபாட புரத்தை விட்டு இப்பொழு

துள்ள கூடலென்னும் மதுரைக்கு வந்து கடைச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பாண்டியன் ஆவான். கடற் கோளின் போது இவன் கால் முடமுற்றமையால் 'முடம்' என்னும் அடைமொழி சேர்த்து முடத்திருமாறன் என வழங்கப் பெற்றான் என்றும், 'வண் கூடற் கோமானே' என்ற குறிப்பில், இவன் கூடலாகிய மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பொழுது ஆசிரியர் அறிவனார் 'பஞ்சமரபு' என்னும் இந்நூல் செய்தாரெனத் தெரிகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் கடைச்சங்க கால நூல் என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில் இந்நூலிலுள்ள வடமொழிக் கலப்பிற்குப் பதிப்பாசிரியர் பின்வரும் விளக்கமும் கொடுத்துள்ளார்.

30"சங்க கால இசை நாடக நூல் செய்தோர்களும் வட சொற்கள் தமிழிற் புகாதவாறே நூல் செய்யும்கருத்தினராயினும் தாம் நூல் செய்த காலத்தில் இசை நாடகங்களில் வரும் வட சொற்களுக்கு ஏற்ற தமிழ்ப் பெயர் காண்பது அரிதாய் இருந்தமையால், வடமொழிச் சொற்களை முன் நூலில் உள்ளவாறே தற்சமமாகவும், தற்பவமாகவும் எடுத்து ஆள்வாராயினர். ஆதலால் அவர்களால் வடசொற்கள் தமிழிற் புகுவதைத் தவிர்க்க முடியவில்லை எனலாம்."

டாக்டர் [31] வீ.ப.கா. சுந்தரம், இந்நூலில், ஆசிரியர் அறிவனார், பாண்டிய மன்னன் திருமாறனை ஒன்பது இடங்களில் முன்னிலைப் படுத்திப் பாடியிருப்பதாலும், நூலின்[32] சிலவரிகள் இளங்கோ அடிகளின் சிலப்பதிகார மூலப்பகுதியில் காணப்படுவதாலும், பஞ்சமரபு சங்ககால நூலே என்னும் கருத்தினைக் கொண்டுள்ளார்.

'பஞ்சமரபு சங்ககாலத்தைச் சேர்ந்த நூலே' என்னும் மேற்கூறிய கருத்துக்கள், தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு நூலின் சில பகுதிகளுக்கே குறிப்பாக, யாழ்மரபுப் பகுதிக்கே பொருந்துவதாகத் தோன்றுகிறது. பதிப்பில் வெளியாகியுள்ள நூல், பஞ்சமரபு மூலத்தின் அடிப்படையில் சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்ட நூல் எனக் கொள்ளலாம்.

இனி இந்நூல் 9ஆம் நூற்றாண்டுக்குப் பிறகும், 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னுமாகவும் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கூற்றுக்குரிய காரணங்களைப் பார்க்கலாம்.

இந்நூற் பெயர் பஞ்சமரபு என்றும், ஆசிரியர் பெயர் அறிவனார் என்றும் குறிப்பிட்டு அதனோடு 'செப்பிய சிந்து' என்னும் வெண்பாவினைக் குறிப்பிட்ட சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரின் காலம் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாதலால் பஞ்சமரபு 12ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல் என்பது தெளிவு.

இசைத் தமிழில், வடமொழிச்சொற் கலப்பு அதிகமாக ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த [33] மகேந்திரவர்ம பல்லவன் காலத்துக் குடுமியான் மலைக் கல்வெட்டில்தான் காணமுடிகிறது. இதில் சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் போன்றவற்றிற்குரிய எழுத்துக்களாக, சரிகமபதநி என்னும் ஏழு எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் பஞ்சமரபின் வங்கிய மரபிலும் காணப்படுகின்றன. எனவே சரிகமபதநி என்கிற ஏழு இசை எழுத்துக்களைக் கூறுவதான பஞ்சமரபு, ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பிட்ட நூல் எனக் கொள்ளலாம்.

''இலக்கியத்தினின்றெடுப்ப திலக்கணம்'' என்னும் வழக்குத் தொன்று தொட்டு நிலவி வருவதால், இசை இலக்கணங் கூறும் பஞ்சமரபுக்குப் பல இசை இலக்கியங்கள் குறிப்பாகப் பண்ணிசைக் குரிய தேவாரப் பாடல்கள் ஆதாரமாக இருந்திருக்கும். பஞ்சமரபில் 'கீதம்' என்ற சொல் காணப்படுகிறது. இசைப் பாடலைக் [34] 'கீதம்' என்று குறிப்பிடும் வழக்கம் தேவார காலத்தில் உள்ளது. எனவே பஞ்சமரபு நூல் தேவார காலமாகிய ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட நூல் எனக் கொள்ளலாம்.

[35]''கீதங்கள் தாளப் பெயரானும் வழங்கப்படும்'' என்னும் பஞ்சமரபு உரைக் குறிப்பு வடமொழி நூல்களில் மதங்கரின்

'பிரகத்தேசி' (7ஆம் நூற்றாண்டு) முதற்கொண்டு எழுந்த பல இசை நூல்களில் காணப்படுகிறது.

இக்காரணங்களைக் கொண்டு பஞ்சமரபு என்னும் நூல் ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகும், 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னருமான காலக்கட்டத்தில் இயற்றப்பட்ட நூல் என்று கணிக்கலாம்.

பஞ்சமரபிலுள்ள பண், இராகக் குறிப்புக்கள்:

இந்நூலிலும், உரையிலும் காணப்படும், பண், இராகக் குறிப்புக்களைக் கொண்டு நூலாசிரியர் காலத்தை ஓரளவு கணிக்கலாம்.

பஞ்சமரபு – இசைமரபின் வகையொழிபு மரபில், 103 பண்களை ஆரியப் பெயர் நெறிக்குரியன, தமிழ்ப் பெயர் நெறிக் குரியன, இருபாற்கு முரியன என்று வகைப்படுத்தி அவற்றை எடுத்துக் காட்டுகளோடு விளக்கியுள்ளமை குறிப்பிடத் தகுந் தது.

103 பண்களில், 'சாளரபாணி' என்னும் பண், திருமுறை கண்ட புராணத்தில் கூறப்படவில்லை. பிற்காலத்தில், 11- ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் [36]பூந்துருத்தி நம்பிகாடநம்பி இயற்றிய பாடல்களுள் "முத்து மணி வயிர", அல்லியம்பூம் பழனத் தாமூர்" என்கிற இரண்டு பாடல்கள் சாளரபாணிப் பண்ணில் அமைந்திருப்பதாக ஒன்பதாம் சைவத் திருமுறை யான திருவிசைப்பாவில் காணப்படுகிறது. பஞ்சமரபு உரையில் 'சாளரபாணி யொப்பது நாட்டம்' என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால் சாளரபாணி என்னும் பண்ணினைக் குறிப்பிடும் பஞ்ச மரபு. 8 – 11 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதொரு காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டுக் குரியது என்று கொள் வது பொருத்தமாகலாம் என்பது [37] பேராசிரியர் மு. அருணா சலம் அவர்களின் கருத்து. இக்கருத்து ஏற்கும்படி உள்ளது.

அடுத்து, தோடி என்னும் இராகத்தைச் [38] சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் செம்பாலையில் பிறக்

கும் பண்களில் நான்காவது பண்ணாகக் குறிப்பிட்டுள்ளார். இதுவும் தேவாரப் பண் முறையில் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், வடமொழி இலக்கண நூலில் முதன்முதலாகப் [39]பார்சவ தேவரின் சங்கீத சமயசாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (11 – ஆம் நூற்றாண்டு).

பஞ்சமரபு உரையில் '[40]தோடி' என்பது நிருபதுங்க ராகம் என்றும், இது 103 பண் வகைகளில் சம்பூர்ணமாகிய பண்கள் 17 இல் மூன்றாவதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த நிருபதுங்க ராகம் [41] திவாகர நிகண்டில் (10ஆம் நூற்றாண்டு) காணப் படுகிறது. [42]பஞ்சமரபு உரையில், மேலும் குறிஞ்சி, பாலை, மருதம், செவ்வழி என்ற நான்கு யாழ் நெறி ஒவ்வொன்றுக்கும் அகம், புறம், அருகு, பெருகு எனப் பண்களை உரையாசிரியர் குறிப்பிடும்போது பாலைக்கு அருகு சீர்கோடிகம் என்று குறிப் பிட்டு அடைப்புக் குறிகளில் கோடிகம், நிருபதுங்க ராகம் என்று காட்டியுள்ளார்.

[43] பேராசிரியர் மு. அருணாசலம், நிருபதுங்க ராகம் என்ற சொல் வரலாற்றுப் பொருள் கொண்டது என்ற கருத்தினைக் கொண்டு அவ்வரலாற்றைச் சுருக்கமாக வரைகிறார். நிருபதுங்க வர்மன் என்ற மன்னன், கி.பி. 850 – 890– ஆம் ஆண்டுகளில் காஞ்சியில் ஆட்சி புரிந்த பல்லவச் சக்ரவர்த்தி; ஆதித்தன் என்ற மன்னன், இரண்டாம் முறையாக வர குண பாண்டிய னோடு திருப்புறம்பியத்தில் செய்த போரில் நிருபதுங்க வர்மன் என்ற பல்லவன் தம் மகன் அபராசித வர்மன் தலைமையில் ஒரு பெரும் படையை ஆதித்தனுக்குத் துணையாக அனுப்பி வரகுணனைத் தோற்றோடச் செய்தான். இந்த நிருபதுங்க வர்மன், நந்திக் கலம்பகம் கொண்ட மூன்றாம் நந்தி வர்மனது புதல்வன். சிறந்த கலா வினோதனாக இருந்திருக்கிறான்; இவன் பெயர் ஓர் இராகத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. இதுவே நிருபதுங்க ராகம். இராகங்களுள் ஒன்றாக இதையும் திவாகர நிகண்டு சொல்வதால், அக்காலத்தில் இது பிரசித்த மாக வந்துவிட்ட தென்று அறிகிறோம். இக்காரணத்தினால் பஞ்சமரபு நூலும், உரையும் இதே காலத்தில் அதாவது ஒன்ப தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் செய்யப் பெற்றன

என்று உறுதியாகக் கூறுகிறார். ஆனால் இக்கருத்தைத் திரு. அடிகளாசிரியர், 103 பண்களில், மாதுங்க ராகம், சூர்துங்க, ராகம் என்பது போன்று நிருபதுங்க ராகமும் ஒன்று எனவும், நிருபதுங்க மன்னனுக்கும், இந்த இராகத்திற்கும் எவ்விதமான தொடர்புமில்லை என்று மறுக்கிறார்.

நிருபதுங்கராகம் என்பது பஞ்சமரபு வெண்பாவில் காணப் படவில்லை. தோடி என்பதே காணப்படுகிறது. பிற்சேர்க்கை யில், "இராகம் பன்னிரண்டாவன" என்னுந் தலைப்பிலமைந்த,

[44]"துக்கரா கஞ்சூர் துங்கரா கஞ்சோம ராகம் பழந்
தக்கரா கம்நட்ட ராகஞ் சீராகந் தருகின்னரம்
மிக்கமா துங்க ராகமே கராகம் நிருபதுங்கம்
தக்கரா கம் நாகம் பன்னிரண்டேயென்று
சாற்றினரே"

என்னுஞ் செய்யுளில் நிருபதுங்க ராகம் என்னுமிந்த இராக மும் சேர்க்கப்பட்டுள்ளது. பிற்சேர்க்கையில் தாண்டவப் பொது வியல் - ஒழிபுமரபில் சேர்க்கப்பட்டுள்ள 33 வெண்பாக்களில் இப்பாடல் காணப்படவில்லை. இச்செய்யுள் சேந்தன் திவா கரத்தை அடியொற்றியது. நிருபதுங்க ராகம் என்கிற குறிப்பு உரையில் மட்டுமே காணப்படுவதால் 9 – 10 ஆம்-நூற்றாண்டு என்கிற காலக் கணிப்பு உரையாசிரியர் (தொகுப்பாசிரியர்) காலத்திற்கே பொருந்தும்.

பிற இசைக் குறிப்புக்கள்:

பஞ்சமரபில் கூறியுள்ள [45]பாக்கள் சிலவற்றின் இலக்கணத் தையும், சில இசைப் புணர்ப்பு இலக்கணத்தையும் ஆராயும் போது, இவை தற்போதுள்ள கீர்த்தனை, இராகமாலிகை போன்ற உருப்படி வகைகளின் இலக்கணத்தையும், சூலாதி சப்த தாளம் என்ற இலக்கண நெறியையும் சார்ந்ததாகத் தெரிகின்றன. இசை இலக்கண வரலாற்றில் இவை 14 – 15 ஆம் நூற்றாண்டுகளில் வழக்கிலிருந்தவை.

பஞ்சமரபின் வகை யொழிபுமரபில், [46]'மூர்த்திகளைப் பார்த்தருளிச் செய்த நாடகப்பாக்களாகச் 'சிந்துகள், திருப் பாட்டு, நிறம்' என்பவை கூறப்பட்டுள்ளன. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரட்டைப் புலவர்கள், ஏகாம் பரநாதர் உலாவில்,[47] தேவாரஞ் செய்த திருப்பாட்டும்' என் னும் தொடரில் தேவாரத்தைத் 'திருப்பாட்டு' என்று கூறி யுள்ளார். பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அருணகிரி நாதர் பாடிய திருப்புகழும், கோயில் மூர்த்தங்களைப் பார்த் தருளிச் செய்யப்பட்டவை.

தற்போது பதிப்பிலுள்ள பஞ்சமரபின் நூல் அமைப்பை நோக்குகையில், இதில் நரம்புக் கருவியாகிய யாழ், அதில் தோன்றும், பாலை, பண் ஆகியவற்றை விளக்கிக் கூறும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு, பதினைந் தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வடமொழி நூல்களாகிய சங்கீதசாரம், சுரமேள கலாநிதி ஆகிய இசை நூல்களிலும் காணப்படுகிறது. இவற்றில் தந்தி வாத்தியமான வீணையைப் பற்றிய விளக்கம் முதற்பகுதியிலும், பிறகு அதிலுள்ள சுரத் தானங்களிலும், அவற்றின் இடைவெளிகளிலும், சுரஅமைப்புக் களிலும் ஏற்பட்ட மேளங்களும், அதில் தோன்றும் இராகங் களும் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது, தற்போது (1975 ஆம் ஆண்டு) பதிப்பிலுள்ள பஞ்சமரபு நூலும், உரையும் 15ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்டவையாகக் கொள்ளலாம்.

இந்நூல் சங்க கால நூலன்று என்பதற்குரிய பிற காரணங்கள்

பஞ்சமரபு செய்யுளமைப்பை எடுத்துக்கொள்ளும் போது அவை வெண்பாவில் இயற்றப்பட்டவை. பண்டைய நூல்கள், இலக்கிய இலக்கணங்கள் யாவும் ஆசிரியப் பாவினாலேயே செய்யப் பெற்றுள்ளன. கலித்தொகையிலும் பரிபாடலிலும் சில வெண்பா யாப்பமைதிகளைக் காணலாமே யன்றி, முழு மையான வெண்பா நூல்கள் முன்னமே எழவில்லை.

திருக்குறள், 'குறள் வெண்பா' என்ற வெண்பா விகற்பத்திலும், பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் வெண்பா யாப்பிலும் செய்யப் பெற்றுள்ளன. திருக்குறள் நீங்க, இவ்வனைத்தின் காலம் கி.பி. 4-8 ஆம் நூற்றாண்டுகள். இவற்றை வைத்துச் சிந்திக்கும்போது, பஞ்சமரபு இவற்றுக்கு முற்பட்ட காலத்தில் செய்யப் பெற்றிருத்தல் இயலாது எனத் தெரிகிறது.

இந்நூலிலுள்ள செய்யுளின் இலக்கண அமைப்பைப் பார்க்கும்போது, இது ஆடூஉ முன்னிலையாகவும், மகடூஉ முன்னிலையாகவும், தன்மை ஒருமையிலும் பாடப் பெற்றுள்ளது. பெரும்பாலான பாடல்கள் மகடூஉ முன்னிலையாகப் பாடப் பெற்றுள்ளன. இவ்வாறு பெண்ணை விளித்துப் பாடல் இயற்றும் முறை பழங்கால நூல்களில் அதிகமாகக் காணப்படவில்லை. எனவே இந்நூல் சங்க கால நூலாக இருக்கவியலாது.

பஞ்சமரபு ஆசிரியர் பாட்டியல் நெறியைப் பின்பற்றித் தேவர், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், பிறசாதிகள் என்று பாகுபாடு செய்து கொண்டு அவர்களுக்கு உரிய பாக்களைப் புணர்க்கும்போது கடைப் பிடிக்க வேண்டிய இலக்கண நெறிகளைக் கூறுகின்றார். தமிழ் இலக்கண மரபில் பாட்டியல் என்பது மிகவும் பிற்காலத்தே வந்த ஒரு விரிவு. பத்தாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட பன்னிரு பாட்டியலானது 8–9 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த பாட்டியற் பரப்பு முழுமையும் சிதைந்துபோக, அச்சிதைவிலிருந்து கிடைத்த தனி நூற்பாக்களைச் செவி வழியாகவும், நினைவு கொண்டும், ஓராசிரியரால் தொகுக்கப் பெற்ற ஒரு நூல் என்று கூறப்படுகிறது. எனவே பாட்டியல் நெறி கருத்துக்களைக் கூறும் பஞ்சமரபு 9–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கலாம் என்று கருதலாம்.

இதுவரையில் கூறியவற்றால் பஞ்சமரபு நூலைப் பற்றியும், ஆசிரியரைப் பற்றியும் அறியப்படுவன:

தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு முழுமையும் ஆசிரியர் அறிவனாரால் இயற்றப்பட்ட பஞ்சமரபு மூல

நூலாகக்கொள்ளமுடியாது. இது பிற்காலப் புலவர் ஒருவரால் இயற்றப்பட்ட நூல். இவர் பஞ்சமரபு நூலின் உரையாசிரிய ராகவும் இருக்கலாம். இவ்வாசிரியர் பஞ்சமரபு நூலுக்கு உரை எழுதும் நோக்குடன் மூல நூலுடன் தம் காலத்தும், அதற்கு முன்னரும் இருந்த நிகண்டுகளிலிருந்தும், நூல்களிலிருந்தும் இசை நாடகச் செய்திகளைத் தொகுத்து வெண்பா வடிவில் இயற்றியிருக்கலாம். 'சேறையறிவனார் செய்தமைத்த ஐந்து தொகை கூறுதலிந் நூற்குணம்' என்னும் பாயிரச் செய்யுட் குறிப்பு இதனையே உணர்த்துகிறது.

பஞ்சமரபின் சில பகுதிகள் குறிப்பாக யாழ்மரபுப் பகுதி கள் சங்க காலத்துக் குரியவை எனலாம். பஞ்சமரபு தொகுப் பாசிரியர் (அல்லது) உரையாசிரியர் 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்திருக்கலாம். பதிப்பில் வெளிவந்துள்ள பஞ்ச மரபு நூல், இசை இலக்கணத்தில் 15ஆம் நூற்றாண்டு வரை யுள்ள செய்திகளை அடைவாகக் கொண்டு திகழ்வதால், இந் நூல் 15ஆம் நூற்றாண்டில் திருத்தம் அடைந்ததாகக் கூற லாம்.

எனவே, தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு நூல் சங்க காலம் முதற்கொண்டு 15ஆம் நூற்றாண்டு வரை யிலான இசைச் செய்திகளை ஒரு தொடர்ந்த மரபோடு விளக்கும் ஒரு தொகுப்பு நூல்; அடியார்க்கு நல்லார் மற்றும் பிற இசையாசிரியர்களால் துணை நூலாகப் பயன்படுத்தக் கூடிய அளவு பெருமை வாய்ந்தது – என்னும் கருத்துடன் ஆய் வின் அடுத்த இயலுக்குச் செல்வோம்.

துணைக் குறிப்புக்கள்:

1. தெய்வசிகாமணிக் கவுண்டர். வே.ரா. 1975. **அறிவனார் இயற்றிய பஞ்சமரபு** சக்தி அறநிலைய வெளியீடு. க,உ. கோவை. பக்கங்கள் 1 – 255; 1 – 279.

2. "இந்நூல் எவ்வளவைத்தோ வெனின்? இருநூற்று நாற்பது வெண்பாவாலே முற்றுப் பெற்றது." பஞ்சமரபு, பாயிரம் – 5 (உரை)

3. தெய்வசிகாமணிக் கவுண்டரின் கையேட்டுப் பிரதி எண் – 73. சாந்தலிங்க அடிகளார் மடம், பேரூர்.

4. பஞ்சமரபு – ஓலைச்சுவடி. எண் – 12. சாந்தலிங்க அடிகளார் மடம். பேரூர்.

5. பஞ்சமரபு – பாயிரம் – 5. பக்கம் 8.

6. பஞ்சமரபு – வகையொழிபு மரபு. பக்கம் – 101.

7. பஞ்சமரபு – பாயிரம் 3. (உரை) இசை, முழவு, தாளம், கூத்து, அவிநயம் ஆகிய ஐந்துறுப்புக்கள் சேர்ந்தது 'கீதம்' என்னும் பொருள் இங்குக் 'கொள்ளப்படுகிறது.

8. பஞ்சமரபு – யாழ்மரபு. பக்கம் – 23.

9. சாமிநாதய்யர் உ.வே. 1978. **சிலப்பதிகார மூலமும் அரும் பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்,** உ.வே. சாமி நாதய்யர் நூல் நிலைய வெளியீடு எண். 58. சென்னை. பக்கம் – 222.

10. மேற்படி. பக்கம் – 222.

11. மேற்படி. பக்கம். 590 – 595.

12. மேற்படி. பக்கம், 775–776.

13. சாமிநாதய்யர். உ.வே.1949. **திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியருரையும்,** சென்னை

14. அருணாசலம். மு. 1975. **தமிழ் இலக்கிய வரலாறு – ஒன் பதாம் நூற்றாண்டு – முதல் பாகம்.** காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம் பக்கம். 322

15. வெள்ளை வாரணனார். க.1954 **அறம் வளர்த்தான் இயற் றிய பரத சங்கிரகம்,** அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்தமிழ் வெளியீடு – சிதம்பரம்.

16. வாசுதேவ சாஸ்திரிகள். கே. (பதிப்பாசிரியர்). 1955. **தாள சமுத்திரம்,** தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண்.50. தஞ்சாவூர்.

17. சங்கரனார். க. (பதிப்பாசிரியர்) 1968. **இசைமரபு**, நெல்லை சங்கீத சபை, திருநெல்வேலி.

18. பஞ்சமரபு - பாயிரம்.5. பக்கம் 8

19. பஞ்சமரபு - முதற்பகுதி - முன்னுரை. பக்கம் VII

20. வெள்ளைவாரணன். க. 1983. நூல் மதிப்புரை - 'பஞ்ச மரபு'. **தமிழ்க்கலை**. 1. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். பக்கம். 98.

21. சிலப்பதிகாரம் - கடலாடுகாதை அடி.35.அடியார்க்கு நல்லார் உரை

22. பஞ்சமரபு - பாயிரம்.5.பக்கம். 8

23. அருணாசலம். மு. 1975. **தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு**. பக்கம் 316.

24. மேற்படி. பக்கம். 317.

25. பஞ்சமரபு - இரண்டாம் பகுதி. நிருத்தமரபு. பக்கம் - 1

26. பஞ்சமரபு - முதற் பகுதி. வாச்சியமரபு - பக்கம்.161.

27. அருணாசலம்மு. 1975. **தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு**. பக்கம். 336.

28. ''தாரபட்டங் கட்டியமன் மதனைத் தண் குடைநிழற்கீழ்
ஈரபட்டங் கட்டினன் கா ணிராச ராசன்
வீரபட்டங் கட்டிவிட்ட னன்மெய்யடி யாரையன்று
சேரபட்டங் கட்டினான் கெட்டனன் சேனையோடே''
பஞ்சமரபு - வகை யொழிபு மரபு - பக்கம் 128

29. பஞ்சமரபு - முதற்பகுதி. முன்னுரை. பக்கம். VII

30. பஞ்சமரபு - இரண்டாம் பகுதி முன்னுரை. பக்கம். XI

31. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அக்டோபர் 1984-இல் நடந்த பஞ்ச மரபு நூல் திறனாய்வுக் கருத்தரங்கில் கூறப்பட்டது. சுந்தரம் வீ.ப.கா. 1985, "பஞ்சமரபு - சங்கக்கால இசை நூல்" **தமிழிசை வளம்** மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

32. பஞ்சமரபு - யாழ்மரபு. வெண்பா. 10,11.

33. Satyanarayana,R. 1907. **Kudumiyāmalai insciptian on Music** Sri. Varalakshmi Academi Publication series no 3. Mysore

34. ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் (பதிப்பாசிரியர்) 1955. **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் - மூன்றாவது திருமுறை.,** தருமபுர ஆதீன வெளியீட்டு எண். 348.

35. பஞ்சமரபு - வகையொழிபு மரபு. பக்கம். 130.

36. அருணாசலம்.மு. 1974. **ஒன்பதாம் திருமுறை,.திருவிசைப்பா, திருப்பல்லாண்டு,** சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு சென்னை பக்கம் 23.

37. அருணாசலம். மு. 1975. **தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு** (முதல்பாகம்) பக்கம். 328.

38. **சிலப்பதிகாரம்-வேனிற்காதை.** உ.வே.சாமிநாதய்யர் பதிப்பு பக்கம். 232.

39. Sambamurti. P. 1969. **South Indian Music Book-VI.** Indian Music Publishing house, Madras P.142.

40. பஞ்சமரபு - வகையொழிபு மரபு. பக்கம். 110.

41. தாண்டவராய முதலியார். 1923. **சேந்தன்திவாகரம்** சென்னை.

42. பஞ்சமரபு - யாழ்மரபு. பக்கம். 42.

43. அருணாசலம். மு.1975. **தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு (முதல்பாகம்)** பக்கம். 328

44. பஞ்சமரபு - இரண்டாம் பகுதி. பிற்சேர்க்கை. பக்கம். 165

45. பஞ்சமரபு - நிறத்தமரபு. வெண்பா. 51,52. (உரை).

46. பஞ்சமரபு - வகையொழிபு மரபு. வெண்பா. 89(உரை). பக்கம். 134.

47. ஆலால சுந்தரம் பிள்ளை.க. (பதிப்பு)1900. **இரட்டைப் புலவர்களின் ஏகாம்பரநாதருலா.**, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.

இயல் - இரண்டு

யாழ்மரபு

பஞ்சமரபின் முதற்பெரும் பிரிவிலுள்ள செய்திகள் [1]மூவிசை யான நரம்பிசை, குழலிசை, மிடற்றிசை ஆகியவற்றின் இலக் கணத்தையும், அவற்றினிடையே தோன்றும் இசைப்பாக்களின் வகைகளையும், தன்மைகளையும் விளக்கும் வகையில் அமைந்து இருப்பதால் 'இசைமரபு' என்னுந் தலைப்பு அமைந்துள்ளது.

இசைக்கருவிகள் பொதுவாக, நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி என்ற நான்கு வகைகளில் வகைப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் நரம்புக்கருவியான யாழினைப் பற்றி விளக்குவது பஞ்சமரபு - இசைமரபின் முதல் உட்பிரி வான 'யாழ்மரபு'.

யாழ் - பண்டைத் தமிழரின் கலை, பண்பாட்டு - வாழ்க் கையில் ஒரு முக்கிய இடத்தை வகித்தது. பண்டைய தமிழர் தங்களது நாட்டை அந்தந்த இயற்கைச் சூழ்நிலைக்கேற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து நிலங்களாகப்பிரித்து, ஒவ்வொரு நிலத்திற்கும் சிறப்பாக யாழ், பறை ஆகிய இசைக்கருவிகளைக் கருப்பொருளாகக் கொண்டு வாழ்ந்தனர். இவ்வகையில் குறிஞ்சியாழ், மருதயாழ், முல்லை யாழ், நெய்தல்யாழ், பாலையாழ் என்னும் ஐந்து யாழ்கள் பண்டைய தமிழர் வழக்கில் இருந்தன.

யாழ், இந்த ஐந்நில மக்களால் கையாளப்பட்டதொரு கருவியையும், இவற்றிலிருந்து எழக்கூடிய இசையையும் குறிப்ப தான சொல்லாக அமைந்துள்ளது. எனவே, யாழ், இசையின் பிறப்பிற்கே ஆதாரமாக இருந்தமையால், பண்டைய தமிழர் இதனைத் தெய்வமாகவே கருதி வழிபட்டனர். இசைக்கு (சுரங்களுக்கு) நரம்புகள் என்ற பெயர் வழங்கி, யாழின் நரம்புகளில் நின்ற இசைகளை (சுரங்களை) வைத்து இசை யிலக்கணம் வகுத்துள்ளனர். யாழினை முதலிடமாகவும்,மைய

மாகவும், வைத்து இசையைப் பற்றி ஆய்ந்து பண் இலக்கணம் எழுதியுள்ளனர் என்று கூறலாம்.

பண்டைத்தமிழர் வாசித்த யாழ்க்கருவி ஆயிரம் ஆண்டு களாக மறைந்த நிலையில், சங்க இலக்கியங்களையும் தொல் பொருட் சிற்பங்களையும் ஆதாரமாகக் கொண்டு ஒப்புநோக்கி யாராய்ந்து, ஓவியமாகவும் உருவமாகவும் வெளியிட்டு, யாழுக் குரிய உறுப்புகளையும் அவற்றின் பயன்களையும் விளக்கி **யாழ்நூல்** என்னும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலை முதன் முதலில் இயற்றியவர் தவத்திரு விபுலானந்த அடிகளாவார்.

பண்டைத் தமிழரின் இசைக்கு ஆதாரமான, யாழ் பற்றிய செய்திகள் சங்க இலக்கிய நூல்களில் பெருமளவு காணப்படு கின்றன. பத்துப்பாட்டு இலக்கியங்களில் பொருநர் ஆற்றுப் படை, பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை மலைபடுகடாம் ஆகிய நான்கு இலக்கியங்களிலும், சிலப்பதி காரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்ற காப்பியங் களிலும், கல்லாடம், கொங்கு வேண்மாக்கதை, பிங்கலந்தை, சேந்தன்திவாகரம் போன்றவற்றிலும் யாழின் விவரங்கள் காணக் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களுள் ஒன்றான பரி பாடலில்,[2] ‘‘கூரம்’’ என்ற சொல், பொதுவாக யாழைக் குறிக்கும் சொல்லாக இருந்துள்ளது. யாழ், [3]‘இன்னியம்’ என்ற பெயரிலும் ‘கேள்வி’ என்ற பெயரிலும் இலக்கியங்களில் வழங் கப்பட்டது. எகிப்திய மொழியில் இது [4]‘நங்கா’ எனப்பட்ட தென்பர்.[5] ‘பிங்கல நிகண்டு’ யாழின் பெயர்களாகத் தந்தி, வீணை, கின்னரம், கோட்டம், கோடவதி, விவஞ்சி ஆகியவற் றைக் கூறுகிறது. மேலும் இது கலம், கருவி என்றும் கூறப் படும்.

இசைத்தமிழ் இலக்கணங்கூறும் பஞ்சமரபு ஆசிரியரும் யாழின் முக்கியத்துவத்தைஉணர்ந்து, இசைமரபின் பதினெட்டு வெண்பாக்களில் (7 – லிருந்து 24 வெண்பாக்கள்) ‘யாழ்மரபு’ என்னும் உட்பிரிவில் யாழின் விவரங்களை அடக்கியுள்ளார். இவ்விவரங்கள் முன்னர்க் குறிப்பிட்டுள்ளது போல், யாழ் – ஓர் இசைக்கருவி என்கிற வகையிலும்; அதிலிருந்து ஒலிக்கக் கூடிய

இசையின் பாலை, பண் இலக்கணம் என்கிற வகையிலுமாக இரண்டு விதங்களில் விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தகுந்தது. இப்பகுதி வெண்பாக்கள் வடமொழிக்கலப்பின்றித் தூய தமிழிலேயே இருப்பது குறிப்பிடத்தகுந்தது.

தற்போது எடுத்துக் கொண்டுள்ள ஆய்வினுள் இந்த இயல், யாழ்க்கருவியை உணர்த்தும் வகையில் யாழ்வகை, நரம்புகள், யாழ் செய்வதற்குரிய மரங்கள், யாழின் உறுப்புக்கள், அவற்றின் இலக்கணங்கள், யாழிற்குரிய **தொழிற் கைகள்** ஆகிய விவரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவை பஞ்ச மரபு-யாழ்மரபின் 7-லிருந்து 11 வெண்பாக்கள் வரையிலான ஐந்து வெண்பாக்களிலும் அவற்றிற்குரிய உரையிலும் அடங்கியுள்ள செய்திகளாகும். இவ்வியல், மேலும் யாழ் – வீணை இவற்றிற்குள்ள ஒப்புமை வேற்றுமைகளை எடுத்தியம்புவதாகவும் அமைந்துள்ளது.

யாழ் வகைகளும் நரம்புகளும்.

இசைக்குப் பிறப்பிடமான யாழின்கருவிகள் பஞ்சமரபில் நான்கு வகையாகக் கூறப்பட்டுள்ளன.

[6]"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர் பொலி செங்கோடு செப்பின ராற்றார் பொலிந்த
மன்ன திருமாற வண்கூடற் கோமானே
யின்ன முளவே சில"

இவ்வெண்பாவும் உரையும் சிலப்பதிகாரத்தின்[7] அடியார்க்கு நல்லார் உரையிலும் காணப்படுகின்றன. நால் வகை யாழ்களாவன: பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ். இப்பாடலின் இறுதியிலுள்ள 'இன்ன முளவே சில' என்ற குறிப்பிலிருந்து மேற்கூறப்பட்ட யாழ்களைத் தவிர மேலும் சில யாழ்களும் அக்கால வழக்கில் இருந்தன என்பது புலப்படுகிறது. இதற்குச் சான்றாக, இலக்கியக் குறிப்புக்களிலிருந்து பெறப்படும், வில்யாழ், சீறியாழ், நாரதயாழ், கீசகயாழ், ஆயிரப் பேரியாழ், மகதியாழ் கச்சபியாழ், போன்றவற்றைக் கூறலாம்.

பஞ்சமரபில் குறிக்கப்பட்டுள்ள நால்வகை யாழிற்குமுரிய நரம்புகளாகப் பேரியாழிற்கு இருபத்தொன்றும், மகரயாழிற்கு பத்தொன்பதும், சகோடயாழிற்கு பதினான்கும், செங்கோட்டி யாழிற்கு ஏழும் கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்மரபின் பின்வரும் வெண்பாவிலிருந்து தெரிய வருகிறது.

[8]"ஒன்று மிருபதும் ஒன்பதும் பத்துடனே
நின்ற பதினான்கும் பின்னேழுங்—குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகைநூ லோதும் விதி"

இவ்வெண்பாவும் அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படுகிறது.

யாழுக்குரிய மரங்கள்:

கொன்றை, கருங்காலி, மென்முருக்கு, குமிழ், தணக்கு ஆகியவற்றை யாழுக்குரிய சிறந்த (உத்தம) மரங்களாகப் பஞ்சமரபு நூல் கூறுகிறது. உரையில் கோடு என்னும் உறுப்பிற்குக் கருங்காலியும், கொன்றையும் சிறந்தவை என்றும், பத்தர் என்னும் உறுப்பிற்குக் குமிழ், தணக்கு, முருக்கு ஆகிய மரங்கள் சிறந்தவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடைச் சங்க காலத்திலும், அதற்கு முன்னரும் தோன்றிய இலக்கியங்களில் வில்யாழும், சீறியாழும், பேரியாழுமே குறிக்கப்பட்டிருக்கின்றன. சகோடயாழும், மகரயாழும், செங்கோட்டி யாழும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ளன.

பண்டைய இலக்கியங்களிற் குறிப்பிடப்பட்டுள்ள இந்த யாழ் வகைகள் ஒவ்வொன்றின் இலக்கணத்தையும், பஞ்சமரபின் வெண்பா, உரைகொண்டு விரிவாக ஆராய்தல் இங்குப் பொருந்தும்.

வில்யாழ்:

இது நரம்புக் கருவிகளில் பழமையானதாகக் கருதப்படுகிறது.

"......................................[9]குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி
...."

என்னும் பெரும் பாணாற்றுப்படைக் குறிப்பிலிருந்து வில் யாழின் அமைப்பு தெரிகிறது. குமிழ மரக் கொம்புகளை வில் லாக வளைத்து மரல் நாரிலே திரித்த கயிற்றினை நாணாகக் கட்டி ஒரே அளவான ஏழு விற்கள் கொண்டு அமையப்பெற்றி ருக்கும். நாண்கள் தாழ்த்தியும், உயர்த்தியும் கட்டப்பட்டன வாய், அளவு வேறுபட்டிருக்கும்.

பேரியாழ்:

பேரியாழ் என்னும் பெயரிலிருந்து இது பெரிய உருவம் கொண்ட யாழ் என்றறியலாம். இது [10]பெருங்கலம் எனவும் பரவையாழ் எனவும் பெயர் கொண்டது.

"ஆரியப் பதங்கொள் நாரதப் பேரியாழ்"
"தும்புருக் கருவியுந் துன்னி நின்றிசைப்ப"
"கீசகப் பேரியாழ் கிளையுடன் முரல"

என்னும் [11] கல்லாடக் குறிப்புகளிலிருந்தும்,

[12]"ஆயிர நரம்பிற் றாதி யாழாகும்" என்னும்பிங்கலந்தை, சேந்தன் திவாகரம் போன்ற நிகண்டு குறிப்புகளிலிருந்தும், நாரதயாழ், தும்புருயாழ், கீசகயாழ், ஆதியாழ் ஆகியவை பேரியாழுடன் தொடர்புடையவை எனத் தெரிகிறது. கல்லா டக் குறிப்புக்கள் நாரதயாழும், தும்புருயாழும் ஒன்பது நரம்பு களைக் கொண்டவை என்றும், தும்புரு யாழின் ஒன்பது நரம்பு களில் ஒன்று சுருதி நரம்பு என்றும், கீசக யாழ் 100 நரம்பு களைக் கொண்டது என்றும் உணர்த்துகிறது. நிகண்டு குறிப்பு 1000 நரம்புகள் கொண்ட பேரியாழ், 'ஆதியாழ்' எனப் பெயர் கொண்டு முன் காலத்தில் இருந்தது என்று உணர்த்துகிறது. ஆனால், [13]"பேரியாழ் முதலிய எனவும் இறந்தனவெனக் கொள்க" என்னும் அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரத்

தொடர். 1000 நரம்புகள் கொண்ட ஆதியாழ், அடியார்க்கு நல்லார் காலத்தின் முன்னரே இறந்து பட்டது என்பதை உணர்த்துகிறது.

ஆயிரம் நரம்புகளும் அறுந்து போகாமல் சுருதி கூட்டுவது கடினமாக இருந்திருக்கும். இக்கருவியை இடத்துக்கிடம் எடுத்துச்செல்வதில் இதன் வடிவு அளவு ஒரு தடையாக இருந்திருக்கும். இது போன்ற சில காரணங்களால் ஆதியாழ் இறந்துபட்டிருக்கும் என்று ஊகிக்கலாம்.

இவ்வாறு இக்கருவி இறந்து பட்டிருப்பினும் பேரியாழ் என்ற, நரம்புகளின் அடிப்படையிலான பெயரில் மாற்றம் இல்லை. பஞ்சமரபு காலத்தில் அதிக நரம்புகளின் எண்ணிக்கை 21 என்று வரையறை செய்யப்பட்டு அதற்குப் பேரியாழ் என்று பெயரிட்டிருக்கலாம்.

பஞ்சமரபு உரையில் பேரியாழுக்கிலக்கணமாகப் பின் வரும் செய்யுள் காணப்படுகிறது.

> "கோட்டத்தளவே பதினொரு சாணே
> பத்தலளவே யேழு சாணாகும்
> புட்டிலளவே முச் சாணாகும்
> பொதிகை யெருத்தந் தலையே முகனோ
> டேத மின்றி இயைந்த வகை கொளல்
> தந்திரி தானும் பதின்முச் சாணே
> யவ்வுறு திவவே யான்றோ ரதற்குக்
> கவ்வரி முண்டகங் கட்டுதல் மரபே"

இதிலிருந்து பேரியாழ், கோடு, பத்தல், புட்டி, தந்திரி, திவவு முண்டகம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டது என்றும், இவற்றின் அளவுகளாக

கோட்டின்	அளவு 11 சாண்
பத்தல்	அளவு ஏழு சாண்
புட்டில்	அளவு மூன்று சாண் (முச்சாண்)
தந்திரி	அளவு 13 சாண் (பதின்முச்சாண்)

என்றும் தெரிகிறது. சுவாமி விபுலானந்தர் சாண் என்பது தற்கால மேனாட்டு அளவின்படி ஒன்பது அங்குலம் என்று கருதுகிறார்[14].

இந்த அளவின்படி பேரியாழின் அளவு தற்போதைய வீணை தம்பூராவைக் காட்டிலும் இருமடங்காக இருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். எனவே இக்கருவி ஏதேனும் ஓரிடத்தில் நிலையாகப் பொருத்தி வைக்கப்பட்டு, திருவிழா போன்ற காலங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

பஞ்சமரபு நூலிலும், உரையிலும் கோடு, பத்தல் போன்ற உறுப்புக்களின் விளக்கங்கள் காணப்படவில்லை. எனவே யாழ் தொடர்பான நூல்களின் துணைகொண்டு இவ்வுறுப்புகளைப் பற்றி அறிதல் இங்குப் பொருந்தும்.

'கோடு' என்னுமுறுப்பு வரி அல்லது மரக்கொம்பு எனப் பொருள்படும். இவ்வுறுப்பு[15] 'மருப்பு' என்று பண்டைய நூல்களில் காணப்படுகிறது.

''பாம்பணந்தன்ன ஓங்கிரு மருப்பின்' என்னும் பொருநராற்றுப் படைக் குறிப்பு வடிவு பற்றிய உவமம்; ''மணிவார்ந்தன்ன மாயிரு மருப்பு'' என்னும் பெரும்பாணாற்றுப் படைக் குறிப்பும், ''களங்கனியன்ன கதழ்ந்துகிளர் உருவின் வணர்ந்தேந்து மருப்பு'' என்னும் மலைபடு கடாம் குறிப்பும் நிறம் பற்றிய உவமங்கள்.

எனவே கோடு என்னும் உறுப்பானது, கருங்காலியினாற் செய்யப்பட்டு, வலிவுமிக்கதாய்ப் பாம்பு படமெடுத்தாற் போன்று தலை தூக்கி நிற்கும் அமைப்பினைக் கொண்டிருந்தது என்றறியலாம். இவ்வுறுப்பு தற்போது வீணை, தம்பூரா போன்ற இசைக்கருவிகளில் 'தண்டி' என்னும் பெயருடன் காணப்படுகிறது.

'பத்தல்' என்பது பத்தர் அல்லது கலம் என்று கூறப்படும். இது ஒரு பாத்திரம் போன்ற நீர் இறைக்குஞ்சால். இது

குடத்தையொத்த அமைப்பினை உடையதால் தற்காலத்தில் இவ்வுறுப்பு குடம் அல்லது பானை என்று வழங்கப் படுகிறது. இவ்வுறுப்பு [16]'அகளம்' என்று சிறு பாணாற்றுப் படையில் கூறப்படுகிறது.

பத்தலை மூடிய ஓர் உறுப்பு **'போர்வை'** என்ற பெயரில் பெரும் பாணாற்றுப் படையிலும் மற்ற நூல்களிலும் காணப் படுகிறது. இது 'பச்சை' என்றும் கூறப்படும். இவ்வுறுப்பு பஞ்ச மரபு உரையில் கொடுக்கப்படவில்லை.

புட்டில் என்பது வறுவாய் எனப்படும், யாழிலிருந்து எழும் ஒலி, நலம்பட வெளிவர வேண்டும் என்பதன் பொருட்டு, பத் தலை மூடியுள்ள போர்வையில் ஓர் திறப்பு வாய் அமைக்கப் பட்டிருந்தது. இது 'வறுவாய்' என வழங்கப்பட்டது. [17]இதன் அமைப்பு வட்ட வடிவமாய் இல்லாது, அமாவாசையிலிருந்து எட்டாம் நாள் வளர்பிறை நிலவை ஒத்த வடிவில் அமைக்கப் பட்டிருந்தாகத் தெரிகிறது.

தந்திரி என்பது யாழ் நரம்பினைக் குறிக்கும்.

திவவு என்னுமுறுப்பு நரம்புளை யாழில் கோட்டுறுப்பில் அமைவுறக் கட்டும் வார்க்கட்டுகள். [18]கரிய நிறத்ததாகிய கோட்டின் மீது கட்டப்பட்ட திவவானது, கரிய நிறமுடைய பெண்ணின் கையிலணியப்பட்ட வளையல் போலவும், கருங் குரங்கின் கையினைச் சுற்றிய பாம்பு போலவும் இருந்தன என்று பெரும் பாணாற்றுப் படையிலும், சிறு பாணாற்றுப் படையிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

கவ்வரி முண்டகம் என்பது திவவின் கடைசியில் முடிந்த மணிமுடி.

> ''அவ்விசித் திவவின் கடைக்.........
> கணி பெற வகுத்த மணிமுடியாகும்.'' என்றிருப்பதால்

இவ்வுறுப்பு யாழுக்கு ஓர் அணிகலனைப் போன்று விளங்கு கிறது எனலாம்.

மகரயாழ்:

பத்தொன்பது நரம்புகளை கொண்ட மகரயாழ் என்னும் இக்கருவி மணிமேகலையில்,

[19] "மகரயாழின் வான் கோடு தழீஇ" என்னும் தொடர் குறிப்பில் காணப்படுகிறது. சீவக சிந்தாமணி, பெருங்கதை மணிமேகலை குறிப்புக்களில், 'மகர வீணை' என்னும் பெயரிய ஒரு கருவியும் காணப்படுகிறது.

பஞ்சமரபு உரையில் காணப்படும் **மகரயாழ்,** கோடு, பத்தல் ஆணி, நரம்பு, மாடகம் என்ற ஐந்துறுப்புக்களைக் கொண்டது.

[20] "கோடே பத்த லாணி நரம்பே
மாடக மெனப்படும் வகையின தாமே"

இந்த மகர யாழின் கோட்டினளவு ஏழு சாணையும் பத்தலளவு நாலரைச் சாணையும் கொண்டது.

மகரயாழின் ஐந்துறுப்புகளில் ஆணி, மாடகம் ஆகிய இரு உறுப்புகளும் பேரியாழில் இல்லாதவை. இவற்றின் விளக்கமும் பஞ்சமரபு உரையில் இல்லை.

ஆணி என்னுமுறுப்பு இருவகையான பொருளைக் குறிக்கிறது. இவற்றில் ஒருவகை, நுண்துளைகளில் இருத்தப் பெறும் சுள்ளாணிகளாகும். இவை பத்தலையும் போர்வையையும் சேர்த்து வலி பெற இறுத்தப் படுவனவாதலால் இவை முடுக்கும் தன்மையினைப் பெறா. மற்றொரு வகை ஆணிகள் திறந்து விளங்கப் பெறும் துளைகளில் அமையப்பெற்று அத்துளைகளின் திறப்பை மூடி மறைத்து விளங்குமேயொழிய அத்துளைகளில் வலிபெறஇருத்தப்படுவனவல்ல. எனவே இவை முடுக்கும் தன்மை பெற்றவை.

மாடகம் என்ற உறுப்பு, ஓர் சிறிய இடத்தைத் தன்னில் அமையப்பெற்று, மாடம் போன்ற உருவினைக் கொண்டது. இது 'வணர்' என்று சொல்லப்படுகின்ற வளைவான பகுதிக்கும்

கோட்டுறுப்புக்கும் இடையில் அமைந்துள்ளது. 'வணர்' என்னு முறுப்பு பஞ்சமரபு உரையில் காணப்படவில்லை.

சீவகசிந்தாமணிக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், [21]'மாடக'மென்பது நரம்புகளை வலித்தல், மெலித்தல் செய்யுங்கருவியென்றும், ஆணிகளில் கட்டப்பெற்ற நரம்புகள் மாடகத்தினால் முகந்து கொள்ளப்படும்'' என்றும் கூறுகிறார். பஞ்சமரபு உரையாசிரியர், சகோடயாழுக்கு இலக்கணம் கூறுமிடத்து, மாடகம் என்பதனை பின்வரும் செய்யுளில் விளக்குகிறார்.

[22]''மாடகமென்பது வகுக்குங்காலை
கருவிளங் கோட்டினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாய்க் கடைந்து
சதுர மூன்றாகத் துளையிடற் குரித்தே'

இச்செய்யுள் [23]சிலப்பதிகார வேனிற்காதை உரையில் அரும்பதவுரையாசிரியராலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. கோட்டுறுப்பில் நான்கு விரலளவில் பாலிகை வடிவாய் கடைந்து, துளைகள் கொண்டுள்ள பகுதி மாடகமாகும். இச்செய்யுளிற் காணப்படும் விரல் அளவு தற்கால மேனாட்டு அளவின்படி 3/4 அங்குலம் என்று [24]விபுலானந்த அடிகள் கணக்கிட்டுள்ளார்.

சகோடயாழ்:

பதினான்கு நரம்புகள் கொண்ட இக்கருவி, [25]இலண்டன் மாநகர்ப் பழம் பொருட்காட்சிச் சாலையிலுள்ள அமராவதி நகர் கல்லோவியத்தில் காட்டப்பட்டுள்ளது. இக்கருவி [26]சிலப்காரத்தில்,

'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி' எனவும்,
'பிழையா மரபினீரேழ் கோவை' எனவும்

போற்றப்பட்டது. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் கையிலிருந்த இத் தெய்வக் கருவி திருஞான சம்பந்தராலே பாராட்டப்பட்டது.

சகோடயாழின் இலக்கணமாக

27"கோட்டத்தளவே நாற்சாணாகும்
பத்தலளவு மதுவெனக் கொள்க"
(கோட்டினளவு நான்கு சாண்
பத்தலளவும் நான்கு சாண்)

அதுதான்

"பதுமஞ் சதுரம் வட்டணை குடனே (குவடே)
விதிமாண் டாடிப் புள்ளி மூலந்
தண்டே குவடே குடுமி யென்றாங்
கெண்டகு சிறப்பினெட்டிதி னுறுப்பே"

என்று பஞ்சமரபு உரையில் காணப்படுகிறது. பதுமம், சதுரம், வட்டணை, குடன், புள்ளி மூலம், தண்டு, குவடு, குடுமி என்பவை சகோடயாழுக்குரிய சிறப்பான எட்டு உறுப்புகளாம். இவ்வுறுப்புகள் சிலப்பதிகார உரையிலோ, பிற நூல்களிலோ காணப்படவில்லை.

பஞ்சமரபு உரையில், பத்தலின் அளவுக்குப் பிறகு, இவ்வுறுப்புகள் கூறப்பட்டு இருப்பதால், இவை பத்தலுடன் தொடர்புடையவை எனக் கருதலாம். பதுமம், சதுரம், வட்டணை இம்மூன்றும் பத்தலின் உருவ (தோற்றம்) அமைப்புக் கருதி வந்திருக்கலாம். இவற்றுள் வட்டணை என்பதன் இலக்கணமாக,

"திரள்வட்டுப் போலாக்கப் பத்தல்
முகத்தினகல மை விரலாகும்
தலையினகலம் பதின்விர லாகும்
தந்திரி தானே பூணில னொழிய
வந்தவிரு சாணால் விரலாகும்
அந்தமில் பெருமை பெரு விரலாகும்
வந்து நிலஞ் சுருக்கும் பூணின் தானே"

என்று காணப்படுகிறது. இதில், பத்தல், திரண்டவட்டு போன்ற அமைப்பைக் கொண்டது. முகத்தினகலம் அதாவது கீழ்ப்பகுதியின் அகலம் ஐந்து விரலளவு. தலையினகலம் (மேற் பகுதியின

கலம்) 10 விரலளவு. தந்திரியின் நீளம் 2 சாணும் நான்கு விரலளவும் சேர்ந்தது. இதன் பருமை பெருவிரலின் அளவு ஆகும். இவ்வாறு வட்டணையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

"குடுப்பி கொட்கு முலத்தன மொழிப
வழக்கொடு பிறவும் வருவன கொளலே"

என்கிற செய்யுளுக்கும்,

"மூத்துடம்பு விட்ட சேதாவின் சீரை
யார்த்த கவுண்டியனமைத்த பின்கை
கோத்தில் மொழியாளைக் கோலமேற்றி
யோடு பரிக்க கோளீ (யாழைக்) குபாருற்
றட்டுக் கொண்ட காலை ரட்டித்த
இரட்டித்த குரலாய்த்தேனும்.........
வட்டினும் தீம்பாலை முடிப்பனான் யாழே"

என்கிற செய்யுட் பகுதிக்கும் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை.

சீறியாழும் செங்கோட்டியாழும்:

சீறியாழ் சங்க காலத்தில் பெருவழக்கிலிருந்த ஒரு பழமையான கருவியாகும். இது பேரியாழுக்கு எதிர்மறையான பொருள் கொண்டது. அதாவது சிறிய யாழ் என்னும் பொருளுடையது. இதில் பயிலப்பட்ட நரம்புகளின் எண்ணிக்கை இலக்கியக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ள முடியவில்லை

"சீறியாழ் செவ்வழி பண்ணி"
"கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி"

என்னும் [28]புறநானூற்று குறிப்புக்களிலிருந்தும்,

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்" என்னும் [29]மலைபடுகடாம் குறிப்பிலிருந்தும், சீறியாழில் செவ்வழி என்ற பண்ணும், மருதப் பண்ணும் இசைக்கப்பட்டன என்பது அறியப்படுகிறது. "கருங்கோட்டுச் சீறியாழ்" "வணர் கோட்டுச் சீறியாழ்" (சிலப். நடுகற் காதை. அடி.31) என்னும் குறிப்புக்

கள், இந்த யாழின் கோட்டுறுப்பு வணர் என்னும் வளை வான பகுதியையும், கரிய நிறத்தையும் கொண்டதாக அமைந் தது என்பதை உணர்த்துகின்றன. மேற்குறிப்பிட்ட புறநானூற் றுக் குறிப்பு, சீறியாழ், 'கைவழி' என்னும் பெயருடையது என் பதையும் உணர்த்துகிறது. பாணர்கள் எங்குச் சென்றாலும் கையில் எடுத்துச் செல்வதற்கு வசதியாக இருப்பதால் கைவழி'' என்ற பெயர் வந்திருக்கும்.

பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ள நால்வகை யாழ்களுள் குறைந்த எண்ணிக்கை நரம்புகள் கொண்டது **செங்கோட்டி யாழாகும்**. இது ஏழு நரம்புகளைக் கொண்டது. இது சிலப்பதி கார[30]அரும்பத வுரையாசிரியரின் கூற்றுபடி "அம்பணவர் யாழ்'' என்றும் கூறப்படும்.

[31]திருஞான சம்பந்தரின் தேவாரத்தில், காணப்படும் "ஏழிசை யாழ்......'' என்ற குறிப்பு நோக்கற்பாலது. இக் குறிப்பு பொதுவாக யாழை உணர்த்தினாலும், குரல், துத்தம் போன்ற ஏழிசைகளை எழுப்பும் ஏழு நரம்புகளைக் கொண்ட செங்கோட்டு யாழைக் குறிப்பதாகக் கொள்ளலாம். (இசை, நரம்புக்கும் பெயராக அமையும்).

பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள செங்கோட்டியாழ், ஏழு நரம்புகளைக் கொண்டு, அமைப்பில் சிறியதாகத் திகழ்வதால் இது சீறியாழாக இருக்கலாம் என்பது சிலரது கருத்து. சீறியா ழின் வளைவான கோட்டுறுப்புப் பகுதி நிமிர்த்து நேராக்கிய நிலையில் அமைக்கப்பட்டதே செங்கோட்டியாழாகும். யாழ் நரம்புகளின் அடிப்படையிலான வகைப்பாட்டில் இரண்டும் ஒரே பொருளில் அமைவதால் சீறியாழின் திருத்தம் பெற்ற நிலை யிலமைந்த கருவியே செங்கோட்டியாழ் எனத் துணியலாம்.

பஞ்ச மரபு உரையில் செங்கோட்டியாழின் இலக்கணமாக,

[32]"செங்கோட்டியாழே செவ்விதிற் கிளப்பின்
அறுவகை யுறுப்பிற்றாகு மென்ப.''

அவைதாம்:

“கோடே திவவே யாணிப் பத்தல்
தந்திரிகரமே நரம் போடாறே”

என்று கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டு செய்யுட்களும், [33]சிலப் பதிகாரத்தில் புறஞ்சேரியிறுத்த காதையில் அடியார்க்குநல்லா ரால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இதில் ஒற்று, தந்திரி கரம் என்னும் ஈருறுப்புச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

தந்திரிகரத்தை விளக்குகையில்,

[34]“தந்திரி கரமே தகைப்புற விலகி
வந்த விரு சாணால் விரலாகும்”

என்று கூறப்படுவதால், தந்திரிகர மென்பது நரம்பு துவக்குதற் குத் தகைப் பொழிய இருசாண் நால்விரல் நீளமாக குறுக்கு இடத்திற் சேர்த்து அமைப்பதோர் உறுப்பாகும். இது கோட் டின் திறந்த வாயை மூடிக் கொண்டும், தன் குறுக்கிடத்தே நரம்புக் கோல்களை ஏந்தப் பெற்றும் உள்ள பலகையே ஆகும்.

யாழும் வீணையும்.

தஞ்சாவூர் வீணை என்று தற்காலத்தில் வழங்கப்படும் வீணை ஏழு நரம்புகள் கொண்டது. இது செங்கோட்டியாழே என்று திரு வரகுண பாண்டியன் தம்முடைய [35]‘பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்’ என்னும் நூலில் கூறியுள்ளார். இவ்வாறு யாழே வீணை என்று கருதுவார் பலருண்டு. ஆனால்‘ பண்ணொடு யாழ், வீணை, பயின்றாய்ப் போற்றி’ என்ற நாவுக்கரசரது, பாடலிலிருந்தும்;[36]“இன்னிசைவீணையர் ஒருபால் யாழினர் ஒருபால்” என்ற மாணிக்க வாசகரின் ‘திருப்பள்ளி யெழுச்சி’ பாடலின் தொடரிலிருந்தும் யாழ்வேறு; வீணை வேறு என்று எண்ண இடமிருக்கிறது. மேலும் யாழும், வீணையும் ஒரே சமயத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பதையும் புலப்படுத்துகின்றன.

‘[37]பஞ்சமரபின் நிறத்த மரபில் காணப்படும் ‘வங்கியமே வீணை யாழ்’ என்னும் வெண்பாவில் சுத்தம், சாளவம், தமிழ்

ஆகிய மூன்று நிறங்களுக்கும் வங்கியம், வீணை, யாழ் ஆகிய மூன்று கருவிகளும் உரியவை என்றும் காணப்படுகின்றன. இதிலிருந்து யாழ் வேறு, வீணை வேறு என்றும், யாழ் தமிழுக்குரியது என்றும், வீணை சாளவத்திற்குரியது என்றும் தெரிகிறது. மணிமேகலை, சீவக சிந்தாமணி, பெருங்கதை ஆகியவற்றில் காணப்படும் மகர யாழ், மகர வீணை போன்ற குறிப்புக்களும் யாழ் வேறு, வீணை வேறு என்று தெளிவதற்குப் பயனுடையவை. திரு. வெள்ளை வாரணனார் இயற்றிய ''பன்னிருதிருமுறை'' வரலாறு என்னும் நூலிலும் யாழும் வீணையும் இரு வேறு கருவிகள் என்னும் கருத்து இடம் பெற்றுள்ளது.[38]

திருக்குறளில் வீணை என்னும் சொல் காணப்படவில்லை. யாழ் என்பதே காணப்படுகிறது.

யாழுக்கும் வீணைக்கும் பொதுவான சில ஒற்றுமைகளும் உண்டு. யாழைப் போன்று வீணையும் தொன்று தொட்டுப் பயன்பாட்டில் இருந்ததொரு பழமையான கருவி. தமிழில் எவ்வாறு யாழ் எல்லா நரம்புக் கருவிகளையும் குறிக்கும் ஒரு சொல்லாக அமைந்ததோ அவ்வாறே வீணையும் பழங்காலத்தில் வட மொழியில் பொதுவாக எல்லா நரம்புக் கருவிகளையும் குறிக்கும் சொல்லாக அமைந்தது.

இவ்வகையில் பரதமுனிவர் 22 அலகுகளை விளக்கும் பரிசோதனைக்குப் பயன்படுத்திய துருவ வீணை – சலவீணையும் ஏழு நரம்புகளைக் கொண்டவை. பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு நரம்புகள் கொண்ட 'சித்ர' எனப்படும் வீணையும், ஒன்பது நரம்புகள் கொண்ட 'விபஞ்சி' எனப்படும் வீணையும் யாழ் வகையைச் சேர்ந்தவை. சிலப்பதிகாரத்தில் கடலாடுகாதையில் ''நாரதன் வீணை நயந்தெரிபாடலும்'' என்ற தொடரில் காணப்படும் வீணை என்ற கருவியும் யாழ் வகையை குறிப்பதாகவே தோன்றுகிறது.

வீணை என்ற சொல், குறிப்பாக மெட்டுக்களுடன் (Frets) கூடிய நரம்புக் கருவியைக் குறிக்கும் சொல்லாக அமைந்தது.

இவ்வகையில் மகேந்திரவர்மன் காலத்திலிருந்த குடுமியான் மலைக் கல்வெட்டில் காணப்படும் மெட்டுடன் கூடிய ஏழு நரம்புகளைக் கொண்ட 'பரிவாதினி' எனப்படும் வீணையைக் கூறலாம்.

[39]இராக ஆலாபனை தென்னிந்திய இசையின் முக்கியப் பிரிவாக எப்போது கருதப்பட்டதோ, அப்போதே மெட்டுக்கள் அமைந்த வீணையும் வளர்ச்சியடைந்து, இப்போதைக்குச் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் வழக்கொழிந்தது.

யாழ் வழக்கொழிந்ததற்குரிய காரணங்கள் சிலவற்றைக் கூறலாம்:

இராக ஆலாபனைக்குத் தேவையான நுட்ப அலகுகளும் அசைவுகளும் (கமகங்களும்) மெட்டுக்கள் அமைந்த வீணையில் தந்திகளை அசைப்பதன் மூலம் பெறமுடியும். யாழில் விரல் பலகையோ (Finger board) மெட்டுக்களோ (Frets) இல்லாத தால் நுட்ப அசைவுகள் (கமகங்கள்) பெற வாய்ப்பில்லை. யாழில் அசைவில்லாத நேர் சுரங்கள் (Straight notes)மட்டுமே இசைக்க முடியும்.

யாழின் நரம்புகள் ஒரு குறிப்பிட்ட பண்ணுக்குச் சுருதி சேர்க்கப்பட்டன. எனவே அப்பண்ணும் அதன் திறங்களும் மட்டுமே ஒரு நேரத்தில் இசைக்க முடியும். வேறு பண் அல்லது திறம் இசைக்க வேண்டுமாயின், கிரகபேதமோ, யாழின் நரம்புகளை திரும்பவும் வாசிக்க விரும்பும் பண்ணின் சுரங்களுக்கேற்ப சுருதி மாற்றம் செய்யவோ வேண்டும். ஒவ்வொரு இசைக்கு (சுரத்திற்கு) ஒவ்வொரு நரம்பு என்கிற யாழின் இவ்வமைப்பே இதற்குக் காரணம். மெட்டுக்கள் அமைந்த வீணையில் ஒரே நரம்பில் பல சுரங்கள் இசைக்கக் கூடிய வசதி இருப்பதால், எந்த இராகம் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் இசைக்கலாம்.

இவ்வித வசதியின்மையால் யாழ், 10,11ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்திய இசையிலிருந்து மறையலாயிற்று. இருப்

பினும் இது பல நரம்புக் கருவிகளுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது எனலாம். எவ்வாறெனில்,

ஏழாம் நூற்றாண்டு வரை பொதுவாக யாழும் வீணையும் நரம்புக் கருவியைக் குறிக்கும் இருவேறு பெயர்களாகத் திகழ்ந்துள்ளன. பின்னர் மெட்டுடன் கூடிய நரம்புக்கருவி வீணை' என்ற பெயரில் வளர்ச்சி யடைந்தது. மாணிக்க வாசகர் 'வீணையர் ஒருபால் யாழினர் ஒருபால்'என்னும் தொடரில் வீணை என்று குறிப்பிட்டிருப்பது மெட்டுடன் கூடிய வீணையே எனலாம். இது, மற்றொரு வகையில் யாழின் திருந்திய நிலையே. இதன் திருந்திய நிலையை மேலும்,17-ஆம் நூற்றாண்டில் இரகுநாத நாயக்கர் காலத்தில் 24 நிலையான மெட்டுக்கள் அமைந்த தஞ்சாவூர் வீணையில் காண முடிகிறது.

மெட்டுக்கள் அமையாத நரம்புக்கருவி, அதாவது யாழ்வகை வெறும் சுருதிக்கு மட்டுமே பயன் படுத்தக்கூடிய நரம்புக் கருவியாக வளர்ச்சியடைந்தது எனலாம். எனவே தற்போதைய இசையரங்குகளில் தம்பூரா, கோட்டு வாத்தியம் போன்ற நரம்புக் கருவிகள் யாழின் திருத்தம் பெற்ற வகைகளே என்று ஊகிக்க வாய்ப்பிருக்கிறது.

யாழிசைத் தொழில் முறை

பஞ்சமரபின் 10,11 ஆம் வெண்பாக்களிலும், அவற்றின் உரைகளிலும்,யாழிற்குரிய தொழிற்கை யெட்டும், யாழிற்குரிய கைகளெட்டும் கூறப்பட்டுள்ளன.இவ்விரண்டு வெண்பாக்களின் வரிகள் சிலப்பதிகார மூலத்திலும், அவற்றின் விளக்கங்கள் அரும்பதவுரையிலும்,சீவக சிந்தாமணியின் நச்சினார்க்கினியருரையிலும் காணப்படுகின்றன.

இதிலுள்ள 'தொழிற்கை' என்ற சொல் 'யாழிசையில் தொழில் பெறக் காட்டும் கை' என்று பொருள்படுகிறது இச்சொல் [40]சிலப்பதிகார உரையில் 'அகக்கூத்துக்குரிய கையென்று' கூறப்படுகிறது. இப்பொருள் படும் ஓர் சொல் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளாலே'இசைக் கரணம்' என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

யாழிற்குரிய தொழிற்கை அல்லது இசைக்கரணம் எட்டு என்பதனை பஞ்சமரபின் பின்வரும் வெண்பாவிலிருந்து அறியலாம்.

“வன்மை பட வார்தல் வடித்த லுடனுந்தல்
தன்னி லுறழ்த லுருட்டலே யெண்ணித்
தெருட்டலே யள்ளல் திரள்பட் டடையும்
மருட்டாது வைத்துக் கொளல்.”

வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை ஆகியவை. மேற்கூறிய எட்டும் சிலப்பதிகாரக் கானல் வரியில் பின்வருமாறு காணப்படுகிறது.

“[41] வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்ட றெருட்ட லள்ளல்
ஏருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
எட்டு வகையி னிசைக் கரணத்து
... ...”

இதிலுள்ள ‘இசையோர் வகுத்த எட்டுவகை இசைக்கரணம் என்னும் குறிப்பு, இளங்கோ அடிகள் காலத்தின் முன்னரே யாழிசைக்கும் தொழில் முறை மிகவும் நுட்பமான இலக்கணங்களுடன் பண்பட்ட முறையில் வளர்ச்சியுற்றிருந்தன என்றுணர வாய்ப்பு அளிக்கிறது.

இந்த எட்டு வகையான தொழிற்கை அல்லது இசைக் கரணத்திற்கு உரை பகரும் பஞ்சமரபு நூலுரைப் பாக்களுக்குத் தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. பஞ்சமரபு நூல், உரைப்பகுதிகளை மிகுதியாகப் பயன்படுத்திய அடியார்க்கு நல்லாரின் உரை, சிலப்பதிகாரத்தின் கானல்வரிப் பகுதிக்குக் கிடைக்கவில்லை. இபப்குதியுரை கிடைத்திருப்பின், பஞ்சமரபு உரையும் ஓரளவு விளக்கம் பெற்றிருக்கும். இருப்பினும் இப்பகுதிகளைப் பஞ்சமரபில் கண்டவாறு இங்குக் காட்டுதல் பொருந்தும்.

க. “[42] ஐந்தாங் கோலுமெட் டெழு வாயளவும்
வந்துற வார்தல் வளர்த்தலாகும் (வளர்தல்)
(வெண்பாவில் வார்தல் என்றுள்ளது)

உ. "எழுவாய் தொடங்கி யீறு காறும்
வழுவா தெறிதல் வடித்தலாகும்"

ஙு. "தடவுத றள்ள லுந்தலாகும்"

ச. "இரண்டோடிரண்டு நரம்பு தொட்டவை
உரம் பெற வெறித லுறழ்த லாகும்"

ரு. "மிக்க வடிமுன் மூடியவோர் நரம்பை
யொக்க வுருட்ட லுருட்ட (முடிய) லாகும்"

சா. "அருகிய நரம்பை யமைவுறத் தொட்டுத்
திருகி விடுதல் தெருட்டலாகும்"

எ. "வள்ளிய சுட்டுஞ் சேடனும் வகுத்தெடுத்து
தள்ளுதல் தானே யள்ளலாகும்"

அ. "முற்றிய இளிதனை முறைமையி னமையப்
பற்றி யெழுப்புதல் பட்டடையாகும்"

இவற்றின் விளக்கங்கள் 43 சிலப்பதிகார அரும்பதவுரையில் காணப்படுகின்றன. வார்தலென்றது-சுட்டுவிரல் செய்தொழில், வடித்தலென்றது-சுட்டு விரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல். அதாவது நரம்பை மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும் மீட்டுதல். இச்செய்கைகள் தற்காலத்தில் வீணை மீட்டுவதிலும் காணப்படுகின்றன.

உந்தலென்றது-நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும், நிரல் பட்டதும் நிரலிழிபட்டதும் என்றறிதல். இதன் பொருள் தெளிவாக இல்லை.

உறழ்தல் என்றது-ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல் 'ஒன்றிடையிட்டும்' என்பது

குரல்–கைக்கிளை – இளி

துத்தம்–உழை-விளரி

கைக்கிளை-இளி-தாரம்

உழை - விளரி - குரல்; இவ்வாறு அமையலாம். இரண்டிடையிட்டும்' என்பது.

குரல்-உழை-தாரம்;

துத்தம்-இளி-குரல்; இவ்வாறு ஆராய்ந்து அறிதல் உறழ்தல் எனப்படும்.

உருட்டலென்றது. "இடக்கைச் சுட்டுவிரல் தானே யுருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும், சுட்டொடு பெருவிரல் கூட்டி உருட்டலும், இரு பெருவிரலும் இயைந்துருட்டலும் என வரும்" இவ்வாறு வலக்கை, இடக்கைகளில் உள்ள சுட்டு விரலையும், பெருவிரலையும் தனியாகவும், இணைத்தும் மீட்டுந் தொழில் உருட்டலாகும்.

"தெருட்டலென்றது செப்புங் காலை, உருட்டி வருவ தொன்றே மற்ற, ஒன்றன் பாட்டுமடை யொன்ற நோக்கின், வல்லோராய்ந்த நூலேயாயினும், வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும், பாட்டொழிந் துலகினி லொழிந்த செய்கையும், வேட்டது கொண்டு விதியுறநாடி" என வரும் .... இவை இசைத்தமிழ்ப் பதினாறு படலத்துட் கரணவோத்துட் காண்க" என்றுள்ளது. இதற்குரிய தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. அள்ளல், பட்டடை ஆகிய கரணங்களுக்குரிய மேற்கோள் சூத்திரங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் பட்டடை என்பதை குரல் – இளி; துத்தம் – விளரி என்னும் கிரமத்தில் இசைய வைப்பது எனலாம்.

மேற்கூறப்பட்ட தொழிற்கை விளக்கங்களுள் வார்தல் வடித்தல், உறழ்தல், உருட்டல் ஆகிய தொழிற்கைகள் தற்போது வீணை இசைக்கும் முறையுடன் ஒத்துள்ளமை குறிப்பிடத் தகுந்தது.

அரும்பதவுரை விளக்கத்திற்கும், பஞ்சமரபு உரைச்செய்யுட் கருத்துக்களுக்கும் ஓர் குறிப்பிடத் தகுந்த வித்தியாசம் காணப் படுகிறது. பஞ்சமரபு உரையில் அள்ளல் என்பதற்கு மட்டுமே விரற்றொழில் கூறப்பட்டுள்ளது. ஏனைய வற்றிற்கு விரற்றொழில்கள் கூறப்படாமல், தடவுதல், உருட்டல், திருகிவிடுதல்

போன்று தொழிலின் இயல்புகள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. அரும்பதவுரையில் காணப்படும் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல் ஆகிய ஐந்துவகைகளுக்கும் விரற்றொழில்களும் செய்யுமுறையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பஞ்சமரபின் 11–ஆவது வெண்பாவான

"பன்னிய பண்ணல் பரிவட்டணை தன்னோ
டன்னியா ராய்த லதைவரன் மன்னும்
விளையாட்டுக் கையுள் செலவு குறும்போக்கு
வளையூட்டுக் கைமடவாய்வைப்பு"

என்னும் வெண்பாவிலடங்கிய கருத்து, யாழ் நரம்புகளில் இசை பிறப்பிக்குந்தொழில்களாகும். இதனுள் 'கையுள்' என்னும் தொழில் சிலப்பதிகாரத்தில் கையூழ் என்று காணப்படுகிறது, ஆகையால் இதனை கையூழ் என்றே கொள்ளலாம். பண்ணல் பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், விளையாட்டு, கையூழ், செலவு, குறும்போக்கு ஆகிய எட்டும் 'யாழிற்குரித்தாகிய கைகளெட்டு' என்று பஞ்சமரபில் உணர்த்தப்படுகிறது.

இவை சிலப்பதிகாரக் கானல் வரிப் பகுதியில் பின் வருமாறு குறிக்கப்படுகின்றன.

44...
பண்ணல் பரிவட்டணை யாராய்த றைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும் போக்கென்று நாட்டிய
எண் வகையா லிசை யெழீ இ
....

இவற்றை அரும்பதவுரை, "இசையெழுவும் எண்வகை" என்று குறிக்கிறது. 'இசையெழு' என்ற சொல் பஞ்சமரபு உரைச் செய்யுளிலும் 'விளையாட்டு' என்னும் தொழிலில் காணப்படுகிறது. இவற்றைக் 'கலைத்தொழில்கள்' என்ற [45]சீவக சிந்தாமணியின் 657 ஆவது செய்யுள் கூறுகிறது.

மேற்கூறிய பண்ணல், பரிவட்டணை போன்ற கைகளெட்டிற்கும் பஞ்சமரபு உரையில் தெளிவான விளக்கம் கிடைத்தில.

நச்சினார்க்கினியர் தரும் விளக்கங்களும்,பஞ்சமரபு உரைச்செய்யுட்களும் சில இடங்களில் ஒத்தமைந்துள்ளன. சிலப்பதிகார அரும்பதவுரை தரும் நூற்பாக்கள் சிறிது வேறுபடுகின்றன. எனவே மூன்றினையும் இங்குத் தருதல் பொருந்தும்.பஞ்சமரபு உரைச் செய்யுட்கள் பின்வருமாறு:

க. "[46]எண்ணிய தான மினிதுற நரம்பைப்
பண்ணுதல்தானே பண்ணலாகும்

உ. "ஓங்கிய நரம்பை யொத்த வகையாற்
பாங்குற விடுத்தல் (விருத்தல்) பரிவட்டணையே"

ங. "சேரா நரம்பைச் செவிக்குற வே வைத்
தாராய்ந் தெறித லாராய்தல்லே"

ச "தடவு நீதியிற் றடவல் தைவரலே"

ரு. "இசையெழு முறைமையா லிசைய வகுத்தல்
விளையாட்டென்று வேண்டுவர் புலவோர்"

சா "கையுள் ளென்பது நரம்பிடை விட்டாங்
கெய்த லெறித லென்றிசி னோரே"

எ. " செலவெனப் படுவது செலவறிந் தொற்றெனப்
புலவர் யாவரும் புகன்றிசி னோரே"

அ. "ஏற்றிய நரம்புக ளெல்லா மிசைவாக
குற்றமின் றியற்றுதல் குறும்போக்கென்ப"

பண்ணல், பரிவட்டணை போன்றவற்றிற்கு நச்சினார்க்கினியருரை வாயிலாகவும், அரும்பதவுரை வாயிலாகவும்பின்வருமாறு விளக்கங் காணலாம்.

பண்ணல் - (நச்.) பாட நினைத்த பண்ணுக்கு இணை, கிளை, பகை நட்பான நரம்புகள் பெயரும்தன்மை மாத்திரை யறிந்து வீக்குதல். அரும்பதவுரையின் படி

"வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்டும்
இணைவழி யாராய்ந்து இணை கொள முடிப்பது
விளைப்பறு மரபில் பண்ணல் ஆகும்"

வலக்கைப் பெருவிரலால், குரல் நரம்பை மீட்டி, சிறுவிரலால் இளி நரம்பை மீட்டி, அவ்விரண்டு நரம்புகளும் ஒத்திசைக்கு மாறு செய்து கொண்டு, வலிவு, மெலிவுகளில் நிற்கும் குரல், இளி நரம்புகளையும் ஒத்திசைக்குபடி செய்தல் பண்ணல்ஆகும். குரல் இளி ஆகிய இரண்டும் முக்கியச் சுரங்கள் என்பதும் அவை இணை தொடர்புடையவை என்பதும் இதிலிருந்து தெரிகிறது. தற்போது வீணை இசைக்கத் தொடங்கு முன்னர், இவ்வாறு சுருதி கூட்டிக் கொள்ளும் வழக்கு இன்றும் உள்ளது. [47]மேனாட்டு ஹார்ப் (harp) என்ற கருவியிலும் குரல் (c) நரம்பை வலக்கைப் பெருவிரலாலும், இளி (g) நரம்பை வலக்கைச் சிறுவிரலாலும் இசைப்பது ஒப்பு நோக்கற்குரியது.

பரிவட்டணை (நச்) அவ்வீக்கின நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கரணஞ் செய்து தடவிப் பார்த்தல், அரும்பதவுரையின் நூற்பாவின்படி,

"பரிவட்டணையி னிலக்கணந் தானே
மூவகை நடையின் முடிவுற்றாகி
வலக்கை யிருவிரல் வனப்புறத் தழீஇ
இடக்கை விரலி னியைவ தாகத்
தொடையொடு தோன்றியும் தோன்றாதாகியும்
நடையொடு தோன்று நயத்ததாகும்"

வலக்கை பெருவிரல், சிறுவிரல், இடக்கை விரல்கள் ஆகியவற்றைக் கொண்டு நரம்புகளை மீட்டி யாழில் இசையெழுப்புதல் பரிவட்டணையாகும். யாழிசை நடையைப் பொதுநிலையில் சோதித்து அறியும் முறை இதனால் விளக்கப்படுகிறது.

ஆராய்தல் (நச்) ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிவது. அரும்பதவுரை நூற்பாவின்படி,

"ஆராய்தல் என்பது அமைவரக் கிளப்பிற்
குரல் முதலாக இணைவழி கேட்டும்
இணையிலாவழிப் பயனொடு கேட்டும்
தாரமும் உழையும் தம்மிற் கேட்டும்
குரலும் இளியுந் தம்மிற் கேட்டும்
துத்தமும் விளரியுந் துன்னறக் கேட்டும்
விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டும்
தளராதாகிய தன்மைத் தாகும்"

குரல் முதலிய நரம்புகளை இணையாக சேர்த்தல் ஆராய்தலாகும். எவ்வாறெனில்

தாரமும் (நி) உழை (ம) யும் ஒத்திசைக்குமாறும்
குரலும் (ச) இளி (ப)யும் ஒத்திசைக்குமாறும்
துத்தமும் (ரி) விளரி (த) யும் ஒத்திசைக்குமாறும்
விளரியும் (த) கைக்கிளை (க) யும் ஒத்திசைக்குமாறும்
ஆராய்ந்து செய்தல் வேண்டும்.
தைவரல் (நச்) அநு சுருதியேற்றுதல்.

இதனைத் தற்போது தம்பூராவில் சுருதி சேர்க்கையில் நூலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்கும்போது ஏற்படும் 'ஜீவா' என்கிற இனிய ஒலிக்கு ஒப்பிடலாம். அரும்பதவுரையின் படி,

"தைவர லென்பது சாற்றுங்காலை
மையறு சிறப்பின் மனமகிழ் வெய்தித்
தொடையொடு பட்டும் படாஅ தாகியும்
நடையொடு தோன்றி யாப்பு நடையின்றி
ஓவாச் செய்தியின் வட்டணை யொழுகிச்
சீரேற்றியன்று மியலாதாகியும்
நீரவாகு நிறைய தென்ப"

இத்தொழில், சுருதி சேர்த்துப் பாட்டிசையுடன் நரம்பிசை பொருந்துதலை அறிவதாகும்.

விளையாட்டு: (நச்.) பாடநினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதல், அரும்பதவுரையின் படி,

''விளையாட்டென்பது விரிக்குங் காலைக்
கிளவிய வகையி னெழுவகை யெழாலும்
அளவிய தகைய தாகுமென்ப''

எழுவகைச் சுரங்களில் எழாலை அறிவது விளையாட்டு.

கையூழ்-(நச்.) வண்ணத்திற் செய்த பாடல் எல்லாம் இன்ப மாக பாடுதல். அரும்பதயுரையின் படி,

''கையூ ழென்பது கருதுங்காலை
எவ்விடத்தானு மின்பமுஞ் சுவையும்
செவ்விதிற்றோன்றிச் சிலைத்து வரலின்றி
நடைநிலை திரியாது நண்ணித்தோன்றி
நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும்
பாற்படத் தோன்றும் பகுதித்தாகும்''

இசையின் இன்பம், சுவை போன்றவை சிறப்பாகத் தோன்ற யாழ்அமைப்பு மிகமுக்கியம். இவ்வமைப்பில் 49 வகையான வனப் பும் வண்ணமும் விளங்க வேண்டும். இவற்றை நன்கு உணர்வது கையூழாகும்.

செலவு-(நச்.) ஆளத்தியிலேயே நிரம்பப் பாடுதல், அரும்பத வுரையின் படி,

''செலவெனப் படுவதன் செய்கை தானே
பாலை பண்ணே திறமே கூடமென
நால்வகை யிடத்து நயத்ததாகி
இயக்கமு நடையு மெய்திய வகைத் தாய்ப்
பதினோராடலும் பாணியு மியல்பும்
விதிநான்கு தொடர்ந்து விளங்கிச் செல்வதுவே''

பண்ணுக்கும், திறத்துக்கும் யாழின் இயக்கம் பொருந்த வேண் டும். கூத்துக்களுக்கும் ஒத்த இசையெழ வேண்டும். இவற்றைக் கருதிச் சோதித்தல் செலவு எனப்படும்.

குறும்போக்கு-(நச்.) குடகச் செலவும் துள்ளற் செலவும் பாடுதல். அரும்புதவுரையின் படி,

''துள்ளற் கண்ணுங் குடக்குத் துள்ளும்
தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி
கொள்வன வெல்லாங் குறும்போக்காகும்''

நச்சினார்க் கினியரின் உரை விளக்கங்கள்[48] சிலப்பதிகாரத்தின் கழக வெளியீடு பதிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளன. இவற்றுள் விளையாட்டு, கையூழ், குறும்போக்கு ஆகிய தொழில்கள் பாடு தொழில் தொடர்பாகவும், இசை இலக்கணத் தொடர்பாகவும் இருப்பது அறியத்தக்கது. இதிலிருந்து பண்டை நாளில் யாழிசைத் தொழிலானது பாட்டுடன் நிகழ்ந்தது என்னும் உண்மையும், இசைத் தமிழ் இலக்கணம் மிகவும் நுட்பான வகையில் அமைக்கப்பட்டிருந்தது என்பதும் தெளிவாகின்றன. இசையின் நுட்ப இலக்கணங்களை ஆய்வின் அடுத்த இயலில் விரிவாகக் காணலாம்.

துணைக் குறிப்புக்கள்:

1. ''நரம்பொடு குழலே மிடற்றின திசையே
இரங்கிய மூவிசை யாகுமென்ப''
பஞ்சமரபு-பாயிர வெண்பாவுரை. பக்கம். 2.

2. சோம சுந்தரனார். பொ.வே. 1975. **பரிபாடல்-மூலமும் உரையும்** கழக வெளியீடு, சென்னை.
''கூர நாண்குரல் கும்மென ஒலிப்ப'' 19:44

3. சோமசுந்தரனார். பொ.வே. 1979. சிறுபாணாற்றுப்படை, கழக வெளியீடு, சென்னை.
''கூடுகொள் இன்னியம்'' (சிறுபாண். 229.)

4. விபுலானந்த அடிகள் இயற்றிய **யாழ்நூல்** 1974.
கரந்தைத் தமிழச் சங்கம், தஞ்சை. பக்கம். 52.

5. பிங்கல முனிவர் செய்த **பிங்கல நிகண்டு**
கழக வெளியீடு 1976, சென்னை.
''தந்தி வீணை கின்னரங் கோட்டங்
கோடவதி விவஞ்சி யாழ்ப் பெயர்கூறும்'' (1430)
''அறிகலமுங் கருவியு மப்பெயர்க்குரித்தே'' (1431)

6. பஞ்சமரபு -யாழ்மரபு. பக்கம். 9.

7. சிலப்பதிகாரம்-அரங்கேற்று காதை, வரி. 26
அடியார்க்கு நல்லாருரை

8. பஞ்சமரபு-யாழ்மரபு. பக்கம். 10.

9. சோமசுந்தரனார். பொ.வே. 1979. கடியலூர் உருத்திரங் கண்ணனார் இயற்றிய பெரும் பாணாற்றுப்படை, கழக வெளியீடு

10. வரகுணபாண்டியன். 1950. **பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்,**

11. சோம சுந்தரனார். பொ. வே. 1975. கல்லாடர் இயற்றிய **கல்லாடம்.** செய்யுள். 82. அடி. 10,18,21, கழக வெளியீடு, சென்னை.

12. தாண்டவராய முதலியார் 1923. சேந்தன் **திவாகரம்** சென்னை.

13. சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரம். உ.வே.சா. பதிப்பு, பக்கம். 9.

14. விபுலானந்த அடிகள் இயற்றிய யாழ்நூல், 1974. கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.பக்கம்,33.

15. மேற்படி.பக்கம்.45.

16. சோமசுந்தரனார். பொ.வே. 1979. **சிறுபாணாற்றுப்படை** கழக வெளியீடு. சென்னை. அடி. 224.

17. விபுலானந்தர் இயற்றிய **யாழ்நூல்.** பக்கம் 42.

18. மேற்படி பக்கம். 44.

19. சோமசுந்தரனார். பொ. வே. 1975. மணிமேகலை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை... 4.56.

20. பஞ்சமரபு – யாழ்மரபு. உரை மேற்கோள். பக்கம். 12.

21. சீவக சிந்தாமணி – காந்தர்வ தத்தையார் இலம்பகம், 657 ஆம் செய்யுள்.

22. பஞ்சமரபு – யாழ்மரபு. உரை மேற்கோள். பக்கம் 13.

23. சிலப்பதிகாரம் – வேனிற்காதை. அடி. 27—28. அரும்பத உரை.

24. விபுலானந்தர் இயற்றிய யாழ்நூல். பக்கம். 33.

25. மேற்படி. பக்கம். 41.

26. சிலப்பதிகாரம் – அரங்கேற்றுகாதை. அடி. 70

27. பஞ்சமரபு – யாழ்மரபு உரை மேற்கோள் பக்கம். 13.

28. சாமிநாதய்யர், உ. வே. 1971. புறநானூறு. மூலமும் பழையஉரையும். 144 :2, 149 : 3. உ. வே. சா. நூல் நிலையம், சென்னை.

29. மலைபடுகடாம் – கழக வெளியீடு. பக்கம். 16.

30. சிலப்பதிகாரம் – புறஞ்சேரியிறுத்தகாதை. அடி. 106. அரும் பதவுரை.

31. மூன்றாவது திருமுறை – தருமபுர ஆதீன வெளியீட்டு எண். 348, பதிகம். 4.

32. பஞ்சமரபு-யாழ்மரபு. உரைமேற்கோள். பக்கம். 14.

33. சிலப்பதிகாரம் – புறஞ்சேரியிறுத்தகாதை. அடி. 106 அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.

34. பஞ்சமரபு-யாழ்மரபு. பக்கம், 14,15.

35. வரகுண பாண்டியன். அ. 1950. **பாணர் கைவழி எனப்படும் யாழ்நூல்**, கழக வெளியீடு,

36. சுவாமி சித்பவானந்தர் (பதிப்பு) (**திருவாசகம்.** திருப்பள்ளி யெழுச்சி) ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவன வெளியீடு. 83 திருச்சி. பக்கம். 637

37. பஞ்சமரபு–நிறத்தமரபு. பக்கம் 89.

38. வெள்ளை வாரணன். க. பன்னிரு திருமுறை வரலாறு (முதற்பகுதி) அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு சிதம்பரம். பக்கம் 624-626.

39. Sambamurthi P. "Vina through ages." **History of Indian** Music, Indian Music publishing house, Madras.

40. "பிண்டியும் பிணையலும் புறக்கூத்திற்குரிய கையென்றும், எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்துக்குரிய கையென்றும் அறிதல்" – சிலப்பதிகாரம். அரங்கேற்றுகாதை – அடியார்க்கு நல்லாருரை.

41. சிலப்பதிகாரம்-கானல் வரி. அடிகள் 12–15.

42. பஞ்சமரபு-யாழ்மரபு உரை மேற்கோள். பக்கம். 15

43. சிலப்பதிகாரம்-கானல் வரி. அரும்பதவுரை.

44. சிலப்பதிகாரம்–கானல் வரி, அடிகள் 5-8.

45. சீவக சிந்தாமணி-காந்தருவ தத்தையார் இலம்பகம். கழக வெளியீடு. பக்கம். 123.

46. பஞ்சமரபு-யாழ்மரபு உரை. பக்கம். 16.

47. இராமநாதன். எஸ். 1974, 'யாழ் இசை எழாலும் கரணங்களும்' தேவாரப் பண்ணாராய்ச்சிக் கூட்டத்தின் 25-ஆவது ஆண்டறிக்கை, சென்னை. பக்கம். 41.

48. சோமசுந்தரனார். பொ. வே. 1977. இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகாரம், சென்னை. பக்கம். 256.

இயல் மூன்று

பாலை இலக்கணம்

பஞ்சமரபின் யாழ்மரபில் யாழின் அமைப்பு, வாசிக்கும் முறை, தொழிற்கை ஆகியவற்றின் விளக்கத்திற்குப் பிறகு யாழிடத்தே தோன்றும் பாலையிசைகளைப் பற்றி 12 இலிருந்து 23 வரையிலான 12 வெண்பாக்களில் விளக்கப்பட்டுள்ளது. இப் பகுதி வெண்பாக்களிலும், உரையிலும் வட்டப்பாலை அமைக் கும் விதம்' அதில் ஏழிசை பொருந்தும் விதம், ஏழிசையை பற்றிய விவரங்கள், ஏழு பாலைகள் பிறத்தல், வட்டப் பாலை யில் நாற்பெரும் பண்கள் பிறத்தல் ஆகிய விவரங்கள் அடங்கி யுள்ளன. இவற்றுள் முதலில் ஏழிசை பற்றிய விவரங்களை இங் குக்காண்போம்.

ஏழிசைகளாவன: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். இந்த ஏழிசையின் பிறப்பு [1]"தாரத்துட் டோன்று முழை" என்னும் வெண்பாவில் உணர்த்தப்படுகிறது. இதில்

தாரத்துள் உழையும்
உழையுள் குரலும்
குரலுள் இளியும்
இளியுள் துத்தமும்
துத்தத்துள் விளரியும்

விளரியுள் கைக்கிளையும், கிளை முறையில் தோன்றி ஏழி சையும் பிறக்கும். இவற்றுள் முதலிற்தோன்றிய நரம்பு தாரம்.

ஏழிசையினுள் குரல், துத்தம், இளி ஆகியவை நான்கு மாத்திரைகள் கொண்டவை என்றும், கைக்கிளையும், விளரி யும் மும்மூன்று மாத்திரைகள் கொண்டவை என்றும், தாரமும் உழையும் இரண்டிரண்டு மாத்திரைகள் கொண்டவை என்றும் [2]பஞ்சமரபிலிருந்து தெரிகிறது.

குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
ச	ச	ந	உ	ச	ந	உ
4	4	3	2	4	3	2

ஏழிசை ஒவ்வொன்றும் நம் உடம்பின் ஏழு பகுதியிலிருந்து தலைப்படுகின்றன. உழை-தலையிலும், இளி-நெஞ்சிலும், விளரி-நெற்றியிலும், குரல்-மிடற்றிலும், துத்தம்-நாக்கிலும். கைக்கிளை-அண்ணத்திலும், தாரம்-மூக்கிலும் தலைப்படுகின்றன.

யாழின் நரம்புகளிலிருந்து வெளிப்படும் ஏழிசையின் ஓசைகள், சில பறவை, மிருகங்களுடன் பஞ்சமரபிலும், பிங்கல நிகண்டிலும் ஒப்பிடப்பட்டுள்ளன. இவை ஒன்றுடன் ஒன்று மாற்றம் கொண்டுள்ளன. இதனைப் பின்வரும் அட்டவணையிற் காணலாம்.

எண்	ஏழிசை	பஞ்சமரபில்	[3]பிங்கல நிகண்டில்
1.	குரல்	சங்கு	வண்டு
2.	துத்தம்	குயில்	கிளி
3.	கைக்கிளை	யானை	குதிரை
4.	உழை	மயில்	யானை
5.	இளி	புரவி(குதிரை)	குயில்
6.	விளரி	அன்னம்	தேனு
7.	தாரம்	காடை	ஆடு

பஞ்சமரபு உரையில் மேலும் ஏழிசைக்குரிய தெய்வம், ஏழிசையின் வகைப்பாடு ஆகிய விவரங்கள் காணப்படுகின்றன.

குரலுக்குத் தெய்வம் பிரமன்
துத்தத்தின் தெய்வம் ஆதிரையன்
கைக்கிளையின் தெய்வம் பாரத்துவாசன்

உழைக்குத் தெய்வம் மயில் தாங்கியன் (முருகன்)
இளிக்குத் தெய்வம் அங்காரகன்
விளரிக்குத் தெய்வம் பாற்கரன் (பாஸ்கரன், திருமால்)
தாரத்துக்குத் தெய்வம் காசிபன்

-என்று கூறப்பட்டுள்ளது

[4]பிங்கல நிகண்டில் ஏழிசைக்குரிய தெய்வங்களாக முறையே விசுவாமித்திரர், இயமன், அங்கி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன் என்று காணப்படுகிறது.

ஏழிசைகள் ஆண், பெண், அலி என்கிற முறையில் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

குரலும் தாரமும் கைக்கிளையும் – ஆண்
இளியும் துத்தமும் விளரியும் – பெண்
உழை – அலி.

இதில், 'இளியும் துத்தமும் கைக்கிளையும் பெண் எனவுங் கொள்க' என்ற மற்றொரு முறையும் கூறப்பட்டுள்ளது.

இவ்வகைப்பாடு, நிகண்டு நூல்களிலோ, சிலப்பதிகார உரையிலோ காணப்படவில்லை. [5]வடமொழி நூல்களுள் ஒன்றான நாரதரின் சங்கீத மகரந்தத்தில் (9 ஆம் நூற்றாண்டு) இராகங்கள் இவ்வாறு ஸ்திரீ, புருஷ நபும்ஸக என்று வகை படுத்தப்பட்டிருப்பது ஒப்பிடத் தகுந்தது.

[6]பிங்கல நிகண்டில் ஏழிசைக்குரிய மணங்களும், சுவைகளும் கூறப்பட்டுள்ளன.

மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், தாமரை, புன்னை ஆகியவை ஏழிசைக்குரிய மணங்கள். பால், தேன், கிழான் (தயிர்), நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி ஆகியவை சுவைகள்.

பஞ்சமரபு உரையில் ஏழிசைக்குரிய எழுத்துக்களாக ஆ, ஈ ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. இது

[7]திவாகரம், பிங்கல நிகண்டிலும்காணப்படுகிறது. இதிலிருந்து ஏழிசையை அதனதன் ஒலி அடிப்படையில் உயிர் எழுத்துக் களாகக் கொண்ட பண்டைய இசைத் தமிழ் மரபு விளங்கு கிறது.

பஞ்சமரபின் வங்கிய மரபில் ஏழிசைக்குரிய எழுத்துக் களாக 'சரிகமபதநி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெழுத் துக்கள், பண்டைய தமிழர் ஏழிசை எழுத்துக்களாகக் கொண்ட உயிர் நெடிலெழுத்துக்களுள் ஆ, ஈ என்னும் ஓசையை அடி யொற்றியவை என்பது அறியற்பாலது

வடமொழியிலமைந்த இசை நூல்களில் ஏழிசை 'சப்த சுவரங்கள்' என்றும் அவை சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்தி யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்றும் வழங்கப்படுகின் றன. இவற்றின் மாத்திரைகள் வருமாறு:

சட்சம்	ரிஷபம்	காந்தாரம்	மத்தியமம்	பஞ்சமம்	தைவதம்	நிஷாதம்
4	3	2	4	4	3	2

இவற்றுள் ரிஷபம், காந்தாரம், மத்தியமம் ஆகியவை குரல் துத்தம் போன்ற ஏழிசையுடன் மாத்திரையளவில் (சுருதியள வில்) ஒவ்வாமை நோக்கற்குரியது.

மேற்கூறிய சட்சம், ரிஷபம் முதலியவை இசைத் தமிழின் குரல் துத்தம் போன்றவையே என்று திவாகர நிகண்டிலும் மகாபாரத சூடாமணி, பரதசங்கிரகம் போன்ற நூல்களிலும் காணப்படுகின்றன. ஆனால் இவற்றின் அலகுகளும், பிறப்பிட மும், வேறுபடுவதால் இவை ஒன்றாக அமைவதில்லை.

[8]குரல் என்பதனை சட்சம் என்று கொள்ளாது, மத்தி யமம் எனக் கொண்டால், இரண்டிலும் மாத்திரையளவுகள் ஒத்துவிடுகின்றன.

ஏழிசை மாத்திரைகள் எண் (தமிழ் நூல் களின் படி)		சப்த சுரங்களின் மாத்திரைகள் (வடமொழி நூல்களில் கண்டவாறு)		குரலை மத்தியம மாகக்கொள்ளும் போது ஏற்படும் மாத்திரை நிலை	
1. குரல்	4	சட்சம்	4	மத்தியமம்	4
2. துத்தம்	4	ரிஷபம்	3	பஞ்சமம்	4
3. கைக்கிளை	3	காந்தாரம்	2	தைவதம்	3
4. உழை	2	மத்தியமம்	4	நிஷாதம்	2
5. இளி	4	பஞ்சமம்	4	சட்சம்	4
6. விளரி	3	தைவதம்	3	ரிஷபம்	3
7. தாரம்	2	நிஷாதம்	2	காந்தாரம்	2

[9]பஞ்சமரபின் நிறத்தமரபு உரையில் வங்கியம், வீணை யாழ் முதலியவற்றிலிருந்து பிறக்கும் இசைக்குரிய எழுத்துக் களாக 'சரிகமபதநி' என்றும், தமிழுக்குரிய ஏழு நரம்புகளாக குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என் றும் கூறப்பட்டுள்ளன. இதில் தமிழ் நரம்புகள் 'மபதநிசரிக' என்கிற நிரலில் வைக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்து பண்டைய இசைத்தமிழ் நூலோர் மத்திய மத்தை ஆரம்ப சுரமாகக் கொண்டனரென்பது தெரிகிறது எனவே தாரத்து உழை தோன்றும் என்ற முறைப்படி காந்தா ரத்தில் நிஷாதமும், நிஷாதத்தில் மத்தியமமும், மத்தியமத்தில் சட்சமும், சட்சத்தில்பஞ்சமமும், பஞ்சமத்தில் ரிஷபமும், ரிஷபத்தில் தைவதமும் தைவதத்தில் காந்தாரமும் பிறகும் என்றுணர வேண்டும்.

இசை புணர் குறிநிலை:

இசை புணர்க்கையில், ஏழு நரம்புகளுக்குமுள்ள தொடர்பை இணை, கிளை, பகை, நட்பு என்னும் முறையை அறிந்து புணர்ப்பது, 'இசை புணர் குறிநிலை' எனப்படும். இதனைப் [10]பஞ்சமரபு உரையினின்று கீழ்கண்டவாறு அறியலாம்.

ஏழாம் நரம்புகளுக்கு நாலாம் நரம்பு – நட்பு
ஐந்தாம் நரம்பு – கிளை
ஆறாம், மூன்றாம் நரம்புகள் – பகை
இரண்டாம், ஏழாம் நரம்புகள் – இணை

இவ்வுரையிலுள்ள 'இரண்டாம் நரம்பு இணையெனப் படும்-கூற்றுக்கு ஆதாரம் இல்லை. இதனையடுத்துக்கூறப்பட்டுள்ள பின்வரும் உரை மேற்கோள் செய்யுளிலும் இரண்டாம் நரம்பு இணையென்று காணப்படவில்லை என்பது குறுப்பிடத் தகுந்தது.

"ஏழாம் நரம்பிணை நாலு நட்பாகும்
ஐந்து கிளை யாறு மூன்றும் பகையே"

முதல்	இணை	பகை	நட்பு	கிளை	பகை	இணை
		3	4	5	6	7

இக்கருத்தே சிலப்பதிகார வேனிற்காதையின் அரும்பத வுரையிலும், கல்லாடத்திலும் குறிப்பிடப்படுகின்றது.

[11]"ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருத சாகரத்தில், இவை பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

1) நின்ற நரம்பிற்கு ஏழாவது இடத்தில் வரும் சுரம் இணைச் சுரம். ச – ப என்றும்;

ச	ரி^{1}	ரி^{2}	க^{1}	க^{2}	ம^{1}	ம^{2}	ப
1	2	3	4	5	6	7	

2) நின்ற நரம்பிற்கு ஐந்தாம் இடத்தில் வரும் சுரம் கிளைச் சுரம். ச – ம என்றும்;

ச ரி^{1} ரி^{2} க^1 க^2 ம

1 2 3 4 5

3) சட்சம் – அந்தர காந்தாரம். நட்பு என்றும்

ச ரி$_1$ ரி$_2$ க$_1$ க$_2$

1 2 3 4

4) சட்சம்-சாதாரண காந்தாரமும்
பிரதி மத்தியமமும்-பகை என்றும்

ச ரி$_1$ ரி$_2$ க$_1$ க$_2$ ம$_1$ ம$_2$

1 2 3 4 5 6

பகை பகை

அதாவது இசை பொருந்தாச் சுரம் என்றும் கூறப்பட்டுள்ளது.

வடமொழி நூல்களில் சுரங்களின் தொடர்பு வாதி, சம்வாதி, அனுவாதி, விவாதி என்று கூறப்பட்டுள்ளது. இவை சுருதிகளின் அடிப்படையில் அமைந்தவை. [12]சாரங்க தேவரின் சங்கீதரத்னாகரத்தில், எந்த இரண்டு சுரங்களுக்கிடையில் [13]அல்லது 9 சுருதிகள் உளவோ அவை அமைச்சரைப் போன்று சம்வாதிகளாகும் என்றும்; எந்த இரண்டு சுரங்களுக்கிடையில் ஒரே ஒரு சுருதி இடைவெளி மட்டும் உளதோ அவை விவாதி சுரமாகும். விவாதி அல்லாத சுரங்கள் அனுவாதிகளாகும்; அரசனைப் போன்று சிறப்பு நிலையைப் பெற்றுப் பிரயோகத்தில் வரும் சுரமே வாதியாகும் என்று குறிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய இணை, கிளை முறையில் பாலைகள் தோன்றுகின்றன. இவை எவ்வாறு தோன்றுகின்றன என்பது குறித்த விவரங்களைப் பஞ்சமரபு வழி நின்று ஆராய்வோம்.

பாலை:

இசைத்தமிழ் இலக்கணத்தில் பாலையெனுஞ் சொல் பல வகையில் வழங்கப்படுகிறது. பாலை யென்றால் பகுப்பு. பால்-பகுதி. பகுதிப் படுத்தியறியும் இசை (சுர) நிரல்கள். குரல் துத்தம், கைக்கிளை முதலிய ஏழிசையின் பகுப்பு, ஆயப்பாலை சதுரப்பாலை, திரிகோணப்பாலை, வட்டப்பாலை என்ற நான்கு வகைகளில் அமைகிறது.

பாலை என்பது யாழ்க் கருவிகளில் நரம்புகளை அளவறிந்து கட்டப் பெற்று இசை நிலைகளையும் அவற்றின் அலகு முறை களையும் அமைத்தறிந்து உணர்ந்து தெரிந்து வாசித்தற்குரிய இசை நிரல்களாம். அதாவது சுர வரிசைகளாம்.

செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும் பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்னும் ஏழ் பெரும் பாலைகளின் பிறப்பைக் குறிக்கையில் பாலை என்பது, 'குரல் – திரிபு' என்னும் இலக்கண நெறியை விளக்குகிறது. தற்போதைய நிலையில் ஆரோசை அமரோசை யுடன் கூடிய இசை நிரல்களைக் கொண்டு விளங்கும் 'மேளகர்த்தா' என்று நாம் குறிப்பிடுவது இசைத் தமிழ் இலக்கணத்திலுள்ள பாலையென்பதே.

பண்டைய தமிழரின் ஐந்நிலப் பாகுபாட்டின் கருப் பொருள்களான குறிஞ்சியாழ், மருதயாழ், **பாலை** யாழ், செவ் வழியாழ், நெய்தலியாழ் என்னுமிடத்தே, 'பாலையாழ்' என்பது பாலை நில மக்களால் இசைக்கப்படும் யாழின் இன்னொலியைக் குறிகின்றது. இவ்வகையில் பாலையென்பது ஒரு குறிப்பிட்ட நில மக்களால் இசைக்கப்படும் பண்ணின் பெயராக அமைந் துள்ளது எனலாம்,

பாலை இலக்கணத் தொடர்பான பஞ்சமரபு வெண்பாக் களில் ஏழு பாடல்கள் சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையின், 'யாழாசிரியன் அமைதி, என்னும் பகுதியில் மேற் கோள் காட்டப்பட்டுள்ளன. நால் வகைப் பாலைகளுள் ஆயம் சதுரம், திரிகோணம் ஆகிய மூன்று பாலைகளைப் பற்றிய

விளக்கங்கள் பஞ்சமரபு நூலிலும் உரையிலும் அதிகமாக, காணப்படவில்லை. பஞ்சமரபில் இல்லாததால், சிலப்பதிகார உரைகளிலும் இவற்றின் விளக்கங்கள் விடுபட்டுள்ளன. அல்லது சிறப்பின்மை கருதி உரையாசிரியர் விடுத்திருக்கலாம்.

இப்பாலைகளை இங்குச் சுருங்கக் காணலாம்

ஆயப்பாலை: ஆயப்பாலை என்பது பதினாற் கோவை. அதாவது 14 சுரங்களையுடையது. [13] 'ஆயப்பாலையாய் நின்ற பதினாற் கோவையுடன் பொலிந்து செப்ப முடைத்தாய்ப் பாடலியல்பு ஒத்தமைந்த சிறப்புடைத்தாகலினால் அதிலே செம்பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை அரும்பாலை கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்று சொல்லப்பட்ட ஏழு பாலையினையும் இணை நரம்பாக தொடுத்து நிரம்ப நிறுத்திக் காட்டல் காரணமாகவென்ற வாறு'' என்பது அரும்பதவுரை.

ஆயப்பாலையில் ஓர் பண்ணிற்குரிய நரம்புகள் (அலகுகள்) ஒழுங்கு பட்டு இரு நிரலாய் வலமுறை இடமுறையாய் இணைந்து நின்று இசைப்பதாகும்.

ஆபிரகாம் பண்டிதரின் [14]கருணாமிர்தசாகரத்தில், ஆயப் பாலை என்பது, ராசி வட்டத்தில் ச – ப ச-ப (குரல்-இளி. முறையாக வலமுறையாய் வரும் ½ சுரமாக 12 சுரங்களும் ச-ம ச-ம (குரல்-உழை) இடமுறையாக வரும் 12 சுரங்களும், அவற்றில் கிரகமாற்றம் செய்து ஏழு பாலைகள் மற்றப் பாலைகள் உண்டாகும் விதத்தைச் சொல்லும் முறை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதில் 12 சுரங்கள், 16 சுரங் களாக வழங்கிவரும் முறையும், இம்முறையில் 72 மேளங்கள் உண்டாகும் விதத்தைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. பஞ்ச மரபின் குறிப்புரையில், சதுரப்பாலையும், திரிகோணப் பாலை யும், பின்வருமாறு குறிப்பிடப் படுகின்றன.

சதுரப்பாலை: இசையலகுகளைச் சதுர வடிவமான கட்டத் துள் நட்பு முறையில் அதாவது நான்காமிசை முறையில் கணித் தறிந்து வரும் முறைமையில் இசைத்து நிறுவுவது. நான்கு நிரல் களாக, சுரத் தொகுதிகளாக ஒத்திசைப்பது.

திரிகோணப்பாலை: இசையலகுகளை முக்கோணக் கட்டத்துள் அமைத்துப் பகை முறை அதாவது மூன்றாமிசை முறையில் கணித்தறிந்து வரும் முறைமையில் இசைத்து நிறுவுவது. மூன்று நிரல்களாகப் பண்ணிற்குரிய மாத்திரைகள் வேறுபட்டு மூன்று சுரக்கோவையாய் வருவது.

வட்டப்பாலை: வட்டப்பாலை ஓர்மண்டலமாகும். அதாவது ஓர் சக்கரமாகும். ஓர் புள்ளியினின்று ஆரம்பித்து அதே புள்ளியில் முடிவுறும்படி இடப்பெறும் கோட்டிற்கு வட்டம் என்று பெயர். அதாவது முழுமை என்பது பொருள். ஒரு முழுமையான வட்டத்தில் 12 கோணஞ்செய்து, அதனில் ஏழு கோணத்தைக் கொண்டு உறழப்படுவது வட்டப் பாலையாகும்

[15]பஞ்சமரபின் ''ஈரேமுக் கோரேழாமாய'' எனத் தொடங்கும் வெண்பாவில், மேற்கூறிய நான்கு பாலைகளிலும் வட்டப் பாலையே முக்கியமானது எனக் குறிப்பிடப்பட்டு அதன் அமைப்பு முறையும். ஏழிசை அதில் பொருந்தும் முறையும் விளக்கப்படுகின்றன.

வட்டப்பாலையின் அமைப்பும், அதில் ஏழிசை இசைதலும்

வட்டப்பாலை மண்டலத்தின் அமைப்புமுறை [16]''சாணளவு கொண்டதொரு'' எனத் தொடங்கும் வெண்பாவில் விளக்கப் படுகிறது. சாணுக்குச் சாணாக ஒரு வட்டம் அமைத்து நாற்பெருந் திசைகளில் இரண்டு வரம்பு கீறிக்கோணங்களின் மேலொரு வரம்பு கீறி மண்டலஞ் செய்து பன்னிரண்டு கோணமாய் வருவது வட்டப்பாலை மண்டலமாகும். இப்பன்னிரண்டு கோணங்களில் கீழ்க்கண்ட பன்னிரண்டு இராசிகளை நிறுத்தல் வேண்டும்.

மேடம்	சிம்மம்	தனுசு
இடபம்	கன்னி	மகரம்
மிதுனம்	துலாம்	கும்பம்
கடகம்	விருச்சிகம்	மீனம்

இந்த இராசிகளை ஒன்றற்கொன்று எதிராக நிற்கும் இராசிகளை வலப் பக்கத்திலிருந்து தொடங்கி இடப்புறமாக வந்து இறுதித் தானம் மீனமாக நிற்கச் செய்ய வேண்டும். [17]பஞ்சமரபு உரையின்படி, கிழக்குப் பெருந்திசைக் கோணம் இரண்டில், வடக்குக் கோணம் முதலாகவும், அதற்கு வடக்கிற்கோணம் ஈறாகவும், பன்னிரண்டு இராசிகளை, நிறுத்தி மேட முதல் பன்னிரண்டு இராசிகளையும் நிற்கச் செய்ய வேண்டும்.

மீனம் உழை	மேடம்	இடபம் இளி	மிதுனம்
கும்பம் கைக்கிளை			கடகம் விளரி
மகரம்			சிங்கம் தாரம்
தனு துத்தம்	விருச்சிகம்	துலாம் குரல்	கன்னி

இப்பன்னிரண்டு இராசிகளில் ஏழிசைகள் நிறுத்தப்படுகின்றன. எவ்வாறெனில்'

குரல் – துலாத்தில் நிற்கும்
துத்தம் – தனுவில் நிற்கும்
கைக்கிளை – கும்பத்தில் நிற்கும்
உழை – மீனத்தில் நிற்கும்
இளி – இடபத்தில் நிற்கும்

விளரி – கற்கடகத்தில் நிற்கும்

தாரம் – சிங்கத்தில் நிற்கும்

இது சினேந்திர மாலை ஆரூட சக்கரத்தில் குறிப்பிட்டிருப்பதாக [18]பஞ்சமரபின் குறிப்புரையில் காணப்படுகிறது.



இவ்வாறு நிறுத்தப்படும் ஏழிசையின் தான நிலைகளைப் பார்க்கும்போது, இது தற்போதைய அரிகாம்போதி இராகத்திற்கு நேரானது என்றறியலாம்.

முன்னர்க் குறிப்பிட்ட ஏழிசையின் இணை,கிளை தொடர்பு முறையுள், இளிக் கிரமம் எனப்படும் ச-ப முறையில் (இணை முறை) ஏழிசையின் பிறப்பைச் சுலபமாக அறிந்து கொள்ள வட்டப்பாலை மிகவும் பயனுடையதாகத் திகழ்கிறது. மேலும், இராசி வட்டத்தின் 12 இராசிகளில் குரல் நிற்கும் இராசியிலிருந்து 7-ஆம் இடமாகிய இராசி இணையென நிறுவி, ஒரு

சுரத்திற்கு ஏழாவது நரம்பு அல்லது ஏழாவது இராசியில் நிற்கும் நரம்பு இணைச் சுரம் என்று உறுதிசெய்யவும் இது பயனுடையது.

ஏழு பாலைகளின் பிறப்பு.

பஞ்சமரபில் ஏழு பாலைகளின் பிறப்பு இரண்டு வெண்பாக்களில் இருவித முறையில் காட்டப்பட்டுள்ளது.ஒன்று இடமுறை எனவும் மற்றொன்று வலமுறை எனவும் பெயர்பெறும் [19]இடமுறையாவது, வட்டப்பாலையில் இடபத்தில் தோன்றிய குரல், இடபம், மேடம், மீனம், கும்பம், மகரம் என்று இடமாகச் செல்லுவது. இது ச-ம முறைப்படி அவரோகணக் கிரமமாகச் செல்லுதல்; வலமுறை என்பது, வட்டப்பாலையில் பன்னிரண்டாம் இராசியிலிருந்து மீனம், மேடம், இடபம், மிதுனம்



கடகம், என்றமுறைப்படி ச, ரி, க, ம, என்று போவது. இது ச-ப முறைப்படி ஆரோகணக் கிரமமாகச் செல்லுதல். பஞ்ச மரபின் குறிப்புரையில் இவ்விரு முறைகளும், 'குரற் கிரமத்து எதிர் நிரனிறை(இடமுறை)என்றும் 'தாரக்கிரமத்து நிரனிறை' (வலமுறை) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை, வேனிற்காதை, ஆய்ச்சியர் குரவை ஆகிய மூன்று பகுதிகளிலும், அதன் உரைகளிலும் இவ்விரு முறைகளில் பிறக்கும் ஏழு பாலைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பஞ்சமரபில், 'குன்றாக் குரற்றாரம்' என்னும் வெண்பா, அடியார்க்கு நல்லார் உரை மேற்கோளில் சிற்சில மாறுதல்களோடு காணப்படுகின்றது.

பஞ்சமரபு வெண்பா வருமாறு:

"குன்றாக் குரற்றாரம் பாதி நடுவணைய
நின்றே கிளையாகும் நேரிழையே-யொன்னாத
தாரத்தி லொன்றும் விளரிமே லொன்றிடுமே
நேரத் துழை குரலே யாம்."

இவ்வெண்பா, 20 வேனிற்காதையின் அடியார்க்கு நல்லார் உரையில்

"குன்றா குரற்பாதி தாரத்தி லொன்று
நடுவ ணிணை கிளையாக்கிக்-சொடியிடையாய்
தாரத்தி லொன்று விளரிமே லேறடவந்
நேரத் தது குரலா நின்று.[21]

என்றுள்ளது.

மேற்கூறிய பஞ்சமரபு வெண்பாவுக்குரிய உரை வருமாறு: 'குரலின் அலகிலே பாதியும் தாரத்தின் அலகிலே பாதியும் நடுவிற் கோணமான கைக்கிளைத் தானத்தே நிறுத்த, பாலை திரியும். இவ்வாறு திரியுமிடத்து,

உழை குரலாயது	—	செம்பாலை
கைக்கிளை குரலாயது	—	படுமலைப்பாலை
துத்தம் குரலாயது	—	செவ்வழிப்பாலை
குரல் குரலாயது	—	அரும்பாலை
தாரம் குரலாயது	—	கோடிப்பாலை
விளரி குரலாயது	—	விளரிப்பாலை
இளி குரலாயது	—	மேற் செம்பாலை

மேற்கூறிய பஞ்சமரபு வெண்பாவும், உரையும் சிலப்பதிகாரத்தின் [21]அரங்கேற்று காதைச் செய்யுள் கருத்தோடு ஒத்தமைகிறது.

"ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமும்
மென்மையிற் கிடந்த குரலின் பாகமும்
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளை வழிப் பட்டன ளாங்கே கிளையும்
தன் கிளை யழிவு கண்டவள் வயிற்சேர
ஏனை மகளிருங் கிளை வழிச் சேர
மேல துழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாய

(சிலப். அரங். 70 - 81)

இதனை வம்புறு மரபு என்று இங்குக் குறிப்பிட்டிருப்பது நோக்கற்குரியது. இப்பகுதியின் அடியார்க்கு நல்லார் உரை முழுவதும் அரும்பதவுரையைப் பின் பற்றியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகுந்தது. உரையில் காணப்படும் பின்வரும் மேற்கோள் சூத்திரம் பஞ்சமரபு வெண்பாவிலிருந்து சிறிது மாறுபடுகிறது.

22 "தாரபாகமும் குரலின் பாகமும்
நேர் நடு வண்கிளை கொள்ளநிற்ப
முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும்
விளரி குரலாகு மென்மனார் புலவர்"

முன்னர்க் குறிப்பிட்ட பஞ்சமரபின் வெண்பா விளக்கத்திற்கு முன்னர், பின்வரும் செய்திகளை நினைவிற் கொள்ளுதல் அவசியம். வட்டப்பாலையின் 12 கோணங்களில் ஏழு இராசிகளில் குரல்; துத்தம் போன்ற ஏழிசையும் பொருந்தும். ஏழிசை பொருந்தாத மற்ற ஐந்து இடங்களும் 'அந்தரக் கோல்கள்' எனப்படும். குரல் இளியைத் தவிர மற்ற ஐந்து இசைகளுக்கும் இரண்டிரண்டு கோணங்களை அமைக்கும்போது 12 இராசிகளும் 12 நரம்புத் தானங்களைக் (சுரத்தானங்களை) குறிப்பதாகக் கொள்ளலாம். குரல், துத்தம் போன்ற ஏழிசைக்குரிய 22 அலகுகளும் 4-4 – 3-2-4-3-2 என்ற வகையில் பிரிக்கப்பட்டுள்ளன என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

வட்டப்பாலையின் முடிவுத் தானத்தில் நிற்கும் தாரத்தின் இரண்டலகில் ஓரலகையும், இப்பாலையின் முதல் தானத்தில் நிற்கும் குரல் பெற்ற நாலலகில் இரண்டலகையும் தாரத்தின் அந்தரக் கோலிலே கைக்கிளையாக நிறுத்தும்போது, தார நரம்பு கைக்கிளையாக மாறும். தாரத்தின் ஒழிந்த ஓர் அலகையும் அதன் அருகிலுள்ள விளரி நரம்பிலே கூட்டும்போது அவ்விளரி துத்த நரம்பாக மாறும். இவ்வாறு பன்னிரண்டு முறை திரிக்கப் பன்னிரு பாலையும் பிறக்கும்.

குரலின் இரண்டு மாத்திரைகளைத் தாரம், விளரிக்கு ஒவ்வொன்று ஈந்து பிறக்கும் புதிய பாலைகளின் மாத்திரை எண்கள் வருமாறு.

குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
4	4	3	2	4	3	2
2	4	3	2	4	4	3
2	4	4	3	2	4	3
3	2	4	3	2	4	4
3	2	4	4	3	2	4
4	3	2	4	3	2	4
4	3	2	4	4	3	2

[23]சிலப்பதிகார வேனிற் காதையின் அடியார்க்கு நல்லாருரையில் இம்முறை இடமுறைத் திரிபு என்று கூறப்படுகிறது. அதாவது கோடிப்பாலை பிறக்கும் முறை. இப்பகுதி உரை வருமாறு: 'குன்றாக் குரற்பாதி ... நின்று'' என்னின், உழை குரலாகிய கோடிப்பாலை நிற்க. இடைமுறைத் திரியுமிடத்துக் குரல் குரலாயது—செம்பாலை. இதனில் குரலிற் பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந்தரத்திலே கிளையாக்கித் தாரத்திலே நின்ற ஒரலகைமே லேறட விளரி குரலாயப் படுமலைப் பாலையாம். இம்முறையே,

துத்தம் குரலாயது – செவ்வழிப் பாலை
இளி குரலாயது – அரும்பாலை
கைக்கிளை குரலாயது – மேற்செம்பாலை
தாரம் குரலாயது – விளரிப்பாலை

என அந்தரமைந்து நீக்கி உறழ்ந்து கண்டுகொள்க. இவ்விடத்தில் தார நரம்பின் அந்தரக் கோலைத் தார மென்றது, ''தன்ன முந் தாரமுந் தன்வழிப்படர'' என்னும் சூத்திர விதியாகும்.''

இவ்வாறு குரலின் இரண்டலகையும் தாரத்தின் ஓரலகையும் மற்ற நரம்புகளுக்கு வழங்கி கிளை முறையில் பிறக்கும் ஏழு பாலைகளின் பெயர் வரிசைகள், சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையின் அரும்பதவுரையிலும் அடியார்க்கு நல்லார்.

எண்	பாலைகள்	பஞ்சமரபு உரை பெயர் வரிசைகள்	சிலப். வேனிற்காதை உரையிற்கண்ட வரிசைகள்
1.	உழை குரலாயது	செம்பாலை	கோடிப்பாலை
2.	கைக்கிளை குரலாயது	படுமலைப்பாலை	மேற்செம்பாலை
3.	துத்தம் குரலாயது	செவ்வழிப்பாலை	செவ்வழிப்பாலை
4.	குரல் குரலாயது	அரும்பாலை	செம்பாலை
5.	தாரம் குரலாயது	கோடிப்பாலை	விளரிப்பாலை
6.	விளரி குரலாயது	விளரிப்பாலை	படுமலைப்பாலை
7.	இளிகுரலாயது	மேற்செம்பாலை	அரும்பாலை

உரையிலும் கண்டவை, பஞ்சமரபு உரையோடு ஒத்துள்ளன. ஆனால், வேனிற் காதையில் சொல்லப்பட்டுள்ள இடமுறைப் பாலைகள் பஞ்சமரபு உரையுடன் மாற்றம் கொண்டுள்ளன. இதனை 80-ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையிற் காணலாம்.

பஞ்சமரபு உரையின் குறிப்புரையில் இம்முறை 'குரற்கிர மத்து எதிர் நிரனிறை' எனப்படும் என்றுள்ளது. இம்முறை யில் திரிபு, இளி முதல் அதாவது இளியிலிருந்து தொடங்கி ஏறு நிரற் கிரமத்தில் (ஆரோக) உழையைக் கடை நரம்பாகக் கீழிருந்து மேலாக முடிக்கிறது.

(ஆ) ஏழு பாலைகளின் பிறப்பு மற்றொரு விதமாக "[42]குரல்இளியிற் பாகத்தை" என்ற வெண்பாவில் காணப்படு கிறது.

"குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று
வரையாது தாரத்துழைக்கும் – விரைவின்றி
(ஏத்தும்) எத்தும் விளரிக் கிளைக் கீக்க வேந்திழாய்
துத்தங் குரலாகுஞ்சொல்."

குரல், இளி இரண்டிற்குமுரிய 4 மாத்திரைகளில் பாதியை அதாவது இரண்டிரண்டு மாத்திரைகளை எடுத்துவிட்டு மொத்தம் கிடைத்த நான்கு மாத்திரைகளைத் தாரம், உழை, விளரி, கைக்கிளை ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றாகக் கொடுத் தால், துத்தம் மட்டும் மாறாமல் 4 மாத்திரையாகவே நின்று. இந்தத் துத்தத்தைக் குரலாகத் தொடங்கினால் வேறு பாலை கிட்டும். இவ்வாறே திரிக்க ஏழ்பெரும் பாலைகள் பிறக்கும் இது வலமுறையில் நிகழ்வதால் வலமுறைப் பாலைத் திரிபு எனப்படும். இவ்வல முறைப்பாலை ஏழும் பஞ்சமரபு உரையில் பின்வருமாறு கூறப்படுகிறது.

குரல் குரலாயது	—	செம்பாலை
துத்தங் குரலாயது	—	படுமலைப்பாலை
கைக்கிளை குரலாயது	—	செவ்வழிப்பாலை
உழை குரலாயது	—	அரும்பாலை
இளி குரலாயது	—	கோடிப்பாலை
விளரி குரலாயது	—	விளரிப்பாலை
தாரம் குரலாயது	—	மேற்செம்பாலை.

இவற்றின் மாத்திரைகள் வருமாறு:

	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளீ	விளரி	தாரம்	
குரல் குரலாய	4	4	3	2	4	3	2	செம்பாலை
	— 2		+ 1	+ 1	— 2	+ 1	+ 1	
துத்தங் குரலாய	2	4	4	3	2	4	3	படுமலைப்பாலை
கைக்கிளை குரலாய	3	2	4	4	3	2	4	செவ்வழிப்பாலை
உழை குரலாய	4	3	2	4	4	3	2	அரும்பாலை
இளி குரலாய	2	4	3	2	4	4	3	கோடிப்பாலை
விளரி குரலாய	3	2	4	3	2	4	4	விளரிப்பாலை
தாரம் குரலாய	4	3	2	4	3	2	4	மேற்செம்பாலை

இம்முறை தாரக்கிரமத்து நிரனிறை என்று பஞ்சமரபு குறிப்புரையில் காணப்படுகிறது.

25 சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவையில் தொன்றுபடு முறையில் ஏழு மகளிரை வட்டமாக நிற்க வைத்து ஒவ்வொரு வருக்கும் மாயவன், பலராமன், நப்பின்னை, கைக்கிளை, உழை, விளரி, தார மெனப் பெயரிட்டு, கண்ணகி காணக் குரவைக் கூத்து ஆடினதாக அறிகிறோம். இதில் ஏழு பாலை பிறத்தல் முதலிய குறிப்புகள் சிலப்பதிகார மூலத்தில் இல்லையேனும், அடியார்க்கு நல்லார் இவற்றைத் தந்துரைத்துள்ளார். இவை பஞ்சமரபு வெண்பா, உரையுடன் பொருந்துவதாகத் தெரிகிறது.

பஞ்சமரபில், செம்பாலைக்குரிய ஏழிசையின் தான நிலைகளை இராசி வீடுகளில் மற்றொரு விதமாகவும் கொடுக்கப் பட்டுள்ளது.

26 “ஏத்து மிடப மலவனுடன் சிங்கம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை – பார்த்துக்
குரன் முதற் றாரம் இறுவாய்க் கிடந்த
நிரலேழுஞ் செம்பாலை நேர்”

இவ்வெண்பாவில் செம்பாலைக்குரிய ஏழிசைகள் குரல் முதல் தாரம் இறுதியான ஏழு இராசிகளில் பின்வருமாறு நிறுத்தப்படுகின்றன.

இடபம்	—	குரல்
கற்கடகம்	—	துத்தம்
சிம்மம்	—	கைக்கிளை
துலாம்	—	உழை
தனுசு	—	இளி
கும்பம்	—	விளரி
மீனம்	—	தாரம்

இவ்வாறு வரும் செம்பாலையினை ‘நேர் செம்பாலை’ என்று உரையாசிரியர் கூறுகின்றார்.



இது குரல் குரலாயொத்த செம்பாலை என்று கூறப்படுகிறது.

இதில் கூறப்பட்டுள்ள நிரலின்படி, இது தற்போதய 'கரகரப் பிரியா' என்னும் இராகத்திற்கு நேரானது எனலாம்.

மற்ற, படுமலைப்பாலை முதலிய பாலைகளின் நேரான இராகங்களில் இசையறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. தற்போதைய நிலையில்,

படுமலைப்பாலை நட பைரவியை ஒத்தது என்று சுவாமி விபுலானந்தரும் பேராசிரியர் சாம்பமூர்த்தியும்; கல்யாணியை ஒத்தது என்று டாக்டர். எஸ். இராமநாதனும் கருதுகின்றனர். இவ்வாறு இம்மூவரும், மற்றப் பாலைகளை முறையே

செவ்வழிப்பாலை	—	பஞ்சமமில்லாத தோடி, தோடி என்றும்;
அரும்பாலை	—	சங்கராபரணம், கரஹரப்ரியா என்றும்;
கோடிப்பாலை	—	கரஹரப்ரியா சங்கராபரணம் என்றும்;
விளரிப்பாலை	—	தோடி, பஞ்சமமில்லாத தோடி, என்றும்;
மேற்செம்பாலை	—	கல்யாணி நடபைரவி என்றும்

கருதுகின்றனர்.

திரு. ஆபிரகாம் பண்டிதர், செம்பாலை தீர சங்கராபரணத்திற்கு நேரானது என்ற கருத்துடன் படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை மேற்செம்பாலை ஆகியவற்றை முறையே கரஹரப்ரியா, தோடி, கல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி, பஞ்சமமில்லாத தோடி ஆகிய இராகங்களுக்கு நேராகக் கருதுகிறார்.

இவ்வகையில் பாலை இலக்கணம், தனித்த தொரு ஆய்வு நிகழ்த்த வழிகோலுகிறது.

வட்டப் பாலையில் நாற்பெரும் பண்கள் பிறக்கும் முறை:

நாற்பெரும் பண்களாவன: பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ். இந் நான்கு பெரும் பண்களும் வட்டப் பாலையில் எவ்வாறு பிறக்கின்றன என்பது பஞ்சமரபின் பின்வரும் வெண்பாவிலிருந்துத் தெரிகிறது.

27 "தாரத் துழை தோன்றப் பாலையாழ் தண்குரலில்
கூரத்துழையே குறிஞ்சியாழ் – நேரே
இளி குரலிற் றோன்ற மருதயாழ் துத்தம்
இளி பிறத்தல் செவ்வழி யாழாம்."

வட்டப்பாலையில் தாரம் குரலாக,

உழை அதற்குக் கிளையாகத் தோன்றுவது - பாலையாழ். வட்டப்பாலையில் உழை குரலாக,

குரல் அதற்குக் கிளையாகத் தோன்றுவது - குறிஞ்சியாழ் வட்டப் பாலையில் குரல் குரலாக,

இளி அதற்குக் கிளையாகத் தோன்றுவது - மருதயாழ். வட்டப் பாலையில் இளி குரலாக,

துத்தம் அதற்குக் கிளையாகத் தோன்றுவது
- செவ்வழியாழ்.

மேற்கூறிய நாற்பெரும் பண்களுள் பாலையாழினுள்ளே செம்பாலை முதலாய ஏழு பாலையும் பிறக்கும். இவ்விவரம் பஞ்சமரபு உரையில் பின்வருமாறு கொடுக்கப்படுகிறது.

பாலையாழ்:	அரும்பாலை	க	கைக்கிளை
	கோடிப்பாலை	உ	உழை
	விளரிப்பாலை	ங	இளி
	மேற்செம்பாலை	ச	விளரி
	செம்பாலை	ரு	தாரம்
	படுமலைப்பாலை	சூ	குரல்
	செவ்வழிப்பாலை	எ	துத்தம்.

இம்முறை 'இளிக்கிரமம்' எனப்படும். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையினுள்ளே 'இறுதியாதியாக' என இளங்கோவடிகள் குறிப்பிட்டது இவ்வுண்மையினையே என்பது [28]யாழ் நூலாசிரியர் கருத்து.

இது வரையில் ஏழு பாலைகள் மூன்று விதங்களில்[28] பிறப்பதைப் பஞ்சமரபின் வாயிலாக அறிந்தோம். இனி இப்பாலைகளை முதலடுத்துப் பிறக்கும் பண்களைப் பற்றிய விவரங்களை அடுத்த இயலில் விரிவாகக் காணலாம்.

துணைக்குறிப்புக்கள்:

1. "தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்றும்
ஒருங் குரல் குரலி னுட் டோன்றிச் - சேருமிளி
யுட் டோன்றும் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் பிறப்பு,"
பஞ்சமரபு - யாழ்மரபு-பக்கம் 23.

2. "குறுத்த நான்கு கிளைமூன் றிரண்டு
வரையா வுழையிளி நாலாம் - விரையா
விளரியே மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற்றவர்."
பஞ்சமரபு - யாழ்மரபு-பக்கம் 26.

3. பிங்கல முனிவர் அருளிச் **செய்த பிங்கல நிகண்டு**, கழக வெளியீடு. 1978. சென்னை. சூ.1414
4. மேற்படி சூ.1418
5. Sambamurti. P. 1969. **South Indian Music Bk.VI.** Indian Music Publishing house, Madras.P.147-148.
6. பிங்கல நிகண்டு - 1416, 1417.
7. தாண்டவராய முதலியார். 1923. சேந்தன் திவாகரம், சென்னை.
8. சிலப்பதிகாரம் - ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரையுடன். 1963. பாகனேரி காசி விசுவநாதன் செட்டியார் (பதிப்பு) பாகனேரி த.வை.இ. தமிழ்ச் சங்க வெளியீடு சு பக்கம். 68-78.
9. பஞ்சமரபு - நிறத்தமரபு. உரை. பக்கம். 89.
10. பஞ்சமரபு - யாழ்மரபு. உரை. பக்கம். 25.
11. ஆபிரகாம் பண்டிதர். மு. 1917. கருணாமிர்த சாகரம் லாலி அச்சகம், தஞ்சாவூர். முன்னுரை. பக்கம். 46,
12. சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரம் 1:3: 46-51 சுலோகம்.

13. சிலப்பதிகாரம் - அரங்கேற்றுகாதை. அடி.70-71. அரும் பதவுரை.

14. ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிர்த சாகரம் - தொகுதி நான்கு.

15. "ஈரேழுக் கோரேழா மாயம் சதுரந்தான்
பாரேழுக் கேழாகப் பார்க்கவே-யோராகும்
கோணமே லொன்றுமுத லேழாகும் வட்டந்தான்
காணுமே லோரேழின் கண்.
-பஞ்சமரபு - யாழ்மரபு. வெண்பா.13. பக்கம்.17.

16. " சாணளவு கொண்டதொரு வட்டத்தின் மேலே
பேணியிரு நாலு பெருந்திசையில் - கோணத்
தொரு கயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும்
வருமுறையே மண்டலத்தை வை."
-பஞ்சமரபு யாழ்மரபு. வெண்பா 14. பக்கம்.18.

17. பஞ்சமரபு-வெண்பா 15, உரை. பக்கம்.20

18. பஞ்சமரபு குறிப்புரை. பக்கம்.21.

"ஆழியு மாரும்போற் கீறிச் சிறு திசைக்கண்
ஊழி னோரோவொன் றுடன் சீறிச்-சூழ
எருதாதி கீழ்திசைக்கொண் டீராறு மெண்ணிக்
கருதி நிலக்கயிற்றைக் காண்-சினேந்திரமாலை

19. ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருத சாகரம்-மூன்றாவது பாகம். பக்கம். 549.

20 சிலப்பதிகாரம் -- வேனிற்காதை. வரி-35. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.

21. சிலப்பதிகாரம் - அரங்கேற்று காதை. 70-81.

2. மேற்படி. 72-8 அடியார்க்கு நல்லார் உரை. மேற்கோள்.

23. சிலப்பதிகாரம் - வேனிற்காதை அடி.35. அடியார்க்கு நல்லார் உரை.

24. பஞ்சமரபு – யாழ்மரபு. வெண்.21. பக்கம்.29

25. சிலப்பதிகாரம் – ஆய்ச்சியர் குரவை அடி.13.

26. பஞ்சமரபு. யாழ்மரபு. வெண்பா.23. பக்கம்.31.

27. பஞ்சமரபு – யாழ்மரபு வெண்பா.22. பக்கம்.30.

28. விபுலானந்த அடிகளின் யாழ்நூல். பக்கம். 99.

இயல் - நான்கு

பண் இலக்கணம்

பஞ்சமரபின் யாழ்மரபிலும், நிறத்தமரபிலும், வகையொழிபு மரபிலும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ள. பண் பற்றிய செய்திகள் இவ்வியலில் அடங்கியுள்ளது.

பஞ்சமரபின் [1]நிறத்த மரபில், 'பண்' என்பதற்கு, தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் முதலிய எட்டுத் தானங்களாலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு முதலிய எட்டுக் கிரியைகளாலும் பிறப்பித்து ஓசை படுத்தலாற், 'பண்' என்று பெயராயிற்று என்று பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது.

இனிமையான இசைத் தொடருடைய ஒலி உருவ அமைப்பைப் 'பண்' என்று கூறலாம். பண் படுத்தப்பட்ட இசையொலித் தொடர்கள். பாடல்களில் அமைந்துள்ள இசையின் முறைநிலை பண் எனப்படும். இது வடமொழியில் அமைந்த 'இராகம்' என்ற சொல்லோடு ஒத்தமைகிறது.

பண் – திறம்.

தமிழிசை இலக்கணத்தில் பண், திறம் என்ற இரண்டு வகைப்பாடுகள் உள்ளன.பண் என்பது பொதுவாக எல்லா இராகங்களையும் குறிக்கும் ஓர் பொதுச் சொல். இவ்வகையில் திறங்களும் 'பண்' என்று அழைக்கப்படும். பண், குறிப்பாக ஏழு நரம்புகளைக் கொண்டது என்றும் 'திறம்' அதனில் குறைந்த நரம்புகளைக் கொண்டது என்றும் பின்வரும்[2] திவாகர நிகண்டுக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது.

> ''நிறை நரம்பிற்றே பண் ணெனலாகும்''
> ''குறை நிரம்பிற்றே திற மெனப்படுமே''

தற்போது ஏழு நரம்புகள் கொண்ட பண், 'சம்பூர்ண இராகம்' என்றும், 'ஜனக ராகம்' என்றும், அதனில் குறைந்த

நரம்புகள் கொண்ட திறம் 'ஜன்ய இராகம்' என்றும்அழைக்கப் படுகின்றன. திறம், அதன் நரம்புகளின் அடிப்படையில் மூன்று வகையாகப்பிரிக்கப்படுகிறது.

அவையாவன: பண்ணியற்றிறம், திறம், திறத்திறம். இவை வடமொழிப் பெயரால் சாடவம், ஔடவம், சதுர்த்தம் என வழங்கப் பெறும். எனவே 'திறம்' என்ற சொல் பொதுவாக ஏழு நரம்புகளினின்றும் குறைந்த நரம்புகள் கொண்ட பண் களைக் குறித்தாலும், குறிப்பாக ஐந்து நரம்புகள் கொண்ட பண்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறன.

103 பண்களின் வகைப்பாடு:

பண்கள் 103 வகைப்படும். பஞ்சமரபு உரையில் இவை மூன்று விதங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(அ) பண் பண்ணியற்றிறம், திறம்,திறத்திறம் என்ற நான்கு வகையில் அடங்குகின்றன. இதைப்பின்வரும் பஞ்சமரபு வெண்பா விளக்குகிறது.

[3]"பண்ணோர் பதினேழாம் பண்ணியல் பத்தேழாம்
எண்ணுந் திறமிரண்டும் பத்தென்ப – நண்ணிய
நாலாந் திறத்திறமோர் நான்கு முளப்படப்
பாலாய பண் ணூற்று மூன்று"'

ஏழு நரம்புகள் கொண்ட பண்கள்	... 17
ஆறு நரம்புகள் கொண்ட பண்ணியற்றிறங்கள்	... 70
ஐந்து நரம்புகள் கொண்ட திறங்கள்	... 12
நான்கு நரம்புகள் கொண்ட திறத்திறங்கள்	... 4
	103 பண்கள்

இவ்வாறு பண்ணை 103 என்று வகைப்படுத்திக் கூறிய முதல் இசை இலக்கண நூல் பஞ்சமரபு. இந்த 103 பண்களின் பெயர்கள் பஞ்சமரபு உரையில் காணப்படுகின்றன. இவை சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு

ஆகியவற்றில் காணப்படும் பெயர்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

விபுலானந்தர் இயற்றிய யாழ் நூலில் 103 பண்களும்நாற் பெரும் பண்-எழுமூன்று திறம்-அகம் புறம் அருகு பெருகு என்னும் நால் வகைச் சாதி என இவ்வாறு சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை, சேந்தன் திவாகரம் பிங்கல நிகண்டு முதலிய நூல்களை ஒப்பு நோக்கியாராய்ந்து பதிப்பிலுள்ள பிழைகளைக் களைந்து 103 பண்களும் வகைபெற அட்டவணைப் படுத்திக் காட்டப்பெற்றுள்ளன.

(ஆ) [4]"நாற்பெரும் பண்ணும் சாதிநான்கும்
பாற்படு திறனும் பண்ணெனப்படுமே."

என்னும் பஞ்சமரபு உரையும், சிலப்பதிகார உரை மேற்கோளும், பாலையாழ், குறிஞ்சியாழ்,மருதயாழ், செல்வழியாழ் என்ற நாற்பெரும் பண்கள்-அவற்றின் திறங்கள்–நால்வகைச் சாதியான அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் இவற்றின் வழியாகப் பிறக்கும், 103 பண்களை உணர்த்துகின்றன எனக்கருதலாம். இவ் வகையில் 'பண்' என்னும் சொல் 103 பண்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

அகம், புறம், அருகு, பெருகு என்னும் நால்வகைச் சாதி களும்நரம்புகளின் மாத்திரை வேறுபாட்டினால்கிடைக்கின்றன என்பது[5] சுவாமி விபுலானந்தரின் கருத்து. நாற்பெரும் பண்கள் ஒவ்வொன்றும் அகம், புறம், அருகு, பெருகு ஆகியவற்றைச் சேர்க்க வரும் 16 பண்களோடு 'தாரப்பணம்' என்ற பண்ணும் சேர்ந்து 17 பண்களாகின்றன. இவை நிறை நரம்புகள் கொண்ட பண்களாகும் (சம்பூர்ண பண்கள்) இந்த 17 பண்களும், 'பண்ணோர் பதினேழாம்' என்பதில் உள்ள பண்களும் ஒன்றே என்பது அறியத்தக்கது.

பஞ்சமரபு உரையிற் காணப்படும் பெரும்பண்கள் நான்கினுள் குறிஞ்சி, பாலை, மருதம் ஆகிய மூன்று பெரும் பண்களின் அகம், புறம், அருகு, பெருகு வகைகள் பிங்கல நிகண்டிலிருந்து மாற்றம் கொண்டுள்ளது. இம்மாற்றத்தைப் பிற்சேர்க்

கையில் காணலாம். பஞ்சமரபு உரையில் காணப்படுபவை திவாகரத்தை அடியொற்றியவையாகத் தெரிகிறது.

நாற்பெரும் பண்களுக்கும் 21 திறங்கள் உள்ளன. அவை வருமாறு:

பாலை யாழ்த் திறன்	... 5
குறிஞ்சி யாழ்த் திறன்	... 8
மருத யாழ்த் திறன்	... 4
செவ்வழி யாழ்த் திறன்	... 4
	21

இருபத்தோரு திறங்கள் ஒவ்வொன்றிலும் அகம், புறம், அருகு, பெருகு வகைக் கூறுகள் சேர்க்க மொத்தம் 84 பண்களாகின்றன. இவை பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் ஆகிய மூன்று வகைகளையும் ஒரு சேரக் கொண்டவை. இவற்றோடு முன்னர்க்கூறிய 17 பண்களும், பையுள் காஞ்சி, படுமலை என்னும் இரண்டு பண்களையும் சேர்க்க 103 பண்களாகின்றன.

(இ) செம்பாலை, படுமலைப் பாலை முதலிய ஏழு பாலைகளிலும் பிறக்கும் பண்கள் மொத்தமாக 103 ஆகின்றன. எவ்வாறெனில்

செம்பாலையுட் பிறக்கும் பண்கள்	... 8
படுமலைப் பாலையுள் பிறக்கும் பண்கள்	... 22
செவ்வழிப் பாலையுள் பிறக்கும் பண்கள்	... 12
அரும் பாலையுட் பிறக்கும் பண்கள்	... 26
கோடிப்பாலையுட் பிறக்கும் பண்கள்	... 12
விளரிப் பாலையிற் பிறக்கும் பண்கள்	... 5
மேற் செம்பாலையிற் பிறக்கும் பண்கள்	— 18
	103 பண்கள்

இவ்வாறு மூன்று வகைகளில் வகுக்கப்பட்டுள்ள 103 பண்களின் பெயர்கள், அவற்றின் பரியாயப் பெயர்கள் கொண்ட அட்டவணையைப் பிற்சேர்க்கையில் காணலாம்.

(ஈ) பண்கள் அவற்றின் பெயர் வகையிலும், பாடும் முறையிலும் பலவகைப்படும். இவை பண்பாலும், பாவாலும், நிலத்தாலும், கிரியையாலும் வகைப்படுத்தப்படும். [6]பஞ்சமரபின் வகையொழிபு மரபிலுள்ள வெண்பாவிலும், உரையிலும், 103 பண்கள் அவற்றின் பண்பின்அடிப்படையிலும், பண்களைப் பாடுவதன் முறையிலும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன

அவை, வெளிப்படுவன, வெளிப்படாதன, ஒலிக்குரியன வண்ணத்திற்குரியன, வன்மைக்குரியன, மென்மைக்குரியன;

இருவயனமும் ஆரியப் பெயர் நெறிக்குரியனவும், தமிழ் நெறிக்குரியனவும், போலி நிறத்தனவும் என்பனவாம்.

வெளிப்படும் பண்கள்,' என்பது வெளிப்படையாக எல்லோராலும் பாராட்டப்பெற்றுப் பாடப்பெற்றுக் கருவிகளில் இசைக்கப்பெற்று எப்போதும் வழக்கில் இருப்பவையாகும். இவை 19 பண்களாகும்.

''வெளிப்படாத பண்கள்'' என்பது இசை வல்லுநரால் ஏதோ ஒரு சமயம் மட்டும் இசைக்கப்பெற்று எப்பொழுதும் செவிகளில் கேட்பதற்கு வாய்ப்பின்றி இருப்பவை. இதனை அபூர்வம் என்பது வழக்கு. இவை 17 பண்களாகும்.

''ஒலிக் குரியன வாய பண்கள்'' என்பது அவற்றின் இசைகள் அலகு நிறைந்து மிக்க கம்பீரமாகவே பாடுதற்குரியன. இவை 6 பண்களாம்.

''வன்மைக் குரியன வாய பண்கள்'' என்பது பெரிய இசைகளாக அமைந்த சிறப்பாக ஏழிசையும் கொண்ட பெரும் பாலைகளும், ஒருசில ஆறிசைப் பண்களும், ஒருசில ஐந்திசைப் பண்களும், கருவிகளில் அழுத்தமாக நரம்புகளை இழுத்து

வாசிக்கப் பெறுவதும், கண்டத்தால்இடையீடின்றித் தொடர்பு நிலையில் அழுத்தம் பெறப் பாடப்பெறுவதுமாகும். இவை 20 பண்களாம்.

“மென்மைக் குரியனவாய பண்கள்” என்பது சிறிய இசைகளாக அமைந்துவரும்; அவை மிகவும் மென்மையாகவே இசைத்துப் பாடுவதற்கு உரியனவாம். இவை 6 பண்களாகும்,

“இருவயனமும் ஆரியப் பெயர், தமிழ்ப்பெயர் நெறிக்குரியனவாய பண்கள்” ஆறு. பாடும் முறையில் மேலும் ஆறு பண்கள் இதில் அடங்கும்.

ஆரியப் பெயர், நெறிக்குரியன வாய பண்கள்11
தமிழ்ப் பெயர் நெறிக்குரியனவாய பண்கள் 10.

“போலி நிறத்தன” என்னும் பிரிவில் ‘ஒப்பது’ ‘என்பது’ என்பதான இரு நெறிகள் கூறப்பட்டுள்ளன. “ஒப்பது” என்பது ஒரு பண்ணைப் போன்றே வேறொரு பண் அமைந்த, வெவ்வேறு பண்களாகும். ‘என்பது’ என்பது ஒரு பண்ணிற்கே அமைந்த வேறொரு பெயராம். அதாவது பரியாயப் பெயர். இவை 10 பண்கள்.

மேற்கூறிய பண் வகைகளை வடமொழி இசை இலக்கண நூல்களான சங்கீத ரத்னாகரம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை போன்ற நூல்களில் குறிக்கப்பட்டுள்ள அதுன பிரசித்த ராகங்கள், பிராக் பிரசித்த ராகங்கள், அபூர்வ ராகங்கள், கன, நய, தேசிய ராகங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடலாம்.

(உ) பண்களும் – காலங்களும்.

குறிப்பிட்ட நேரத்தில் அதற்குறிய பண்கள் பாடப்பட வேண்டும் என்பதற்குப் பழந்தமிழர் அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தனர் என்பது பண்டைக்கால இலக்கியக் குறிப்புக்களிலிருந்து அறியலாம்.

காலையில் மருதப்பண்ணும், மாலையில் செவ்வழிப் பண்ணும், நள்ளிரவில் குறிஞ்சிப் பண்ணும் பாடுதல் வேண்டும் என்பது பழந்தமிழ் இசைமரபு. இம்மரபினை,

"யாழோர் மருதம் பண்ண" (மதுரைக். 658)

எனவும், "செவ்வழி யாழிசை நிற்ப.. ...

மாலையும் வந்தன்று" (கலி 143, 38 - 41)

எனவும், "ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி

பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாட

... ...

மறம்புகல் மழகளி றுறங்கும். " (அகம் - 102)

எனவும் வரும் சங்க இலக்கியத் தொடர்களால் நன்கு உணரலாம்

"பாலையாழொடு செவ்வழிப்பண்கோள

மாலை வானவர் வந்து வழிபடும்" (v - 178.10)

என்றார் திருநாவுக்கரசர். இதனால் செவ்வழிப் பண் மாலைக் காலத்தில் பாடுதற்குச் சிறப்புரிமையுடையது என்பது புலனாகிறது,

[7]பஞ்சமரபில், சிறுகாலை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, அரையிருள் யாமம், யாமம் வைகறை - என்ற எட்டுக் காலங்கள், - அவைகளுக்கு உரிய தெய்வம், - அக்காலங்களில் பாடக்கூடிய பண்கள் - ஆகிய விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காலத்திற்கும் ஏழரை நாழிகை எனக்கொள்ளப் படும். ஒவ்வோர் நாழிகைக்கும் எட்டெட்டுப்பண்கள் பாடுதல் மரபு. இவ்வாறு 64 பண்கள் கூறப்பட்டுள்ளன. எட்டுக்காலங் களுக்குரிய அதி தெய்வங்கள் வருமாறு: பிரமன், திருமால் உருத்திரன், ஈசன், சதாசிவன், சூரியன், சந்திரன், இட்ட தேவதை (வானமன்).

குறிப்பிட்ட காலத்தில் அக்காலத்திற்குரிய பண்களைப் பாடினால், அந்தந்த காலத்திற்குரிய தெய்வங்களுக்குப் பிரியமாகும் என்பது இவ்வகைப் பாட்டின் நோக்கமாக இருக்கலாம்.

இது வடமொழி இசை இலக்கண நூல்களில், குறிப்பாக நாரதரின் [8]"சங்கீத மகரந்தத்தில் சூர்யாம்ச ராகம்,சந்திராம்ச

ராகம் என்று வகைப்படுத்தி இருப்பதுடன் ஒப்பிடும்படி உள்ளது.

[9]"சோமநாதரின் இராக விபோதம்" என்ற இசை நூலில் இராகங்களுக்குரிய அதி தெய்வங்களும், நிறங்களும் கூறப்பட்டுள்ளமை இதனோடு ஒப்பிடத்தகுந்தது.

ஊ) மங்கலப் பண்கள்:

பஞ்சமரபில் இவை முன்னெட்டு, பின்னெட்டு என்று இரண்டு வகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவை 16 பண்களாகும். இவ்வகைப்பாடு எதனடிப்படையில் உள்ளன என்பது ஆராயத் தகுந்தது. பண்களின் மங்கலத் தன்மை கருதி ஏற்பட்டிருக்கலாம். முன்னெட்டுப்பண்கள் அதிக மங்கலத் தன்மை கொண்டவை; பின்னெட்டுப்பண்கள் அதனில்குறைந்த மங்கலத்தன்மை கொண்டவை எனலாம். அல்லது, இசையரங்கின் (கச்சேரியின்) தொடக்கத்தில் பாடுவதற்கேற்ற மங்கலப் பண்கள் முன்னெட்டுப் பண்கள் என்றும் இசையரங்கின் இறுதியில் பாடுவதற்கேற்ற மங்கலப் பண்கள் பின்னெட்டு என்பதாகவும் இருக்கலாம். இப்பண்களைப் பிற்சேர்க்கையில் காணலாம்.

பண்கள் 103 என்று எப்போது ஏன் வரையறுக்கப்பட்டன என்பது ஆராயத் தகுந்தது,

சிலப்பதிகார [10]அரும்பதவுரையில், "இசையென்றது நரப்படைவால் உரைக்கப்பட்ட பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்றாகிய ஆதியிசைகளும் என்றவாறு." என்றுரைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து 11,991 ஆதியிசைகள் அரும்பதவுரையாசிரியர் காலத்திற்கு முன்னரே இருந்தன எனத் தெரிகிறது. பஞ்சமரபின் [11]நிறத்தமரபில் 'இசை' என்பதற்குப், பல இயற்பாக்களுடன் நிறத்தை இசைத்தலால் இசை என்ற பெயராயிற்று என்று பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஆதியிசை என்பது பண்ணுடன் கூடிய பாக்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். 11,991 இசைப் பாடல்கள் எனக் கொள்ளலாம். ஒரே பண்ணில் பல பாடல்

கள் இருந்திருக்கலாம். இப்பாடல்களின் இசை முறையினின்றும் எடுக்கப்பட்டவை 103 பண்கள் என்று கூறலாம்.

ஆதியிசை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பண்ணமைதி கொண்டது என்ற கருத்தும் உள்ளது.[12] ஆதியிசை என்பது ஓர் ஆரோசையும் அமரோசையும்கொண்டதாகும். இவை ஆயம் சதுரம், வட்டம், திரிகோணம் ஆகிய பாலை நிரல்கள், ஒன்றுடன் ஒன்று கலந்து ஆரோசை அமரோசை முறையில் உருவாகின்றன.

இந்நிரல்களானவை தமிழ்நாட்டுப் பண்ணிசைகளையும், வடநாட்டு இந்துஸ்தானிப்பண்ணிசைகளையும், அரபுநாட்டுப் பண்ணிசை களையும், மேல் நாட்டு ஆங்கில இசைவகைகளையும் அந்தந்த நாடுகளின் மரபுக்கேற்ப ஒருங்கே காட்டும் நுண்ணமைதியோடு கூடிய ஒரு நல்ல அமைப்பாகும். இவற்றுள் தமிழ் நாட்டு மக்களின் நடை, உடை, பேச்சு, செயல் எண்ணம், தொழில் முதலிய சிறப்பான மரபுக்கேற்ப, இலக்கண முறையோடு இந்த ஆதியிசைகளினின்று தேர்ந்தெடுக்கப் பெற்றவை 103 பண்களாகும் என்பது திரு. வி.எஸ் [13]கோமதி சங்கரையரின் கருத்து.

103 பண்கள் ஏற்பட்ட விதத்தைப் பற்றி வேறு விதமாகவும் சிந்திக்கலாம். 11,991 ஆதியிசைகளைத் (பண்களை) தொழிற் படுத்திப் பாடுவது நடைமுறையில் சாத்தியமாக இருக்காது. எனவே இவை நாளடைவில் 6000, 1000 என்று குறைக்கப்பட்டு, பின் கடைசியாகப் பாடுவதற்குரிய பண்கள் 103 என்றாகி இருக்கலாம். இவ்வாறு பண்கள் 103 என்று வசையறுக்கப்பட்ட காலம் [14] ஜயங்கொண்ட சோழன் காலம் என்று கூறப்படுகிறது.

“பண்களாவன பாலையாழ் முதலிய நூற்று மூன்று என்றார் திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர்”.[15] இதிலிருந்து 103 பண்கள் பரிமேலழகரின் காலத்தில் இருந்தன எனத் தெரிகிறது. இவற்றின் பெயர்கள் பிங்கல நிகண்டு போன்ற நிகண்டுகளில் காணப்படுவதால் 103 பண்களின்

பெயர் வரையறை செய்யப்பட்ட காலம் 10 - 11 ஆம் நூற்றாண்டுகள் எனத் தெளியலாம்.

தேவாரப் பண்கள்

தேவாரப் பாடல்கள் அனைத்தும் பண் சுமந்த இசைப் பாடல்கள். இலக்கியங்களுக்கே இலக்கணம் வரையறுக்கப்பட்டிருப்பதால் 103 பண்களிலும் தேவாரப் பாடல்கள் இருந்திருக்கும். இப்பண்கள் அனைத்தும் நமக்குக் கிடைத்துள்ளன என்று கூறுவதற்கில்லை. பல இடர்ப்பாடுகளுக்கும், முயற்சிகளுக்கும் இடையில் தற்போது நமக்குக் கிடைத்திருப்பவை 23 பண்களே. இவை, பாடும் காலங்களுக்கேற்பப் பகற்பண், இரவுப்பண் பொதுப்பண் என்று மூன்று வகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னைத் தமிழிசைச் சங்க ஆதரவில், பல ஓதுவார்களைக் கொண்டும், இயலிசை அறிஞர்களைக் கொண்டும் ஆண்டு தோறும் நடத்தப்பெறும் பண் ஆராய்ச்சியின் விளைவாக இப்பண்களின் உருவங்கள் தற்கால வழக்கிலுள்ள 23 இராகங்களோடு ஒப்பிட்டுக் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றைப் பிற்சேர்க்கையிற் காணலாம்.

தேவாரத்தில் இல்லாத சில பண்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும், திருவிசைப்பாவிலும் காணப்படுகின்றன.

இனி, பஞ்சமரபின் யாழ்மரபிலும், நிறத்த மரபிலும், வகை யொழிபு மரபிலும் அடங்கிய பண்களைப் பற்றிய செய்திகளாக இது வரை கூறியவற்றின் அடிப்படையில், 103 பண்களின் இலக்கணத்தைத் தனித்தனியாக ஆராயலாம்.

1) பாலைப் பெரும் பண்:

இது ஏழிசைகளைக் கொண்டது. செம்பாலையிற் பிறந்த பண்களுள் ஒன்று. பஞ்சமரபு-நூற்குறிப்பின்படி இதன் மற்றொரு பெயர் 'அரும் பாலை' இப்பண்ணின் அகம் பாலைப் பண்.

புறம் -- தேவதாளி அல்லது தேவாளி

அருகு - சீர்கோடிகம் அல்லது நிருபதுங்கராகம்.

பெருகு - கொடிநாகராகம்.

16சிலப்பதிகாரத்தின் அடியார்க்கு நல்லார் உரையிலுள்ள "பாலையாழில், குரல் குரலாயது செம்பாலை" என்னும் குறிப்பு, பாலையாழும் செம்பாலையும் ஒன்று என்பதைத் தெளிவு படுத்துகின்றது. இந்தச் செம்பாலை தற்போதைய அரிகாம்போதிக்கு நேரானது. இது வன்மைக்குரிய பண்ணாகவும், நாலாம் சாமத்திற்குரிய பண்ணாகவும், மங்கலப் பண்களுள் ஒன்றாகவும் பஞ்ச மரபில் கூறப்பட்டுள்ளது. இதற்குத் தெய்வம் ஈசன்.

2) தேவதாளி

தேவதாளி ஏழிசைகளைக் கொண்டது. மேற் செம்பாலையிற் பிறந்தது. பாலையாழின் புறம். இதன் மற்ற பெயர்கள் தேசாழி, தேவாழி, தேவாளி, தேவதாளி, தேசி என்பவையாகும்.

இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், வன்மைக்குரிய பண்ணாகவும், சீகாமரத்தை ஒத்திருப்பதாகவும்' மூன்றாம் சாமத்தில் பாடுவதற்கேற்ற பண்ணாகவும், பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது. இதற்குத் தெய்வம் உருத்திரன்.

3) சீர்கோடிகம்

ஏழிசைகளைக் கொண்ட பண். செம்பாலையிற் பிறந்தது. பாலையாழின் அருகு. இதன் மற்றப் பெயர்கள் நிருபதுங்கராகம், திருபதுங்க ராகம், கோடிகம், தோடி, கோடி, விளரிப்பாலை ஆகியவை. சிலப்பதிகார உரையாசிரியாரன அடியார்க்கு நல்லார், தோடி என்ற பெயரில் செம்பாலையுட் பிறக்கும் பண்களுள் ஒன்றாகக் குறிப்பிடுவது இப்பண்ணே எனலாம். திவாகர நிகண்டில் இது நிருபதுங்கராகம் என்ற பெயரில் காணப்படுகிறது.

தோடி என்ற இராகம், பார்ச்வ தேவரின் சங்கீத சமய சாரம், சாரங்க தேவரின் சங்கீதரத்னாகரம், லோசனகவியின் ராக தரங்கிணி, சோம நாதரின் ராக விபோதம் ஆகிய வட மொழி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்சமரபில் தோடி அல்லது கோடிகம், ஆரியப்பெயர் நெறிக்குரியது என்றும், தோடி என்பது ‘நிருபதுங்கராகம்’ என்றும் கூறப்பட்டுள்ளது. இது இரண்டாம் சாமத்துப் பண்களுள் ஒன்று. இதற்குரிய தெய்வம் திருமால்.

4. **நாகராகம்**

ஏழிசைகளைக் கொண்டது. செம்பாலையில் பிறந்தது. பாலை யாழின் பெருகு. இதன் மற்றப் பெயர்கள் கொடி, கொடி நாகராகம். ‘நாகர்கள்’ என்னும் வகுப்பினர் பாடும் வழக்கில், இப்பண் இருந்திருக்கலாம்.

பாலைப் பண்ணின் திறங்கள் ஐந்து. அவையாவன: அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான்.

சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் இதற்குரிய நூற்பாவையும் தருகிறார்.

“தக்கராக நேர்திறம் காந்தார பஞ்சமமே
துக்கம் கழி சோம ராகமே – மிக்க திறன்
காந்தாரம் என்றைந்தும் பாலைத் திறமென்றார்
பூந்தார் அகத்தியனார் போந்து.”

இது பண்டை அகத்தியனாரின் நூலிலிருந்து தரப்படும் குறிப்பாக உள்ளது.

5) பாலைப் பெரும் பண்ணின் ‘அராகம்’ என்னும் திறத்தின் அக நிலையாய் இருப்பது **தக்கராகம்**. அராகம் என்ற திறத்திற்கு அமைந்த மற்றொரு பெயர் தக்கராகமாகும். இது பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. ஆறிசைகளைக் கொண்டுள்ளது.

ஆவணக்காப்பக

[17]திரு எஸ்.ஆர். குப்புசாமி, தக்கராகம், தக்க சீலத்துத் தக்கர்களின் பண்களில் ஒன்றாகும் என்றும், இது பரதர்காலத் திலேயே பேர்பெற்றிருந்திருக்கிறது என்றும் கூறுகிறார். சாரங்கதேவரின் சங்கீத ரத்னாகரம் என்னும் வடமொழி நூலில், 'டக்க' என்னும் பெயருடன் ஓர் இராகம் காணப்படு கிறது. "டக்க என்னும் இராகமானது சட்ச, மத்யமா, தைவதீ என்னும் ஜாதி ராகங்களிலே தோன்றி, அல்ப பஞ்சம முடையதாய், சட்ச சுரத்தை முதல் முடிவு கிழமையாகப் பெற்று, காகலீ அந்தரங்களோடு கூடிவருவது. ஆத்ய மூர்ச் சனையினைக் கொண்டது. உருத்திரருக்கு உவந்தது; கார் காலத்திற்கு உரியது. பெருமிதம், மருட்கை, வெகுளி என்னும் சுவைகளையுடையது. போர் வீரனோடு தொடர்புடையது என்றும், டக்க ராகத்தின் விபாஷையாகிய தேவார வர்த்தநீ பஞ்சம அம்சம், பஞ்சமக் கிரகம், சட்ஜநியாசம் உடையது சம்பூர்ண மானது" என்றும் சாரங்கதேவர் இலக்கணம் கூறு வர். இப்பண்ணின் உருவத்தைக் கிமிபநி-நிதிபமிகிரி என்ற ஔடவ-சம்பூர்ணமாகக் கொள்ளலாம் என்பது [18]யாழ் நூலா சிரியர் கருத்து.

இது முதல் திருமுறையில் 23 முதல் 46 வரையுள்ள பதிகங் களிலும் ஏழாந் திருமுறையில் 13 முதல் 16 வரையுள்ள பதி கங்களிலும் அமைந்துள்ளது. இப் பதிகங்களைப் பிற்கால வழக் கில் கன்னடகாம்போதியிலும், காம்போதியிலும் பாடுவர்.

பஞ்சமரபு வெண்பாவிலும் உரையிலும் இப்பண் வெளிப் படும் பண்களில் ஒன்றாகவும், அதாவது எப்போதும் வழக்கில் இருப்பது என்றும், வன்மைக்குரியதாகவும் சிறப்பாகப் பெரிய இசைகளுடன் அமைந்ததாகவும் தமிழ்ப் பெயர் நெறிக்குரிய தாகவும் மங்கலப் பண்களுள் ஒன்றாகவும் இருப்பது என்றும் கூறப்பட்டுள்ளது. மூன்றாம் சாமத்தில் பாடுவதற்குரியது. இதன் அதி தேவதை உருத்திரன்.

6) அராகத்தின் புறம் **அந்தாளிபாடை** அல்லது அந்தாழி பாடை. இது ஆறிசைகளைக் கொண்ட பண்ணியற்றிறமாகும். சங்கீத ரத்னாகரத்தில் "அந்தாளிபாஷா" என்ற பெயரில் இருப்

பது இப்பண்ணே எனக் கருதலாம். பஞ்சமரபில் இப்பண், வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், எட்டாஞ்சாமத்துக் குரியதாகவும், இதன் தெய்வம் **வானமன்** என்றும் கூறப்பட் டுள்ளது.

7) அராகத்தின் அருகு **அந்தி அல்லது ஆந்தி.** மேற் செம் பாலையிற் பிறந்த இப்பண் பண்ணியற்றிறவகையைச் சேர்ந் தது. இது வெளிப்படாத பண்களுள் ஒன்றாகவும், ஆறாம் சாமத்தில் பாடுவதற்குரியது என்றும், இதன் தெய்வம் சூரியன் என்றும் பஞ்ச மரபில் கூறப்பட்டுள்ளது.

8) அராகத்தின் பெருகு **மன்றல் அல்லது மன்றில்.** அரும் பாலையில் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந் தது. இது வெளிப்படாத பண்களுள் ஒன்றாகும்.

9) பாலைப் பெரும் பண்ணின் திறங்களுள் ஒன்று **நேர்திறம்.** இது செவ்வழிப் பாலையில் தோன்றிய ஐந்திசையைக் கொண்ட திறப்பண்ணாகும். இது புறநீர்மை என்ற மற்றொரு பெயரையும் கொண்டுள்ளது. இப்பண் மூன்றாந்திருமுறையில் 118 முதல் 123 வரையுள்ள பதிகங்களிலும், ஏழாந் திருமுறை யில் 83 முதல் 85 வரையுள்ள பதிகங்களிலும் காணப்படுகின் றது. இது தற்போது 'பூபாளம்' என்ற இராகத்திற்கு ஒத்தமை கிறது. புறநீர்மைப் பதிகங்களைப் பூபாளத்திலன்றி,'ஸ்ரீ கண்டி' என்ற இராகத்திலும் பாடும் வழக்கம் பிற்காலத்தில் இருந்த தென்பது [19]திருவாவடுதுறை ஆதீன ஏட்டுச் சுவடியிற் கண்ட குறிப்பினாற் புலனாகும்.

இது மென்மைக்குரிய பண்களுள் ஒன்றாகவும், தமிழ்ப் பெயர் நெறிக்கு உரியதாகவும் பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது. முதற் சாமத்தில் பாடுவதற் கேற்றது. இதற்குரிய தெய்வம் பிரமன். மங்கலப் பண்களுள் முதலெட்டு வகையைச் சேர்ந் தது.

10) நேர் திறத்தின் புறம் **வராடி.** பஞ்சமரபு உரையில் தமிழ் வராடி என்றுள்ளது. விளரிப் பாலையிற் பிறந்த இப் பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது பார்ச்வ

தேவரின் சங்கீத சமயசாரத்தில் காணப்படுகிறது. பஞ்சமரபில் இது ஆரியப் பெயர் நெறிக்குரியதாகவும், 'வராடி யொப்பது வசந்தன் கொல்லி' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதற் சாமத்துப் பண்களுள் ஒன்று. இதற்குரிய தெய்வம் பிரமன்.

11) நேர்திறத்தின் அருகு **பெரிய வராடி.** இது விளரிப் பாலையிற் பிறந்த பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது ஏழாம் சாமத்தில் பாடுதற்குரியது. இதற்குரிய தெய்வம் சந்திரன்.

12) நேர்திறத்தின் பெருகு **சாயரி** என்பதாகும். இது விளரிப் பாலையிற் பிறந்த பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இப்பண் 'சானாகி' என்ற பெயரிலும் வழங்கப் படுகின்றது. இது வெளிப்படாத பண்களுள் ஒன்று.

13) பாலைப் பெரும் பண்ணின் திறங்களுள் ஒன்று **உறுப்பு.** இதன் அகநிலை காந்தார பஞ்சமம் ஆகும். இதன் மற்றப் பெயர்கள் உறுப்பு, உறழ்ப்பு, உறுப்புப் பஞ்சமம், உறழ்ப்புக் காந்தார பஞ்சமம், பஞ்சமம் ஆகும். அரும் பாலையிற் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

உறுப்பின் அகநிலையாகப் 'பஞ்சமம்' என்ற பண் பிங்கல நிகண்டிலும் யாழ் நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. காந்தார பஞ்சமம், பஞ்சமம் என்ற இவ்விரு பண்களும் தேவாரப் பதிகங்களில் காணப்படுகின்றன. தற்போது இவை முறையே கேதார கௌளஎ, ஆஹிரி என்ற இராகங்களில் பாடப்பெறு கின்றன.

காந்தார பஞ்சமம், ஆரியப் பெயர், தமிழ்ப் பெயர் ஆகிய இரு நெறிக்குமுரியது. ஏழாம் சாமத்தில் பாடுவதற்கேற்றது. இதன் தெய்வம் சந்திரன்.

14) உறுப்பின் புறம் **அத்தராட்டம்** என்பதாகும். இது பிங்கல நிகண்டில் திராடம் என்ற பெயரில் காணப்படுகிறது. இப் பண் அரும்பாலையில் தோன்றியது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. பஞ்சமரபில் இது வெளிப்படாத பண்களுள் ஒன்

றாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

15) உறுப்பின் அருகு **அழுங்கு** என்பதாகும். இது மேற் செம்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது வெளிப்படாத பண்களுள் ஒன்று.

16) உறுப்பின் பெருகு **தனாசி**. இது கோடிப் பாலையிற் பிறந்தது. ஐந்திசையைக் கொண்டது. 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பார்ச்வ தேவரால் இயற்றப்பட்ட சங்கீத சமய சாரத்தில் இப்பண் ராகாங்க ஷாடவ வகையைச் சேர்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாரதரின் சங்கீத மகரந்தத்தில் இது சூர்யாம்சராக வகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பண் மேலும் சங்கீத ரத்னாகரம், வித்யாரண்யரின் சங்கீத சாரம், சோமநாதரின் ராக விபோதத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் இயற்றிய பூத வேதாள வகுப்பில் தனாசி என்ற பண் குறிப்பிடப்பட்டுள்ளது.

17) பாலைப் பெரும் பண்ணின் திறங்களுள் ஒன்று **குறுங்கலி** என்பதாகும். இதன் அகநிலை சோமராகம். இது அரும் பாலையில் பிறந்தது. திறத்திற (நான்கிசை)வகையைச் சேர்ந்தது.

18) குறுங்கலியின் புறம் **மேகராகம்.** அரும் பாலையிற் பிறந்தது. திறத்திற வகையைச் சேர்ந்தது. இது மென்மைக் குரியது. ஆரியப் பெயர், தமிழ்ப் பெயர் இவ்விரண்டிற்கும் உரியது. ஐந்தாம் சாமத்துப் பண்களுள் ஒன்று. இதற்குரிய தெய்வம் சதாசிவன். மங்கலப் பண்களுள் பின்னெட்டு வகையைச் சேர்ந்தது.

19) குறுங்கலியின் அருகு **துக்கராகம்.** அரும்பாலையிற் பிறந்தது. திறத்திற வகையைச் சேர்ந்தது. இது வட்டி என்ற பெயரையும் கொண்டது. பஞ்சமரபில் இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும் நான்காம் சாமத்துக் குரிய பண்ணாகவும், இதற்குரிய தெய்வம் ஈசனாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

20) குறுங்கலியின் பெருகு [20]**கொல்லி வாரடி** இது அரும் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இப்பண் கொல்லிக் குறிஞ்சி என்ற பெயரிலும் வழங்கப்படு கிறது.

இப்பண் மூன்றாம் திருமுறையில் 24 முதல் 41 வரையுள்ள பதிகங்களிலும், நான்காம் திருமுறையில் முதற் பதிகத்திலும் ஏழாம் திருமுறையில் 31 முதல் 37 வரையுள்ள பதிகங்களிலும் காணப்படுகிறது. திருநாவுக்கரசர் அருளிய திருநேரிசை, திரு விருத்தம் என்ற பதிகங்களையும் கொல்லிப் பண்ணுக்கு உரியன வாக இடைக்காலத்தார் கொண்டனர். கொல்லியின் பழைய இசையுருவம் இதுவெனத் திட்டமாகக் கூறுதற்கியலவில்லை. இப்பண்ணுக்குரிய பதிகங்களைத் தற்போது 'நவரோஜ்' என் னும் இராகத்திற் பாடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

பஞ்சமரபில் கொல்லிப்பண் ஆரியப் பெயர், தமிழ்ப் பெயர் இவ்விருபாற்குமுரியதாகவும், மூன்றாம் சாமத்துப் பண்களுள் ஒன்றாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குரிய தெய்வம் உருத்திரன்.

21) பாலைப் பெரும் பண்ணின் திறங்களுள் ஒன்று ஆசான் இதன் அகம் [21]**காந்தாரம்** ஆகும். இப்பண்ணை தாரப்பண் திறம், தாரம், தாரப்பண், ஆசான் திறம் என்ற பெயர்களால் பஞ்ச மரபு குறிப்பிடுகிறது.

செம்பாலையில் பிறந்தது. திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. இப்பண் சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையிலும் அடியார்க்கு நல்லாருரையிலும் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாந் திருமுறையில் 54 முதல் 82 வரையுள்ள பதி கங்களிலும், நான்காம் திருமுறையில் 2 முதல் 7 வரையிலுள்ள பதிகங்களிலும், ஏழாந் திருமுறையில் 71 முதல் 75 வரையிலு முள்ள பதிகங்களிலும் அமைந்து நிற்கிறது.

---

[20]மருதப் பெரும் பண்ணின் 'நவிர்' என்னும் திறத்தின் புற நிலை யாழ்நூல். [21]இது குறிஞ்சியின் திறங்களுள் ஒன்று.

தற்போதைய நிலையில் இப்பண்ணைக் குறித்து இருவித கருத்துக்கள் உள்ளன. அவை, இது தோடி என்ற இராகத்தினை ஒத்தது என்பதும், மோகன இராகத்திற்கு ஒப்பானது என்பதும் ஆகும்.

இப்பண் வடமொழி நூல்களான, மதங்கரின் பிருகத்தேசியிலும் சாரங்கதேவரின் சங்கீத ரத்னாகரத்திலும் 'காந்தாரி' என்ற பெயரிலும், நாரதரின் சங்கீத மகரந்தத்தில் 'காந்தார' என்ற பெயரிலும் குறிப்பிடப் பட்டிருக்கும் இராகம், பெயரளவில் இப்பண்ணோடு ஒத்திருக்கின்றன.

இப்பண் 'காந்தாரம்' என்ற நாட்டிலுள்ள மக்களால் பாடப் பெற்றதால் காந்தாரம் என்ற பெயர் அமைந்திருக்கலாம். கந்தர்வர்களால் பாடப்பெற்ற மிகவும் பழமையானது என்பதைக் கூறுவதற்காகக் காந்தாரம் என்னும் பெயரமைந்திருக்கலாம்.

பஞ்சமரபில், இது ஆரியம், தமிழ் ஆகிய இருபாற்குமுரியது என்றும் நாலாம் சாமத்திற்குரியது என்றும் குறிப்பிடப் படுகிறது. இதற்குரிய தெய்வம் ஈசன். முன்னெட்டு மங்கலப் பண்களுள் ஒன்று.

22) ஆசான் திறத்தின் புறம் **சிகண்டி**. இது செவ்வழிப்பாலையிற் தோன்றியது. பண்ணியற்திற வகையைச் சேர்ந்தது. இப்பண் 'நனிடை' என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது. பஞ்சமரபில் இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும். வன்மைக்குரியதாகவும், மூன்றாம் சாமத்தில் பாடுவதற்கேற்றதாகவும், கூறப்படுகிறது. இதற்குரிய தெய்வம் உருத்திரன். முன்னெட்டு மங்கலப் பண்களுள் ஒன்று.

23) ஆசான் திறத்தின் அருகு **தசாக்கிரி**. இது தேசாக்கிரி, தேசக்கிரி, சாரங்க நாட்டை, சாழங்க நாட்டை என்னும் பெயர்களைக் கொண்டிருப்பதாகப் பஞ்சமரபின் குறிப்புரையிலிருந்துஅறிகிறோம். இது அரும்பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இப்பெயர் வடமொழியிலமைந்த

இசை நூல்களிற் குறிப்பிடப்பட்டுள்ள, சாலங்க நாட்டை, சாரங்க நாட்டை ஆகிய இராகப் பெயர்களுடன் ஒத்திருக்கிறது.

24) ஆசான்திறத்தின் பெருகு **சுத்தகாந்தாரமாகும்.** இது சுருதி காந்தாரம் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. அரும் பாலையிற் பிறந்தது, பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. ஆரியப் பெயர் நெறிக்கு உரியது. முதற் சாமத்துப்பண். இதற்குரிய தெய்வம் பிரமன். முதலெட்டு மங்கலப் பண்களுள் ஒன்று.

25) **குறிஞ்சிப் பெரும் பண்:** இது ஏழிசைகளைக் கொண்டது. பஞ்சமரபு உரையின்படி இது அரும்பாலையிற் பிறந்தது, இதன் மற்றப் பெயர்கள் யாழ்க் குறிஞ்சி, யாமயாழ். இதன் அகம் குறிஞ்சி ஆகும்.

புறம் – செந்து

அருகு – மண்டலம்

பெருகு – மவுரி.

இவை பிங்கல நிகண்டில் மாறுபட்டுள்ளன.

குறிஞ்சியின் திறங்கள் எட்டு. அவற்றின் பெயர்கள் வருமாறு: நைவளம், காந்தாரம், படுமலைக்கவ்வாணம், மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், அரற்று, செந்திறம். பஞ்சமரபில் இப்பண், வலிமைப் பண்களுள் ஒன்றாகவும், இரண்டாம் சாமத்தில் பாடுதற்கேற்றதாகவும், கூறப்பட்டுள்ளது. இதற்குரிய தெய்வம் – திருமால்.

26) **செந்து:** குறிஞ்சியாழின் புறம். இது ஏழிசைகளைக் கொண்டது. படுமலைப் பாலையிற் பிறந்தது. இதன் மற்றப் பெயர்கள் பெருந்தொகை, பெருந்தகை. இது ஆறாம் சாமத்தில் பாடுதற்குரியது. இதற்குரிய அதி தெய்வம் சூரியன்.

27) **மண்டலம்:** குறிஞ்சியாழின் அருகு. ஏழிசைகளைக்கொண்டது. இது விளரிப் பாலையிற் பிறந்தது. இதன் மற்றப் பெயர்கள் இனா நிறம், மண்டலியாழ், மண்டலி, மண்டல யாழ்.

28) மவுரி: குறிஞ்சியாழின் பெருகு. ஏழிசைகளைக்கொண்டது. மேற் செம் பாலையிற் பிறந்தது. இதன் மற்றப் பெயர்கள் பவுரி, அரி, அரியநாட்டம், யாழரி, மாங்கள்ளி. இது வெளிப் படாத பண்களில் ஒன்று. ஏழாம் சாமத்திற் பாடுதற்குரியது. இதற்குரிய அதி தெய்வம் சந்திரன்.

29) நைவளம்: அரும்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

இப்பண்ணின் அகம்: நட்டபாடை

புறம் – அந்தாழி

அருகு – மலகரி

பெருகு – விபஞ்சி

இது பஞ்சமரபில் வெளிப்படும் பண்களில் ஒன்றாகவும், வன்மைக்குரிய பண்களில் ஒன்றாகவும், ஐந்தாம் சாமத்தில் பாடுதற்குரியதாகவும், சதாசிவனுக்கு உகந்ததாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

பழந்தமிழ் நூல்களாகிய பத்துப் பாட்டிலும், பரிபாடலி லும் நைவளம் என்னும் பெயர் பயின்று வருதல் காணலாம்.

“நைவளம் பழுநிய நயந் தெரிபாலை” –சிறுபாண்.

“நைவளம் பழுநிய பாலை வல்லோன்” –குறிஞ்சிப்பாட்டு அடி.146.

“நைவளம் பூத்த நரம்பியை சீர்ப் பொய்வளம்
பூத்தன பாணா நின் பாட்டு” –பரிபாடல்.

சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரத்தில், ‘நாட்யபாஷா’ என் னும் ராகம் குறிப்பிடப்பட்டுள்ளது. பழந்தமிழ் நூல்களில் ‘நைவளம்’ என வழங்கப் பெற்ற பண்ணின் பெயரே வட மொழியில் ‘நாட்ய பாஷா’ என்றாகி மீண்டும் தமிழில் நட்ட பாடை யெனத் திரிந்து வழங்குகிறது என்பது பெரும்பாலோ ரின் கருத்து. சங்கீத ரத்னாகரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘நாட்யபாஷா’ என்னும் இராகத்தின் உருவம் தற்போதைய

நாட்டக் குறிஞ்சி என்னும் இராகத்திற்குப் பொருத்தமானது என்பது சுவாமி விபுலானந்தரின் கருத்து.

நைவளம் அல்லது நட்டபாடை என்ற பண் முதல் திருமுறையில் 1 முதல் 21 வரையுள்ள பதிகங்களிலும், ஏழாந்திருமுறையில் 78 முதல் 82 வரையுள்ள பதிகங்களிலும், 11ஆம் திருமுறையில் காரைக்காலம்மையார் அருளிய "கொங்கை திரங்கி" எனத் தொடங்கும் மூத்த திருப்பதிகத்திலும் அமைந்துள்ளது. தற்போது நட்டபாடையிலமைந்த பதிகங்களை நாட்டை ராகத்தில் பாடும் வழக்கு உள்ளது.

30) அந்தாழி: நைவளத்தின் புறம். அரும்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற்றப் பெயர்கள்: அந்தாளிக் குறிஞ்சி, அந்தாளிர். இப்பண் வெளிப்படும் பண்கள், வன்மைக்குரிய பண்கள், தமிழ்ப் பெயர் நெறிக்குரிய பண்கள் ஆகியவற்றில் ஒன்றாகவும், நாலாம் சாமத்தில் பாடுதற்குரியதாகவும், இதன் தெய்வம் ஈசனாகவும் பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தாளிக் குறிஞ்சி என்ற பண், மூன்றாந் திருமுறையில் 124,125 ஆம் பதிகங்களில் அமைந்துள்ளது. இப்பண் அமைந்த பதிகங்கள் தற்போது சைலதேசாட்சி என்ற இராகத்திலும், சாமா இராகத்திலும் பாடப்படுகின்றன.

31) மலகரி: நைவளத்தின் அருகு. இது அரும்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது மல்லகரி என்ற பெயருடனும் விளங்குகிறது.

இது நாரதரின் சங்கீத மகரந்தத்திலும், வித்யாரண்யரின் சங்கீத சாரத்திலும், ராமாமாத்யரின் சுரமேள கலாநிதியிலும், அருணகிரிநாதரின் பூத வேதாள வகுப்பிலும் 'மலகரி' என்ற பெயரில் காணப்படுகின்றது. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கன்னட தேசத்து இயலிசைப் புலவரான புரந்தரதாசர் மலகரி இராகத்தில் கீதங்கள் இயற்றியுள்ளார். தற்போது இவையே கருநாடக இசையில் ஆரம்பத்தில் கற்றுக் கொடுக்கப்படும் யிற்சிப் பாடங்களாக அமைந்துள்ளன.

32) **விபஞ்சி:** நைவளத்தின் பெருகு. செவ்வழிப்பாலையில் தோன்றியது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. அருணகிரி நாதரின் பூத வேதாள வகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

33) **காந்தாரம்:** குறிஞ்சிப் பெரும் பண்ணின் திறங்களுள் ஒன்று. இதன் அகநிலை விபஞ்சி காந்தாரமாகும்.

34) காந்தாரத்தின் புறம் - **செருந்தி.** இதுமேற்செம்பாலை யிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற்றப் பெயர்கள் செருத்தி, செந்தி.

35) காந்தாரத்தின் அருகு - **கௌடி.** இது செம்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற் றப் பெயர்கள் கவுடி, கவுரி, தேசிகம்.

இது ஆரியப் பெயர் நெறிக்குரியதாகவும், 'தேசிகம் என்பது கவுடி' என்பதாகவும், ஏழாம் சாமத்துப் பண்களுள் ஒன்று என் பதாகவும் பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது. இதன் தெய்வம் சந்திரன். பின்னெட்டு மங்கலப் பண்களுள் ஒன்று.

இது நாரதரின் சங்கித மகரந்தத்திலும், சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரத்திலும் காணப்படுகிறது.

36) காந்தாரத்தின் பெருகு - **உதயகிரி.** செம்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

37) குறிஞ்சியின் திறவகைகளுள் ஒன்று **பஞ்சுரம்.** அரும் பாலையிற் பிறந்த இப்பண் பண்ணியற்றிற வகையைச்சேர்ந் தது.

38) **பழம் பஞ்சுரம்** என்பதுபஞ்சுரத்தின் புறம். பண்ணியற் றிற வகையைச் சேர்ந்தது. அரும்பாலையிற் பிறந்தது. பஞ்ச மரபில் பஞ்சுரம் (பழம் பஞ்சுரம்) என்னும் பண் ஒலிக்குரிய தாகவும், வன்மைக் குரியதாகவும், இரண்டாம் சாமத்திற் பாடுவதற் கேற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குரிய தெய்வம் திருமால்.

இப்பண் நான்காந்திருமுறையில் 14,15ஆம் பதிகங்களிலும் ஏழாந் திருமுறையில் 47 முதல் 53 வரையுள்ள பதிகங்களிலும் அமைந்துள்ளது. தற்கால வழக்கில் இப்பதிகங்கள் பெரும் பாலும் சங்கராபரண ராகத்தில் பாடப்பட்டு வருகின்றன.

39) பஞ்சுரத்தின் அருகு **மேகராகக் குறிஞ்சியாகும்.** இப்பண் அரும் பாலையிற் பிறந்த பண்ணியற்றிற வகையைச் சேர்ந் தது. பஞ்சமரபில் இது வலிமைப் பண்களுள்ஒன்றாகவும், ஆரி யப் பெயர், தமிழ்ப் பெயர் நெறிக் குரியதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. நாலாம் சாமத்தில்பாடுவதற்கேற்றது. இதற்குரிய தெய்வம் ஈசன். இப்பண் முதலாந்திருமுறையில்129 முதல் 135 வரையுள்ள பதிகங்களில் அமைந்துள்ளது.இப்பண்ணமைந்த பதி கங்களை நீலாம்பரி ராகத்தில் பாடுதல் தற்போதைய வழக் காகும்.

40) பஞ்சுரத்தின் பெருகு **கேதாளிக் குறிஞ்சியாகும்.** அரும் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் பரியாயப் பெயர்கள் கேதாளி, கூதாளி, கூதளி, ஆகி யவை. பஞ்சமரபில் இது வெளிப்படாத பண்களுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளது.

41) குறிஞ்சிப் பெரும் பண்ணின் திறங்களுள் ஒன்று **படு மலைக் கவ்வாணம்.** படுமலைப்பாலையிற் பிறந்த இப்பண், திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. பஞ்சமரபில் கவ்வாணம் (படுமலைக் கவ்வாணம்) என்னும் பண் ஒலிக்குரியதாகவும், வன்மைக் குரியதாகவும், ஆறாம் சாமத்திற் பாடுதற்கேற்ற தாகவும் கூறப்பட்டுள்ளது.

42) படுமலையின் புறம் **பாடை** என்பது. இது மேற்செம் பாலையில் பிறந்தது. திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரத்தில் 'பாஷா' என்னும் பெயரில் இருப்பது இப் பண்ணே எனக் கருதலாம்.

43) படுமலையின் அருகு **சூர்துங்கராகம்.** இது மேற்செம் பாலையிற் பிறந்த திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது.

44) படுமலையின் பெருகு **நாகம்**. இது மேற்செம்பாலையிற் பிறந்த திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. இப்பண்ணுக்கு நாகயாந்தி என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

45) குறிஞ்சிப் பெரும் பண்ணின் மற்றொரு திறம் **மருள்** எனப்படும். இது அரும்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது ஆறாம் சாமத்தில் பாடுதற்குரியது. இதற்குரிய தெய்வம் சூரியன்.

46) மருளின் புறம் **பழந்தக்கராகம்** என்பது. அரும்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், தமிழ்ப் பெயர் நெறிக்குரியதாகவும் பஞ்சமரபில் குறிபிப்டபப்ட்டுள்ளது. இரண்டாம் சாமத்திற்குரிய இப்பண்ணின் அதி தெய்வம் திருமால்.

இப்பண் முதல் திருமுறையில் 47 முதல் 62 வரையுள்ள பதிகங்களிலும் நான்காம் திருமுறையில் 12,13 ஆம் பதிகங்களிலும் அமைந்துள்ளது. இதன் பழைய உருவம் இதுவெனத்திட்டமாகத் தெரியவில்லை. தற்போது இப்பண்ணில் அமைந்துள்ள பதிகங்கள் 'சுத்த சாவேரி' என்னும் இராகத்தில் பாடப்பட் வருகின்றன.

47) மருளுக்கு அருகு **தீபவராடி** என்பது. இது மேற்செம்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற்றொரு பெயர் திவ்வியவராடி, இப்பண் ஏழாம் சாமத்தில் பாடுவதற்கேற்றது. இதற்கு உரிய தெய்வம் சந்திரன்.

48) மருளின் பெருகு **முதிர்ந்துவிந்தளம்**. அரும்பாலையிற் யிறந்த இப் பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. ஆறாம் சாமத்தில் பாடுதற் கேற்றது. இதற்குரிய தெய்வம் சூரியன்.

49) குறிஞ்சிப் பெரும் பண்ணின் மற்றொரு திறம் **அயிர்ப்பு**, கோடிப் பாலையிற் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற்றொரு பெயர் அநுத்திர பஞ்சமம் அல்லது உருத்திரபஞ்சமம் ஆகும். இது வலிமைப்பண்களுள் ஒன்

றாகவும், எட்டாம் சாமத்திற்குரியதாகவும், பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது. இதற்குரிய தெய்வம் வானமன்.

50) அயிர்ப்பின் புறம் **குச்சரி** என்பதாகும். இது கோடிப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது இது தமிழ்க்குச்சரி என்றும் வழங்கப்படும். பஞ்சமரபில் குறிப் பிடப்பட்டுள்ள ஆரியம், தமிழ்ப் பெயர் நெறிகளுக்குரிய பண்களுள் ஒன்று. ஐந்தாம் சாமத்திற்கேற்றது. இதற்குரியதெய் வம் சதாசிவன்.

வடமொழியிலமைந்த இசைநூல்களில் சௌராஷ்ட்ரகுர்ஜரி தக்ஷிண குர்ஜரி, திராவிட குர்ஜரி என்ற இராகங்கள் குறிப் பிடப்பட்டுள்ளன. இவற்றுள் திராவிட குர்ஜரி என்ற இராகம் தமிழ்க் குச்சரியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

51) அயிர்ப்பின் அருகு **மாளுவகிரி** ஆகும், படுமலைப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. பஞ்சமரபில்'மாளுவகிரி' என்பது 'அருட்புரி' என்றும், 'ஒப்பது கவுசிகம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாம் சாமத்திற் குரியது. இதற்குரிய தெய்வம் சதாசிவன்.

52) அயிர்ப்பின் பெருகு **காரவணி** என்பதாகும். படுமலைப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் பிற பெயர்கள் தராவணி, நாராயணி, தாராவணி. இது வடமொழியிலமைந்த இசைநூல்களில் காணப்படும் த்ராவணி, நாராயணி என்னும் இராகப்பெயர்களோடு ஒப்புநோக்கற்குரி யது.

53) **அரற்று** என்னும் பண் குறிஞ்சியாழ்த் திறங்களுள் ஒன்று. மேற் செம்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகை யைச் சேர்ந்தது. இதன் மற்றொரு பெயர் முதிர்ந்த குறிஞ்சி இப்பெயரில் இது திவ்வியப் பிரபந்த இசையில் கையாளப்பட்டி ருக்கிறது. இது ஐந்தாம் சாமத்தில் பாடுவதற்கேற்றது. இதன் தெய்வம் சதாசிவன்.

54) அரற்றுப் பண்ணின் புறம் **நட்டராகம்,** செவ்வழிப் பாலையில் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், தமிழ்ப் பெயர் நெறிக்குரியதாகவும், இரண்டாம் சாமத்திற் பாடுதற்கேற்றதாகவும் பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குரிய தெய்வம் திருமால்.

இப்பண் இரண்டாம் திருமுறையில் 97 முதல் 112 வரையுள்ள பதிகங்களிலும், ஏழாம் திருமுறையில் 17 முதல் 30வரையுள்ள பதிகங்களிலும் அமைந்துள்ளது. இப்பண், தற்போதைய பந்துவராளி இராகத்திற்கு ஒத்ததாகத் தோன்றுகிறது. நட்டராகம்நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும், திருவிசைப்பாவிலும் இடம்பெற்றுள்ளது.

55) அரற்றுப் பண்ணின் அருகு **இராமக்கிரி.** செவ்வழிப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது, இதன் மற்றொரு பெயர்வேட ராமக்கிரி. இது ஆரியப் பெயர் தமிழ்ப் பெயர் ஆகிய இரு பாற்குமுரியது. ஐந்தாம் சாமத்தில் பாடுவதற்கேற்றது. இதற்குரிய தெய்வம் சதாசிவன்.

56) **வியாழக் குறிஞ்சி:** அரற்றுப் பண்ணின் பெருகு. அரும் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. பஞ்சமரபில் இப்பண் ஒலிக்குரியதாகவும் ஆறாம் சாமத்தில் பாடப்படுவதாகவும், இதற்குரிய தெய்வம் சூரியன் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்பண் முதல் திருமுறையில் 104 முதல் 128 வரையுள்ள பதிகங்களிற் பொருந்தியுள்ளது. இதன் பழைய இசையுருவம் சரிவரப்புலப்படவில்லை. தற்போது இப்பண்ணில் அமைந்த பதிகங்களைச் சௌராஷ்டிரம் என்ற இராகத்திற் பாடிவருகின்றனர்.

57) குறிஞ்சிப் பண்ணின் திறங்களுள் ஒன்று **செந்திறம்** என்பது.செம்பாலையிற் பிறந்த இப்பண் திற(ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. இது ஒலிப்பஞ்சமம், செந்துருத்தி, மத்தியமாரி என்னும் பரியாயப் பெயர்களைக் கொண்டது. செந்துருத்தி (செந்நிறம்)என்னும் பண் வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும்,ஒலிக்

குரியதாகவும், வன்மைக்குரியதாகவும், ஆரியப் பெயர் நெறிக் குரியதாகவும், 'செந்துருத்தி என்பது செந்திறம்' என்றும் பஞ்ச மரபில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முதற்சாமத்துப் பண்களுள் ஒன்று. இதற்குரிய தெய்வம் பிரமன். முதலெட்டு மங்கலப்பண் களுள் ஒன்று.

இப்பண் ஏழாந்திருமுறையில் 95ஆம் பதிகத்தில் அமைந் துள்ளது. தற்போது செந்துருத்தி என்ற பெயரமைந்த பண் மத்தியமாவதி இராகத்தில் பாடப்பட்டு வருகின்றது. 'நாரத ரின் சங்கீத மகரந்தம்' என்ற இசைநூலில் உள்ள 'மதுமாதவி' என்ற பெயரே மத்திய மாவதி எனத் திரிந்தது,என்பது யாழ் நூலாசிரியரான[22] விபுலானந்தரின் கருத்து

58) செந்திறத்தின் புறம் **தக்கணாதி.** மேற்செம்பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிய வகையைச் சேர்ந்தது. இதன் பரி யாயப் பெயர்கள் தக்கணம், தக்கணாத்தி, வருணம் ஆகியவை. இதனை வெளிப்படாத பண்களுள் ஒன்றாகப் பஞ்சமரபு குறிப் பிடுகிறது.

59) செந்திறத்தின் அருகு **சாவகன் குறிஞ்சி.** செவ்வழிப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற்றப் பெயர்கள் சாவகன், சாவகக் குறிஞ்சி. சாவகன் என்ற பெயர் தற்போதுள்ள ஜாவாஎன்ற நாட்டின் பெயரைக் குறிப்பதாகக் கொண்டால், இப்பண் ஜாவா நாட்டு இசையு டன் தொடர்பு கொண்டதாக ஊகிக்கலாம்.

இப்பண் நாலாஞ்சாமத்தில் பாடுவதற்கேற்றது என்றும் இதற்குரிய தெய்வம் ஈசன் என்றும் பஞ்சமரபில் குறிப்பிடப் பட்டுள்ளது.

60) செந்திறத்தின் பெருகு **அரந்தை.** இது மேற்செம்பாலை யிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் மற்றொரு பெயர் ஆநந்தை. இப்பண்ணை வெளிப்படாத பண்களுள் ஒன்றாகப் பஞ்சமரபு குறிப்பிடுகிறது.

61) **மருதப்பெரும்பண்:**

இது ஏழிசைகளைக் கொண்டது. பஞ்சமரபு உரையின்படி இது கோடிப்பாலையில் பிறந்தது. இது மருதயாழ், கொடிப் பாலை, கோடிப்பாலை என்ற பரியாயப் பெயர்களைக் கொண் டது. இது வலிமைப் பண்களுள் ஒன்றாகவும், எட்டாம் சாமத் தில் பாடுவதற்கேற்றதாகவும், இதற்குரிய தெய்வம் வானமன் என்பதாகவும் பஞ்சமரபு குறிக்கிறது. இப்பண்ணின் புறம் – ஆசாரி; அருகு-சாயவேளர் கொல்லி; பெருகு – கின்னராகம். இப்பண்ணின் திறங்கள் நவிர், வடுகு, வஞ்சி, செய்திறம் என் பன.

62) மருதப் பண்ணின் புறம் **ஆசாரி**. இது செம்பாலையிற் பிறந்தது. ஏழிசைகளைக் கொண்டது. இதன் மற்றப்பெயர்கள் ஆசரி, யாசரி, யாசாரி என்பனவாகும்.

63) மருதப் பண்ணின் அருகு **சாயவேளர் கொல்லி**. இது ஏழிசைகளைக் கொண்டது. பெரிய நாட்டம் என்ற மற்றொரு பெயரையும் கொண்டது. ஆரியம், தமிழ் ஆகிய இருபாற்குமுரி யது. ஏழாம் சாமத்தில் பாடுதற்கேற்றது. இதற்குரிய தெய்வம் சந்திரன்.

64) மருதப் பண்ணின் பெருகு **கின்னராகம்**. இது ஏழிசை களைக் கொண்டது- கின்னரம் என்று பெயருமுடையது. இப் பண்ணை வெளிப்படாத பண்களுள் ஒன்றாகப்பஞ்சமரபு குறிக் கிறது.

65) மருதயாழ்த்திறங்களுள் ஒன்றான '**நவிர்**' என்னும் பண் கோடிப் பாலையில் பிறந்தது. இது பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இதன் பரியாயப் பெயர் தக்கேசி. பஞ்சமரபில், தக்கேசிப்பண், வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், ஆரியம், தமிழ் ஆகிய இருபாற்குமுரியதாகவும், முக்கியமாகத் தமிழ்ப் பெயர் நெறிக்குரியதாகவும், 'தக்கேசி யொப்பது காம்போதி' என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது முதற்சாமத்தில் பாடுவதற்கேற்றது. இதற்குரிய தெய்வம் பிரமன். முதலெட்டு மங்கலப் பண்களுள் ஒன்று.

தக்கேசிப் பண் முதல் திருமுறையில் 63 முதல் 74 வரை யுள்ள பதிகங்களிலும், ஏழாந்திருமுறையில் 54 முதல் 70 வரை யுள்ள பதிகங்களிலும் அமைந்துள்ளது. தற்போதைய நிலையில் தேவார நிகழ்ச்சிகளில் இப்பண் அமைந்த பதிகங்கள் காம் போதி இராகத்தில் பாடப்பட்டு வருகின்றன,

66) நவிரின் புறம் **கொல்லி** என்பது. அரும்பாலையிற் பிறந்தது. திறத்திற வகையைச் சேர்ந்தது. இப்பண்ணை வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், வன்மைக்குரியதாகவும், பஞ்சமரபு குறிப்பிடுகிறது.

67) நவிரின் அருகு **ஆரியக் குச்சரி** என்பது. படுமலைப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. வடமொழி நூல்களில் குர்ஜரி என்ற பெயருடன் இருப்பது இப்பண்ணே எனக் கருதலாம். ஆரியம், தமிழ் ஆகிய இரு பாற்குமுரியது என்றுபஞ்சமரபு இப்பண்ணைக் குறிப்பிடுகிறது.

68) நவிரின் பெருகு **நாகத்தொனி.** படுமலைப் பாலையில் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. வட மொழி நூல்களில் காணப்படும் நாகத்வனி என்ற இராகப் பெயரை இதனுடன் ஒப்பிடலாம்.

69) மருதப் பண்ணின் மற்றொரு திறம் **வடுகு.** இது படுமலைப் பாலையிற் பிறந்தது. திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. இது இந்தளம், நளுத்தை என்கிற பெயர்களைக் கொண்டது. இந்தளம் என்னும் பண் வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், வன்மைக்குரியதாகவும், ஆரியப் பெயர், தமிழ்ப் பெயர் நெறிக்குரியதாகவும், ‘நளுத்தை என்பது இந்தளம்’ என்றும் பஞ்சமரபில் குறிப்பிடப்படுகின்றது. மேலும், இப்பண் முதற் சாமத்தில் பாடுவதற்கேற்றதாகவும், இதற்குரிய தெய்வம் பிரமன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பண் இரண்டாந்திருமுறையில் 1 முதல் 39 வரையுள்ள பதிகங்களிலும் நான்காந் திருமுறையில் 16,17,18, ஆகிய பதிகங் களிலும், ஏழாந் திருமுறையில் 1 முதல் 12 வரையுள்ள பதிகங்

க்ளிலும், பதினோராந் திருமுறையில் உள்ள 'எட்டியிலவம்' என்னும் முதற் குறிப்புடைய மூத்த திருப்பதிகத்திலும் அமைந்துள்ளது. தற்போது இந்தளப் பண்ணிலமைந்த பதிகங்களை லலித பஞ்சமி ராகத்திலும், நாதநாமக்ரியையிலும் பாடுதல் வழக்கு.

தமிழில் 'வடுகு' என்ற பெயரில் வழங்கப்படும் இந்தளமும், வடநாட்டில் 'தெலுங்க' எனப்படும் இந்தளமும் ஒன்றே யென்பது [23]யாழ் நூலாசிரியரின் துணிபு.

70) வடுகிற்குப்புறம் **சித்திரவேளர் கொல்லி.** இது அரும் பாலையிற் பிறந்தது. திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது இதன் பரியாயப் பெயர் சாதாளி என்பதாகும்.

71) வடுகிற்கு அருகு **தமிழ்வேளர் கொல்லி.** கோடிப்பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற, வகையைச் சேர்ந்தது. இது வேளர் கொல்லி, கொல்லி காந்தாரம் என்ற பரியாயப் பெயர்களைக் கொண்டது. இப்பண்ணை வன்மைக் குரியதாகவும், ஏழாம் சாமத்தில் பாடுவதற்கேற்றதாகவும், இதற்குரிய தெய்வம் சந்திரன் என்றும் பஞ்சமரபு குறிப்பிடுகிறது.

72) வடுகிற்குப் பெருகு **பஞ்சமம்:** கோடிப்பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது கூர்ந்த பஞ்சமம் என்றும் வழங்கப்படும். இது மென்மைக் குரியதாகவும் தமிழ்ப் பெயர் நெறிக் குரியதாகவும், 'பஞ்சமம் ஒப்பது பழந்தக்க ராகம்' என்றும் பஞ்சமரபில் குறிப்பிடப்படுகிறது. மூன்றாம் சாமத்துப் பண்களுள் ஒன்று. இதற்குரிய தெய்வம் உருத்திரன். மங்கலப் பண்களுள் இதுபின்னெட்டு வகையைச் சேர்ந்தது.

73) மருதயாழ்த் திறங்களுள் ஒன்றான **வஞ்சி** என்னும் பண், கோடிப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. பாக்கழி, வஞ்சிப் பாக்கழி என்ற பரியாயப் பெயர்களைக் கொண்டது.

74) வஞ்சியின் புறம் **அக்காளம்** என்பது. இது கோடிப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது

அக்காழம், தத்தளம், தத்தள பஞ்சமம் என்னும் பரியாயப் பெயர்களைக் கொண்டது.

75) வஞ்சியின் அருகு **பின்ன பஞ்சமம்**. இது செவ்வழிப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது நாணு பஞ்சமம் என்றும் வழங்கப்படுகிறது. இது ஆறாம் சாமத்தில் பாடுவதற்கேற்றது. இதற்குரிய தெய்வம் சூரியன்.

76) வஞ்சியின் பெருகு **மாதுங்கராகம்**. கோடிப்பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

77) மருதயாழ்த் திறங்களுள் ஒன்றான **செய்திறம்** என்னும் பண் படுமலைப் பாலையில் பிறந்தது. இது பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது கௌசிகம் என்றும் வழங்கப்படுகிறது. கவுசிகம் அல்லது செய்திறம், வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், வன்மைக்குரியதாகவும், பஞ்சமரபில் குறிப்பிடப் படுகிறது. இது முதற்சாமத்துப் பண். இதற்குரிய தெய்வம் பிரமன். மங்கலப் பண்களுள் முதலெட்டு வகையைச் சேர்ந்தது.

இப்பண் மூன்றாந் திருமுறையில் 43 முதல் 55 வரையுள்ள பதிகங்களுக்குரியது. இவை தற்போது பைரவி இராகத்தில் பாடப் பட்டு வருகின்றன.

78) செய்திறத்தின் புறம் **சீகாமரம்**. இது செவ்வழிப்பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது காமரம் என்ற பெயரையும் கொண்டது. இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், வன்மைக்குரியதாகவும் பஞ்சமரபில் குறிப்பிடப்படுகிறது. இது இரண்டாம் சாமத்தில் பாடுவதற்குரியது. இதற்குரிய தெய்வம் திருமால். மங்கலப் பண்களுள் முதலெட்டு வகையைச் சேர்ந்தது.

இப்பண் இரண்டாம் திருமுறையில் 40 முதல் 53 வரையுள்ள பதிகங்களிலும், நாலாந்திருமுறையில் 19,20 ஆம் பதிகங்ளிலும், ஏழாந் திருமுறையில் 86 முதல் 89 வரையுள்ள

பதிகங்களிலும் அமைந்துள்ளது. இதன் பழைய இசையுருவம் புலனாகவில்லை. தற்போது சீகாமரப் பண்ணிலமைந்த பதிகங்களைத் தேவார ஓதுவார்கள் நாதநாமக்ரியையில் பாடிவருகின்றனர்.

79) செய்திறத்தின் அருகு **சாரல்** என்பது. செவ்வழிப் பாலையில் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. பஞ்சமரபில் இப்பண் வெளிப்படாத பண்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிங்கல நிகண்டில் இது காந்தாரப் பண்ணின் மற்றொரு பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

80) செய்திறத்தின் பெருகு **சாதாக்கியம்** என்பது. கோடிப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது சதாங்கியம் என்றும் சாங்கிமம் என்றும் வழங்கப்படுகிறது.

81) **செவ்வழியாழ் அல்லது முல்லைப் பெரும்பண்**

இது ஏழிசைகளைக் கொண்டது. படுமலைப் பாலையில் பிறந்தது. இப்பண் செவ்வழியாழ், முல்லையாழ், சுகதி, சுகதீ என்றும் வழங்கப்படுகிறது. முல்லையாழின் அகம் – சுகதி

புறம் – வேளாவளி.
அருகு – சீராகம்.
பெருகு – சந்தி.

செவ்வழியாழின் திறங்கள் நான்கு. அவை முறையே, நோதிறம், பெயர்திறம், யாமை, முல்லை ஆகியவை.

முல்லையாழ், எட்டாம் சாமத்தில் பாடுவதற்குரியதாகவும், இதற்குரிய தெய்வம் **வானமன்** எனவும் பஞ்சமரபு குறிப்பிடுகிறது. செவ்வழிப்பண் இரண்டாம் திருமுறையில் 113 முதல் 122 வரையுள்ள பதிகங்களில் காணப்படுகிறது. இப்பதிகங்களை யதுகுல காம்போதியில் பாடுதல் தற்போதைய வழக்கு.

82) செவ்வழியின் புறம் **வேளாவளி** ஏழிசைகளைக் கொண்ட இப்பண் மேற்செம்பாலையில் பிறந்தது. இதன் பரியாயப் பெயர்கள் மவுளி, மவுராழி, மவுராளி, மௌசாளி.

வேளாவளி என்ற ராகம் வடமொழி இசை நூல்களான பார்சவ தேவரின் சங்கீத சமயசாரத்திலும், நாரதரின் சங்கீத மகரந்தத்திலும் சாரங்க தேவரின் சங்கீதரத்னாகரத்திலும் காணப்படுகிறது. இதன் பழைய உருவம் தெரியவில்லை. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாரிமுத்தா பிள்ளையின், 'என்ன பிழைப்பு உந்தன்' எனத் தொடங்கும் கீர்த்தனை வேளாவளி ராகத்தில் பாடப்பட்டு வருகின்றது.

இதன் ஆரோசை: சரிகமபதச்

அமரோசை; ச்நிதபமகரிச. இது 23 ஆவது மேளகர்த்தா வான கௌரி மனோகரி இராகத்தில் ஜன்யமானது.

83) செவ்வழியின் அருகு **சீராகமரம்**, ஏழிசைகளைக்கொண்டது. மேற் செம்பாலையில் பிறந்தது. இப்பண்ணை, வெளிப்படாத பண்களுள் ஒன்றாகவும், எட்டாம் சாமத்திற்குரியதாகவும் பஞ்சமரபு குறிப்பிடுகிறது.இதற்குரிய தெய்வம் வானமன். இதுசீராகம், நள்ளி என்ற பரியாயப் பெயர்களைக்கொண்டது. வடமொழியிலமைந்த இசை நூல்களில் ஸ்ரீராகம் என்ற பெயரமைந்த இராகம் காணப்படுகிறது. இதனைச் சீராகம் என்கிற இப்பண்ணோடு ஒப்பிடலாம்.

84) செவ்வழியின் பெருகு **சந்தி** என்பது. ஏழிசைகளைக் கொண்ட இப்பண் மேற்செம்பாலையில் பிறந்தது. சாந்தி,சிந்தி என்றும் வழங்கப்படுகிறது. இது வெளிப்படாத பண்களுள் ஒன்று.

85) செவ்வழியாழின் திறங்களுள் ஒன்றான **நோதிறம்** என்னும் பண் படுமலைப் பாலையில் பிறந்தது. இது பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. குறண்டி, தேவகிரி என்ற பரியாயப் பெயர்களைக் கொண்டது. இப்பண் வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், மூன்றாம் சாமத்துக் குரியதாகவும், உருத்திணுக்கு உகந்ததாகவும் பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

86)நோதிறத்தின் புறம் **ஆரியவேளர் கொல்லி**. படுமலைப் பாலையிற் பிறந்த இப்பண், பண்ணியற்றிறவகையைச் சேர்ந்தது.

87)நோதிறத்தின் அருகு **தனுக்காஞ்சி.** இதுபடுமலைப்பாலையில் பிறந்தது. பண்ணியற்றிய வகையைச்சேர்ந்தது. இதுதன்னி எனவும், தனுக்காஞ்சி எனவும், வழங்கப்படுகிறது. வெளிப்படாத பண்களுள் ஒன்று; எட்டாம் சாமத்திற்குரியது. இதற்குரிய தெய்வம் வானமன்.

88) நோதிறத்தின் பெருகு **வியந்தம்.** படுமலைப் பாலையில் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழியில் காணப்படுகின்றது.

89) செவ்வழித் திறங்களுள் மற்றொன்று **பெயர்திறம்.** இது செவ்வழிப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. பியந்தை, யாழ்பதம் என்னும்பரியாயப் பெயர்களைக் கொண்டது. இப்பண், பஞ்சமரபில் மென்மைக் குரியதாகவும், ஏழாஞ்சாமத்தில் பாடுவதற் கேற்றதாகவும், சந்திரனுக்குகந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தேவாரத்தில் பியந்தைக் காந்தாரம் என்னுமொரு பண் காணப்படுகிறது. இது இரண்டாந் திருமுறையில் 83 முதல் 96 வரையுள்ள பதிகங்களிலும், நான்காந்திருமுறையில் 8 ஆம் பதிகத்திலும் ஏழாந் திருமுறையில் 76ஆம் பதிகத்திலும் அமைந்துள்ளது. இப்பண்ணிலமைந்த பதிகங்கள் தற்போது 'நவரோசு' என்னும் இராகத்தில் பாடப்பெற்று வருகின்றன.

90) பெயர்திறத்தின் புறம் **புங்காளி** என்பது. இது செவ்வழிப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. காளி, தாளி என்ற பெயர்களும் இதற்குப் பொருந்தும். இது இரண்டாம் சாமத்திற்குரிய பண். தெய்வம்-திருமால்.

91) பெயர்திறத்தின் அருகு **கொண்டற்கிரி** என்பது. இது செவ்வழிப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது கொண்டைக்கிரி, கொண்டி, குந்தளம் என்னும் பரியாயப் பெயர்களைக் கொண்டது. இப்பண், வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், ஒலிக்குரியதாகவும், ஆரியம், தமிழ் ஆகிய 'இருபாற்குமுரியதாகவும் பஞ்சமரபில் குறிப்பிடப்பட்

டுள்ளது. இது ஐந்தாம் சாமத்தில் பாடப் பெறுவது. இதற்குரிய தெய்வம் சதாசிவன்.

92) பெயர்திறத்தின் பெருகு **சீவணி** என்பது. இது படுமலைப் பாலையில் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

93) செவ்வழித் திறங்களுள் ஒன்று **யாமை** என்னும் பண். இது படுமலைப் பாலையில் பிறந்தது.பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. எட்டாம் சாமத்துப் பண்களுள் ஒன்று. இதற்குரிய தெய்வம் வானமன்.

94) யாமையின் புறம் **சாளரபாணி** என்பது. படுமலைப் பாலையிற் பிறந்தது. பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது இப்பண் தற்போது கிடைத்துள்ள தேவாரப் பதிகங்களில் காணப்படவில்லை. பூந்துருத்தி நம்பிகாட நம்பி இயற்றிய திருவிசைப்பாவில் இரண்டு பாடல்கள் இப்பண்ணில் அமைந்துள்ளன. பஞ்சமரபில் 'சாளரபாணி ஒப்பது நாட்டம்'என்பதாகவும், முதற்சாமத்துப் பண்களுள் ஒன்றாகவும், இதற்குரிய தெய்வம் பிரமன் என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

95) யாமையின் அருகு **நாட்டம்** என்பது. இது படுமலைப் பாலையிற் பிறந்த பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது ஆரியப் பெயர் நெறிக்குரியதாகவும், மூன்றாம் சாமத்துப் பண்களுள் ஒன்றாகவும் பஞ்ச மரபில் குறிப்பிடப்படுகிறது. உருத்திரனுக்கு உகந்தது. மங்கலப் பண்களுள் பின்னெட்டு வகையைச் சேர்ந்தது.

96) யாமையின் பெருகு **தானு** என்பதாகும். படுமலைப் பாலையிற் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்ததாகும். இது வெளிப்படாத பண்களுள் ஒன்று.

97) செவ்வழியின் திறங்களுள் ஒன்று **முல்லை** என்பது. இது சாதாரி என்றும் பெயருடையது. பஞ்சமரபில் இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், ஒலிக்குரியதாகவும், வன்மைக்குரியதாகவும், 'சாதாரி ஒப்பது வராடி' என்றும், மங்கலப்

பண்களுள் முதலெட்டு வகையைச் சேர்ந்ததாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

98) முல்லையின்புறம் **சாதாரி** என்பது. படுமலைப் பாலையில் பிறந்த இப்பண், பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

99) முல்லையின் அருகு **வயிரவம்.** படுமலைப்பாலையில் பிறந்த இது திற (ஐந்திசை) வகையைச் சேர்ந்தது. இது பைரவம் என்றும், பயிரவம் என்றும் வழங்கப்படுகின்றது. இது பஞ்சமரபில் ஆரியப் பெயர் நெறிக்குரியதாகவும், மூன்றாம் சாமத்துப் பண்ணாகவும், மங்கலப் பண்களுள் ஒன்றாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

100) முல்லைக்குப் பெருகு **மேகாஞ்சி.** படுமலைப் பாலையில் பிறந்த இப்பண் பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது. இது காஞ்சி என்றும் வழங்கப்படும். இது வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும் மென்மைக் குரியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறாம் சாமத்திற்குரியது. சூரியனுக்கு உகந்தது.

இதுவரை பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி ஆகிய நாற்பெரும் பண்கள், திறங்கள் இவற்றின் அகம், புறம், அருகு பெருகு வகைக்கூறுபாடுகளின் மூலம் கிடைக்கப்பெறும் பண்களின் இலக்கணத்தைப் பஞ்சமரபு வாயிலாக அறிந்தோம்.

101) பண்டைய தமிழகத்தின் ஐவகை நிலங்களுள் விடுபட்ட நெய்தல் நிலத்திற்குரிய யாழ் நெய்தலியாழ் ஆகும். இதற்குத் 'திறம்' கிடையாது. எனவே இது 'திறனில் யாழ்' எனவும் அழைக்கப்படும். ஏழிசைகளைக் கொண்ட இது தாரம் எனவும் **தாரப்பணம்** எனவும் பெயர்படும். தாரப்பண், ஆசான் என்ற பரியாயப் பெயர்களைக் கொண்டது. இது மேற்செம்பாலையின் மற்றொரு பெயருமாகும்.

102) மேற்செம்பாலையில் பிறந்த மற்றொரு பண் **பையுள் காஞ்சி** எனப்படும். இது பண்ணியற்றிற வகையைச் சேர்ந்தது.

103) படுமலை என்பது குறிஞ்சியாழ்த் திறங்களுள் ஒன்றாக ஐந்திசையைச் சேர்ந்த பண்ணாக ஏற்கனவே கூறப்

பட்டுள்ளது. கவ்வாணம் என்றொரு பண் பண்ணியற்றிற வகையில் காணப்படுகிறது. இதன் பரியாயப் பெயர்களாகக் கௌவாணம், படுமலைக் கவ்வாணம் என்ற இரண்டு பெயர்கள் காணப்படுகின்றன. இந்தக் கவ்வாணம் என்ற பண் நாற்பெரும் பண்திறங்களின் அகம் புறம் அருகு பெருகு வகைகளில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. எனவே படுமலை என்பது ஐந்திசைப்பண். கவ்வாணம் என்பது ஆறிசைப்பண் என்று கொள்ளலாம்.

பஞ்சமரபு உரையின் 103 பண் விளக்கங்களில் மல்லாரி, சாயை (அரளி), சோகவராடி, கூதாளி ஆகிய நான்கு பண்கள் காணப்படுகின்றன. இந்நான்கும் பஞ்சமரபு உரையின் அகம், புறம், அருகு, பெருகு வகையில் காணப்படவில்லை. இவ்வியலின் 103 பண் விளக்கங்களிலும் இவை இடம் பெறவில்லை. எனவே இவற்றை இங்கு விளக்குதல் பொருந்தும்.

மல்லாரி என்பது அரும்பாலையிற் பிறக்கும் பண்களுள் ஒன்றாகவும், ஐந்திசையைக் கொண்டதாகவும் (திறம்) பஞ்சமரபு உரையிலிருந்து தெரிகிறது. இதன் பரியாயப் பெயர், 'நாட்டை' என்பதாகும். கோயில்களில், நாகசுரத்தில் நாட்டை இராகத்தில் வாசிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட வர்ண மெட்டுக்கு மல்லாரி என்று பெயர். இது பஞ்சமரபு உரையில் வெளிப்படும் பண்களுள் ஒன்றாகவும், ஐந்தாம் சாமத்திற்குரிய பண்ணாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாயை (அரளி) என்னும் பண்ணினைக் கோடிப்பாலையிற் பிறக்கும் பண்களுள் ஒன்றாகவும், பண்ணியற்றிறங்களுள் (ஆறிசைப்பண்) ஒன்றாகவும் பஞ்சமரபு உரை கூறுகின்றது.

சோக வராடி என்பது, விளரிப் பாலையிற் பிறக்கும் பண்களுள் ஒன்று. பண்ணியற்றிறங்களுள் ஒன்று.

கூதாளி என்ற பண் மேற்செம்பாலையிற் பிறக்கும் பண்களுள் ஒன்றாகவும் பண்ணியற்றிற வகையைச் சேர்ந்ததாகவும் பஞ்சமரபு உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சமரபு உரையின் அகம், புறம், அருகு, பெருகு வகைப்பாட்டில் இது

கேதாளிக் குறிஞ்சியின் பரியாயப் பெயராக அடைப்புக் குறிகளில் குறிக்கப்பட்டுள்ளது. கேதாளிக் குறிஞ்சி, அரும்பாலையிற் பிறந்தது என்பது நோக்கற்குரியது. ஒன்று மேற்செம்பாலையிற் பிறப்பதாகவும், மற்றொன்று அரும் பாலையிற் பிறப்பதாகவும் உள்ளதால் இவ்விரண்டும் வெவ்வேறு பண்களாக இருக்குமோ என்கிற ஐயப்பாடு எழுகிறது.

103 பண்களுள் சாயவேளர் கொல்லி (மருதயாழின் அருகு), கின்னரராகம் (மருதயாழின் பெருகு), விபஞ்சிகாந்தாரம் (குறிஞ்சியாழ்த்திறமான காந்தாரத்தின் அகம்), முல்லை (செவ்வழியாழ்த்திறமான முல்லைக்கு அகம்) ஆகிய பண்கள் பிறந்த பாலைகள் பற்றிய விவரமும், பஞ்சமரபு உரையிலிருந்து கிடைக்கப் பெறவில்லை.

இவ்வியலில் குறிஞ்சிப் பண்ணின் திறங்களுள் ஒன்றான பஞ்சுரம்—அகநிலையாகவும், அதன் புறநிலையாகப் பழம் பஞ்சுரம் என்ற பண்ணும் பஞ்சமரபு உரையின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதேபோன்று செவ்வழி யாழ்த் திறங்களுள் ஒன்றான முல்லையின் அகம் புறம் வகைகள் முறையே முல்லையென்றும், முல்லை சாதாரி என்றும் தனித்தனியே கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் பஞ்சமரபு உரையின் மற்ற வகைப்பாடுகளில் (ஏழு பாலைகளின் அடிப்படையிலான வகைப்பாடு; பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் வகைப்பாடு) பஞ்சுரமும், பழம் பஞ்சுரமும் ஒன்றாகவும், முல்லையும், முல்லை சாதாரியும் ஒன்றாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதிலிருந்து பஞ்சமரபு உரையின் பண் பற்றிய பகுதியில் வேறுபாடுகள் இருப்பது அறியப்படுகிறது.

103 பண்களில், பெயரளவில் ஒப்புமையுடைய பண்களின் பெயர்களை அறிவதும் இசைக்கலை வழக்கே. ஆயினும் அவை வெவ்வேறு பண்களே என்பதையும் நன்குணர்தல் வேண்டும். இவ்வகையில் மேகாஞ்சி, தனுக்காஞ்சி, பையுள்காஞ்சி என்பவை காஞ்சி என்ற விகுதியுடன் கூடியவை.

இராகம் வகையாவன: கின்னரராகம், கொடிநாகராகம் சீராகம் முதலிய பன்னிரண்டு. இவ்வாறே காந்தார வகை, கிரி வகை; குச்சரி வகை; குறிஞ்சி வகை, கொல்லி வகை, திறம் வகை, பஞ்சம வகை போன்றவை பஞ்சமரபின் குறிப்புரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்விதப் பண்களின் (இராகங்களின்) வகைப்பாடு 'மித்ர ராகங்கள்' எனப்படும் என்று பேராசிரியர் திரு.[24]சாம்பமூர்த்தி காட்டுகிறார். எடுத்துக்காட்டு: ரீதி கௌள; நாராயண கௌள, கேதார கௌள, சாயா கௌள போன்றவை.

103 பண்களிற் காணப்படாத, கொல்லிக் கவ்வாணம், பியந்தைக்காந்தாரம், யாழ்முரி என்ற பண்கள் தேவார இசையில் காணப்படுகின்றன.

பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி ஆகிய நாற்பெரும் பண்களையும், அவற்றின் திறங்களையும் பழந்தமிழகத்தை அதன் இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப பிரித்த ஐந்நிலங்களில் இசைக்கப்பட்டு வந்த பண்களாகக் கருதலாம். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலத்தைச் சாரும். குறிஞ்சிப் பெரும்பண்ணும், அதன் திறங்களும் இவற்றைச் சேர்ந்த வகைகளும் குறிஞ்சி நிலப் பரப்பிலுள்ள மக்கள் அதாவது மலைவாழ் இனத்தோர் இசை (Tribal music) யுடன் தொடர்புடையதாகக் கருதலாம்.

வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருத நிலத்தைச் சாரும். மருதப் பெரும் பண்ணும், அதன் திறங்களும், அவற்றின் வகைகளும், மருத நிலப்பரப்பிலுள்ள மக்களின் இசையோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

இவ்வாறே பாலை, முல்லை, போன்றவற்றின் திறங்களையும் அந்தந்த நிலத்து மக்கள் இசையுடன் தொடர்பு படுத்தலாம்.

நூற்றுமூன்று பண்களும், இந்நான்கு நிலத்தைச் சுற்றிப் பாடப்பட்டவற்றையே அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன எனலாம். இவ்விதத்தில் குறிஞ்சி நிலப்பரப்பில் பாடப்பட்டவையே அதிகம். இந்நிலத்திற்குரிய மொத்தப் பண்கள் 36. இப்பண்களின் பெயர்களை நோக்குகையில், இவற்றில் குறிஞ்சி, கிரி என்றவிகுதிகள் (suffix) இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகுந்தவை.

உ-ம்.

வியாழக்குறிஞ்சி, இராமக்கிரி, உதயகிரி, சாவகக்குறிஞ்சி.

இதேபோல் மருதப் பண் திற வகைகளின் பெயர்களை நோக்குகையில், அவை சித்திர வேளர் கொல்லி, தமிழ் வேளர் கொல்லி, ஆரிய வேளர் கொல்லி என்பது போல் வேளாண்மைத் தொழில் புரியும் மக்கள் இசையோடு தொடர்புடையதாகத் தெரிகிறது.

இக்கோணத்தில், நாட்டுப்புற இசையிலுள்ள பண்களைப் பற்றி ஓர் ஆய்வு நிகழ்த்தினால், 103 பண்களனைத்தின் உண்மையான இசை உருவங்களையும் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கும்.

துணைக் குறிப்புகள்:

1. பாவோடிணைத்த விசையென்றார் பண்ணென்றதோவாப் பெருந்தான மெட்டாலும் – பாவா யெடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிற் படுத்தமையாற் பண்ணென்று பார்.

   பஞ்சமரபு—நிறத்தமரபு வெண்பா50.

2. தாண்டவராய முதலியார், 1923. சேந்தன் திவாகரம், சென்னை, பக்கம் 123.

3. பஞ்சமரபு—யாழ்மரபு. வெண்பா.24.

4. சிலப்பதிகாரம்—வேனிற்காதை அடி 35. அடியார்க்கு நல்லார் உரை.

5. விபுலானந்தர் இயற்றிய யாழ்நூல் பக்கம்—148.

6. "குன்றா வெளியே யடக்க மொலி வண்ணம்
நின்ற வலியே மெலிவுடனே—நன்றாக
வாரியமு மின்றமிழுக் காவனவு மாங்கிருபால்
வாரிப் பொழியுமாம் வைப்பு"
பஞ்சமரபு—வகை யொழிபு மரபு. வெண்பா 65.

7. காலையிளவுச்சி சாயங்காலையொ
மாலை நடுநாள் வைகறையின் - சில
வெண்ணுந்தே சம்முறக் காலமா வெட்டெட்டு
பண்ணுங்கோத் தாருலகிற் பாத்து(பகுத்து)

8. Sambamurti P - 1969. South Indian Music Book VI, P. 144.

9. Subramanya Sastri.S. 1945 **Ragavibodha of Somanatha**, The Adyar Library Series No. 48, Madras, Introduction. P.xxxix.

10. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை.அடி 45.அரும்பதவுரை.

11. பஞ்சமரபு—நிறத்தமரபு. வெண்பா.50.

12. கோமதி சங்கரய்யர். 1981. "பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்று ஆதியிசைகள்" **தேவாரப் பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் முப்பத்து இரண்டாம் ஆண்டறிக்கை,** சென்னை, பக்கம்.86.

13. மேற்படி

14. நடராசபிள்ளை பு.உ.கே. 1947, **பண்டைக் காலத் தமிழிசையும் தற்காலம் வழங்கும் இசையும்**, கோவை.

15. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்-குறள். 573 கழக வெளியீடு 199, 1982.

16. ஆய்ச்சியர்குரவை. அடி13. அடியார்க்கு நல்லார் உரை.

17. இராமநாதன் செட்டியார், லெ.ப.கரு.1974. **பண் ஆராய்ச்சியும் அதன் முடிவுகளின் தொகுப்பும்**, சென்னை. பக்கம்.193
18. விபுலானந்தர் இயற்றிய யாழ்நூல். 1974. "தேவாரவியல்" பக்கம்.284.
19. வெள்ளைவாரணன்,க.1979. **இசைத்தமிழ்**, இராமகிருட்டிண வித்தியாசாலை—சிதம்பரம்.
20. குறிஞ்சிப்பாட்டு. அடி 146.கழக வெளியீடு.
21. வெள்ளை வாரணன்,க.1979. **இசைத்தமிழ்**, ஸ்ரீ.இராம கிருட்டிண வித்தியாசாலை, சிதம்பரம்.
22. விபுலானந்தர் இயற்றிய யாழ்நூல், பக்கம்,289.
23. மேற்படி பக்கம்.276.
24. Sambamurti,P.1973. South Indian Music, Book III, P.27.

இவ்வியலில் பயன்படுத்தப்பட்டுள்ள பஞ்சமரபு வெண்பாக்கள்

1. காலங்க ளெட்டிற்கும் காலத் ததி தெய்வம்
மேலா மிருநான்கு மென்றார்கள் – பாலாய
பண்ணு மறுபத்து நான்கென் றார் பாரிடத்
தெண்ணிய காலத் தியல்பு.

2. பிரமன் திருமா லுருத்திரன் பெட்பார்
தரமன்னு மீசன் சதாசிவன் – நாரணிக்குக்
கண்ணால் பகல்மதியம் காயவா னென்றெண்மர்
விண்ணோர்க்குப் பண் வகுப்பார் வேறு

3. புறநீர்மை காந்தாரங் கௌசிகந் தக்கேசி
மறநீர்மை யில்லா வராடியாம் – உறுநீர்மை
இந்தளஞ்சா ளரபாணி யுடன் செந்துருத்தி
வந்த முதற்கால வைப்பு

4. தோடி நட்ட ராகஞ் சுரங் கௌடி தொன்மாலைப்
பாடு பழந்தக்க ராகமே – மூடித்
திரண்ட சாதளியே காமரஞ் செம்பாலை
இரண்டாய சாமத் தியல்பு (சுரந்தாளி)

5. குறண்டி வயிரவம் பஞ்சமங் கோடாத்
திறங்கிளர் கொல்லியாந் தேசி – நிறந்திகழுஞ்
சான்றோர் புகனாட்டந் தக்கரா கஞ்சிகண்டி
மூன்றாஞ்சா மத்தின் முறை (கொல்லியந்தேசி)

6. அந்தாளி சாவகன் மேகரா கக்குறிஞ்சி
கந்தாரந் துக்கராகத்துடனே-சிந்தைசேர்
நெய்தல் குறிஞ்சிசுர நேரிசைக ளாமெட்டும்
பைதல்நா லாஞ்சாமப் பண்.

7. குச்சரி மல்லாரி மேகரா கங்குறிஞ்சி
மிக்க கிரிநாலு மென்றுரைத்தார் – தொக்கசீர்
மஞ்சார் மலைச்சிலம்பா மான்றேர் வழுதியிவை
அஞ்சாஞ்சா மத்திற்கடை.

8. கவ்வாணம் பஞ்சமங் காஞ்சிமருள் கந்தருவம்
எவ்வாய பாவியா ழக்குறிஞ்சி – செவ்வேசெந்
திறாய் மதுராமா யந்திமுதி ரிந்தளமே
ஆறாஞ்சா மத்திற் கடை.

9. வராடி யிரண்டும் வடகெவுடி நாட்ட
மிரண்டுமியல் காந்தார பஞ்சமந் – தராதலஞ்
சூழவே ளர்கொல்லி தற்பியந்தை யிவ்வெட்டு
மேழாஞ்சா மத்திலே யெண்.

10. அனுத்திர பஞ்சம மந்தாளி பாடை
மனுப்புல முல்லை மருதம் – தனித்தனியே
நட்டார் புகழ் நளினி! நள்ளியோ டியாமைதனு
வெட்டாஞ் சாமத்திலே யெண்.

11. தன்னொளிசேர் தக்கேசி தன்ம முதலாகவே
யெண்ணில் வயிரவமீறாக-வண்ண
வாணுதலாய்! வல்லோர் வகுத்த பதினாறும்
மாணுறும் மங்கலமாம் பண்.

12. தக்கேசி காந்தாரங் கௌசிகஞ் சாதாளி (சாதாரி)
திக்கார் புறநீர்மை செந்துருத்தி-தொக்கவியற்

செங்கயற்கட் பூங்கொடியே! சீகாமரஞ் சிகண்டி
மங்கலப் பண்ணாமென்னு மெட்டு.

13. அந்தாளி பாடையராக மிரண்டெழுத்
தைந்தினாட்டங்கெவுடி பஞ்சமமு—மிந்து
வழி வந்த மாறா! வழுதியார் கோவே
மொழி வந்த மங்கலமா மெண்.

இயல் ஐந்து

வங்கிய மரபு

நரம்புக் கருவி, துளைக் கருவி, தோற்கருவி என்னும் மூவகையானவற்றுள், துளைக்கருவிகளுள் முக்கியமாகத் திகழ்வது குழல் எனப்படும் வங்கியமாகும். இதன் இலக்கணம் கூறுவது பஞ்சமரபு - இசை மரபின் உட்பிரிவான வங்கிய மரபு. இம்மரபில் வங்கியஞ் செய்வதற்குரிய மூலப்பொருள்கள், மரத்தினுடைய இலக்கணம், வங்கியத்தின் வடிவ இலக்கணம், துளையளவு இலக்கணம், வங்கியம் இசைக்குமுறை, வங்கியத்தில் இசை பிறத்தல் ஆகிய செய்திகள் ஆறு வெண்பாக்களில் அடங்கியுள்ளன. இந்த ஆறு வெண்பாக்களும் சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லாரால் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன.

பழந் தமிழகத்தின் ஐந்நிலப் பிரிவுகளுள் ஒன்றான முல்லை நிலத்திலே வாழ்ந்த மக்கள் தான் துளைக் கருவியான குழலைக் கண்டுபிடித்தனர். முல்லைக் குழல் முல்லை நிலத்திலே வாழ்ந்தவர்கள் கையிலிருந்ததொரு கருவி. இது முல்லைக் கொடியை வளைவாய் சுற்றித் தெறித்து ஊதுதலின் முல்லைக் குழல் என்கிற கருவியாயிற்று.

[1]'பெரிய புராணத்தில், 'குழலுறை அஞ்செழுத்து', குழல், வளர் முல்லை' என்பது போன்ற குறிப்புக்கள், குழலின் உள்ளுறை ஐந்தெழுத்து எனவும், முல்லைப் பண்ணை ஐந்து துளையுடைய குழலில் வாசித்திருக்கின்றனர் எனவும் அறிய உதவுகின்றன. குழற் கருவி, 'வங்கியம்' என்று பஞ்சமரபிலும், பிங்கல நிகண்டு போன்ற நிகண்டுகளிலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [2]'பிங்கல நிகண்டில் வங்கியம், இசைக்குழல் என்றும், வாரி என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தி மொழியில் இது 'வம்ஸி' என்றும் முரளி என்றும் அழைக்கப்படுகிறது.

வங்கியம் செய்வதற்குரிய மூலப் பொருள்கள்:

செந்தாமரைக் கண்ணனாகிய திருமாலுக்குகந்த குழலுக்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி ஆகிய ஐந்தும் உரியன. இவற்றைக் கொண்டு பல மொழிகளையும் நூல்களையும் உணர்ந்தோரால் வங்கியம் செய்யப்படும்.

இவ்வைந்தினுள் மூங்கிலால் செய்வது முதன்மையானது, (உத்தமம்); வெண்கலத்தாற் செய்வது சுமாரானது (மத்திமம்); ஏனையவை குறைந்தன (அதமம்) என்று பஞ்சமரபின் உரையாசிரியர் வகைப்படுத்துகிறார். கருங்காலி மரத்தால் செய்வது பெருவழக்கெனக் கொள்ளப்படும் என்றும் உரையில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர, தந்தம், இரும்பு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றிலும் வங்கியம் செய்யப்படும். எல்லாவற்றிலும், மூங்கிலிற் செய்த குழலே சிறப்பானது.

வங்கியம் என்பது பொதுவாகக்குழற்கருவிகள் பலவற்றைக் குறிப்பினும், இது சிறப்பாக மூங்கிலாலான குழலைக் குறிப்பதாகவே உள்ளது. பழங்காலத்தில் மூங்கிலோடு, ஆம்பற் கொம்பும், கொன்றைப் பழமும் வங்கியம் செய்வதற்குப் பயன்பட்டன. கொன்றை, குழல் செய்வதற்குப் பயன்பட்டதால் இது குழற்பழம் என்றே கூறப்பட்டது. மூங்கிலாலான குழல், ‘பணை’ என்று அகநானூற்றிலும், ‘கழை’ என்று நற்றிணையிலும் குறிப்பிடப்பட்டது.

மூங்கில், புறத்தில் மாத்திரம் வயிரமுடையது. எனவே அது ‘புல்’ லென்றும் பெயர்படும். “புறக்காழுடையன புல் எனப்படுமே”. தற்கால வழக்கில், மூங்கிற் புல்லால் செய்யப்படுவதால் புல்லாங்குழல் என்றும், வேய்ங்குழல் என்றும் வேணுஎன்றும் பெயர்கொண்டுள்ளது. இவ்வாறு புல்லாங்குழல் என்றும், வேய்ங்குழலென்றும் பெயர் கொண்டிருப்பது பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியமே என்பதுஅறியற்பாலது.

வங்கியம் செய்வதற்குரிய மரத்தின் இலக்கணம்:

“உயர்ந்த சமநிலத்தி லோங்கி யதனான்
இயங்காதே நின்ற மரத்தை – மயங்காதே

முற்றிய மாமரந் தன்னை முதறடிந்து
குற்றிமிலோ ராண்டிற் கொளல்.''

என்னும் வெண்பா கூறும் மரத்தின் இலக்கணம், முன்னர்க் குறிப்பிடப்பட்ட மூங்கில், சந்தனம், கருங்காலி, செங்காலி ஆகிய மரங்களுக்குப் பொருந்தும்.

வங்கியம் செய்வதற்குரிய மரங்களைத் தேர்ந்தெடுக்கையில், பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். (1) உயர்ந்த சமநிலத்தில் பெருக வளர்ந்திருக்க வேண்டும். (2) நான்கு திசையினின்று அடிக்கும் காற்றினால் சேதமடையாமல் இருக்கவேண்டும். (3) முற்றிய பெரிய மரமாக இருத்தல் வேண்டும். (4) முதுமை, இளமை இரண்டுமில்லாத நடுவயதான நிலையில் இருத்தல் வேண்டும். (5) இம்மரங்கள் திருகுதல், பிளத்தல், கண்படுதல், பொத்துப்படுதல், செய்யாத செய்கை ஆகிய ஐந்தும் இல்லாதிருக்க வேண்டும்.

இவ்வாறான மரத்தைத் தேர்ந்தெடுத்து, அதை ஓர் ஆளின் பருமையாகச் (புருடாகாரமாக) செதுக்கி, நிழலிலே ஓர் ஆண்டுக்காலம் இட்டு வைத்த பின்னர், இலக்கண முறையை அறிந்து, வங்கியம் செய்வது மரபு என்று பஞ்சமரபு உரை விளக்குகிறது.

வங்கியத்தின் வடிவ (பிண்ட) இலக்கணம்:

இதற்குரிய பஞ்சமரபு வெண்பா பின்வருமாறு:

"சொல்லு மிதற்களவு நாலைந்தாஞ் சுற்றளவு
நல்விரல்க ணாலரையா நன்னுதலாய்-மெல்லத்
துளையளவு நெல்லரிசி தூம்பிடமாம் (மாய) நல்ல
வளைவல வேல்வங்கியம்''

இதிலிருந்து வங்கியத்தின் நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரைவிரல்; துளையினளவு, நெல்லரிசி அளவு அல்லது நெல்லரிசியில் ஒரு பாதி என்றறியலாம். துளையிடும்போது வெண்கலத்தாலே அணைசு பண்ணி, இட முகத்தை அடைத்து வலமுகம் வெறுமையாய் இருக்க வேண்டும் என்று பஞ்சமரபு

உரையாசிரியர் கூறுகிறார். அடியார்க்கு நல்லார் உரையின்படி' நெல்லரிசியில் ஒரு பாதி மரனிறுத்திக்கடைந்து வெண்கலத் தாலே அணைசு பண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்.

இங்குக் குறிப்பிட்டுள்ள விரலளவு, பேராசிரியர் திரு[4] சாம்ப மூர்த்தியின் கருத்துப்படி தற்கால அளவில் ஓர் அங்குலத்தில் 5/8 பங்கினை ஒத்துள்ளது.

> "இருவிரல்க ணீக்கி முதல் வாயேழ் நீக்கி
> மருவு துளையெட்டின் மன்னும்-பெருவிரல்கள்
> நாலைந்து கொள்ளப் பரப்பென்ன நன்னுதலாய்
> கோலஞ்செய் வங்கியத்தின் கூறு"

என்னும் வெண்பாவில் வங்கியத்தின் துளையளவு இலக்கணம் உணர்த்தப்படுகிறது.

முன்னர்க் குறிப்பிட்டது போல், வங்கியத்தின் நீளம் 20 பெருவிரல்கள் அளவு. வங்கியத்தின் இடது பக்கத்தில் (தூம்பு முகம்) இரண்டு விரலளவு இடம் நீக்கி முதல் துளை இட வேண்டும். இத்துளை வடமொழியில் 'முகரந்த்ரம்' எனப்படு கிறது. இதனைப் பஞ்சமரபு நூல் 'முதல்வாய்' எனக் கூறு கிறது. இதிலிருந்து ஏழங்குல இடம் விட்டு, வலப்பக்கத்தி லிருந்து இரண்டு விரலளவு இடம் நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலளவு இடத்திலும் எட்டுத் துளைகள் இடவேண்டும். அவற் றுள் ஒன்றை 'முகத்தினளவு' என்று கழித்து ஒருவிரல் எனக் கொண்டு, மற்ற ஏழு துளைகளிலும் விரல் வைத்து ஊத வேண்டும். முகத்தினளவு என்பது 'முத்திரை' என்றும் பொருள் படுகிறது. முதல்வாய் அருகிலுள்ள விரல் துளை, வடமொழி யில் 'தாரரந்தரம்' எனப்படும்.

சங்ககால இலக்கியங்களுள் ஒன்றான [5]பரிபாடலில் ஏழு துளையுடைய குழலைத் தவிர ஐந்து துளையுடைய குழல் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

ஏழு விரல்களாவன: இடக்கையிற் சுட்டுவிரலும் (ஆள் காட்டி விரல்) நடுவிரலும், மணிவிரலும் (மோதிர விரல்)

வலக்கையில் பெருவிரலைத் தவிர மற்ற நான்கு விரல்களுமாக ஏழுவிரலுமாகும். இவ்விவரம் பின்வரும் வெண்பாவில் இருந்து அறிய முடிகிறது.

“வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித்
துளையேழி னின்ற விரல்கள் விளையாட்
டிடமூன்று நான்கு வலமென்றார்கா ணேகா
வடஞான்ற மென் முலையாய் வைப்பு'' (வைத்து)

தற்கால இசைமுறையிலும் இம்முறையிலேயே ஏழு விரல்களும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

வங்கியத்தில் இசை பிறத்தல்

''சரிகம பதநி யெனுஞ் சத்த வெழுத்தால்
வரிபரந்த கண்மடவாய் வைக்கத் - தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிதனுள்ளே பண்பிறக்குஞ்
சூழ் முதலாய்ச் சுத்தத் துளை''

என்னும் வெண்பா, வங்கியத்தில் இசை பிறத்தலை உணர்த்துகிறது. வங்கியத்தில் ‘சரிகமபதநி, என்னும் ஏழு எழுத்தால் இசை பிறக்கும் இந்த ஏழு எழுத்துக்களையும், மாத்திரைப் படுத்தித் தொழில் செய்கையில் ஏழிசையும் பிறக்கும். அதனுள்ளே பண் பிறக்கும்.

பஞ்சமரபு உரையில், சரிகம பதநி என்னும் ஏழு எழுத்துக்களின் பெயர் வரிசைகளாக, இளி, விளரி, தாரம், குரல் துத்தம், கைக்கிளை, உழை என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவை வடமொழிப் பெயர்களான சட்சம், ரிடபம், காந்தாரம் மத்திமம், பஞ்சமம்,தைவதம், நிடதம் என்பதுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. இவ்வுரைக்குப் பொருந்த, [6]விபுலானந்த அடிகள் தம் நூலில், சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, நாரத சிக்ஷா, சங்கீத ரத்னாகரம் ஆகிய நூல்களின் துணைக்கொண்டு ஏழிசைகளை அவற்றின் ஓசைகளின் அடிப்படையில் சட்ஜம், ரிடபம் போன்ற வட மொழிச்சுரங்களோடு ஒப்பிட்டு முடிவுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தியுள்ளார்.

இளி	—	மயில், தவளை	—	ஷட்ஜம்
விளரி	—	பசு	—	ரிஷபம்
தாரம்	—	ஆடு	—	காந்தாரம்
குரல்	—	வண்டு, கொக்கு	—	மத்திமம்
துத்தம்	—	கிளி, குயில்	—	பஞ்சமம்
கைக்கிளை	—	குதிரை	—	தைவதம்
உழை	—	யானை	—	நிஷாதம்

இதில் குரல், வடமொழி நூல்களின் மத்திமத்தோடு பொருந்தியிருப்பது நோக்கற்குரியது. இதன் அடிப்படையில் விபுலானந்தர் மேலும் ஆய்வு செய்து வடமொழியின் ஷட்ஜ கிராமம் பண்டைய தமிழ் இசையின் இளிக்கிரமமே' என்றும் நிறுவியுள்ளார்.

பஞ்சமரபு நூல், உரைகளில் கூறப்பட்டுள்ள முறையில், வங்கியத்தின் ஏழு துளைகளிலும் வாயினால் காற்றைச் செலுத்தி ஏழு விரல்களினால் சரிகம பதநி என்னும் ஏழு எழுத்துக்களை இசைக்கும் போது வெளிப்படுவது 28 ஆவது மேள கர்த்தாவான ஹரிகாம்போதியாகும்.

வங்கிய இசைத்தொழில் முறையும், வங்கியம் இசைக்கும் நிலையும் பஞ்சமரபு நூல்—உரைகளில் காணப்படவில்லை. இவ்விபரங்களைத் தற்போதைய நிலையில் வங்கியம் இசைக்கும் முறையின் அடிப்படையில் இங்கு விளக்குதல் பொருந்தும்.

குழலூதும் கண்ணன் படங்களில் சித்திரித்திருப்பது போன்று,குழற்றுளைகள் கீழ் உதட்டின் நடுப்பகுதியில் பொருந்தும்படி, சிறிது சாய்வான நிலையில் வைத்து குழல் இசைக்கப் படுகிறது. பொதுவாக, இக்கருவி உதட்டின் வலப் பக்கத்தில் வைத்து வாசிக்கப்படும். இதனை உதட்டின் இடப் பக்கமாக வைத்து வாசிப்போரும் சிலருண்டு.

பெருவிரல்கள் இரண்டும் குழலை அதன் நிலையில் வைத்திருக்க, இடக் கையின் மூன்று விரல்களும் (சுண்டுவிரலைத் தவிர) வலக்கையின் நான்கு விரல்களும் துளைகளை மூடித் திறப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இடக்

கையின் விரல் நுனிகளும், வலக்கை விரல்களின் நடுப் பகுதி களும் (knuckle Joint)s துளைகளை மூடுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

இடக்கையின் சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகிய மூன்றும் முறையே, முதல் மூன்று துளைகளையும் மூடுவதற்குப் பயன்படுவதால் இவை முதலாம், இரண்டாம், மூன்றாம் விரல் கள் எனப்படும். இவ்வாறே வலக்கையின் நான்கு விரல்களும் (சுட்டு விரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டு விரல்) அடுத்த நான்கு துளைகளையும் மூடுவதற்குப் பயன்படுவதால் இவை முறையே நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம் விரல்கள் எனப் படும். வலப் பக்கத்திலுள்ள எட்டாவது துளை திறந்தவாறு இருக்கும். இது மென் இயக்குதுத்தம் (மந்த்ரஸ்தாயி ரிஷபம்) வாசிக்கும்போது பயன்படும். அப்போது இடக்கையின் சுண்டு விரல் 4ஆவது துளையையும், வலக்கையின் நான்கு விரல்களும் முறையே 5, 6, 7, 8 ஆவது துளைகளையும் மூடுவதற்குப் பயன்படுத்தப்படும்.

குழற்றுளையின் வழியாகக் காற்றை வாயினால் செலுத்தி ஏனைய துளைகளை விரல்களினால் மூடித் திறப்பதால் இன்னிசை பிறக்கிறது.

சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுகாதையில் காணப்படும் ‘யாழ்மேற் பாலை இடமுறை மெலியக் குழன் மேற்கோடி வல முறை மெலியர’ என்னும் குறிப்பிலிருந்து குழலில் இளியை(ப) ஆதார சுரமாக வைத்து வாசிக்கும்போது கோடிப்பாலை கரகரப்பிரியா பிறக்கிறது என்று தெரிகிறது. இதனை, குழலி சைக்கும் முறையில் வல முறையில் அவரோகணமாகவும், இட முறையில் ஆரோகணமாகவும் இசைக்கப்படுவதைக் குறிப்ப தாகக் கொள்ளலாம். த⁷ற்போதைய முறையின்படி மூன்றாவது துளை ஆதார சுரமாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு இடப் பக்கத்திலிருந்து மூன்றாவது துளையை ஆதார சுரமாகக் கொள்ளும்போது மென் இயக்கு, சம இயக்கு, வன் இயக்கு ஆகிய மூன்று இயக்குகளிலும் வாசிப்பதற்குச் சுரங்கள் கிடைக் கின்றன. அதாவது ஆதார சுரத்திற்குக் கீழே ஐந்து சுரங்களும் (நிதபமக), வன் இயக்கு குரலுக்கு (ச்) மேலே நான்கு சுரங்

களும் (ரிக்ம்ப்) வாசிக்க ஏதுவாகிறது. இந்த முறையின்படி சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களும் இவ்வாறு இசைக்கப்படு கின்றன.

தற்போதைய முறையில்,

படம்-1



படம்-2



படம்-3

படம்-4

1. முதலிரண்டு துளைகள் மூடி, மற்றவை திறந்திருக்கும் நிலையில் குரல் (ச) ஒலிக்கிறது

2. முதல் துளை மூடப்பட்டு, ஏனைய துளைகள் திறந்தி ருக்கும் நிலையின் நிறை துத்தம் (ரி2) ஒலிக்கிறது.

3. எல்லாத் துளைகளும் திறந்திருக்கும் நிலையில் நிறை கைக்கிளை (க2) ஒலிக்கிறது

4. முதல் துளை தவிர, மற்றத்துளைகள் மூடியிருக்கும் நிலையில் குறை உழை (ம1) ஒலிக்கிறது.



படம்-5

படம்-6

படம்-7

5. முதல் ஐந்து துளைகளும் மூடப்பட்டு இருக்கும் நிலையில் இளி (ப) ஒலிக்கிறது.

6 முதல் நான்கு துளைகளும் மூடப்பட்டு இருக்கும் நிலையில் நிறைவிளரி (த2)ஒலிக்கிறது.

7. முதல் மூன்று துளைகளும் மூடப்பட்டிருக்கும் நிலையில் குறைதாரம் (நி1) ஒலிக்கிறது.

வன் இயக்கு சுரங்கள் (upper octave notes) காற்றைப் பலமாகச் செலுத்துவதன் மூலம் இதே விரல் தொழில்களுடன் இசைக்கப்படுகிறது. இவ்வாறு இசைக்கப்படும் ஏழிசைகள் ஹரிகாம்போதி மேளத்தைச் சேர்ந்ததாகும்.

தற்போது 4, 4½, 5, 5½ கட்டை சுருதிகளுக்குப் புல்லாங்குழல் அமைக்கப்படுகிறது. புல்லாங்குழல், அதிவேகமாக இசைக்கும் பாடல்களைச் சுலபமான முறையில் வாசிக்கக் கூடிய திறன் கொண்டது.

[8]சிலப்பதிகாரத்தின், இந்திரவிழவூரெடுத்த காதையில் 'மூவகை வங்கியத்திலும் நால்வகை யாழினும் பிறக்கும்...' என்னும் குறிப்பு காணப்படுன்றது. இதிலிருந்து அக்கால வழக்கில் மூன்று வகை வங்கியம் இருந்ததாகத் தெரிகிறது. இவற்றுள் ஒன்று 'பெருவங்கியம்' எனக் கொள்ளலாம். இக்கருவி தற்கால வழக்கிலுள்ள நாகசுரம் என்பதுடன் பொருந்துவதாக உள்ளது என்பது சில அறிஞர்களின் கருத்து.

மங்கல வாத்தியம் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்ட நாகசுரம், ஆரம்ப காலத்தில் திமிரி என்றும், அடுத்த சில காலங்கட்குப் பின் இடைபாரி என்றும் தற்பொழுது பாரி என்றும் வழக்கிலிருந்து வருகிறது. இது சுமார் $2\frac{1}{2}$ அடி நீளம் உடையது. இதில் ஏழு சுரங்களுக்கு ஏழு துளைகளும், ஐந்து பிரம்ம சுரங்களுக்கு ஐந்து துளைகளும் கூடி 12 சுரங்கள் உள்ளன. இதில் மந்திரஸ்தாயி காந்தாரம் முதல் தாரஸ்தாயி காந்தாரம்வரை சஞ்சாரம் செய்ய முடியும்.நாகசுரத்திலிருந்தே முகவீணை, ஷெனாய் போன்ற கருவிகள் உருப் பெற்றதாகச் சிலர் கருதுகின்றனர்.

[10]சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் உள்ள

> ''குழல் வழிநின்றது யாழே
> யாழ் வழி தண்ணுமை நின்றது''

என்னும் குறிப்பில், குழலை முன் வைத்துக் கூறியதிலிருந்து அதனை முதல் ஓசையாகக் கொண்டு பிற கருவிகள் இயங்கின என்று தெரிகிறது. தற்போது [11]பல்லியம்(orchestra) என்பதில் குழலின் சுருதிக்கே மற்ற இசைக் கருவிகள் சுருதி சேர்க்கப் படுகின்றன என்பது ஒப்பு நோக்கற்குரியது.

இவ்வாறு,இசைக்கருவிகளுள் முதன்மையானதாகத் திகழும் புல்லாங்குழல் எனப்படும் வங்கியத்திற்கு இலக்கணம் வகுத்தது பஞ்சமரபு என்னும் போது இந்நூலின் பெருமை சிறக்கிறது.

துணைக் குறிப்புக்கள்

1. திருத்தொண்டர்மாக்கதை —ஆனாயநாயனார் புராணம் செய்யுள் 29. கழகவெளியீடு 1977.

2. "வாரி வங்கிய மற்றிவை இசைக்குழல்" பிங்கல நிகண்டு. சூ.1428.

3. Vaithilingam, S. 1977. **Fine arts and Crafts in pathup-pattu and Ettu-t-togai**, Annamalai University, p. 45.

4. Sambamurti,p.1982. **The Flute**, The Indian Music Publish_ing house, p-47.

5. பரிபாடல் - மூலமும் உரையும், கழகவெளியீடு, 1975.

6. விபுலானந்த அடிகள் இயற்றிய **யாழ்நூல்**,1974. கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை, பாயிரவியல். பக்கம்.5

7. பேராசிரியர் து.ஆ. தனபாண்டியன் அவர்களுடன் உரையாடிய போது அவர் கூறிய கருத்து.

8. சிலப்பதிகாரம் - இந்திர விழவூரெடுத்தகாதை -அடி. 35-7 அடியார்க்கு நல்லார் உரை.

9. அருணாசலம், மு. 1985. **கர்நாடக இசை தமிழிசை ஆதி மும்மூர்த்திகள்**,யு.சுப்ரமண்யம், தஞ்சை. பக்கம்.28

10. சிலப்பதிகாரம் - அரங்கேற்றுகாதை, அடி 139.

11. Sambamurti, p.1973 South Indian Music Book, III, Madras Indian Music Publishing House, p.278.

இயல்: ஆறு

கண்டமரபு

நரம்பிசை, குழலிசை, மிடற்றிசை என்னும் மூவிசைகளுள் ஒன்றான மிடற்றிசையை யாழ், குழல் போன்ற கருவிகளோடு இணைத்துக்கூறிய பெருமை தமிழருக்கே உரியது. இதன் காரணமாக மிடறு, சரீர வீணையென்றும், சாரீர வீணையென்றும் அழைக்கப்பட்டது. சிலப்பதிகார உரையிலும், இசைக் கருவிகளைப் பற்றிய பகுதியில் மிடற்றுப்பாடலும் இடம் பெறுகிறது. இது தற்போது வாய்ப்பாட்டு என்றழைக்கப் படுகிறது. மிடற்றுப் பாடலைக் குறித்த [1]சிலப்பதிகார அரும் பதவுரை வருமாறு, "மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலால் கிளப்பிக் கருத்தால் இயக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண் நீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்கு அமைந்த மிடற்றுப்பாடல்" இதில் ஓசையோடு இசைந்து செல்லும் கருத்தின் இயக்கம் எடுத்துக் காட்டப் பெறுகின்றது. மிடற்றுப் பாடல், பாடலியலுக்கு உரியது என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

இவ்வியலில் பாடலியலுக்கு உரித்தான மிடற்றிசையைப் பற்றிப் பஞ்சமரபில் ஆங்காங்கு கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்து மூன்று பிரிவுகளாக ஆராயப்படுகிறது. இசை தோன்றுவதற்கு முதற் சாதனமான உடற்கூறுகள் பற்றிய செய்திகள் முதற் பிரிவில் அடங்கும். இவ்வுடம்பில் ஓசை எவ்வாறு பிறக்கிறது என்பதும், ஓசையை எவ்வாறு தொழிற் படுத்திப் பாடுவது என்பதும், ஆளத்தி இலக்கணங்களும் இரண்டாம் பிரிவிலடங்கும். பிரிவு மூன்றில் மிடற்றிசைக்கு உரியதான பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள பிற செய்திகள் அடங்கும்.

பிரிவு-அ

மனித உடம்பே பிறப்புக்கும் முத்திக்கும் வித்து. இசையும்,

முத்திக்குத் துணை செய்யும். ஆதலால் இவ்வுடம்பில் இசை எவ்வாறு பிறக்கிறது என்பதனை அறிவது அவசியம். இது தொடர்பாகப் பஞ்சமரபு - இசைமரபின் கண்டமரபில், உடம்பின் ஐம்பொறிகளும் எவ்வாறு தோன்றுகின்றன என்றும், அஃற்றில் உணர்வுகள் (ஐம்புலன்கள்) எவ்வாறு வழங்கப் படுகின்றன என்றும், இவ்வுடம்பில் ஓசைக்குரிய இடங்களும் ஓசை எவ்வாறு பிறக்கிறது என்பது குறித்தும் பதினான்கு வெண்பாக்களில் விளக்கப்படுகின்றன.

ஐம்பூதங்களும் மனித சரீரமும்

ஐம்பெரும் பூதங்களான மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவற்றைச் சாதனமாகக் கொண்டு 'புற்கலம்' என்கிற உடம்பு உண்டாக்கப்படுகிறது. இவ்வுடம்பு தோன்றுவதற்கு முதற் கருவியான பஞ்சபூதங்கள் ஒன்றோடொன்று கூடும் தன்மையுடையனவல்ல. ஒவ்வொன்றும் தனித்தன்மையும்,குணமும் உடையவை.

மண் – செறிதல் தன்மை கொண்டது; ஐந்து குணமுடையது
நீர் – நெகிழ்தல் தன்மை கொண்டது; நான்கு குணமுடையது
தீ – தெறிதல் தன்மை கொண்டது; மூன்று குணமுடையது
காற்று – ஓரிடத்தில் நிலைபெற்றதன்று; இரண்டு குணமுடையது
ஆகாயம் – உருவமன்று; ஒரு குணமுடையது

மேற்கூறியவற்றின் கூட்டமே உடம்பு என்றதால் இவை எவ்வாறு உடம்பாகிறது என்பதைப் பஞ்சமரபு நாலிலும், உரையிலும்இரண்டு விதங்களில் விளக்கப்படுவதைக் காணலாம்.
(1) அன்ன மயமாகிய சுக்கில சுரோணிதங்களாலே பூதங் களைந்தும் தத்தந்தன்மை நீக்கி

மண் - உடம்பாகவும்
நீர் - வாயாகவும்
தீ - கண்ணாகவும்
காற்று - மூக்காகவும்

ஆகாயம் – செவியாகவும், உடலின் ஐம்பொறிகளைக் குறித்து நிற்கின்றன. இவ்வைம்பொறிகள் தோறும் முறையே ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகிய ஐம்புலன்கள் வழங்கப்பட்டு

மண்ணால் உடம்பு ஊறாயும்
நீரால் வாய் சுவையாயும்
தீயாற் கண் ஒளியாயும்
காற்றால் மூக்கு நாற்றமாயும்
வானாற் செவி ஓசையாகவும் வந்து

தேவ வர்க்கத்தால் உடம்பாயிற்று

(2) மேலும் பஞ்ச பூதங்களும், உடம்பின் கூறுகளாக எவ்வாறு அமைகின்றன என்பது பஞ்சமரபு நூலிலும் உரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்ணின் கூறு 5 – நரம்பு, இறைச்சி, எலும்பு, மயிர், தோல்
நீரின் கூறு 5 – நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிரம்
தீயின் கூறு 5 – பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர்வேட்கை
காற்றின் கூறு 5 – போக்கு, வரவு, நோய், கும்பித்தல், மெய்ப் பரிசம்
ஆகாயத்தின் கூறு 5 – வெகுளி, மதம், மானம், ஆங்காரம் உலோபம்

ஆக இவ்விருபத்தைந்தினையும் அகக்கூறாகக் கொண்டது உடம்பாகும்.

ஐந்து பூதங்களாலும், சத்தம் முதலாகிய, ஐம்புலன்களாலும் மெய் முதலாகிய ஐம்பொறிகளாலும் மேற்கூறிய 25(வாதனைகளும்) பகுதிகளும் சேர்ந்தது பூத பரிணாமம் எனப்படும்.

இவ்வுடம்பு பத்து விதமான வாயுக்களைஆதாரமாகக் கொண்டு 10 விதமான நாடிகளால் நிலைபெற்றுள்ளது. இவை முறையே தச வாயுக்கள், தசநாடிகள் எனப்படும்.

பத்து (தச) நாடிகள்: இடை, பிங்கலை, சுழுனை, காந்தாரி அத்தி சிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னியலம் புடை.

மூலாதாரத்தில் எழுபத்தீராயிரம் நரம்புநாடிகள் உள்ளன. இவற்றுள் இடை பிங்கலை முதலான தசநாடிகளே முக்கிய மானவையாகும். எழுபத்தீராயிரம் நரம்பு நாடிகளும் பீர்க்கங் கூடு போன்றிருக்கும். அப்பீர்க்கங் கூட்டின் மூன்று கண்ணும் போல இடைகலை, பிங்கலை, சுழுனை என்னும் மூன்று நாடி களும் உள்ளன. இவற்றுள் இடைகலை என்பது மூக்கின் இடப் பக்கத்தில் நிற்பது; பிங்கலையென்பது மூக்கின் வலப் பக்கத்தில் நிற்பது.

பத்துவாயுக்களாவன: பிராணன், அபானன், வியானன் சமானன் கிருகரன், உதானன், தனஞ்சயன், நாகன், கூர்மன், தேவதத்தன்

தச வாயுக்களில் **பிராணவாயு** என்பது இடை, பிங்கலை என்னும் இரண்டு நாடிகளால் மேல் நோக்கியேறி மூக்கின் இரண்டு பக்கத்திலும் [2]ஐந்து நாழிகையாகக்கொண்டு ஒரு [3]மாத்திரையுள் 125 சுவாசமாய், ஒரு சுவாசத்திலே 12 அங்குல அளவு ஆதாரத்தினின்றும் புறப்பட்டு நாலங்குலம் தேய்ந்து எண்விரல் அடங்கி நிற்பது.

மல ஜலங்களைப் போக்குவது **அபான வாயு**. இது மலத்து வாரம், வயிறு, நாபி, முழங்கால், தொடை, கணைக்கால் ஆகியவற்றில் வியாபித்து நிற்பது.

நாடிகள் எல்லாவற்றிலும் கலந்து வியாபித்துப் போக்கு வரவு செய்து இயங்கச் செய்வது **வியானன்**. நான்குவகை அன்ன விதங்களையும், அறுவகைச் சுவைகளையும் மூன்று கூறுபடுத்தி இரதம், உதிரம், எலும்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம் ஆகிய எழுவகைத்தாதுவினும் சேர்த்து நிற்பது **சமானன்**. கோபத்தை விளைவிப்பது **கிருகரனாம்**.

மூலாதாரத்தினின்று நால் விரல் விட்டு நாபியை ஆதார மாகக் கொண்டெழுந்து நெஞ்சு, தலை, கண்டம், மூக்கு என் னும் இவற்றினிடங்களிற் பொருந்தியும் பல், நா, அண்ணம், இதழ் என்னும் உறுப்புகளின் முயற்சியாலும் எழுத்துக்களைப் புலப்படுத்துவது **உதானன்**, பிராணன் போன பின்பு உடம்பை

விடாமல் பற்றி நின்று மூன்றாம் நாள் உதிப்பித்து உச்சந் தலையின் பின் பாகத்திலே மூன்று நெல்அளவில் வெடித்து வெளியேறுவது **தனஞ்சயன்.**

விக்கல் போன்ற செயலைச் செய்வது **நாகன்.** இமைப்பும், விழிப்பும் உறக்கமும், உணர்ச்சியும் செய்விப்பது **கூர்மன்,** உடலில் எரிப்பை உண்டாக்குவது **தேவதத்தன்.**

இவ்வாறு பஞ்சபூதங்களாலும், ஐம்பொறிகளாலும், வாயுக களாலும், நாடிகளாலும் பரிணமித்துச் சுக்கில சுரோணிதங் களை உடம்பாகக் கொண்டு இருவினையும், தன்னகத்தடக்கி உயிர் பிறக்கும்.

பிரிவு-ஆ

ஓசை, ஈசனுக்கு ஒப்பானது என்று சொல்லும் வழக்கு உலகில் உள்ளதால் உயிருள்ள இச்சரீரத்தில் ஓசையின் அளவும், சரீரத்திலோசை எவ்வாறு பிறக்கிறது 'என்பதும், இவ்வோசை ஆளத்தியாகும் விதமும், ஆளத்தி இலக்கணத்தைப் பற்றியும் பஞ்சமரபு இசைமரபின் உட்பிரிவான கண்டமரபில் விளக்கப் படுகிறது.

சரீரத்தில் ஓசையின் அளவு

இவ்வுடம்பில் இசைக்குரிய சரீரத்தளவு தன் விரலால் தொண்ணூற்றாறங்குலம். இதனுள் மேலே நாற்பத்தேழரை யங்குலமும், கீழே நாற்பத்தேழரையங்குலமும் விட்டு நடுவில் நின்ற ஒரங்குலம் மூலாதாரமாகும். இதுவே இசைக்குப் பிறப் பிடமாயுள்ள **ஆதாரம்.** இதன்மேல் நான்கு விரல் விட்டுப் பின்னாதாரம் நின்றியங்கும்.

சரீரத்திலோசை பிறத்தல்:

மூலாதாரத்தைப் பற்றி உபதேச வித்தாகிய "ஓம்" என் னும் இரண்டெழுத்தாலாகிய ஓங்கார நாதமானது பின்வரு மாறு பிறக்கும்:

'அசைவ' முதலாகிய 'அ' என்ற உயிரெழுத்தின் கண், மூலாதாரம் தம் மெய்யெழுத்துக்களை முற்கொண்டு உந்தி,

இடை, பிங்கலை ஆகியவற்றின் ஆதாரத்தில் வந்து மேலோங்கும்.

ஐ வகைப் பூதங்களினால் ஆன இச்சரீரத்தில் உயிரெழுத்து மெய் எழுத்துக்களால் பிறக்கும் இவ்வோசை மனித உறுப்புக்களுள் ஒன்றான மிடற்றால் தொழிற்படுத்தப்படுகிறது.

சரீரத்திலெழும் ஓசையை மிடற்றால்(கண்டத்தால்)தொழிற்படுத்திப் பாடுகையில், ஆளத்தி என்றழைக்கப்படுகிறது. இது சொற்கள் இல்லாத இசையை விரிவாகப்பாடும் முறையைக் குறிக்கிறது. தற்கால வழக்கில் ஆளத்தி 'ஆலாபனை' என்றழைக்கப்படுகிறது. இந்த ஆலாபனையானது வீணை யாழ் போன்ற கருவிகளிலும் தொழிற்படுத்தப்படும். எனினும் பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள ஆளத்தி இலக்கணம் மிடற்றிசைக்கே பொருந்தும்.

ஆளத்தி இலக்கணம்

ஆளத்தி செய்யும்போது முதலில் மகரத்தின் ஒற்றால் நாதத்தை உச்சரித்துக் கொள்ள வேண்டும். நாதம் தொழிற் செய்யப்படும்போது குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப்படும். அவை அச்சு, பாரணை எனப்படும்.

அச்சுக் கெழுவாய் அ, இ, உ, எ, ஒ, ஆகிய குற்றெழுத்துக்கள். இவற்றைப் பற்றுக்கோடாக நின்ற அகாரத்தோடும் தாளத்துடனும் நிகழ்வது.

பாரணைக் கெழுவாய் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகிய நெட்டுயிர்கள். இவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு விசாலமாக அளவுபடாத ஓசையுடன் நிகழ்வது. இது கூத்துடன் நிகழும்.

ஆளத்தி செய்யுமிடத்து தென்னா வென்றும், தெனாவென்றும், தென்னா தெனா என்றும் பாடப்படும்.தென்னா, தெனா என்னும் சொற்கள் அசைச் சொற்களாம். இவ்வசைச் சொற்களே இக்காலத்தில் தானா, தனா, தானா என்று திரிந்து பண்களுக்குரிய கட்டளைச் சொற்களாகவும், சந்தக் குழிப்பு அமைத்

தற்குரிய சொற்களாகவும் கையாளப்படுகின்றன என்பது அறியத்தக்கது.

ஆளத்தி செய்யும்போது கையாளப்படும் எழுத்துக்களாவன.

அ, இ, உ, எ, ஒ—ஐந்து குற்றெழுத்துக்கள்

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ—ஐந்து நெட்டெழுத்துக்கள்

மெய்யெழுத்துப் பதினெட்டனுள், ம, ந, த ஆகியவை. மொத்தம் 13 எழுத்துக்களாகும். இவையன்றிப் பிற எழுத்துக்கள் ஆளத்திக்கு வரப்பெறாது.

ம ம ம, ம ம ம, மம மமா எனவும்

நன, நன, நனனா, நனன, நனனா எனவும் த, தா, தி, தீ,

தெ, தே, தன, தனனா, தனா, தென, தெனா, தென்னா, எனவும் குற்றெழுத்தும், நெட்டெழுத்தும் மூன்று திற வினமும் வரப்பெறும்.

மேற்கூறிய எழுத்துக்களாலே, அழகுபட நீள வைத்து எட்டுத்தானங்களிலும் வன்மை, மென்மை சமன்பட நின்று தொழிற்படுத்த ஆளத்தியாகும்.

ஆளத்தி வகைகள்

ஆளத்தி மூன்று வகைப்படும். அவையாவன. காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி. காட்டாளத்தி என்பது அச்சுடனிகழும். இது கமகமான அகாரத்துடன் தஅஅ, நஅஅ, தத்தத் தஅஅ, நம் தத் தஅஅ என்று பாடுவது. தற்காலம் இதைத் தானம் என்பர். நிறவாளத்தி என்பது நிறங்குலையாமற் பாரணையுடன் நிகழ்வது. நிறம் என்பது சொற்களால் ஆக்கப் பெறாத ஒலியும், ஒலித் தொகுதிகளுமாகும். இது தற்காலத்தில் நிகழ்த்தும் இராக ஆலாபனையை ஒத்தது. 'பாரணை கூத்துடனிகழும்' என்றிருப்பதால் பண்டைய தமிழர் இராக ஆலாபனையைக் கூத்துடனிகழ்த்தினர் என்று தெரிகிறது. தற்போதுள்ள நாட்டிய நிகழ்ச்சிகளில் இராக ஆலாபனைக்கு அபி

நயமோ, நிருத்தமோ செய்யும் வழக்கு பெரும்பாலும் இல்லை. ஆனால் நிறவாளத்தி என்பது தற்போது சொற்களுடன் கூடிய விருத்தம் பாடும் முறையாகவும். பாடல்களில் நிரவல் செய்யு முறையாகவும் வந்திருக்கலாம் எனக் கருதலாம்.

பண்ணாளத்தியாவது பண்ணையே கருதி வைக்கப்படும். பண்களைப் பாவோடு இணைத்துப் பாடுவதைக் குறிக்கும். இசை உருப்படிகளைப் பாடுவதாகக் கொள்ளலாம். பஞ்சமர பின் இப்பகுதி வெண்பா, உரை விளக்கங்களிலிருந்து, தற்போதுள்ள கர்நாடக இசையின் மனோதர்ம சங்கீதம், கல் பித சங்கீதம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகள் ஏற்படுவதற்கு மேற்கூறிய காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி முதலிய பண்டைய இசைத்தமிழின் ஆளத்தி வகைகளே காரணம் என்றறிய முடிகிறது.

பண்ணீர்மை

ஆளத்தி செய்யும் பொழுது ஒவ்வொரு இராகத்திற்கும்பண் நீர்மை (பாடுவதற்கான முறைமை) கூறப்பட்டுள்ளது. அவை பதினொரு வகைப்படும். முதல், முறை, முடிவு, நிறை, குறை வலிவு, மெலிவு, சமன், வரையறை, நீர்மை, கிழமை, ஆகியவை. இவை முறையே கிரகம், அம்சம், நியாசம், பகுத்வம், அல்பத் வம், தாரம் மந்தரம், மத்யமம். வின்யாசம் என்று வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ளன. பண் நீர்மை பஞ்சமரபு நூலி லோ, உரையிலோ காணப்படவில்லை. இருப்பினும் இவை இசைமரபுக்குரியனவாகையால், இவற்றின் விளக்கத்தை இங்குக் கூறுதல் பொருந்தும்

முதல் (கிரகம்) இராகம் தொடங்கும்போது எந்தச் சுரத்தை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்கிறோமோ அது, 'முதல்' எனப்படும். **முறை** (அம்சம்) இராகத்தின் உயிர் போன்ற இசை(சுரம்); இராக உருவத்தை அடிக்கடி காட்டும் படியான சுரம். **முடிவு**(நியாசம்) இராகத்தின் முடிவு சுரம்.

நிறை – (பகுத்வம்) முற்றிசை. இராகத்தில் மிகுதியாக உச்சரிக்கின்ற சுரம். **குறை** (அல்பத்வம்) குறைவாக பயன்படுத் தும் சுரம். **வலிவு** (தாரம்) உச்சநிலையில் பாடுவது. **மெலிவு**

(மந்தரம்) தாழ்ந்த நிலையில் பாடுவது. சமன் (மத்யமம் வலிவிற்கும், மெலிவிற்கும் இடையில் பாடுவது.

வரையறை (விந்யாசம்) ராகத்தைப் பிரிவுகளாக்கிப் பாடும்பொழுது ராக விளக்கம் அடிக்கடி தோன்றப் பாடுவது. **நீர்மை** என்பது சுரங்களின் குணம். இராகத்தை அதன் உருவம் வண்ணம் கலையாமல் பாடுவது. **கிழமை**-இயைபு இசை. பொருந்தும் சுர இணைப்பால் பாடுவது.

மேற்கூறிய 11 இலக்கணங்கள் அனைத்தும் இராக ஆலாபனம் என்று சொல்லக் கூடிய நிறவாளத்திக்கே பொருந்தும் எனக் கொள்ளலாம். இராக ஆலாபனைக்குரிய அங்கங்களாக ஆக்ஷிப்திகா, ஸ்தாபனம் என்ற இரண்டுவகை வடமொழி நூல்களில் காணப்படுகின்றது. ஆக்ஷிப்திகா என்பது முன்னுரை போன்றது. தமிழிசையில் இது ஆயத்தம் என்று வழங்கப்படுகிறது. ஸ்தாபனம் என்பது நிலை நிறுத்துதல், பூர்த்தி செய்தல்.

பிரிவு – இ

பஞ்சமரபில் பாடுவதற்குரிய இன்னொலிகள், பாடுதற்காகாத ஒலிகள் - மிடற்றுக்கேற்ற மருந்துகள், மிடற்றுக்காகாதவை - அரங்குகளில் பாடத்தகுதியுடையவர், தகுதியிலாதவர்—ஆடலரங்கத்தில் கண்டத்தால் தொழில் செய்வோருடைய தகுதிகள்—யாழ் வீணை போன்ற கருவிகளின் நல்ல இயல்புகள் ஆகிய விவரங்கள் ஏழு வெண்பாக்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை மிடற்றிசைக்கே உரியனவாதலால் இவ்விவரங்களைத் தொகுத்து இங்கு உரைத்தல் பொருந்தும்.

பாடுவதற்குரிய இன்னொலிகள்

தும்புரு, நாரதரால் பாடப்பட்ட ஓசைகள், குயில் கூவுவது போலவும், வண்டின் முரற்சியைப் போன்றும், வலம்புரியோசையை ஒத்ததாகவும் இருந்ததாக நான்கு வேதங்களில் சொல்லப்பட்டுள்ளன. எனவே இம்மூவோசைகளும் சிறப்பான

ஓசைகள் (உத்தமவோசை) என்று பஞ்சமரபு உரையில் கூறப்பட்டுள்ளது.

> [4]கல்லாடர் இயற்றிய கல்லாடத்தில்,
> "வண்டின் தாரியும் கஞ்ச நாதமும்
> இரல் வான் நிலையும் கழை இலை வீழ்வதும்
> அருவியோசையும் முழவின் முழக்கமும்
> வலம்புரிச் சத்தமும் வெருகின் புணர்ச்சியும்
> இன்னும் என்றிசைப்பப் பன்னிய விதியோடு
> மந்திரம் மத்தியம் தாரம் இவை மூன்றும்
> துள்ளல் தூங்கல் தெள்ளிதின் மெலிதல்
> கூடிய கானம் அன்பொடு பரவ"

என்கிற தொடரில் இசைக்கு அழகு மேற் கூறிய பத்து இயல்புகளாகும் என்று உணர்த்துகிறார். இவை இறந்துபோன இசை மரபு முதலான பண்டைய இசை நூல்களில் விளங்கச் சொல்லப்பட்டிருந்தன என்பது உரையாசிரியர்கள் தரும் மேற்கோட் செய்யுட்களால் தெரிகின்றது. யாழ், வீணை போன்ற கருவிகளில் இசைக்கும்போது கிச்சிலியாகிய நீர் மேற்பறவை போலவும், பூனையின் உறுமல் போலவும், முழவின் முழக்கம் போலவும், அருவியோசை போலவும், மூங்கிலிலை விழுகிற தொழில் போலவும், வானம்பாடி என்கிற பறவை போலவும் இசைப்பது இயல்பானது என்று பஞ்சமரபில் கூறப்பட்டுள்ளது.

[5]சீவக சிந்தாமணியின் காந்தருவதத்தை இலம்பகத்திற்கு உரையெழுதுகையில் உரையாசிரியரான நச்சினார்க்கினியர் இறந்து போன இசைமரபு என்னும் நூலிலிருந்து பின்வரும் செய்யுளை மேற்கோளாகக் காட்டுகிறார்.

> "கண்ணிமையயா கண்டந் துடியா கொடிறசையா
> பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரியா—எண்ணிலிவை
> கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
> உள்ளாளப் பாடலுணர்"

இதில் கந்தருவர் பாடும் உள்ளாளப் பாடலிற் கண் இமையாமலும், மிடறு வீங்காமலும், வாய்தோன்றாமலும், பல் தெரியாமலும் இருக்கும் என்பது உணரப்படுகிறது:

மிடற்றுக்கேற்றவை: ஆகாதவை

பாடற்றொழிலுக்குச் சாதனமான சாரீர வீணை எனப் படும் மிடற்றுக்கு எவ்விதமானகெடுதியும் ஏற்படக்கூடாது. அதற்கான வழிமுறைகள். பஞ்சமரபில் பின்வருமாறு குறிப் பிடப்படுகிறது. திப்பிலி, தேன், மிளகு, சுக்கு, இம்பூறல், பசுவின் பால், காடைச்சாறு, வெண்ணெய் ஆகியவற்றை உட்கொள்ளு தல், வெந்நீரில் குளித்தல், நறுமணங்கள் பூசுதல் ஆகியவை செய்யின் மிடற்றிசை குற்றப்படாது.

மேலும் நகை, புகை, எள், காடி (புளித்த கஞ்சி, புளித்த சோற்று நீர்) காமம், நறவு (கள்) ஆகியவை மிடற்றுக்குப் பகையானவை. எனவே இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்றும் பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடுதற்காகாத ஒலிகள்

பாடுதற்காகாத ஒலிகள் எட்டு: அவையாவன பெருக்குரல், கட்டை, நழுவல், விலங்கல், ஒதுங்கல், புரைத்தல், காகுளி காகசுரம்

பெருக்குரல் என்பது—நிறமில்லாதவோசை

கட்டை என்பது—நிறமும் ,தானமும் குறைவாக ஒலிப்பது

நழுவல் என்பது - ஒரு தானத்தில் பாட மற்றொரு தானத் தில் நழுவுவது

விலங்கல் என்பது - ஒரு பண்பாட வேறொடு பண்ணிலே விலகுவது

ஒதுங்கல் என்பது - பாடுகிற நிறத்தையொதுக்கிப்பாடுவது

புரைத்தல் என்பது - ஒரோசையான தன்மை நீங்கிப் பல வோசையாய் வருவது

காகுளி என்பது - பேய் கத்தினாற் போலப் பாடுவது

காகசுரமாவது - காக்கையின் குரலாவது போல் பாடுதல் இவையெட்டும் சிறப்பில்லை என்று பஞ்சமரபில் கூறப்பட் டுள்ளது.

[6]கல்லாடம் இயற்றிய கல்லாடர் என்ற புலவர் இசை பாடுவோன் குற்றங்களாகப் பலவற்றைக் கூறுகிறார்

“வயிறு குழிவாங்கி, அழுமுகம் காட்டாது
நாசி, காகுளி, வெடிகுரல், வெள்ளை
பேசாக் கீழிசை, ஒருபுறம் ஒட்டம்
நெட்டுயிர்ப்பு எறிதல் எறிந்து
நின்று இரட்டல் ஓசை இழைத்தல்
கழிநோக்கு எண்ணப் பேசறு
குற்றம் ஆசொடும் மாற்றி”

மேலும், குரல் வீங்கல், வாய் பிளத்தல், நோக்கம் ஆடுதல், முடி நடுக்கல் ஆகியவையும் குற்றம் என்கிறார்.

அரங்கில் பாடத் தகுதியுடையவன் தகுதியிலாதவன்:

பஞ்சமரபு நூலிலும், உரையிலும் அரங்கத்தில் பாடத் தகுதியுடையவர், தகுதியில்லாதவர் ஆகிய விவரங்கள் காணக் கிடைக்கின்றன.

ஒரு கண் உடையவன், இசை நூல்களில் நல்ல தேர்ச்சி இல்லாதவன், நிறமற்ற ஓசையை உடையவன் (பாவமின்றி பாடுபவன்), வாயை அதிகமாகத் திறப்பவன், தாழ்ந்த குலத்தில் பிறந்தோன், ஒழுக்கமில்லாதவன் ஆகியோர் அரங்கேறிப்பாடத் தகுதியற்றவர்கள்.

உயர்குடியில் பிறந்தவன்; நல்ல ஓசையுடையவன்; வாழ்க்கையில் துக்கமில்லாதவன் சுகமுடையான், உடம்பில் ஊன மில்லா தவன், உடலுறுப்புகளில் மறுவில்லாதவன் ஆகியவர் கள் அரங்கேறிப்பாடத் தகுதியுடையவர்கள்.

மேற்கூறிய இலக்கணங்கள் நடைமுறைக்கு ஒவ்வாதவை. உடல் ஊனம், உயர் குலத்தில் பிறந்தவன், தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் போன்றவற்றை ஒரு குறையாகக் கொள்ள முடியாது. தற்போதைய அரங்குகளில் கண்ணில்லாதவர்கள் பாடுவதும், கருவிகள் இசைப்பதும் அறிதற்குரியவை. மேலும் இங்குக் கூறப்பட்டவை ஆண்களுக்குரியவையாகவே தோன்றுகின்றன. தற்போது இசையரங்குகளில் பெண்களே அதிகமாகப்

பங்கேற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தகுந்தது. எனவே மேற்கூறியவற்றை ஒரு மரபாகக் கொள்ளவியலாது.

மிடற்றுப் பாடல் பாடுவோனை இசையாசிரியன் என்பது வழக்கு. இசையாசிரியன் தகுதியை இளங்கோவடிகள்

[7]"யாழுங் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கிற்
தேசிகத் திருவினோசை கடைப்பிடித்துத்
தேசிகத் திருவினோசை யெல்லாம்
ஆசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபில் இசையோன்......" என்றார்

இப்பகுதியின் அடியார்க்கு நல்லார் உரை வருமாறு

"யாழ்ப் பாடலும் வங்கியப் பாடலும் இருவகைத் தாளக் கூறுபாடுகளும், மிடற்றுப் பாடலும் மந்தமாகிய சுரத்தினை யுடைய தண்ணுமையும், அகக்கூத்துப் புறக் கூத்துப் பதினோ ராடல் என்னும் கூத்துக்களும் வல்லனாய் இவற்றுடனே சேரச் செய்த உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந் தும்படியும் புணர்க்கவும் வல்லனாய் இருவகைப்பட்ட பாடல் களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையுமமைத்துத் தேசாந்திரங்களிற் பாடைகளையும் அறிந்து அந்தப் பாடை கள் இசைபூணும் படியையும் அறிந்து இயற் புலவன் நினைவும் நாடகப்புலவன் ஈடுவரவுகளும் இவற்றுக்கு அடைத்த பாடல் களும் தம்மிற் சந்திப்பிக்கும் இடத்துக் குற்றந் தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனாயுள்ள இசைப்புல வன்"

எனவே மேற்கூறியவற்றையே மரபாகக்கொண்டு பின் பற்றுதல் நன்று.

பஞ்சமரபில் மேலும் ஆடலரங்கத்தில் கண்டத்தால் தொழிற்படுத்தி பாடுபவன் ஒட்டுதல், கட்டுதல், விட்டோசை யாகுதல், நல்லொழுக்கப்பாரணை என்று சொல்லப்பட்ட நான்கு குணங்களோடு பாட வேண்டும் என்று கூறப்படுகிறது.

இதுவரையில் மூவிசையான நரம்பிசை, குழலிசை, மிடற்றிசை ஆகியவற்றின் மரபுகளைப் பஞ்சமரபின் இசைமரபுப் பகுதி வாயிலாக அறிந்தோம். இம்மூன்றும் இசையுடன்(Melody) தொடர்புடையவை என்பது குறிப்பிடத் தக்கது. இசைக் கருவிகளின் மற்றப் பிரிவுகளான தோற்கருவியும், கஞ்சக் கருவியும் தாளத்துடன் (Rhythm) தொடர்புடையனவாதலால் இவை பஞ்ச மரபின் வாச்சிய மரபிலும், தாள மரபிலும் அடக்கிக் காட்டப் பட்டுள்ளன.

பஞ்சமா சத்தம்:

நரம்பு, குழல், மிடறு, தோல், கஞ்சம் ஆகிய ஐந்திடங்களிலிருந்து தோன்றும் ஓசைகள் 'பஞ்சமாசத்தம்' என்று பஞ்சமரபின் வகையொழிபு மரபில் கூறப்பட்டுள்ளது.

இவற்றின் பகுதிகளாவன:

தோற்கருவிகள், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லி, கரடி முதலாயின முப்பது. துளைக் கருவியாவன :- வங்கியம், கொம்பு, தாரை, குழல் (குறுங்குழல், நெடுங்குழல்) காளம், சங்கு. நரம்புக்கருவியாவன:-யாழ், வீணை கின்னரி (கின்னரம்). கஞ்சக் கருவியாவன:-கைமணி, தாளம், கஞ்ச தாளம், கொண்டி (கொடி). மிடற்றுக் கருவியாவன:- கண்டப் பாடல்.

பஞ்ச மரபின் குறிப்புரையில், 'பஞ்சமா சத்தம்' என்பது ஒரு வாய்ப்பாடகருக்கு, அவர் அரங்கில் அமர்ந்து பாடுங்கால், துணைக் கருவிகளாக(பக்க வாத்தியம்)நரம்புக் கருவி ஒன்றும் (யாழ் அல்லது வீணை) துளைக்கருவி ஒன்றும் (குழல்) தோற் கருவிகள் (தோல்) சிலவும், தாளக் கருவி (கஞ்சம்) ஒன்றும் அமைத்துக் கொண்டு இசை வினிகை செய்வது எனப்படும் என்று குறிப்பிடப்படுகிறது.

பஞ்ச மரபில், இசை, வாச்சியம், நிருத்தம், அவிநயம் தாளம், என்ற வரிசையில், தாளமரபு ஐந்தாவது மரபாக வைக்கப் பட்டிருப்பினும், இவ்வைந்து மரபுகளுள்ளும் முதலில் தோன்றியது தாளம் என்றும், அதற்கேற்பத் தோற்கருவிகளும் முன் தோன்றின என்றும் கூறப்படுகிறது. கொட்டு, கூத்து, இசை, முழவு ஆகியவற்றிற்கு உயிர் நாடியாகத் திகழ்வது தாளம்.

தாளக் கூறுகளுடன் கூடிய இசைப் பாக்களின் இலக்கணத் தையும், இசைப் புணர்ப்பு இலக்கணத்தையும், இந் நூலின் அடுத்த இயலில் விரிவாகக் காணலாம்.

இவ் வியலில் பயன்படுத்தப்பட்ட பஞ்சமரபு வெண்பாக்கள்

(1) பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து
நாத முதலா மெழுத்து நாலாகி—வீதி
வருவரத் தாற் றானத்தால் வந்து வெளிப்பட்
டிரு வரத்தாற் றோற்ற மிசைக்கு.

(2) மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதாம்
எண்ணிய பூதங்க ளென்றறிக – நண்ணிய
மன்னர்க்கு மண் கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னர்கோ மானே தெரி

(3) செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே
அப்பரிசு மண்ணைந்து நீர்நாலாம் – ஒப்பரிய
தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று
வேயாருந் தோளி விளம்பு

(4) மெய்வாய் கண் மூக்குச் செவியென்று பேர் பெற்ற
வைவாயு மாயவற்றின் மீதெடுக்கத் – துய்ய
சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தாம்
அவை முதற் புற்கல மாம்

(5) நல்ல நரம்பிறைச்சி யென்புமயிர் தோலுஞ்
சொல்லிய மண்ணின் குணமாகும்—மெல்லியலாய்
நீர் மூளை சுக்கிலம் நெய்யார் நிணமுதிரம்
பார்மீதி னீரதனின் பண்பு

(6) பசி சோம்பு மைதுனங்காட்சி நீர் வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து - மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை

(7) ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்
நீங்கா வுலோபம் முடனைந்தும்—பாங்காய
வண்ண முலைமடவாய் வானத்தின் கூறென்றே
எண்ணுமிக நூலுணர்ந்தோ ரெண்

(8) பூதங்க ளைந்தாய்ப் பொறியைந்தாய் மெய்யைந்தாய்
வாதனை யையைந்தாய் மாருதமு - மேதகுசீர்ப்
பத்தாகும் நாடிகளும் பத்தென்பர் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு

(9) இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி - பூடாவோ
டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார்
தங்குதச நாடிக ளாம்

(10) ஒப்பாம் பிராண னபானன் வியானனுடன்
தப்பாச் சமானன் கிருகரனா - மிப்பாலுங்
கோதி லுதானன்றனஞ் சயனாகன் கூர்மன்
தீதி லாத் தேவதத்த னாம்

பிரிவு–ஆ

(11) ஓசையு மீசனு மொக்கு மெனவுலகில்
வாசகப்பட்டு வருவதல்லால் - ஓசையை
மெய்யகத்தாலன்றி வினவவொண்ணா தென்னுமிவை
வையகத்தார் சொல்லும் வழக்கு

(12) துய்ய வுடம்பளவு தொண்ணூற்றா றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான் - வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்

(13) ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்தாம்
மூதார்ந்த மெய்யெழுத்தை முன்கொண்டு – போதாரு
முந்தியிடை வளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்திடுமே லோசையாம் வைப்பு

(14) ஐவகைப் பூதமு மாய சரீரத்தின்
மெய்பட வின்றியங்கு மெய்யெழுத்தால் – துய்ய
பொருள்நாடி நின்றியங்கிப் புந்தியா லோங்கி
வருமா மெழுத்துடன்பின் வந்து

(15) மகரத்தி னொற்றாற் சுருதி விரவும்
பகரிற் குறினெடிலாற் பார்த்து – நிகரில்லாத்
தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி
மன்னாவிச் சொல்லின் வகை

(16) குன்றாக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்
நின்றார்ந்த மந்நகரந் தவ்வோடு – நன்றாக
நீளத்தா லெட்டு நிதானத்தா னின்றியங்க
வாளத்தி யாமென்றறி

பிரிவு இ

(17) துய்யமொழி மென் குயிலுஞ் சோலைவரி வண்டினமும்
வையமுழங்கும் வலம்புரியும் – கைவைத்துத்
தும்புரு நாரதர் பாடியமூ வோசையென
நம்புநீ நால்வேதத் துள்.

(18) திப்பிலி தேன்மிளகு சுக்கினோ டிம்பூரல்
துப்பில்லா வான்பால் தலைக்காடை – யொப்பில்லா
வெந்நீரும் வெண்ணெயு மெய்ச் சாந்தும் பூசவிவை
மன்னூ ழி வாழும் மகிழ்ந்து

(19) நகைபுகை யெட்காடி காமம் நறவு
பகையெனச் சொன்னார்கள் பார்மேல் – முகைமலருங்
கூந்தலிளம் பிடியே கோல விசை கூறு
மாந்தனையுங் காப்ப தறிவு

(20) பெருக்குரல் கட்டை நமுவல் விலங்கல்
ஒருக்கி யொதுங்கல் புரைத்தல் – விருப்பில்லாக்
காகுளி காக சுரமென்னு மிவ்வெட்டு
மாகா வெனச் சொன்னா ராய்ந்து

(21) ஒருக்க ணிசை நூல்கண் ணோசையி லாதான்
பெருக்குரலன் பேழ்வாய் பிரிந்தோன் – கருப்பிரிந்
தாணிற் குறைந்தோ னொழுக்கமிலி யோடாறுந்
தானத் திசைக்க லாதார்

(22) மிக்க குடிப்பிறந்தோன் மெய்யான வோசையான்
துக்க மிலாதான் சுகமுடையான் – ஒக்கவே
ஊனப் படாதா னுறுப்பில் மறுவில்லாதான்
தானத் திசையியற்று வான்

(23) ஒட்டுதலுங் கட்டுதலும் விட்டோசை யாகுதலும்
பட்டமரு நல்லொழுக்கம் பாரணையுங் – கொட்டவணிந்
தாடுவா ராடு மரங்கத் திருந்தசையப்
பாடுவார் பாடும் பரிசு

(24) சொல்லிய நற்றோல் துளைதுய்ய மென்னரம்பு
கல்வி மிகுகஞ்ச மிடறெனவே – வெல்லுமதன்
அஞ்சப் படும் விழியா யாயுங்கா லிவ்வைந்தும்
பஞ்சமா சத்தமாய்ப் பார்.

(25) தோன்றிய தாளமுத லோசையா மோசை
யான்ற தொழிற்கண் முழவமா – மேன்று
நடத்தை நிருத்தமாய் நாட்டினார் நூலின்
மடக் கொடியா யிந்த மரபு.

துணைக் குறிப்புக்கள்:

1. சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சாமிநாதய்யர் பதிப்பு. 1978.
2. "ஐந்து நாழிகை என்பது இரண்டு மணிநேரம்" கா.சங்கரனார், இசைமரபு, 1968. பக்கம். 13.

3. மாத்திரை – இரண்டு நாழிகையை எட்டுக் கூறு இட்டு ஒரு கூறு என்றறிக.

   சிலப்பதிகாரம்- அரங்கேற்றுகாதை – வரி-26. அடியார்க்கு நல்லாருரை. உ.வே.சாமிநாதய்யர் பதிப்பில் பக்கம். 103.

4. கல்லாடர் இயற்றிய **கல்லாடம்**. செய்யுள்.21. அடிகள்-50-57. கழக வெளியீடு,1975.

5. **சீவக சிந்தாமணி** – காந்தர்வதத்தை இலம்பகம்.

6. கல்லாடர் இயற்றிய **கல்லாடம்**. செய்யுள் 21. அடிகள் 44-49. கழக வெளியீடு,1975.

7. **சிலப்பதிகாரம்** – அரங்கேற்று காதை – அடிகள் 26-38 அடியார்க்கு நல்லார் பொழிப்புரை. உ.வே.சா.பதிப்பில் பக்கம்.99.

இயல் - ஏழு

இசைப்பாக்களும் இசைப்புணர்ப்பும்

பஞ்சமரபு - இசைமரபின் நிறத்தமரபிலும், வகையொழிபு மரபிலும், ஓசையைத் தோற்றுவித்து அதனை இயக்கும் வகையான நிறங்களின் பெயர்களும், அவற்றின் தன்மைகளும் இசைப்பாக்களின் இலக்கணங்களும் விரிவாகக் கூறப்பட்டு உள்ளன.

[1]இசைத்தமிழில் 'நிறம்' என்பதற்கு எழுத்தோடு விரவாத ஒலிக்கூறு; சொற்களால் ஆக்கப் பெறாத ஒலிக்கூறு என்று பொருள் கொள்ளலாம். நிறம் என்னும் சொல்லோடு ஒத்த பொருளினது 'பண்' என்னும் சொல். இது 'வண்ணம்' என்றும் 'இராகம்' என்றும் அழைக்கப்படும்.

பஞ்சமரபில் 'பாவோடணைதலால் இசை' எனத் தொடங்கும் வெண்பாவுரையில், 'இசை' என்பதற்குப் பல இயற்பாக்களோடு நிறத்தை இசைத்தலால் 'இசை' என்று பெயராயிற்று என்று பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது. இவ்வுரையின்படி, 'இசை' என்பது நிறங்களோடு சேர்ந்த பாக்களை, அதாவது இசைப்பாக்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது.

பாக்களால் உருவாக்கப்படுவது உரு அல்லது உருப்படி. இசை உருக்கள், நிறம், தாளம், சொற்கள் என்னும் மூன்று முக்கிய அங்கங்களைக் கொண்டன. இதில் நிறமும் தாளமும் சேர்ந்தது 'தாது' அல்லது 'வர்ண மெட்டு' என்றும், சொற்கள், 'மாது' அல்லது 'சாகித்தியம்' என்றும் வழங்கப் பெறும்.

நிறங்கள்:

நிறங்கள் ஐந்து வகைப்படும். அவை:

கேத்திராங்கம் (ஆதி) (பூருவம்)
சுத்தம்
சாளவம்
சங்கீர்ணம்
தமிழ் (செந்தமிழ்)

இவ்வைந்து நிறங்களும், ஒன்பது மாத்திரைகளாலும், எட்டுப் பெருந்தானங்களாலும், பத்துக் கிரியைகளாலும், பதின்மூன்று எழுத்துக்களாலும், ஐந்து தொழில்களாலும், மிகுதி குறைகள் படாமலும், முதனிலை,வாரம், கூடை, திறள் என்னும் நான்குடனும் உடன்பட அறிஞர்களால் அறுதியிட்டுக் கூறப்பட்டவை.

மாத்திரை என்பது இங்குக் 'காலம்' எனப்படும். ஒன்பது மாத்திரைகளாவன. கணம், லவம், காட்டை, நிமிடம், துடி, துருதம், லகு, குரு, புலுதம் முதலியவை. தாமரை இதழ் நூறடுக்கி அதிலோரிதழில் ஊசி செலுத்தும் நேரம் கணமெனப் படும்.

கணம் எட்டுக் கொண்டது லவம்.
லவம் எட்டுக் கொண்டது காட்டை.
காட்டை எட்டுக் கொண்டது நிமிடம்.
நிமிடம் எட்டுக் கொண்டது துடி (ஓரெண் கொண்டது).
துடி இரண்டு கொண்டது துருதம் (இரண்டெண் கொண்டது).
துருதம் இரண்டு கொண்டது லகு(நான்கெண் கொண்டது).
லகு இரண்டு கொண்டது குரு (எட்டெண் கொண்டது).
லகு மூன்று கொண்டது புலுதம் (பன்னிரண்டெண் கொண்டது).

பெருந்தானங்கள் எட்டாவன:

நெஞ்சு, மிடறு, நாக்கு, தலை, மூக்கு, அண்ணம், பல், அதரம் முதலியவை.

பத்து-கிரியைகளாவன:

உள்ளாளம், விந்து, நாதம், ஒலி, உருட்டு, தாக்கு, எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம் ஆகியவை.

பதின்மூன்று எழுத்துக்களாவன:

அ,இ,உ,எ,ஒ முதலிய ஐந்து குற்றெழுத்துக்கள்; ஆ,ஈ,ஊ, ஏ,ஓ என்னும் ஐந்து நெட்டெழுத்துக்கள்.

ம,ந,த என்னும் மூன்று மெய்யெழுத்துக்கள்.

ஐந்து தொழில்களாவன:

சுருதி, ஏடாயகம், வகுணை, கெதி, வியர்த்தி. இவை தேசாள சுத்தக் கிரியைகள் என்றும் பெயர்படும்.

சுருதி என்பது, குற்றப்படாத வோசை (அலகு)
ஏடாயகமாவது தூக்கித் தாக்குதல்
வகுணையாவது, இசைத் திரட்சி
கெதியாவது, தாளச் சதி
வியர்த்தியாவது, வழிகாண்டல்.

முதனடை, வாரம், கூடை, திரள் என்னும் நான்கும் 'இயக்கு' எனப்படும். முதனடை மிகவும் தாழ்ந்த செலவினை உடையது. திரள்-மிகவும் முடுகிய நடையினை யுடையது. வாரம்-சொல்லொழுக்கமும், இசை யொழுக்கமும் உடையது. கூடை-சொற்செறிவும் இசைச் செறிவும் உடையது.

முன்னர்க் கூறிய ஐந்து நிறங்களும் சுத்தம், சாளவம் தமிழ் என்ற மூன்று பகுதிகளாக நிற்கின்றன. மற்ற இரண்டு நிறங்களான கேத்திராங்கம் அல்லது பூருவம் சுத்தத்துடனே பொருந்துகிறது. சங்கீர்ணம், சாளவத்துடனே பொருந்துகிறது, தமிழ் என்பது 'தமிழ்களி' என்றும் பெயர் பெறும். சுத்தம், சாளவம், தமிழ் ஆகிய மூன்றும் சாதியோசை என்றும் கூறப்படும்.

மூவகை நிறமும் நிற வேற்றுமைகளும்

இம்மூன்று நிறங்களும், அவற்றின் அடிப்படைத் தன்மை, யில் வேறுபடுவதில்லை. ஆனால் இவற்றின் தொழில்களும், மாத்திரைகளும், இவற்றிற்குரிய தானங்களுமே வேறுபடு கின்றன. மூவகை நிறமும், நிற வேற்றுமைகளும் வருமாறு:

சுத்தம்: ஓசையை உச்சரித்து நாசியிலே ஒட்டி சிரத்தையும், நாபியையும் கம்பித்துத் தூங்கிசையாகப் பாடுவது. இதற்கு

எழுத்து 'ம'கர வருக்கம். ('ம்' என்று உச்சரித்தல்.)

சாளவம்: ஓசையை உச்சரித்து நாசி தட்டாமல் ஆகாயக் கம்பிதமாக்கி ஏந்திசை (உச்சமாக) யாகப் பாடுவது. இதற்கு எழுத்து நவ்வினம்.

தமிழ்: ஓசையை உச்சரித்து நாபியைக் கம்பித்துக் குடில மாக்கி மயங்கிசையாகப் பாடுவது. குடிலம் என்பது வாயை மூடி அல்லது இதழ் குவித்து 'ஓ' என்ற ஒலியுடனும், 'உ' என்ற உயிரோடும் பாடுவது. இதற்குரிய எழுத்து, தவ்வினம்.

இம் மூவகை நிற வேற்றுமைகளும் வீணை,யாழ் முதலான கருவிகளின் வழியாகத் தோன்றா. ஓசையை எழுத்துக்களோடு விரவி உச்சரிக்கின்ற தன்மை மிடற்றுக்கே உரியதாதலால் இவற்றைக் கண்டத்தால் மட்டுமே தெளிவாக உணர்த்த முடியும். ஆனால் சுத்தம்,சாளவம், தமிழ் என்னும் இம்மூவகை நிறங்களும் (சாதியோசைகளும்) எழுத்தோடு விரவாத பொழுது, இசைக்கருவிகளுக்கும் பொருந்தும்.

சுத்தத்திற்குரியது வங்கியம்
சாளவத்திற்குரியது வீணை
தமிழ்க் குரியது யாழ்.

நிறங்களின் வகைப்பாடு:

சுத்தம், சாளவம், தமிழ் என்னும் இம்மூன்றுஅடிப்படை நிறங்களுடைய பேதமே இவ்வுலகிலுள்ள பாடல் பலவற்றிற் குரிய பல நிறங்களாகும். பாடல்களின் அடிப்படையில் இந் நிறங்கள் நான்கு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அகம், அகப்புறம், புறம், புறப்புறம்.

அகம் என்னும் பிரிவில் உருவண்ணம், தேவபாணி இவற் றுடன் பொருந்திய நிறங்கள் அடங்கும். அகப்புறம் என்னும் பிரிவில் கவிகளுடனும் சிந்துகளுடனும் பொருந்திய நிறங்கள் அடங்கும்.

புறம் என்கிற பிரிவில் வேடு, மறம், குறம், சித்து, சோன கம் இவற்றுடன் தொடர்புடைய பாடல்களின் நிறங்கள்அடங்

கும். புறப்புறம் என்பதில் சாத்தன், வயிரவன், காடுகாள் இவர்களைப் பாடும் பாடல் வகைகளின் நிறங்கள் அடங்கும்.

இவற்றுள் முதலிரண்டு வகைகள் (அகம், அகப்புறம்) பக்தி யிலக்கியங்களில் பயிலப்படும் இசை நிலையைக் குறிப்பன வாகத் தெரிகிறது. மற்ற இரண்டு வகைகள் நாட்டுப்புறஇசை யில் வரும் பாடல் வகைகளின் நிறங்களைக் குறிப்பனவாகத் தோன்றுகிறது.

இசைப்பாக்கள் :

பஞ்சமரபு - இசைமரபின் வகையொழிபு மரபில் வரும்,

"செப்பிய சிந்து திரிபாதஞ் சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாத - மெய்ப்படியுஞ்
செந்துறை வெண்டுறையே தேவபாணி வண்ணமெலப்
பைந்தொடியா யின்னிசையின் பா."

என்னும் வெண்பா, [2]சிலப்பதிகாரத்தின் கடலாடு காதையுரை யில் பின்வருமாறு அடியார்க்கு நல்லாரால் மேற்கோள் காட் டப்பட்டுள்ளது.

"செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாதம் - மெய்ப்படியும்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப
பைந்தொடியா யின்னிசையின் பா."

என்றார் பஞ்சமரபுடைய அறிவனார்என்னும் ஆசிரியர்என்க.'

அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டிய முப்பது பாடல்களுள், பஞ்சமரபின் ஆசிரியர் அறிவனார் என்று சுட்டி, மேற்கோள் காட்டிய பாடல் இதுவாகும்.

இசைப்பாக்கள் எட்டு வகைப்படும். அவையாவன:

க. சிந்து

உ. திரிபாதம் (திரிபதை)

ங. சவலை (சீர்ச்சவலை)

ச. சமபாதம்

ரு. செந்துறை

சு. வெண்டுறை

எ. தேவபாணி (பெருந்தேவபாணி, சிறுதேவபாணி)

அ. வண்ணம் (சிறுவண்ணம், பெருவண்ணம்)

பஞ்சமரபு உரையில் இவ்வெட்டு இசைப்பாக்களும் உரிய எடுத்துக் காட்டுச் செய்யுட்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இதன் துணை கொண்டு இப்பாக்களை விரிவாக ஆராய்வோம்.

சிந்து: [3]சிந்து என்னும் சொல் பல பொருளில் அமைகிறது. தொல்காப்பியத்துள் ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்து வரை அமையும் சிந்தடியைக் குறிக்கும் பொருளில் அமைகிறது. மூன்று சீர்களைக் கொண்டுள்ள அடி சிந்தடி எனப்படும். சிலப்பதிகார உரையுள், பஞ்சமரபு செய்யுளின் மேற்கோளில், இது இசைப் பாக்களில் ஒன்று எனவும், பிறிதோரிடத்தில் இது கூத்து வகைகளில் ஒன்று என்றும் அடியார்க்கு நல்லாரால் குறிப்பிடப்பட்டுள்ளது. கவியரசர் கம்பர் 'சிந்து ஒக்கும் சொல்லினார்' என்னும் குறிப்பில், 'சிந்து,' என்னும் சொல் 'பண்' என்ற பொருளமைப்பைத் தருகிறார். சிந்து என்பதை வெண்பாவின் வகைகளில் ஒன்றாக (சிந்தியல் வெண்பா) யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சிந்து என்னும் சொல் பல பொருளைக் கொண்டிருப்பினும், இசைத்தமிழைப் பொறுத்தமட்டில் சிந்து என்பதை இசைப்பாக்களின் ஒருவகை என்றே கொள்ள வேண்டும்.

சிந்தின் அமைப்பில், நான்கு வரிகளும், ஒன்று அல்லது இரண்டு தனிச் சொற்களும் காணப்பெறுகின்றன. அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களிலும் தனிச் சொற்கள் காணப்படுவது குறிப்பிடத் தகுந்தது.

சிந்து இரண்டு வகைப்படும். அவை: சமநிலைச் சிந்து, வியனிலைச் சிந்து. தனிச் சொல்லுக்கு முன்னும் பின்னுமுள்ள வரிகள் அளவு ஒத்து, அளவான சீர்கள் கொண்டிருப்பது சமநிலைச் சிந்து எனப்படும். தனிச் சொல்லின் முன் வரியும் பின் வரியும் அளவு ஒவ்வாமல் அரை அடியில் இரண்டு சீர்கள் அல்லது

மூன்று சீர்கள் இருந்து மற்றோர் அரை அடியில் 3 அல்லது 4 சீர்கள் அமைந்திருப்பது வியனிலைச் சிந்து எனப்படும். இவற்றைத் தவிர நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, காவடிச் சிந்து போன்ற வகைகளும் உண்டு. சிந்தில் தளை வரையறை இல்லை. இதில் சந்தத்திற்கும் இயைபுத் தொடைக்கும் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

பஞ்சமரபு உரையில் சிந்து என்னும் இசைப்பாடல் வகை எடுத்துக் காட்டுச் செய்யுட்களுடன் பின்வருமாறு காட்டப் பட்டுள்ளது.

> "மாணுருவா யன்று மண்ணே மூளந்தானைப்
> பூணுருவந் திகழ் மார்ப னென்றியாங் – கோடுவாங்
> கன்றால் விளவின் கனியுதிர்த்த கார்முகிலை
> மன்றாடி யென்று மதி"

> "பேயின் முலையுண்டு பின்னையாய் நின்றானை
> ஆய னிவனென் றறிந்தா ரறிந்திலரே"

இவை இரண்டடியாய்த் தம்மிலொத்து வந்த சிந்து.

பஞ்சமரபு நூலிலும் உரையிலும் சிந்து பற்றிய குறிப்பும் விளக்கமும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. நிறத்தமரபில் சுத்தம், சாளவம், தமிழென்னும் மூன்று நிறங்களுடன் பொருந்தி வரும் பாக்களை அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்று நான்கு பிரிவாகப் பிரித்ததில் அகப்புறம் என்னும் பிரிவில் சிந்துகள் சேர்க்கப் பட்டிருப்பது ஈண்டு நினைவு கூரத் தக்கது.

"ஓரிசை முன்னிசை" எனத் தொடங்கும் பாடலில், ஓரிசை, முன்னிசை, சுத்தம், பீர்கண்டம், இசை கண்டம், நிறைநிலை, நெறிநிலை, முறை கண்டம் என்றவாறுஎட்டு வகையான இசைப் புணர்ப்புகள் கூறப்பட்டுள்ளன. பஞ்சமரபு உரையாசிரியர் இவற்றை ஓரடியாலும், இரண்டடியாலும், மூன்றடியாலும் வரும் சிந்துகளின் இசையமைப்போடு பொருத்திக் காட்டுகிறார்.

ஓரிசை என்பது ஓரடி இசையாகும்.

> "ஓரடியிசையே ஓரிசையாகும்."

முன்னிசை என்பது,

"இரண்டடி யிசையே வேறுபடவரின்
முரண்ட புலவர் முன்னிசை யென்ப"

இரண்டடிகளும் வெவ்வேறு இசை கொண்டிருத்தல் முன்னிசை எனப்படும். சுத்தம் என்பது,

"மூன்றடி யோரிசை முறைவே றாமெனிற்
றோன்றிச் சுத்தமாகு மென்ப"

மூன்றடிகளும் வெவ்வேறு இசையுடன் கொண்டு விளங்குவது சுத்தம் எனப்படும். (ஓரிசை முறை வேறு).

பீர்கண்டம் என்பது,

"முன்னிரண் டடியு மோரிசை யாகிப்
பின்னிசை வேறுறிற் பீர்கண் டம்மே"

முதலிரண்டு அடிகளும் ஓரிசையாக நின்று, மூன்றாமடியில் இசை வேறுபடின், அது பீர்கண்டம் எனப்படும்.

இசை கண்டம் என்பது,

"முதலடி தன்னுடன் மூன்றா மடியொத்
திரண்டடி வேறுறி லிசை கண்டம்மே'.

முதலடியும் மூன்றாமடியும் இசையில் ஒத்து, இரண்டாமடி இசை வேறுபட நிற்பது இசைகண்டம் எனப்படும்.

நிறைநிலை என்பது,

"இரண்டடி யோரிசை நிறை நிலையாகும்"

இரண்டடிகளும் ஓரிசையாக வருவது நிறைநிலை ஆகும்,

நெறிநிலை என்பது,

"முதலடி வேறாய் முதலீ ரடியும்
நேர்படு மோரிசை நெறி நிலையாகும்."

முதலடி வேறாகவும், அடுத்த இரண்டடிகளும் ஓரிசையாகவும் நிற்க, அது நெறிநிலை எனப்படும்.

முறை கண்டம் என்பது,

"மூன்றடி யோரிசை முறை கண்டம்மே"

மூன்றடிகளும் ஓரிசை கொண்டு விளங்குவது முறை கண்டம் எனப்படும்.

இவ்வாறு இப்பகுதியில் சிந்துகளின் இசைப்புணர்ப்பு கூறப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இசைப் புணர்ப்பு இலக்கணங்கள், வட மொழி நூல்களில் கூறப்பட்டுள்ள ஏகதாது, த்விதாது த்ரிதாது போன்றவற்றோடு ஒப்பிடத்தக்க வகையில் உள்ளன.

சிந்து என்பது இசைப்பாடல் என்னும் பொதுவான பொருளில், பண்டைக் காலத்திலேயே வழக்கில் இருந்திருப் பினும், இப்பாக்களுக்கு அதனதன் பயன்பாட்டையும் சந்தர்ப் பத்தையும் பொறுத்து, காவடிச் சிந்து, வழிநடைச்சிந்து நொண்டிச்சிந்து என்பது போன்றதோர் தனி உருவம் கிடைத்தது, கி.பி. 1865 இலிருந்து 1891 வரை வாழ்ந்த அண்ணாமலை ரெட்டியார் இயற்றிய பாடல்களில் தான் எனக் கூறலாம்.

அண்ணாமலை ரெட்டியார் சிந்துகள் இயற்றுவதற்குப் பல பாடல்கள் முன்னோடியாக இருந்தன எனலாம். அளவான சீர்களைக் கொண்டும், தனிச் சொற்களுடனும், கூடிய சம நிலைச் சிந்தின் அமைப்பு அருணகிரி நாதரின் திருப்புகழ் பாடல்களிலும் ஓரளவு காணப்படுகிறது. சில பழையதிருப்புகழ் பதிப்புக்களில், 'வங்கார மார்பிலணி' போன்ற திருப்புகழ் பாடல்கள் காவடிச் சிந்து என்னும் தலைப்பில் அச்சிடப்பட் டுள்ளன. இதிலிருந்து 15 ஆம் நூற்றாண்டிலும் சிந்தின் வளர்ச்சி இருந்திருக்கிறது என்று தெரிகிறது.

நூல் வடிவில் அண்ணாமலை ரெட்டியாரின் நூல் முதன்மை யானதாக அமைந்தாலும், சிந்துப் பாட்டின் தாக்கம் சித்தர் பாடல்கள், ஆழ்வார்களின் பாடல்கள், பள்ளு, குறவஞ்சி போன்றவற்றிலும் நிகழ்ந்திருக்கிறது. வடலூர் இராமலிங்க

சுவாமிகளின் பாடல்களிலும் சிந்தின் அமைப்புக் காணமுடிகிறது. தற்போது சுப்ரமண்ய பாரதியாரின் சிந்துகள் மிகவும் பிரபலமாக வழக்கில் உள்ளன. திரு. பெரியசாமி தூரன் அவர்கள் இயற்றிய சிந்துகளும் பிரபலமாக இசையரங்குகளில் பாடப்பட்டு வருகின்றன.

எனவே பஞ்சமரபில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிந்து என்னும் இசைப்பா, கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த பாவின வகையைச் சேர்ந்தது என்றும் இது ஒரு தொடர்ந்த மரபோடு விளங்கிப் பின்னர், அண்ணாமலை ரெட்டியாரின் காலத்தில் முழு வளர்ச்சியுற்றது எனவும் அறியலாம்.

(உ) **திரிபாதம்** என்பது மூவடிகளைக் கொண்ட செய்யுள் வகையாகும். பஞ்சமரபு உரையில் இதற்கு எடுத்துக்காட்டாகச் [4]சிலப்பதிகாரப் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

"பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன் வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

"கொல்லையஞ் சாரற் குருந் தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமே லவன் வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ"

இவை மூன்றடியாய்த் தம்மிலொத்து வந்த திரிபாதம் ஆகும் இவற்றை ஒத்தாழிசை வகை என்றும் கூறலாம்.

(ங) **சவலை** என்பது ஈற்றயலடி ஒரு சீர் குறைந்து வருவது. இதற்குரிய செய்யுள் வருமாறு:

"அலைகட லடைத்தனை யமரினை யுயர்த்தனை
சிலையினை யிறுத்தனை திருவமர் மார்பினை
மலையினை எடுத்தனை மாலே!
நிலையினை யறிபவ ரியாவரு மில்லை"

(ச) சமபாதம் என்பது, நான்கடியினும் சீரொத்து முற்றிலும் நெடிலெழுத்தாகவே (குரு) வருவது.

இதற்குரிய செய்யுள் வருமாறு:

"காரார் தோகைக் கண்ணார் சாயற்
றேரா ரல்குல் தேனார் தீஞ்சொல்
போரார் வேற்கட் பொன்னே யின்னே
வாரா ரல்லர் போனார் தாமே".

இப்பாவகை அருணகிரிநாதரின் திருப்புகழிலும் காணப்படுகிறது. உ-ம்.

"பாலாய் நூலாய் தேனாய் நீளாய்
பாகாய் வாய்சொற் – ……………"

இதனைத் தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ள 20 வகை வண்ணங்களில், நெடுஞ்சீர் வண்ணத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

(ரு,சு) **செந்துறை, வெண்டுறை** ஆகிய இரண்டு இசைப்பாக்களும் தமிழ்ப் பாவகை வடிவங்களாகவும் திகழ்கின்றன. இவற்றிற்குரிய எடுத்துக்காட்டுச் செய்யுள்கள் வருமாறு:

செந்துறை

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே"

"நீரின் கடவுட் சேவடி யிணையைப்
பேரின் பஞ்சேர்ந் தெய்துத லிடமே"

"ஆதி பகவ னம்மலர்ச் சேவடி
நீதியா லேத்தி நினைவோம் யாமே.

இவை இரண்டடியாலான செய்யுட்கள்.

வெண்டுறை

"தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா
மென்னாம்

யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலி போற் சாய்த்து விடும்பிளிற் றியாங்கே''
"பாலா ரரவணையிற் பண்டொருநாட் டுயின்றானைப்
பாரீர் பாரீர்
கோல வரிவில் லிருத்தானைக் குலமறைகள்
மாயவனே யென்று வாழ்த்துமா லாங்கே''

இவை மூன்றடியாய் வந்த வெண்டுறை.

(எ) **தேவபாணி** என்பது தேவரை முன்னிலைப்படுத்திப் பரவும் பாட்டு எனப்படும். இது பெருந்தேவபாணி, சிறுதேவ பாணி என்று இருவகைப்படும். பஞ்சமரபு குறிப்புரையின்படி, இவ்விரண்டும் பாவினங்களேயன்றி, பெரிய தேவர், சிறிய தேவர் என்பதன்று. சிறு தெய்வம், பெருந் தெய்வம் என் பது பொருத்தமாகும். சிறு தெய்வத்திற்குப் பெருந் தேவ பாணிப் பாடலும், பெருந் தெய்வத்திற்குச் சிறுதேவபாணிப் பாடலும் கூட பாடப் பெறும். எனவே

தேவபாணி என்பது தெய்வங்களைப் புகழ்ந்து பாடும் இசை வகையைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தெய்வங்களைப் புகழ்ந்து தேவபாணி புணர்க்கும்போது அ,இ,உ,எ,ஒ என்னும் குற்றெழுத்தைந்தினாலும் புணர்க்க வேண்டும் என்று இப்பாவின் புணர்ப்பு இலக்கணத்தைப் பஞ்ச மரபு கூறுகிறது.

பஞ்சமரபு உரையில் பெருந்தேவபாணிக்குரிய எடுத்துக் காட்டுச் செய்யுளாக, பண், கவுசிகம், இரண்டு ஒத்துடைத் தடாரம் என்னும் தாளத்திலமைந்த எண் சீரான் வந்த ஆசிரிய விருத்தம் காட்டப்பட்டுள்ளது.

"மலர்மிசைத் திருவினை வலத்தினில் வைத்தனை
மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தனை
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தனை
இனநிரைத் தொகைகளை யிசைத்தலி வழைத்தனை
முலை யுணத் தருமவள் நலத்தினை முடித்தனை
முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தனை

உலகனைத் தையுமொரு பதத்தினி லொடுக்கினை
ஒளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே"

இப்பாடல் மாயோனைப் (திருமாலைப்) புகழ்ந்து பாடுவதாக அமைந்திருப்பதால் இஃது மாயோன் பாணி எனவும் அழைக் கப்படும். இங்கு இறைவனை முன் கூறாது மாயோனை முன் வைத்துப் பாடப்பட்டது எதற்காகவெனில் மாயோன் காவற் கடவுளாய் அருளுகிறான் என்பதற்கே.

மேற்கண்ட இப்பாடலின் சந்த அமைப்பு ஆதி அல்லது ஏக தாளத்தை உணர்த்துகிறது. எனவே இரண்டு ஒத்துடைத் தடாரம் என்ற தாளம் ஆதி அல்லது ஏக தாளத்தினை ஒத்தது எனலாம். பண் கௌசிகம், தற்போதுள்ள பைரவி இராகத்தை ஒத்தது.

மேற்கூறிய இரண்டு செய்யுட்களும் அடியார்க்கு நல்லார் உரையிலும் எடுத்தாளப்பட்டுள்ளன.

சிறுதேவபாணிக் குரிய எடுத்துக்காட்டுச் செய்யுளாக, பண் - அத்தராட்டத்திலமைந்த (திராடம்) நாற்சீரடியாய் வந்த கலிவிருத்தப்பாடல் கொடுக்கப்பட்டுள்ளது.

"வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேள் மிக வெய்யக்
கண்ணளவோர் புலனாகக் கனல் விழியா
லெரித்தனையால் (விழித்தனையால்)
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங் கொண் டொருதனியே
யிருந்தனையே"

இது சிவன் பேரிலமைந்த பாடல்.

பஞ்சமரபு உரையில் விநாயகரைப் (பிள்ளையாரை) போற்றிப் பாடும் பாடல் பிள்ளையார் பாணிக்குரிய செய்யு ளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது பண் வியாழக் குறிஞ்சியில் அமைந்தது.

"படைக்கும் புவிப்பந்த மலற்கும் புலத்துங்க
னுடைச்சங் கை விட்டின்பத் தொழுக்கம் பெருத்
தொன்றுங்

கடத்தின் கடக் கம்ப மதத்திற் செம் புதற்கொம்பும்
படற்கு மனுக்கன்புற் றிருக்குங் கருத்துண்டே.''

இப்பாடல் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையிற் காணப்படவில்லை. பஞ்சமரபு குறிப்புரையில் ''இப்பாடலடிகள் பதிற்றுப்பத்தின் முதற்பத்தில் உள்ளன போலும்'' என்ற குறிப்பு காணப்படுகிறது.

இவற்றைத் தவிர சந்திரனைப் பாடும் தேவபாணி பின் வரும் சிலப்பதிகார உரையிற் காணப்படுகிறது.

5''குரைகடன் மதிக்கு மதலையை
குறுமுய லொளிக்கு மரணினை
இரவிரு ளகற்று நிலவினை
இறையவன் முடித்த வணியினை
கரியவன் மனத்தி னுதிதனை
கயிரவ மலர்த்து மவுணனை
பரவுநர் தமக்கு நினதிரு
பதமலர் தபுக்க வினையையே''

பஞ்சமரபு உரையில் பாணர் புணர்த்த தேவபாணி என்பதாகப் பண்–தக்கேசி, தூசி மட்ட தாளத்திலமைந்த இரண்டு பாடல்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

பாணர் புணர்த்த தேவபாணி வருமாறு:

''கரியா மிடற்கரி கால காலா
கிரியத ரியினுரி யாவரி கொள் சிலையா
கிரியத ரியினுரி யாவரி கொள் சிலையா
வரியா வா வரி கொள் புலியா ரதளா''
''நீறு புனைந்தா ரெரி கொள் சடைமுறையா
எரியி னுருவா ரரியம்பிகை
கரிவரி யவடிகள் ளலான வாயினவே.

இப்பாடல்களின் தூய உருவம் புலப்படவில்லை என்றும், முகநிலை, கொச்சகம், முரி, இசைப்பா, இசையளவு பா என்பனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியில் இது இருத்தல் கூடும் எனவும், பஞ்சமரபின் குறிப்புரையில் காணப்படுகிறது.

வண்ணம்: வண்ணம் என்பது பாட்டின் கண்ணே நிகழும் ஓசை விகற்பமாகும். உயிரெழுத்துக்களுள் குறில் நெடில் ஆகிய மாத்திரையளவு பற்றியும், மெய்யெழுத்துக்களுள் வல்லெழுத்து மெல்லெழுத்து, இடையெழுத்து ஆகிய இனம் பற்றியும், செய்யுளுக்குரிய அசை, சீர், அடி, தொடை முதலிய பிற உறுப்புகள் பற்றியும் செய்யுட்கள் வெவ்வேறு ஓசை நயம் உடையனவாய், படிப்போர்க்கும் கேட்போர்க்கும் சுவை பயக்கும் இனிய பாக்கள் 'வண்ணம்' என வழங்கப் பெறும். இது[6] தொல்காப்பியத்தில் இருபது வகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருபது வண்ணங்கள் வருமாறு:

பா அவண்ணம்; தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம்; மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம்; அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம்; குறுஞ்சீர் வண்ணம்
அகப்பாட்டு வண்ணம்; புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம்; ஒருஉ வண்ணம்
எண்ணு வண்ணம்; அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம்; ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம்; முடுகு வண்ணம்
சித்திர வண்ணம்; நலிபு வண்ணம்.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண்ணங்கள், திருஞான சம்பந்தரின் திருவிராகம், திருமழிசை ஆழ்வாரின் திருச்சந்த விருத்தம், பட்டினத்தடிகளின் கோயில் நான்மணி மாலையிலுள்ள சில சந்தப் பாடல்கள், ஒட்டக்கூத்தர், வேதாந்த தேசிகர், இரட்டையர் ஆகியோரின் சில பாடல்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ் ஆகியவற்றிற்குமுன்னோடியாகும். இதனடிப்படையில் இசைத்தமிழ் நூலான பஞ்சமரபில், 'வண்ணம்' என்பது இசைப்பாக்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பஞ்சமரபு உரையில் வண்ணம் பெருவண்ணம், சிறுவண்ணம் என்று இரண்டு வகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகைப்பாடு பாடலின் அளவு அடிப்படையில் வந்திருக்கலாம்.

பஞ்சமரபு உரையில் காட்டப்பட்டிருக்கும் பெருவண்ணத் திற்குச் செய்யுள் வருமாறு:

"எஃகுமே விலங்கு கொய்சுவற் புரவி .. ..
... ... னின் குடனாற்றே.

என, பதிற்றுப் பத்தினுள் பத்துச் சொற்களைச் சான்றோர் பாடின வண்ணங்கள் நூறு" என்று உரைக்கப்பட்டுள்ளது.

இப்பாடல் தமிழ் இலக்கிய வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. பதிற்றுப் பத்தினுள் முதற்பத்தும், இறுதிப்பத்தும் இறந்து பட்டனவாகச் சொல்லப்படுகின்றன. இப்பாடல்கள் பஞ்சமரபின் இவ்வுரைப் பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டிருப் பதால் உரையாசிரியர் காலத்தில் இப்பாடல்கள் வழக்கில் இருந்திருக்கலாம்.

சிறு வண்ணத்திற்குரிய பஞ்சமரபு உரையின் எடுத்துக் காட்டுச் செய்யுள் வருமாறு:

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறுமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைத்தீர் வியன்கொண்மூ விடை நுழையு மதியம் போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே."

இது நாற்சீரான் வந்த கொச்சகக் கலிப்பா.

பஞ்சமரபு உரையில் மேலும் பாணர் புணர்த்த வண்ணத்திற் குச் செய்யுள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"தாரபட்டங் கட்டியமன் மதனைக் தண்குடை நிழற் கீழ்
ஈரபட்டங் கட்டினன்கா ணிராச ராசன்
வீரபட்டங் கட்டிவிட்ட னன் மெய்யடி யாரையன்று
சேரப்பட்டங் கட்டினான் கெட்டனன் சேனையோடே."

இதற்குப் பண் வியாழக் குறிஞ்சி, தாளம் – ஏகம்.

[7]அடியார்க்கு நல்லார் தமது உரையில், "வண்ணம் ஒரு வகையான் மூன்று வகைப்படும்: பெருவண்ணம், இடைவண் ணம், வனப்பு வண்ணமென. அவற்றுள் பெருவண்ணம் ஆறாய்

வரும். இடைவண்ணம் இருபத்தொன்றாய் வரும்; வனப்பு வண்ணம் நாற்பத்தொன்றாய் வரும்.'' என்று குறிப்பிட்டுள்ளார். [6]இம்மூன்று வண்ணங்கள்,

''எண்ணிய நூற் பெருவண்ணம் இடைவண்ணம்
வனப் பென்னும் ... ... ''என்ற சேக்கிழார் பாடலிலும்,

''கண்ணு மூன்றுமுடை ... ''என்ற ஞானசம்பந்தப் பெருமான் தேவாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடகத் தமிழில் சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என்னும் சொல்வகை நான்கினுள் மேற்குறித்த வண்ணமும் ஒன்றாக வைத்து எண்ணப்பட்டுள்ளது.

''சொல்வகை நான்கு வகைப்படும்;

சுண்ணம் — நான்கடியான் வருவது
சுரிதகம் — எட்டடியான் வருவது
வண்ணம் — நானான்கடியான் வருவது
வரிதகம் — 32 அடியான் வருவது.

இதிலிருந்து நாடகத்தமிழில் 16 அடிகளால் இயன்ற இசைப் பாடலை வண்ணம் என்ற பெயரில் வழங்கினர் எனத் தெரிகிறது.

பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள வண்ணப்பாக்களைப் புணர்க்கும் இலக்கணத்தைப் பின்வரும் பகுதியில் காணலாம். வண்ணப் பாக்கள் புணர்க்கும்போது, திருமகள், செந்தாமரைமலர், சந்திரன், சூரியன் என்னும் நான்கு மங்கலச் சொற்களைக் கொண்டும், கார்மேனிக் கண்ணனாகிய திருமாலைக் காப்பாக வைத்தும் புணர்க்க வேண்டும்.

வண்ணம் ஐந்து வகைப்படும். பத்திய வண்ணம், சித்திர வண்ணம், ஆம்பல் வண்ணம், பாத்திப வண்ணம், குவளை வண்ணம்.

இவை தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட 20 வகை வண்ணங்களினின்றும் மாறுபட்டவை. பஞ்சமரபு தவிர வேறு எந்த நூலிலும் இவ்வகைப்பாடு காணப்படவில்லை.

இவற்றின் இலக்கணம் வருமாறு:

பத்திய வண்ணமாவது, தலைப்பாவே இரண்டடியாலும், நாலடியாலும் முதன்மொழி கடைமொழியுடன் மண்டிலம் கொண்டு வரப்பாடுவது.

சித்திர வண்ணமாவது, ஐந்தாய் அந்தாதி எழுவாயடியும் ஈற்றடியும் மண்டிலங் கொள்ளப் பாடிப்புணர்ப்பது. ஆம்பல் வண்ணமாவது, எழுவாய்வடித்த முட்டொடர்பு பட்டு முதலடி மண்டிலங்கொண்டு வரப் புணர்ப்பது. பாத்திப வண்ணம், குவளை வண்ணம் ஆகிய இரண்டிற்கும் பஞ்சமரபு உரையில் விளக்கம் இல்லை.

இவையன்றி வேறு வண்ணம் புணர்க்க முடியாது என்று உறுதியாகக் கூறப்பட்டுள்ளது.

இசைப்பாக்களின் வகைப்பாடு

இசைப்பாக்கள் சுத்தப்பாக்கள், தேசாள பாக்கள், தமிழ்ப் பாக்கள் என்று மூன்று வகையாக வகைப்படுத்தப் பட்டுள் ளன.

சுத்தப்பாக்கள்: இவை சதுராட்டி, சாவட்டணை, முகண்டி, பிரவந்தம், தலைக்கண்டி என்று ஐந்துவகைப்படும். இவை ஆரிய வடசொல்லால் புணர்க்கப்படும்.

சதுராட்டி என்னும் பாவகை, உக்கிரகம் (உக்கிரசம்) துருவை, யாபோகம் என்னும் மூன்றடிகளால் புணர்க்கப்படும். இது த்ரிதாது பிரபந்தம் என்று வடமொழியில் அழைக்கப்படுகிறது. இவையே தற்போது கிருதி, கீர்த்தனை, ஆகிய உருப்படிகளில் பல்லவி அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று அங்கங்கள் ஏற்பட முன்னோடியாக இருந்தன. தமிழில், ‘அடி’ என்ற சொல் வடமொழியில் ‘அங்கங்கள்’ என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டு வந்தன என்று கூறலாம்.

உக்கிரசம் என்பது முதலடி
துருவை என்பது இரண்டாமடி
ஆபோகம் என்பது மூன்றாமடி
ஆந்திரியம் என்பது நாலாமடி.

சாவட்டணை என்னும் பாவின் இலக்கணம் பஞ்சமரபு உரையில் குறிப்பிடப்படவில்லை.

முகண்டி என்பது முதலடி என்றும் பெயர்படும். இது முன்றடியால் ஆனது. ஒவ்வொரு அடியின் தொடக்கத்திலும் கண்டத்தைக் கம்பித்துப் பாடிப் புணர்ப்பது இதன் இலக்கணமாகும்.

பிரவந்தம் என்பது அடி முழுவதிலும் பொருள் செறிந்திருக்க, ஒரு தாளத்தாலன்றி பல தாளத்தாலும் புணர்க்கப்படுவது.

தலைக்கண்டி என்பது முதலடி தொடங்கி இறுதியடியளவும் தூணியாக்கிப் புணர்ப்பது.

முன்னர்க்கூறிய உக்கிரசம், துருவை, ஆபோகம், ஆந்திரியம் என்னும் நான்குறுப்புக்களும் குறைபாடில்லாதபடி அமைவன உருவெனப்படும். மூன்றுறுப்பாக வருவனவுமுள. இவற்றில் இரண்டாமடியையே ஈற்றடியாகப் பாடி முடிக்கப்படும். இவை மங்கலத்துக்குப் பொருந்தாது என்று சிலப்பதிகார உரை கூறுகிறது.

பஞ்சமரபு உரையில், "சுத்தப்பாக்கள் புணர்க்குமிடத்து ஏழு கீதமும் ஏழு தாளத்துடனே புணர்ப்பது; கீதங்கள் தாளப் பெயரானும் வழங்கப்படும்" என்று காணப்படுகிறது. இவ்வுரைக்கு, சுத்தப்பாக்கள் புணர்க்கப்படும் போது அக்காலவழக்கிலிருந்த ஏழு கீதமும், ஏழு தாளங்களும் பயன்படுத்தப்பட்டன என்று விளக்கம் கூறுதல் பொருந்தும்.

பாடலுக்குக் கீதம் என்ற சொல் முதன்முதலில் தமிழில் [9]இளங்கோவடிகளால் 'மதுரகீதம்' என்ற தொடரில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இசைப்பாடலைக் கீதம் என்று குறிப்பிடும் வழக்கம் பக்தி காலத்தில் உள்ளது. தேவாரத்திலும், திவ்வியப் பிரபந்தத்திலும் இந்த வழக்கம் பின்பற்றப்படுகிறது. பாடல் என்று சொல்வது இயலாகவும் இசையாகவும் இருக்கலாம். ஆனால் கீதம் என்பது இசையாகவே அமையும்.

இங்கு ஏழு கீதம், ஏழு தாளம்- இவை எவற்றைக் குறிக்கின்றன என்பது ஆராயத் தகுந்தது. விஷ்ணு தர்மோத்தர புராணம், அக்கால இசை முறையைச் சூத்திரங்கள் மூலம் கொடுக்கிறது. ஓர் அத்தியாயம் கீத லஷ்ணங்களைப் பற்றியும், மற்றொரு அத்தியாயம் இசைக் கருவிகளைப் பற்றியும் விவரிக்கிறது. இதில் காணப்படும் 11 வகையான கீதங்களைப் பற்றிய குறிப்பு இந்நூலின் முக்கிய அம்சமாகும். இவற்றிலுள்ள முதல் ஐந்தும், 7,8, கீதங்களும் பரதரால் ஸப்ததாள கீதங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

ஸப்த தாள கீதங்களாவன:

1) மத்ரக, 2) உல்லோப்யக, 3) அபரந்தக 4) ரோவிந்தக 5) ப்ரகரி, 6) ஔவேனக, 7) உத்தர.

[10]குடுமியான் மலைக் கல்வெட்டிலும் இந்த ஏழு கீதங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

ஏழு தாளங்கள் என்பதை மேற்கூறிய ஏழு கீதங்களில் அமைந்துள்ள லயக் கோப்பைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தற்போதய நிலையில் ஏழு தாளங்கள் துருவம், மட்யம், ரூபகம், ஜம்பை, த்ரிபுடை, அட, ஏகம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

பஞ்சமரபு உரையில் கண்டுள்ள, 'கீதங்கள் தாளப் பெயராலும் வழங்கப்படும்'—மரபு வடமொழி நூலான மதங்கரின் பிரகத்தேசி, சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரம் போன்றவற்றில் பின்பற்றப்பட்டுள்ளது.

உ—ம்.

சங்கீதரத்னாகரத்தில் காணப்படும் துரங்கலீல, கஜலீல சர்ச்சரி ஹம்ஸலீல போன்ற பிரபந்தங்கள். இவை 108, தாளப் பெயர்களிலும் காணப்படுகின்றன.

தேசாளப் பாக்கள்:

இவை நான்கு வகைப்படும். துவைந்தி, சந்தி, சதுராங்கி பெருஞ்சுரம்.

இவற்றின் இலக்கணம் வருமாறு:

துவைந்தி - இது வட சொல்லால் ஓரடி எண் சீராகக்கொண்டு இரண்டு அடிகளால் புணர்க்கப் படும்.

சந்தி - நான்கு சீர்களைக் கொண்ட ஓர் அடி, மூன்றடிகளால்புணர்ப்பது

சதுராங்கி - எட்டுச்சீர்களைக் கொண்ட ஓர் அடி நான்கு அடிகளாற் புணர்ப்பது.

பெருஞ்சுரம்- அடி வரையறையின்றிப் பெரும் அளவாகப் பல தாளத்தாலும்புணர்ப்பது.

தேசாளப் பாக்களின் நான்கடிகளுக்கும் உரிய பெயர்கள் வருமாறு:

உகம் என்பது முதலடி
நிதே என்பது இரண்டாமடி
சாய என்பது மூன்றாமடி
சந்தி என்பது நான்காமடி.

மேற்கூறப்பட்ட தேசாள கீதங்கள் புணர்க்கும்போது சக்கு, சூழாதியாகப் புணர்க்கப்படும்.

தேசாள நிறம் தமிழ்ப் பாவினுக்கும் பொருந்தும், [11]சூழாதியாகப் பாடல்கள் புணர்ப்பது என்பது சூலாதி சப்த தாளத்திலமைந்த பாடல்களைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. சூழாவது, தேசி, வடுகு, சிங்களம் என்னும் மூன்று வகைக் கூத்துக்களுக்கும் பயனுறும்:

''மூவகை யாடலு முற்றிய வதன்பெயர்
சூழெனு மொழிப துணிந்திசி னோரே''

அடியார்க்குநல்லார் இப்பிரபந்தங்களைஅடி வரையறையின்றித் தாளத்தால் புணர்ப்பது என்று கூறுகிறார்.

சுத்தப்பாக்களைப் போன்று தேசாள கீதங்களும் தாளப் பெயரால் வழங்கப்படும்.

தமிழ்ப்பாக்கள்:

இவை விகற்ப நடையால் ஆனவை. நான்கு அடிகளாகவும் இரண்டு தளையாகவும், பின்னிரண்டடிகளும் பிரிவிலவாகி

வருவனவும், அடி விகற்பமாகி வருவனவும்,விகற்பநடைக்குரிய இலக்கணமாகும்.

பஞ்சமரபு உரையில், இரண்டடி விகற்பத்தாலான செய்யுள் ஒன்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"பஞ்சவர்க்குத் தூதாகிப் பாரதப்போர் வென்றானைக்
கஞ்சனுக்கு மாமருக னென்றியாங் கருதுவதே சான்றோர்
விண்ணவர்க்கு மேலாகி மெய்ப்பொருளா முட்பொருளை
மண்ணவர்க்கு மாசறுக்கு மறையன்ன பொருளினையே"

தாளத்துடன் கூடிய தமிழிசைப் பாக்கள்,எழுத்து, அசை, சீர், தளை என்ற நான்கு வகையாலும் இசை, யாழெழுத்தினாலும் புணர்க்கப்படும். யாழெழுத்து என்பதை இங்கு யாழிசைக்கருவியில் எழக்கூடிய எழுத்தாக, அதாவது சுரங்களாகக் கொள்ளலாம். வண்ணம், தேவபாணி, உருத்தளி ஆகிய மூன்று பாக்களும் அசையிற் புணர்க்கப்படும். இவை பக்தியிசைப் பாடல்களாகத் தோன்றுகின்றன. இங்கு 'உருத்தளி' என்பதைக் கோயிற்பாடல்கள் என்று கொள்ளலாம்.

சிந்துகள், திருப்பாட்டு, நிறம் ஆகிய மூவகைப் பாக்களும் மூர்த்திகளைப் பார்த்தருளிச் செய்த நாடகப் பாக்களாம். இவை தளையினாலும் புணர்க்கப்படும். இதில் திருப்பாட்டு என்பது தேவாரத்தைக் குறிக்கும்.

ஆக தமிழ்ப்பாக்களை ஆறு வகையாக, பஞ்சமரபு உரையினின்று அறிய முடிகிறது.

வண்ணம், தேவபாணி, உருத்தளி, சிந்துகள், திருப்பாட்டு நிறம்.

இசைப் புணர்ப்பு

இயற்பாக்களோடு நிறத்தை எவ்வாறு புணர்ப்பது என்கிற இலக்கணம் பஞ்சமரபு - இசைமரபின் நிறத்த மரபில் விரிவாகக்கூறப்பட்டுள்ளது. இசைப் புணர்ப்பு ஐந்து வகைப்படும் அவை,

இடையீடு
தொட்டுக்கோள்
வேறுபாடு
இரட்டை
கூட்டிசை என்பனவாம்.

இடையீடாவது:

"எழுவா யடிமாற் றடியே யொத்து
வழுவி லிரண்டு மிடையீ டாகும்"

ஆரம்பித்த அடியின் இசை, மற்ற அடிகளின் இசையினின்றும் வழுவாமல் இருப்பது இடையீடாகும்.

தொட்டுக்கோளாவது,

"முதலடி தன்னொடு மூன்றாமடியொத்
தயலடி தன்னுட னீற்றடி யொத்துத்
தோன்றில் தொட்டுக் கோளென மொழிப"

முதலடியும் மூன்றாமடியும் ஒத்திருக்கவும், இரண்டாமடியும் இறுதியடியும் ஒத்திருப்பது. வேறுபாடாவது,

"ஊறிய விசைக ளொருநான் கடியும்
வேறுபட வருவது வேறுபாடாகும்."

நான்கடிகளில் ஒவ்வோரடியும் வெவ்வேறு இசையோடு அமைந்திருப்பது வேறுபாடு எனப்படும். இங்கு 'அடி' என்பதை ஒரு பிரிவு (stanza) என்று எடுத்துக்கொள்வோமாயின் இவ்வமைப்புத் தற்போது நான்கு பிரிவுகள் அமைந்த செய்யுளின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு இராக மாலிகையாகப் பாடுவதை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

இரட்டையாவது,

"முன்னிரண் டடியு மோரிசை யாகிப்
பின்னிரண் டடியும் பிரிவில வாகித்
துன்னி நிற்ப திரட்டை யாகும்."

முதலிரண்டு அடிகளும் ஒரு குறிப்பிட்ட இசையுடனும், அடுத்த இரண்டு அடிகளும் அதே இசை அமைப்புடன் பிரிவில்லாமல் நிற்பது இரட்டையாகும்.

கூட்டிசையாவது,

"நாலடி யிசையு மோரிசை யாகிச்
சேரவ ரிந்து கூட்டிசை யாகும்."

நாலடி இசையும் ஒரே மாதிரியாக இருப்பது கூட்டிசை எனப் படும்.

இடையீடு, கூட்டிசை இவ்விரண்டின் இலக்கணமும் ஒரேமாதிரியாக இருப்பது நோக்குதற்குரியது.

மேற்கூறிய இவ்வைந்தும் நாலடியால் வருவன. இவை வடமொழியில் ஏகதாது ப்ரபந்தம், த்விதாது ப்ரபந்தம் என்று கூறப்படுவதோடு ஒத்தமைகிறது.

இனி 'மாது' அல்லது சாகித்யம் என்று சொல்லப்படும் 'சொற்கள் புணர்த்தலின்' இலக்கணத்தைப் பஞ்சமரபு வாயிலாக அறியலாம். இசை புணர்க்கும்போது பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம் என்ற ஐந்து சொற்களில் முதல் மூன்று சொற்களின் முதலெழுத்துக்களை மொழிக்கு முதலாகக் கொண்டு புணர்க்கலாம். விருத்தன், மரணம் என்ற எழுத்து கள் சிறப்பின்மை கருதி விடுக்கப்படவேண்டும்.

இசை நுளைபு: ஓர் இசையில் மற்றொரு இசை நுழைவதை 'இசை நுளைபு' என்று கூறலாம். பஞ்சமரபின் நிறத்த மரபில் காணப்படும், 'நெய்தன் முகத்த' என்னும் பாடல், 'இசைமரபு' என்றநூலில் இசைக்கலப்பு என்னுந்தலைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. இவ்வாறு கலப்புடன் இசைபுணர்க்கும் போது நான்கு வகையாகப் புணர்க்கலாம்.

அவை: நெய்தல், முகத்தல், பாய்தல், நுளைதல். இவை நான்கும் இயற்பாக்களோடு புணர்க்கப்படும்போது,

நெய்தல் என்பது வல்வினைக்கு எழுவாயாகும்.
முகத்தல் என்பது மெல்வினைக்கு எழுவாயாகும்.
பாய்தல் என்பது சமநிலைக் கெழுவாயாகும்.
நுளைதல் என்பது புன்மைத் தொழிலே.

இசை புணர்ப்பவனின் தகுதிகள்:

இசை புணர்ப்பவனுக்குரிய தகுதிகளாகப் பத்து இலக்கணங்கள் பஞ்சமரபின் வகையொழிபு மரபில் கூறப்பட்டுள்ளன. அவை,

பாவமறிதல்	பொருளறிதல்	இராகமறிதல்
தாளமறிதல்	நிறமறிதல்	காலமறிதல்
புணர்ப்பறிதல்	பண்ணறிதல்	உரைப்போரையறிதல்
		தானமறிதல்

ஆகிய 10 இலக்கணங்களையும் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

இசை புணர்ப்பவன் ஏதேனும் ஒரு கட்டளையில் ஆரம்பித்து அதைத்தன்னால் பெருக்கலாமளவும் கிரியைகளைச் சேர்த்துக் கிரியைகளை முடிப்பித்துப் பின்பு ஆரம்பித்த கட்டளைகளில் முடித்தல் நன்று என்று கூறப்பட்டுள்ளது. இக்கருத்து தற்போது தானம், நிரவல், கல்பனாசுரம் பாடுதல், பல்லவி ஆகியவற்றோடு ஒப்பிடத்தக்க வகையில் உள்ளது.

இசைக்குரியவர்கள்

பாடல் இசைப்பவர்கள் பாணர் என்று வழங்கப்படுவர். "பண் என்பது இசைக்குப் பெயர். இசைகளால் ஆயது பண் இசை பாணுக்கு உரித்தாதலான் (பண், பாண், பாட்டு) பாணனென்று பெயராயிற்று" என்று 'பாணன்' என்பதற்குப் பெயர்க்காரணம் கூறுவர் பஞ்சமரபு உரையாசிரியர்.

[12]சங்க கால இலக்கியக் குறிப்புக்களிலிருந்து பாணர்களில் இசைப்பாணன், யாழ்ப்பாணன், மண்டைப்பாணன் என்ற மூன்று வகுப்பினர் இருந்ததாகத் தெரிகிறது. பொதுவாக, இசைப்பாணன் மிடற்றுப் பாடலில் வல்லவன். யாழ்ப்பாணரில் பெரும்பாணன் சிறுபாணன் என்ற இரு பிரிவினர் இருந்தனர். பெரும் பாணன் பேரியாழ் இசைப்பதிலும் சிறுபாணன் சீறியாழ் இசைப்பதிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். மண்டைப்பாணன் எப்பொழுதும் கையில் பிச்சைப் பாத்திரத்தோடு இருப்பவன். இக்காரணம் பற்றியே இவன் 'சென்னியன்' என்றும் அழைக்கப்படுவான்.

இடைக்காலத்தில் ஆனாய நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பாணபத்திரர், மதங்கசூளாமணியார் என்னும் தெய்வப் பாணர்கள் வாழ்ந்து இறைவனருள் பெற்றனர்.

பஞ்சமரபில், குழலன், மதங்கன், கவுண்டியன் என்று பாணர்கள் மூன்று பிரிவாகக் கூறப்பட்டுள்ளனர். இம்மூன்று திறத்துப் பாணரிலும்

சுத்தத்திற்குரியவன் குழலன்;
தமிழ்க் குரியவன் மதங்கன்;
சாளவத்திற்குரியவன் கவுண்டியன்.

இம்மூவரிடத்தும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு வருணத்தாரும் ஏனையோரும் சென்று அடி வணங்கிப் பொன் கொடுத்துத் தம்மைப் பாடச் செய்தல் மரபு.

பாணர்கள், இந்நால் வகைச் சாதியினருக்கும் சுத்தம், சாளவம், தமிழ் என்னும் மூவகைச்சாதி யோசைகளிலும் பாடினர் என்று தெரிகிறது.

மூவகைச் சாதியோசைகளாவன:

தமிழோசை பலவோசைகளாலானது.

சுத்தம் சாத்துவிக ஓசை.

சாளவம் இராசத ஓசை.

சுத்தம் - சாமவேதம் பாடும் மறையோர்க்குப் பாடப்படும்
சாளவம்-தாமமென்கிற நிறத்திற் அரசர்க்குப் பாடப்படும்
தமிழ் - வணிகர்க்கும் வேளாளர்க்கும் தமிழ் நிறம் பாடப்படும்

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஒழிந்த சாதியினர் என்ற ஐந்து பிரிவினர்களுக்கு முறையே அ,இ,உ,எ,ஒ என்னும் குற்றெழுத்தைந்தினைப் பாக்களின் முன் வைத்து புணர்க்க வேண்டும்.

அந்தணர் - அ
அரசர் - இ

வணிகர் - உ
வேளாளர் - எ
ஒழிந்த சாதியினர் - ஒ.

இதிலிருந்து பஞ்சமரபு நூல் இயற்றப்பட்ட காலத்தில் பாணர்கள் மிகவும் கௌரவிக்கப்பட்டுச் சிறப்பான நிலையில் இருந்தனர் எனத் தெரிகிறது.

இவ்வியலில் பயன்படுத்தப்பட்ட பஞ்சமரபு வெண்பாக்கள்:

1. ஆதியுடன் சுத்தஞ் சாளவஞ்சங் கீரணம்
ஏதமில்சீர்ச் செந்தமிழோ டிவ்வைந்தும்—பேதமே
பாடற் பகுதி பலநிறம் பேசினார்
கோடி மொழி நூலோர் குறித்து.

2. மூன்று நிறமு நிற மொன்றே முன் சொன்ன
வான் றொழி லால் வேற்று மையாகும்—என்றுலகில்
வங்கியமே வீணையாழ் பன்னுஞ் சுருதியெனத்
துங்க மிடற் றாற்பிறக்குஞ் சொல்.

3. வங்கியமே வீணையாழ் சுத்தமே சாயை தமிழ்த்
துங்கவெழுத் தேழ்நரம்பு மேழோசை—பொங்கொளிசேர்
தென்சொல் வடமொழியா லிட்ட திறனான்கும்
பின்புமோர் நால்வகையும் பேசு.

4. ஓரிசை முன்னிசை சுத்தம்பிர் கண்டமிசை
நேர்புரி கண்ட நெறிமுறையே—சார் பொலிந்த
வெட்டுவகையு மிசையின் புணர்ப்பென்றார்
மட்டலருங் கூந்தலாய் வந்து.

5. சீரார் திருமகளுஞ் செந்தா மரைமலரும்
ஏரார் பரிதிமதி யிந்நான்கும்—கார்மேனிக்
கண்ணனை முன்வைத்துக் காப்புரைக்கக் கற்றுணர்ந் தோர்
வண்ணம் புணர்க்கும் வகை.

6. பத்தியமுஞ் சித்திரமு மாம்பலும் பாத்திபமு
மொத்த குவளையோ டிவ்வைந்துஞ்—சுத்தமாம்
வெற்றித்த வண்ணம் புணர்க்க வென் றோதினார்
முற்றுணர்ந்த மெய்த்தமிழோர் முன்.

7. சான்றோர் சதுராட்டி சாவட்டணை முகண்டி
ஏன்ற பிரவந்தந் தலைக்கண்டி—தோன்றலே
உக்கிர சந்துருவை யாபோக மாந்திரிபின்
தொக்கவியல் சூழ் சுத்தப் பா.

8. தோன்று துவைந்தி சந்தி சதுராங்கி
ஏன்ற பெருஞ்சுரத்தோ டின் நான்கும்—தோன்ற
உகம திறி தேசாய முயாசந் தியென்று
தகவைத்த சாளவத்தின் பா.

9. இருதளையாய் நான்கா யெழுவா யடியின்
வரு தளையை யொரு விகற்பான் மாறிப்-பொருதளைகள்
பிற் கூறிப் பாப்பின் னிரு விகற்பம் பேசில்
உற்ற தமிழ் விகற்ப மாம்.

10. இடையீடு தொட்டுக்கோள் வேறுபா டேனைப்
புடையூ றிரட்டை புகலும்—படையார்ந்த
கூர்வேல் விழிமடவாய் கூட்டிசையுங் காட்டினார்
பார்மே லிசையதனின் பண்பு.

11. பாலன் குமார னரசன் விருத்தனுடன்
கோலு மரணமெனக் கூறினார்—ஞாலத்தோர்
பேர்முதலா மூன்றெழுத்தும் பேணிக்கொள்பின்னிரண்டுஞ்
சீர்மையிலை யென்றும் சிதை.

12. நெய்தன் முகத்த னெறிவிலங்கப் பாய்தலே
கொய்து நுளைதலெனக் கூறினார்—மொய் குழலாய்
வன்மையே மென்மை சம மென்பவையத்து
நுண்மையி னாற்கலக்க லாம்.

13. பன்னிய பாத்தாளம் புணர்ப்புப் பொருணிறங்கள்
மன்னிய பண்ணோ டிராகங்கள்—நன்னுதலாய்
சொல்லிய கால முரைப்போ ரிடமறிதல்
நல்லிசையோர் கண்ட நெறி.

14. எடுத்த வரையாலே யெவ்வரவும் போக்கி
யடுத்த கிரியை வரினு - முடிப்பித்து
முன்செய்த மாத்தியான் முற்றுவித்து மூளுவிக்கை
தன் செய்கை யாகத் தகும்.

15\. குன்றாக் குழலன் மதங்கன் கவுண்டியனாம்
நன்றாகப் பண்பாடும் பாணரைச் — சென்றே
யடி வணங்கிப் பொன்கொடுப்ப ரந்தணர் முன்னயோர்
துடியே ரிடைமடவாய் சொல்.

16\. சுத்த மறையோர்க்காஞ் சாளவஞ் சோர்வில்லா
மத்தக் களிற்றானை மன்னர் காம் — வித்தகனார்
செய்ய தமிழ் வணிகர் வேளாளர்க் கென்றுரைத்தார்
பொய்யிலுரை நூலோர் பொதிந்து.

துணைக்குறிப்புக்கள்.

1. சங்கரனார். க. 1968 **இசைமரபு.** நெல்லை சங்கீதசபை. திருநெல்வேலி. பக்கம்.41.
2. சிலப்பதிகாரம் - கடலாடு காதை. அடி.35 அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.
3. செயராமன், இரா. "சிந்து இலக்கியம். ஓர் ஆய்வு" **தமிழ்க் கலை,** டிசம்பர் 1985, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை. பாட்டு 19-21.
5. சிலப்பதிகாரம் - கடலாடுகாதை உரை அடி. 36-7.
6. தொல்காப்பியம் - இரண்டாம் பாகம் (பேராசிரியம்). 1935. எஸ். கனகசபாபதிபிள்ளை. சென்னை, பக்கம் 1276.
7. சிலப்பதிகாரம் - அரங்கேற்றுகாதை. அடி.13.
8. வெள்ளைவாரணன். க.1962. **பன்னிருதிருமுறை வரலாறு.** பக்கம். 343-344. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
9. சிலப்பதிகாரம் - வேனிற்காதை, அடி. 24.
10. Satyanarayana, R, 1907, **Kudimiamalai inscription on Music.** Varalakshmi Academy Publication Series, no. 3 Mysore.
11. சீதா. எஸ். 'பஞ்சமரபு' - நூல் திறனாய்வு கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தாஞ்சாவூர்.
12. Vaithilingam .S. 1977. **Fine arts and Crafts in Pathu -P-Pathu & Ethutogai.** AnnamalaiUniversity. P. 172.

இயல் எட்டு

ஆய்வு முடிவுகள்

பஞ்சமரபு நூல் விளக்கம், இந்நூல் இயற்றப்பட்டகாலம், யாழ், ஏழிசை, பாலை, பண், வங்கியம், கண்ட மரபு, இசைப் பாக்கள், இசை புணர்த்தல் ஆகிய செய்திகள் முன் இயல்களில் ஆராயப்பட்டவை. இதன் மூலம் வெளியான முடிவுகளின் தொகுப்பினை இவ்வியலில் காணலாம்.

1. பஞ்சமரபு நூல் விளக்கம்

அ. தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள (1975) பஞ்சமரபு முழுமையும், மூல நூலாகக் கொள்ள இயலாது என்பதும், இந் நூல், பஞ்சமரபு மூல நூலோடு 'இசை நுணுக்கம்' என்ற மற்றொரு இசை நூற்பகுதியினையும், திவாகரம், பிங்கல நிகண்டு போன்ற நூல்களிலுள்ள இசைச் செய்திகளையும் சேர்த்து, வடமொழியிலமைந்த இசை நூல் மரபுகளையும் கருத்திற் கொண்டு, ஒரு தொகுப்பு நூலாகப் பிற்கால இசை யாசிரியர் ஒருவரால் இயற்றப்பட்டதாகக் கருதலாம் என்பதும், இவ்வாறு தொகுத்தவரே இந்நூலுக்கு உரையும் செய்திருக் கலாம் என்பதும் இவ்வாய்வின் முடிவு.

ஆ. 'உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டும் பஞ்சமரபு வெண்பாக்கள்' என்னும் பகுதியில், அடியார்க்கு நல்லாரைத் தவிர, அரும்பதவுரையாசிரியரும், நச்சினார்க்கினியரும் பஞ்ச மரபு வெண்பாக்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்றறியப் பட்டது. அடியார்க்கு நல்லார் மேற்கோள் காட்டியுள்ள பஞ்சமரபு வெண்பாக்களனைத்தும் இசை மரபுப் பகுதியைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத் தகுந்தது.

இ. பரத சங்கிரகம், தாளசமுத்திரம், இசை மரபு என்ற மூன்று இசை இலக்கண நூல்களிற் காணப்படும் பஞ்சமரபு

வெண்பாக்களை ஆராய்கையில், 'இசைமரபு' என்ற நூல் பஞ்சமரபு—இசைமரபின், கண்டமரபு, நிறத்த மரபு ஆகிய பகுதிகளிற் கண்ட பாடல்களே என்றறியப் பட்டது.

ஈ. பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்தின் பொறுப்பில் இருக்கும் பஞ்சமரபு ஓலைச் சுவடியின் இசை மரபுப் பகுதியை பதிப்பில் வெளி வந்துள்ள இசை மரபுப் பகுதியோடு ஒப்பிடுகையில், இச் சுவடி ஒரு குறிப்பிட்ட ஆசிரியரால், ஒருகுறிப்பிட்ட காலத்தில் எழுதப்படவில்லை என்றும், இது பலரால் எழுதப் பட்டிருக்கும் என்றும், தற்போதுள்ள பஞ்ச மரபுப் பதிப்பிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகள் பயன்பட்டிருக்கும் என்றும் ஊகிக்க முடிந்தது.

உ. வாச்சியம் என்பது பொதுவாக எல்லா இசைக் கருவிகளையும் குறிப்பினும், பஞ்ச மரபின் வாச்சிய மரபில் இது தோற் கருவிகளைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டிருப்பது இந் நூலில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஊ. 'செப்பிய சிந்து' என்னும் பாடலுரையில் காட்டப்பட்டுள்ள மேற்கோள் பாடல்களில் சில, பதிற்றுப்பத்தின் அழிந்து பட்டதாகக் கருதப்படும் பகுதிகளான முதற்பத்திலும், இறுதிப் பத்திலும் காணப்படுபவை. இவ்வகையில், இந்நூல் தமிழ் இலக்கிய ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றுணரப்பட்டது.

2. பஞ்சமரபின் காலம்:

அ. பஞ்சமரபு சங்ககாலத்தில் இயற்றப்பட்டது-பிற்காலத்தில் இயற்றப்பட்டது என்னும் இருவகையான கருத்துக்களுக்குரிய காரணங்களை ஆராய்ந்ததில், யாழ்மரபின் சில பகுதிகளைப் பஞ்சமரபு மூலமாகக் கொள்ளலாம் என்றும், தற்போது பதிப்பிலுள்ள நூல், பஞ்சமரபு மூலத்தின் அடித்தளத்தில் சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதலாம் என்றும் தோன்றியது.

ஆ. இந்நூலில் 'சரிகமபதநி' என்கிற ஏழு இசைஎழுத்துக்கள் குறிப்பிடப்படுவதாலும், இந்நூலுக்குரிய இசை இலக்கியங் களாகத் தேவாரப் பாடல்கள் இருந்திருக்கும் என்ற கருத்துக் கிணங்கவும், அடியார்க்கு நல்லாரால் துணைநூலாகக்கொள்ள பட்டது என்ற காரணத்தைக் கொண்டும், இந்நூல் ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகும், 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னரு மான காலக்கட்டத்தில் இயற்றப்பட்டிருக்கலாம் (தொகுக்கப் பட்டிருக்கலாம்) என்று கணிக்கலாம்.

இ. பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள பாக்கள், அவற்றைப் புணர்த்தல் ஆகியவற்றின் இலக்கணத்தைத் தற்போதைய கீர்த்தனை, இராகமாலிகை போன்றவற்றோடு ஒப்பிட்டு அறிந்ததிலிருந்தும்; பஞ்சமரபில் நூல் அமைப்பை வடமொழி இசை இலக்கணநூல் அமைப்போடு ஒப்பிட்டு ஆராய்ந்ததி லிருந்தும், தற்போது பதிப்பிலுள்ள பஞ்சமரபு நூல் 15ஆம் நூற்றாண்டில் திருத்தம் அடைந்திருக்கலாம் என்று கருத வாய்ப்பளித்தது.

ஆக, தற்போது பதிப்பில் வெளியாகியுள்ள பஞ்சமரபு நூல் சங்ககாலம் முதற் கொண்டு 16ஆம் நூற்றாண்டு வரையிலான இசைச்செய்திகளை ஒரு தொடர்ந்த மரபோடு விளக்கும் ஒரு தொகுப்பு நூல் என்பது இவ்வாய்வில் கண்ட முடிவு.

3. யாழ்:

அ. இரண்டாம் இயலான யாழ்மரபில், பண்டைக்காலத்தி லிருந்த வில்யாழ், ஆதியாழ், சீறியாழ் போன்றவை பஞ்சமரபுக் காலம் அல்லது அதற்கு முன்னர், அவற்றின் பயன்பாடுகளுக் கேற்ப நன்கு திருத்தம் பெற்றுப் பேரியாழ், மகரயாழ் சகோடயாழ், செங்கோட்டுயாழ் என்று நால்வகைப் பட்டன என்றும், இவை நரம்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன என்றும் அறிய முடிந்தது.

ஆ. சீறியாழின் திருத்தமடைந்த யாழே செங்கோட்டி யாழ் என்றறியப்பட்டது.

இ. யாழில் மெட்டுக்கள் இல்லாததால் இராக ஆலாபனைக்குத் தேவையான நுட்ப அலகுகளும், அசைவுகளும் பெற வாய்ப்பில்லை; இக்காரணத்தால் யாழ், வழக்கொழிந்ததாகக் கருதப்படினும், இது தம்பூரா, கோட்டுவாத்தியம் போன்ற நரம்புக் கருவிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது.

ஈ. யாழிசைத் தொழில் முறையில் பஞ்சமரபிலுள்ள தொழிற்கையெட்டு, யாழிற்குரியதாகிய கையெட்டு ஆகியவை சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகளாலே 'இசைக் கரணம்' 'இசையெழு' என்ற பெயர்களில் கானல் வரியில் சொல்லப்பட்டுள்ளன என்றறியப்பட்டது.

உ. யாழும் வீணையும் வெவ்வேறானவை என்று கூறப்படினும், யாழிசைக்கரணம் யாழிசைத் தொழில்முறை விளக்கங்களிலிருந்து இரண்டு கருவிகளுக்கும் பொதுவான சில கிரியைகள் அக்காலத்தில் இருந்தன என்பதும், அக்காலத்தில் யாழிசைத் தொழிலானது பாட்டுடன் நிகழ்ந்தது என்ற உண்மையும், இசை இலக்கணம் மிகவும் நுட்பமான வகையில் அமைக்கப்பட்டிருந்தது என்பதும் தெளிவாகியது.

4. ஏழிசை

அ. பஞ்சமரபு உரையில் காணப்படும் ஆண், பெண், அலி என்கிற ஏழிசை வகைப்பாடு, நிகண்டுகளிலோ, சிலப்பதிகார உரையிலோ குறிப்பிடப்படவில்லை என்பதும்; வடமொழி நூல்களுள் ஒன்றான நாரதரின் சங்கீத மகரந்தத்தில் இராகங்கள் இவ்வாறு, (ஸ்திரி, புருஷ, நபும்ஸக) வகைப்படுத்தப்பட்டு உள்ளன என்பதும் அறியப்பட்டது.

ஆ. ஏழிசையின் அலகுகளை வடமொழி இசைநூல் மரபோடு ஒப்பிடும் போது பண்டைய இசைத்தமிழ் நூலோர், மத்தியமத்தை ஆரம்ப சுரமாகக் கொண்டனர் என்பதும், இவ்வாறு குரலை, மத்தியமமாகக் கொள்வது தற்போது மத்தியம சுருதியில் பாடுவதைக் குறிக்கும் வகையில் உள்ளது என்பதும் அறியப்பட்டது .

தேவாரப் பண்முறையில் குறிஞ்சி, நவரோஜ் நாதநாமக்ரிய போன்ற இராகங்கள் மத்தியம சுருதியில் பாடப்படுவது இதற்கொரு சான்றாகும்.

5. பாலை

அ. தற்போதைய நிலையில் மேளகர்த்தா என்று கூறப்படுவது பண்டைய இசைத்தமிழின் பாலை என்பதே என்று அறியப்பட்டது.

ஆ. பாலைகள் ஆயம் (linear), சதுரம் (square), திரிகோணம் (Triangular), வட்டம் (Circular) என்பது போன்ற கணித முறையில், அறிவியல் பூர்வமாக, நுட்பமான வகையில் வகுக்கப்பட்டுள்ளமை, பண்டைய தமிழரின் அறிவுக் கூர்மைக்கு ஓர் சான்றாக விளங்குகிறது.

இ. வட்டப்பாலையில் ஏழிசை நிற்கும் இரண்டு முறைகளில், நரம்பிற்கு முதன்மை அளிக்கும்போது துலா ராசியில் குரல் நிற்கிறது என்பதும் இராசிக்கு முதன்மை அளிக்கும் போது இடபத்தில் குரல் நிற்கிறது என்பதும் அறியப்பட்டன. இவ்விரண்டும், தற்போதைய நிலையில் ஏறக்குறைய முறையே, அரிகாம்போதி (28) கரகரப்ரியா (22) ஆகிய இராகங்களுக்கு சமமாக உள்ளன என்பதும் அறியப்பட்டது.

ஈ. பஞ்சமரபின் வெண்பா, உரை விளக்கங்களிற் காணப்படும் வலமுறைப் பாலைத் திரிபு, சிலப்பதிகாரத்திலுள்ள ஆய்ச்சியர் குரவையின் அடியார்க்கு நல்லார் உரையுடன் பொருந்துகிறது என்பதும், இடமுறைப் பாலைத் திரிபு அரங்கேற்று காதையின் மூலம், உரைகளிற் கூறப்பட்டுள்ள வம்புறு மரபுடன் பொருந்துகிறது என்பதும் அறியப்பட்டது. பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள இடமுறைத்திரிபு, வேனிற்காதையில் காணப்படும் இடமுறைத் திரிபுடன் மாற்றம் கொண்டுள்ளது என்பதும் அறியப்பட்டது.

உ. செம்பாலை முதலான ஏழுபாலைகளுக்கு நிகரான தற்போதைய இராகங்களில் மூன்று விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. அவை வருமாறு;

எண்	பாலைகள்	ஆபிரகாம் பண்டிதர்	விபுலானந்தர், பேராசிரியர் சாம்பமூர்த்தி	டாக்டர். எஸ் இராமநாதன்
1	செம்பாலை	தீரசங்கராபரணம் (29)	அரிகாம்போதி	அரிகாம்போதி
2	படுமலைப் பாலை	கரகரப்ரியா (22)	நடபைரவி	கல்யாணி
3	செவ்வழிப் பாலை	தோடி (8)	பஞ்சம மில்லாத தோடி	தோடி
4	அரும்பாலை	கல்யாணி(65)	சங்கராபரணம்	கரகரப்ரியா
5	கோடிப் பாலை	அரிகாம் போதி (28)	கரகரப்ரியா	சங்கராபரணம்
6	விளரிப்பாலை	நடபைரவி (20)	தோடி	பஞ்சமமில்லாத தோடி
7	மேற்செம் பாலை	பஞ்சமமில்லாத தோடி(20)	கல்யாணி	நட பைரவி

6. **பண்:**

அ. பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள, 'பண்' என்னும் சொல் விளக்கத்திலிருந்து தலை, மிடறு போன்ற 'பெருந்தானங்கள் எட்டு' என்பது பண்களைப் பாடும்போது, அவை பிறக்கும் இடங்கள் என்றும் எடுத்தல், படுத்தல் முதலான கிரியைகள் எட்டு' என்பது பண்கள் பிறப்பதற்குச் செய்யும் முயற்சி வேறுபாடுகள் என்றும் அறியப்பட்டது.

ஆ. பண்கள் 103 என்று வகைப்படுத்திக் கூறிய முதல் இசை இலக்கண நூல் பஞ்சமரபு என்பது குறிப்பிடத் தகுந்தது.

இ. பஞ்சமரபில் கூறப்பட்டுள்ள பண்களின் சில வகைப் பாடுகள் வடமொழி நூல்களான சங்கீத மகரந்தம், இராக விபோதம் போன்ற நூல்களிலும் காணப்படுவது அறியப் பட்டது.

ஈ. பஞ்சமரபு உரையின் பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் வகைப்பாட்டில் காணப்படும் மல்லாரி, சாயை

(அரளி) சோகவராடி, கூதாளி என்னும் நான்கு பண்களும், உரையின் அகம், புறம், அருகு, பெருகு வகைப்பாட்டில் காணப்படவில்லை. இதிலிருந்து 103 பண் வகைப்பாட்டில் பஞ்சமரபு உரையிலேயே வித்தியாசங்கள் இருப்பது அறியப் பட்டது.

உ. நூற்றுமூன்று பண்களும் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை என்னும் தமிழக நிலப்பாகுபாட்டின் அடித்தளத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் நாற்பெரும் பண்களும், திறங்களும், அவற்றின் வகைகளும், பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலத்து மக்கள் இசையோடு தொடர் புடையவை என்றும் அறியப்பட்டன.

7. **வங்கியம்**: வங்கிய மரபுவெண்பாக்களும், உரைப்பகுதி களும், அடியார்க்கு நல்லாரால் முழுமையாக எடுத்தாளப் பட்டுள்ளன என்பதும், பஞ்சமரபில் விளக்கப்பட்டுள்ள வங்கி யம் தற்போதைய புல்லாங்குழலே என்பதும் அறியப்பட்டன.

8. **ஆளத்தி**

அ. ஆளத்தி இலக்கணம் பண்டைய இசைத் தமிழின் முக்கியமான அமிசமாகக் கருதப்படுகிறது. இது, வடமொழி நூல்களிற் கூறப்படாமலிருப்பது கண்டுணரப்பட்டது.

ஆ. ஆளத்தி வகை விளக்கங்களிலிருந்து, காட்டாளத்தி தற்போதைய தானம் என்பதுடன் ஒப்பிடத் தக்கதாகவும், நிறவாளத்தி இராக ஆலாபனையை ஒத்ததாகவும், பண்ணா ளத்தி இசை உருப்படிகளைப் பாடுவதாகவும் தெரிகிறது. இதி லிருந்து பண்டைய இசைத்தமிழின் ஆளத்தி வகைகளே, பின்னர்க் கர்நாடக இசையில் மனோதர்ம சங்கீதம், கல்பித சங்கீதம் என்னும் பிரிவுகள் ஏற்பட வழிகோலின என்ற உண்மையுமறியப்பட்டது.

9. **இசைப் பாக்கள்**: அ. சிந்து, வண்ணம் முதலான பாக்க ளின் இலக்கணத்தையும், சில இசைப் புணர்ப்பு இலக்கணத் தையும் ஆராய்ந்தபோது, இவை தேவாரம், திருப்புகழ், கீர்த் தனை,இராக மாலிகை போன்ற இசை உருப்படிகளின் அமைப் போடு ஒத்திருப்பது அறியப்பட்டது.

பிற்சேர்க்கை - 1

ஏழிசையின் விவரம்

எண்.	பெயர்கள்	மாத்திரை	உடம்பில் தலைப்படு மிடங்கள்	ஓசை ஒப்புமை	தெய்வம்	வகைப் பாடு	எழுத்துக்கள்
1.	குரல்	4(ச)	மிடறு	சங்கு	பிரமன்	ஆண்	ஆ
2.	துத்தம்	4(ச)	நாக்கு	குயில்	வாதிரையன்	பெண்	ஈ
3.	கைக்கிளை	3(ங)	அண்ணம்	யானை	பாரத்துவாசன்	ஆண்	ஊ
4.	உழை	2(உ)	தலை	மயில்	மயில்தாங்கியன்	அலி	ஏ
5.	இளி	4(ச)	நெஞ்சு	புரவி (குதிரை)	அங்காரகன்	பெண்	ஐ
6.	விளரி	3(ங)	நெற்றி	அன்னம்	பாற்கரன்	பெண்	ஓ
7.	தாரம்	2(உ)	மூக்கு	காடை	காசிபன்	ஆண்	ஔ

பிற்சேர்க்கை - II

பெரும் பண்கள்

பெரும் பண்கள்	வகைகள்	பஞ்சமரபு உரையில்	பிங்கல நிகண்டில்
பாலையாழ்	அகம்	பாலை	பாலை
	புறம்	தேவதாளி, தேவாளி	செந்து
	அருகு	சீர்கோடிகம் நிருபதுங்கராகம்	மண்டலியாழ்
	பெருகு	கொடி நாகராகம்	பவுரி.
குறிஞ்சியாழ்	அகம்	குறிஞ்சி	குறிஞ்சி
	புறம்	செந்து	ஆசாரி
	அருகு	மண்டலம், மண்டலியாழ்	சாயவேளர் கொல்லி
	பெருகு	மவுரி, பவுரி, அரி	கின்னராகம்.
மருதம்	அகம்	மருதம்	மருதம்
	புறம்	ஆசாரி, ஆகரி, யாசரி	தேவதாளி
	அருகு	சாய வேளர் கொல்லி	சீர்கோடிகம்
	பெருகு	கின்னராகம்	கொடிநாகராகம்.
செவ்வழி (முல்லை)	அகம்	செவ்வழி (முல்லை)	செவ்வழி
	புறம்	வேளாவளி, மௌசாளி	மௌசாளி
	அருகு	சீராகமரம், சீராகம்	சீராகம்
	பெருகு	சந்தி	சந்தி.

பிற்சேர்க்கை - III

103 பண்களின் விவரம்

வ. எண்.	பண்கள்- திறங்கள்- அவற்றின் வகைகள்	நாற்பெரும் பண்களின் பெயர்கள்*	உரிய பாலைகள்	இசைகள்	பரியாயப்பெயர்கள்
	பாலைப் பெரும்பண்				
1.	அகம்	பாலையாழ் (1)	செம்பாலை	ஏழிசை	அரும்பாலை
2.	புறம்	தேவதாளி (2)	மேற்செம்பாலை	ஏழிசை	தேசாழி, தேவாழி, தேவாளி, தேசி.
3.	அருகு	நிருபதுங்கராகம்(3)	செம்பாலை	ஏழிசை	திருபதுங்க ராகம், கோடிகம், சீர்கோடிகம், தோடி, கோடி, விளரிப்பாலை.
4.	பெருகு	நாகராகம் (4)	செம்பாலை	ஏழிசை	கொடி நாகராகம்
	திறங்கள் :	**அராகம்**			
5.	அகம்	தக்கராகம் (17)	அரும்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	அராகம்.

6.	புறம்	அந்தாளி பாடை (18)	அரும்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	அந்தாழிபாடை
7.	அருகு	அந்தி (19)	மேற்செம்பாலை	,,	ஆந்தி
8.	பெருகு	மன்றல் (20)	அரும்பாலை	,,	மன்றில்
	நேர்திறம்:				
9.	அகம்	நேர்திறம் (21)	செவ்வழிப் பாலை	திறம் (ஐந்திசை)	புறநீர்மை
10.	புறம்	வராடி (22)	விளரிப்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	—
11.	அருகு	பெரிய வராடி (23)	விளரிப்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	–
12.	பெருகு	சாயரி (24)	விளரிப்பாலை	,,	சானாகி
	உறுப்பு:				
13.	அகம்	பஞ்சமம் (25)	அரும்பாலை	,,	உறுப்பு, உறழ்ப்பு, உறுப்புப் பஞ்சமம், உறழ்ப்புக் காந்தாரம் பஞ்சமம்.

* சுவாமி விபுலானந்தர் எழுதிய யாழ்நூலில் கண்டுள்ளவாறு. (பக்கம்) 142 - 149

14.	புறம்	திராடம் (26)	அரும்பாலை	”	அத்தராட்டம்
15.	அருகு	அழுங்கு (27)	மேற்செம்பாலை	,,	—
16.	பெருகு	தனாசி (28)	கோடிப்பாலை	திறம்(ஐந்திசை)	—
	குறுங்கலி				
17.	அகம்	சோமராகம் (29)	அரும்பாலை	திறத்திறம் (நான்கிசை)	குறுங்கலி
18.	புறம்	மேகராகம் (30)	அரும்பாலை	திறத்திறம் (நான்கிசை)	—
19.	அருகு	துக்கராகம் (31)	அரும்பாலை	,,	வட்டி
20.	பெருகு	கொல்லி வராடி (32)	அரும்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	கொல்லிக்குறிஞ்சி
	ஆசான்				
21.	அகம்	காந்தாரம் (33)	செம்பாலை	திறம்(ஐந்திசை)	தாரப் பண்டிறம் தாரம், தாரப்பண் ஆசான் திறம்
22.	புறம்	சிகண்டி (34)	செவ்வழிப்பாலை	பண்ணியற்றிறம்	நனிடை

23.	அருகு	தேசாக்கிரி (35)	அரும்பாலை	,,	தேசக்கிரி, சாரங்க நாட்டை, சாழங்க நாட்டை.
24.	பெருகு	சுருதி காந்தாரம்(36)	அரும்பாலை	,,	சுத்த காந்தாரம்

குறிஞ்சிப் பெரும்பண்:

25.	அகம்	குறிஞ்சியாழ் (5)	அரும்பாலை	ஏழிசைகள்	யாழ்க்குறிஞ்சி, யாமயாழ்
26.	புறம்	செந்து (6)	படுமலைப்பாலை	ஏழிசைகள்	பெருந்தகை, பெருந்தொகை
27.	அருகு	மண்டலியாழ் (7)	விளரிப்பாலை	ஏழிசைகள்	இனாநிறம், மண்டலி மண்டல யாழ்
28.	பெருகு	அரி (8)	மேற்செம்பாலை	ஏழிசைகள்	பவுரி, அரிய நாட்டம், யாழரி, மாங்கள்ளி,

திறங்கள்: நைவளம்:

29.	அகம்	நட்டபாடை (37)	அரும்பாலை	பண்ணியற்றிறம்	—
30.	புறம்	அந்தாளி (38)	”	”	அந்தாளிக்குறிஞ்சி, அந்தாளிர்

31.	அருகு	மலகரி (39)	அரும்பாலை	”	மல்லகரி
32.	பெருகு	விபஞ்சி (40)	செவ்வழிப்பாலை	”	—
	காந்தாரம்				
33.	அகம்	காந்தாரம் (41)	—	—	—
34.	புறம்	செருந்தி (42)	மேற்செம்பாலை	பண்ணியற்றிறம்	செருத்தி, செந்தி
55.	அருகு	கௌடி (43)	செம்பாலை	(ஆறிசை)	கவுடி, கவுரி, தேசிகம்
36.	பெருகு	உதயகிரி (44)	செம்பாலை ;	”	உதையகிரி
	பஞ்சுரம்				
37.	அகம்	பஞ்சுரம் (45)	அரும்பாலை	”	—
38.	புறம்	பழம்பஞ்சுரம்(46)	”	”	—
39.	அருகு	மேகராகக் குறிஞ்சி (47)	”	”	—
40.	பெருகு	கேதாளிக்குறிஞ்சி (48)	”	” ”	கேதாளி, கூதாளி, கூதளி,
	படுமலை				
41.	அகம்	கௌவாணம் (49)	படுமலைப்பாலை	திறம்(ஐந்திசை)	கவ்வாணம்

42.	புறம்	பாடை (50)	மேற்செம்பாலை	”	—
43.	அருகு	சூர்துங்கராகம் (51)	”	”	—
44.	பெருகு	நாகம் (52)	”	”	நாகயாந்தி
மருள்:					
45.	அகம்	மருள் (53)	அரும்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	—
46.	புறம்	பழந்தக்கராகம்(54)	”	”	—
47.	அருகு	திவ்வியவராடி (55)	மேற்செம்பாலை	”	தீப வராடி
48.	பெருகு	முதிர்ந்தவிந்தளம்(56)	அரும்பாலை	”	—
அயிர்ப்பு					
49.	அகம்	அருத்திர பஞ்சமம்(57)	கோடிப்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	உருத்திர பஞ்சமம்
50.	புறம்	குச்சரி (58)	”	”	தமிழ்க் குச்சரி
51.	அருகு	அருட்கிரி (59)	படுமலைப்பாலை	பண்ணியற்றிறம்	மாளுவகிரி
52.	பெருகு	நாராயணி (60)	”	”	தராவணி, தாராவணி

	அரற்று				
53.	அகம்.	குறிஞ்சி (61)	மேற்செம்பாலை	,,	குறிஞ்சி
54.	புறம்	நட்டராகம் (62)	செவ்வழிப்பாலை	,,	—
55.	அருகு	இராமக்கிரி (63)	செவ்வழிப்பாலை	,,	வேடராமக்கிரி
56.	பெருகு	வியாழக்குறிஞ்சி (64)	அரும்பாலை	,,	—
	செந்திறம்				
57.	அகம்	செந்திறம் (65)	செம்பாலை	திறம் (ஐந்திசை)	ஒலிப்பஞ்சமம், மத்தியமாரி, செந்துருத்தி
58.	புறம்	தக்கணாதி (66)	மேற்செம்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	தக்கணம், தக்கணாத்தி, வருணம்
59.	அருகு	சாவகக் குறிஞ்சி(67)	செவ்வழிப்பாலை	,,	சாவகன், சாவகன் குறிஞ்சி
60.	பெருகு	ஆநந்தை (68)	மேற்செம்பாலை	,,	அரந்தை
	மருதப்பெரும்பண்				
61.	அகம்	மருதயாழ் (9)	கோடிப்பாலை	ஏழிசை	மருதயாழ், கொடிப்பாலை, கோடிப்பாலை

62.	புறம்	ஆகரி (10)	செம்பாலை	ஏழிசைகள்	ஆகரி,யாசரி,யாசாரி
63.	அருகு	சாயவேளர்கொல்லி (11)	—	,,	பெரிய நாட்டம்
64.	பெருகு	கின்னரம் (12)	—	,,	கின்னரம்
	திறங்கள் :	**நவிர் :**			
65.	அகம்	தக்கேசி (69)	கோடிப்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	—
66.	புறம்	கொல்லி (70)	அரும்பாலை	திறத்திறம் (நான்கிசை)	—
67.	அருகு	ஆரிய குச்சரி (71)	படுமலைப்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	— —
68.	பெருகு	நாகதொனி (72)	படுமலைப்பாலை	,,	—
	வடுகு:				
69.	அகம்	இந்தளம் (73)	படுமலைப்பாலை	திறம் (ஐந்திசை)	நளுத்தை
70.	புறம்	சாதாளி (74)	அரும்பாலை	,,	சித்திரவேளர் கொல்லி
71.	அருகு	தமிழ்வேளர்கொல்லி (75)	கோடிப்பாலை	பண்ணியற்றிறம்	வேளர்கொல்லி கொல்லிகாந்தாரம்.
72.	பெருகு	காந்தாரபஞ்சமம்(76)	கோடிப்பாலை	பண்ணியற்றிறம்	கூர்ந்த பஞ்சமம்

வஞ்சி:

73.	அகம்	பாக்கழி(77)	கோடிப்பாலை	பண்ணியற்றிறம்	வஞ்சி,வஞ்சிப்பாக்கழி
74.	புறம்	தத்தள பஞ்சமம்(78)	,,	,,	அக்காளம், அக்காழம், தத்தளம்.
75.	அருகு	மாதுங்கராகம்(79)	செவ்வழிப்பாலை	,,	—
76.	பெருகு	கௌசிகம் (80)	கோடிப்பாலை	,,	கவுசிகம், செய்திறம்

செய்திறம்

77.	அகம்	பியந்தை(81)	படுமலைப்பாலை	,,	—
78.	புறம்	சீகாமரம்(82)	செவ்வழிப்பாலை	,,	காமரம்
79.	அருகு	சாரல்(83)	,,	,,	—
80.	பெருகு	சாங்கிமம்(84)	கோடிப்பாலை	,,	சாதாக்கியம், சதாங்கியம்

செவ்வழியாழ்

81.	அகம்	செவ்வழியாழ் (13)	படுமலைப்பாலை	ஏழிசை	செவ்வழியாழ், சுகதி சுகதீ
82.	புறம்	வேளாவளி(14)	மேற்செம்பாலை	,,	மவுளி, மவுராழி, மவுராளி, மௌசாளி

83.	அருகு	சீராகம் (15)	மேற்செம்பாலை	”	சீராகமரம், நள்ளி
84.	பெருகு	சந்தி (16)	மேற்செம்பாலை	”	சாந்தி, சிந்தி
	திறங்கள் நோதிறம்:				
85.	அகம்	குறண்டி(85)	படுமலைப்பாலை	பண்ணியற்றிறம்	தேவகிரி
86.	புறம்	ஆரியவேளர் கொல்லி (86)	”	”	—
87.	அருகு	தனுக்காஞ்சி(87)	படுமலைப்பாலை	”	தன்னி, தனுக்காஞ்சி
88.	பெருகு	வியந்தம்(88)	”	”	—
	பெயதிறம்:				
89.	அகம்	யாழ்பதம்(89)	செவ்வழிப்பாலை	பண்ணியற்றிறம்	பியந்தை
90.	புறம்	தாளி(90)	”	”	காளி, புங்காளி
91.	அருகு	கொண்டைக்கிரி(91)	”	”	கொண்டற்கிரி, கொண்டி, குந்தளம்.
92.	பெருகு	சீவனி (92)	படுமலைப்பாலை	”	—
	யாமை:				
93.	அகம்	யாமை(93)	படுமலைப்பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	— —

94.	புறம்	சாளர்பாணி(94)	,,	,,	
95.	அருகு	நாட்டம்(95)	,,	,,	—
96.	பெருகு	தாணு(96)	,,	,,	—
	முல்லை:				
97.	அகம்.	முல்லை(97)	—	—	—
98.	புறம்	சாதாரி (98)	படுமலைப் பாலை	பண்ணியற்றிறம் (ஆறிசை)	—
99.	அருகு	பைரவம்(99)	,,	திறம்(ஐந்திசை)	பயிரவம், வயிரவம்
100.	பெருகு	காஞ்சி(100)	,,	பண்ணியற்றிறம்	மேகாஞ்சி,
	நெய்தலி யாழ்.				
101.	—	தாரப்பண்டிறம் (101)	மேற்செம்பாலை	ஏழிசைகள்	திறனில் யாழ்,தாரப் பணம், தாரம், தாரப்பண், ஆசான் மேற்செம்பாலை.
102.	—	பையுள் காஞ்சி(102)	,,	பண்ணியற்றிறம்	—
103.	—	படுமலை(103)	படுமலைப்பாலை	பண்ணியற்றிறம்	கவ்வாணம்

பிற்சேர்க்கை IV

வெளிப்படும் பண்கள் - 19

தக்கேசி
சாதாரி
துக்கராகம்
காஞ்சி
நாட்டை
நட்டராகம்
சீகாமரம்
சிகண்டி
கொல்லவராடி
குறண்டி
தக்கராகம்
கவுசிகம்
செந்துருத்தி
தேவாளி
அந்தாளி
அந்தாளிபாடை
இந்தளம்
குந்தளம்
பழந்தக்கராகம்

வெளிப்படாத பண்கள் - 17

தன்னி
நள்ளி
தாணு
கின்னரம்
பைபுள்
அரளி
அத்தராட்டம்
தக்கணம்
அந்தி
அழுங்கு

சாரல்
மவுரி
மன்றல்
சாயரி
ஆனந்தை
சிந்தி
கூதளி

ஒலிக்குரியனவாய பண்கள்-6

பஞ்சுரம்
சாதாரி
கவ்வாணம்
குந்தளம்
ஒலிப்பஞ்சமம்
வியாழக்குறிஞ்சி

வன்மைக்குரியனவாய பண்கள்–20

பாலை
குறிஞ்சி
மருதம்
செவ்வழி
மேகராகக் குறிஞ்சி
அந்தாளி
அனுத்திர பஞ்சமம்
செந்துருத்தி
குறிஞ்சி
சிகண்டி
பழம்பஞ்சுரம்
கவுசிகம்
இந்தளம்
தக்கராகம்
சாதாரி
வேளர்கொல்லி
கொல்லிவராடி
கவ்வாணம்

சீகாமரம்
நட்டபாடை

மென்மைக்குரியனவாய பண்கள்-6

துக்கராகம்
பியந்தை
காஞ்சி
புறநீர்மை
மேகராகம்
பஞ்சமம்

இருவயனமும் (இருபாற்குமுரியன) ஆரியப் பெயர், தமிழ்ப் பெயர் நெறிக்கு உரியனவாய பண்கள்-6

காந்தார பஞ்சமம்
மேகராகக் குறிஞ்சி
தக்கேசி
கொல்லி
காந்தாரம்
சாயவேளர் கொல்லி

ஆரியப் பெயர் நெறிக்குரியனவாய பண்கள்-11

தோடி
கவுரி
மத்திய மாரி
நாட்டம்
சுத்த காந்தாரம்
இராமகிரி
தேசற்கிரி
நளுத்தை
வங்காளம்
வராடி
வயிரவம்

தமிழ்ப் பெயர் நெறிக்குரியனவாய பண்கள்–12

தக்கராகம்
பழந்தக்கராகம்
துக்கராகம்
தக்கேசி
கொல்லி
இந்தளம்
அந்தாளி
நட்டராகம்
பஞ்சமம்
காந்தாரம்
புறநீர்மை
குறிஞ்சி

இவ்விரண்டிற்கும் உரியன-6

இராமக்கிரி
கொண்டற்கிரி
தேசற்கிரி
குச்சரி
ஆரியக்குச்சரி
மேகராகம்

போலி நிறத்தன

வராடி யொப்பது வசந்தன்கொல்லி
தேசி யொப்பது சீகாமரம்
நளுத்தை என்பது இந்தளம்
குறிஞ்சி ஒப்பது அந்தாளி
பஞ்சமம் ஒப்பது பழந்தக்கராகம்
தோடி என்பது நிருபதுங்க ராகம்
மாளவ கிரி என்பது அருட்புரி ஒப்பது கவுசிகம்
தேசிகம் என்பது கவுடி
சாளர பாணி யொப்பது நாட்டம்
தக்கேசி யொப்பது காம்போதி
செந்துருத்தி என்பது செந்திரம்
சாதாரி ஒப்பது வராடி
குறண்டி என்பது தேவகிரி

பிற்சேர்க்கை -V

பண்களும் – அவற்றைப் பாடுவதற்கேற்ற காலங்களும்

எண்	காலம்	தேவதை	பண்கள்
1.	முதற்சாமம்	பிரமன்	புறநீர்மை
			காந்தாரம்
			கௌசிகம்
			தக்கேசி
			வராடி
			இந்தளம்
			சாளரபாணி
			செந்துருத்தி
2.	இரண்டாம் சாமம்	திருமால்	தோடி
			நட்டராகம்
			பஞ்சுரம்
			தாளிஅல்லது கௌடி
			பழந்தக்கராகம்
			சாதாளி
			காமரம்
			செம்பாலை
3.	மூன்றாம் சாமம்	உருத்திரன்	குறண்டி
			வயிரவம்
			பஞ்சமம்
			கொல்லி
			தேசி
			நாட்டம்
			தக்கராகம்
			சிகண்டி
4.	நான்காம் சாமம்	ஈச்வரன்	அந்தாளி
			சாவகக்குறிஞ்சி

எண்	காலம்	தேவதை	பண்கள்
			மேகராகக் குறிஞ்சி
			காந்தாரம்
			நெய்தல்
			குறிஞ்சி
			அரும்பாலை அல்லது கொல்லி
5.	ஐந்தாம் சாமம்	சதாசிவன்	குச்சரி
			மல்லாரி
			மேகராகம்
			குறிஞ்சி
			மாளுவகிரி
			தேசற்கிரி
			இராமகிரி
			கொண்டற்கிரி
6.	ஆறாம்சாமம்	சூரியன்	கவ்வாணம்
			பஞ்சமம்
			காஞ்சி
			மருள்
			வியாழக்குறிஞ்சி
			செந்து
			அந்தி
			முதிந்தவிந்தளம்
7.	ஏழாம்சாமம்	சந்திரன்	பெரியவராடி
			தீபவராடி
			கௌடி
			அரியநாட்டம்
			பெரியநாட்டம்
			காந்தார பஞ்சமம்
			வேளர்கொல்லி
			பியந்தை

எண்	காலம்	தேவதை	பண்கள்
8.	எட்டாம்சாமம்	வானமன்	அநுத்திர பஞ்சமம் அந்தாளி பாடை மனுக்கொடி முல்லை மருதம் நள்ளி யாமை தனு

பிற்சேர்க்கை—VI

மங்கலப் பண்கள்: பதினாறு

முன்னெட்டு	பின்னெட்டு
தக்கேசி	அந்தாளி பாடை
காந்தாரம்	மேகராகம்
கௌசிகம்	தக்கராகம்
சாதாளி	அரும்பாலை
புறநீர்மை	நாட்டம்
செந்துருத்தி	கௌடி
சீகாமரம்	பஞ்சமம்
சிகண்டி	வயிரவம்

பிற்சேர்க்கை VII
தேவாரத்தில் காணப்படும் பண்கள்

பண்களின் பெயர்கள்	திருவாவடுதுறை ஆதினமுறையில் அமைந்த இராகங்கள்	இக் காலத்து ஓதுவார் சிலர் கூறுவன
1	2	3
பகற்பண்கள்		
1. புற நீர்மை	ஸ்ரீ கண்டி	பூபாளம்
2. காந்தாரம்	இச்சிச்சி	நவரோஜ்
3. பியந்தைக் காந்தாரம்	இச்சிச்சி	நவரோஜ்
4. கௌசிகம்	பயிரவி	பயிரவி
5. இந்தளம்	நௌித பஞ்சமி	நாத நாமக்ரியை
6. தக்கேசி	காம்போதி	காம்போதி
7. நட்டராகம்	பந்துவராளி	பந்துவராளி
8. சாதாரி	பந்துவராளி	பந்துவராளி
9. நட்டபாடை	நாட்டைக்குறிஞ்சி	நாட்டை
10. பழம் பஞ்சுரம்	சங்கரா பரணம்	சங்கரா பரணம்
11. காந்தார பஞ்சமம்	கேதார கௌளை	கேதாரகௌளை
12. பஞ்சமம்	ஆகிரி	ஆகிரி
இரவுப் பண்கள்		
13. தக்க ராகம்	கன்னட காம்போதி	காம்போதி
14. பழந் தக்கராகம்	சுத்த சாவேரி	சுத்த சாவேரி
15. சீகாமரம்	நாத நாமக்ரியை	நாத நாமக்ரியை

1	2	3
16. கொல்லி 17. கொல்லிக் கௌவாணம்	சிந்து கன்னடா	நவரோஜ்
18. வியாழக் குறிஞ்சி	சௌராஷ்ட்ரம்	சௌராஷ்ட்ரம்
19. மோராகக்குறிஞ்சி	நீலாம்பரி	நீலாம்பரி
20. குறிஞ்சி	—	குறிஞ்சி
21. அந்தாளிக்குறிஞ்சி	சைலதேசாட்சி	சாமா
பொதுப் பண்கள்		
22. செவ்வழி	எதுகுல காம்போதி	எதுகுலகாம்போதி
23. செந்துருத்தி	மத்தியமாவதி	மத்தியமாவதி
24. திருத்தாண்டகம்	பியாகடை	அரிகாம்போதி

கலைச்சொற்கள்

பக்க எண்

அக்காளம் 119
அகத்திய பரதம் 3
அக நிலை 92,101,105,111,127
அகளம் 41
அச்சு 150,151
அசைவு 49
அஞ்சுறுப்பு 6
அடியார்க்கு நல்லார் 6,7,17, 20,23,29,36,38,51,70,77,79, 101,134,157,168,177,179, 184,193,195,197,199
அத்தராட்டம் 5,104,176
அந்தரக் கோல்கள் 78,79
அந்தாழி 109,110
அந்தாளி பாடை 102
அந்தி 103
அமரோசை 70,98,122
அம்பணவர் யாழ் 46
அயிர்ப்பு 108,113,114
அரங்கேற்று காதை 7,8,76, 77,79
அரந்தை 116,208
அரற்று 108,114,115
அராகம் 101
அருகியல் 92
அரும்பாலை 70,77,79,80,81, 82,85,86,99,104,105,107, 108,109,110,111,113,118, 127
அவிநயம் 1,2,6
அழுங்கு 105,204
அள்ளல் 51,52,53

பக்க எண்

அறிவனார் 4,7,15,16,17,18, 21,22,23,28,29,168
ஆசான் 101,108
ஆசாரி 117
ஆணி 42,43
ஆதியாழ் 38,39
ஆதியிசை 97,98
ஆம்பல் வண்ணம் 180,181
ஆயத்தம் 153
ஆயப்பாலை 71
ஆராய்தல் 52,54,55,56,57
ஆரிய குச்சரி 118
ஆரியப் பெயர் நெறிக்குரியன 24,94,95,101,124,125
ஆரியவேளர் கொல்லி 122
ஆரோசை 70,98,122
ஆளத்தி 145,150,151,152,199
இசை 1,6,97,164,188
இசை கண்டம் 171
இசைக் கரணம் 50,51
இசைக்குழல் 134
இசை நிரல்கள் 70
இசை நுணுக்கம் 17,193
இசை நுளைபு (நுழைபு) 187
இசைப் பாக்கள் 181,199
இசைப்பாணன் 188
இசை புணர் குறிநிலை 68
இசை புணர்ப்பு 26,185,188
இசை மரபு 13,14,15,95,193, 194
இசையெழு 54,55,196
இடமுறை 71,75,76,79,197

இடையீடு 186,187
இணை 56.68,69,71,74,75
இரட்டை 186
இரண்டு ஒத்துடைத் தடாரம் 175
இரவுப் பண் 99
இராசி வட்டம் 71,74
இராமக்கிரி 115,129
இளி 52,53,56,57,63,64,65,67, 73,74,78,81,83,86
இன்னியம் 35
உதயகிரி 111,129
உந்தல் 51,52,54
உரு 164
உருட்டு 90,165.178
உருட்டல் 51,53
உருத்தளி 185
உருவண்ணம் 167
உழை 52,53,57,63,64,65,67,71 73,74,75,79,81,83,85,86
உள்ளாளம் 165
உறழ்தல் 51,52,53,54
உறுப்பு 104,105
எடுத்தல் 165
என்பது 95
ஏழிசை 63,64,65,66,67,73,74
ஐந்து தொகை 6
ஒட்டுதல் 158
ஒதுங்கல் 155
ஒப்பது 95
ஒலி 90,165
ஒலிக்குரியன 94
ஒற்று 47
ஓரிசை 170
கச்சபியாழ் 36,
கடலாடு காதை 168
கட்டுதல் 158
கட்டை 155
கணம் 165
கண்ட மரபு 1,145,149
கம்பித்தல் 90,165
கருங்காலி 135,136
கருணாம்ருத சாகரம் 68,71
கருவி 34,38,145,146
கலம் 35
கவ்வரி முண்டகம் 39,41
கவ்வாணம் 126
கழை 135
காக சுரம் 155
காகுளி 155,156
காட்டாளத்தி 151,152,199
காட்டை 165
காந்தாரம் 106,107,108
காரவணி 114
கானல்வரி 51,54,196
கிழமை 152,153
கிளை 63,68.69,74,79,86
கின்னரம் 35,117
கின்னராகம் 117,127,128
கீசக யாழ் 38
கீதம் 182,183
குச்சரி 114
குடன் 44
குடிலம் 90,165,167
குடுமி 44
குடுமியான்மலை கல்வெட்டு 23,49,183
குமிழ் 37
குரல் 52,53,57,63,64,65,66,67,

71,73,74,75,78,79,81,82, 83,
84,85,86, 139
குரல் - திரிபு 70
குரு 165
குவடு 44
குவளை வண்ணம் 180,181
குழல் 134,135,137,139,140,
143
குறம் 167
குறிஞ்சி 34,108,112,113,127,
128,199
குறுங்கலி 101,105,106
குறும்போக்கு 54,55,58
குறை 152
கூடை 165,166
கூட்டிசை 186,187
கூரம் 35
கெதி 166
கேதாளிக் குறிஞ்சி 112
கேத்திராங்கம் 164,166
கேள்வி 35
கைக்கிளை 52,63,64,65,67,73,
77,78,79,80,81,82,83,84,86
கையூழ் 54,58,59
கைவழி 45,46
கொண்டற்கிரி 123
கொல்லி 118,128
கொல்லிவராடி 106
கொன்றை 37,135
கோடவதி 35
கோடிப்பாலை 70,77,79,80,
81,82,85,86,198
கோடு 37,39,40
கோட்டம் 35
கௌடி 111
சகோட யாழ் 36,43,44,195
சதுரப்பாலை 70,71
சதுரம் 70,197
சந்தம் 176
சந்தி 122,183,184
சப்த சுவரங்கள் 66,67
சமநிலைச் சிந்து 169,172
சம பாதம் 168,174
சமன் 152
சரீர வீணை 145
சவலை 168,173
சாதாக்கியம் 121
சாதாரி 125
சாயரி 104
சாயவேளர் கொல்லி 117
சாரங்க தேவர் 13
சாரல் 121
சாரீர வீணை 145
சாவகன் குறிஞ்சி 116
சாளர பாணி 24,124
சாளவம் 47,164,167,170,189
சிகண்டி 107
சித்திர வண்ணம் 178,181
சித்திர வேளர் கொல்லி 119
சித்து 167
சிந்து 168,169,170,172,173,199
சினேந்திர மாலை ஆருட
சக்கரம் 74
சீகாமரம் 120
சீராக மரம் 122
சீர் கோடிகம் 25,100
சீவணி 124
சீறியாழ் 36,45,46,195
சுத்த காந்தாரம் 108

சுத்தம் 47,164,166,167,181, 189
சுருதி 166
சூர்துங்கராகம் 26,112
செங்கோட்டியாழ் 36,45,46, 195
செந்திறம் 115
செந்து 108
செந்துறை 168,169,174
செம்பாலை 70,77,80,81,82,83, 84,85,86
செய்திறம் 120,121
செருந்தி 111
செலவு 54,58
செவ்வழி 121,122,123,124
செவ்வழிப்பாலை 70,77,79, 80,81,82,85,86
சென்னியன் 188
சேந்தன் திவாகரம் 17,92
சோனகம் 167
தக்கணாதி 116
தக்கராகம் 101
தச நாடிகள் 147
தச வாயுக்கள் 148
தசாக்கரி 107
தணக்கு 37
தண்டி 40
தந்திரி 39,41
தந்திரிகரம் 47
தமிழ் 47,164,166,167
தமிழ்ப் பெயர் நெறிக்குரியன 24,95,110
தமிழ் வேளர் கொல்லி 119
தனாசி 105
தனுக் காஞ்சி 123
தாக்கு 90,165
தாணு 124
தாண்டவச் சிந்து 3
தாது 164
தாரப்பணம் 125
தாரம் 52,53,57,63,64,65,67, 74,77,79,80,81,83
தாள சமுத்திரம் 13,15,193
தாள மரபு 2,11,159
தாளம் 1,6,159
திரள் 166
திரிகோணப்பாலை 72
திரிபாதம் 173
திருத்தமரபு 1,12
திருப்பாட்டு 27,185
திருப்புகழ் 169,172,178,199
திவவு 41
திறத்திறம் 5,91,127,198
திறம் 5,90,91,127,198
தீப வராடி 113
துக்கராகம் 105
துடி 165
துத்தம் 52,53,57,63,64,65,67, 73,77,79,80,81,82,83,86
தும்புருயாழ் 38
துருதம் 165
தூசி மட்டம் 177
தூம்பு முகம் 137
தெய்வ சிகாமணிக் கவுண்டர் 3,4,21
தெருட்டல் 51,53
தேவதாளி 100

தேவபாணி 168,169.175, 176, 177
தேவாரப் பண்கள் 99,197
தேவாரம் 99,182,199
தைவரல் 54,55,57
தொட்டுக்கோள் 186,187
தொழிற்கை 36,50
தோடி 24,25,100,101
நட்டராகம் 115
நட்பு 55,68
நரம்பு, 36,38,39,49,50,55,56, 57,67,68,69,78
நலிதல் 165
நல்லொழுக்கப் பாரணை 158
நவிர் 117
நழுவல் 155
நாகதொனி 118
நாகராகம் 101
நாகம் 113
நாட்டம் 124
நாதம் 165
நாரதயாழ் 36
நிமிடம் 165
நிருத்தம் 1,2
நிலை நிறுத்துதல் 153
நிறத்த மரபு 1
நிறவாளத்தி 151
நிறம் 164,165,166,167
நிறை 152
நிறைநிலை 171
நீர்மை 152,153
நுளைதல் 187
நெய்தல் 187
நெறிநிலை 171
நேர்திறம் 103
நைவளம் 109,110
நோதிறம் 122
பகற்பண் 99
பகை 68,69,72
பச்சை 41
பஞ்சமரபு 1,2,5,6,11,14,15, 16,17,19,21,22,23,24,25,27, 28,29,193, 194
பஞ்சமாசத்தம் 158
பஞ்சமம் 23,66,67,104,119
பஞ்சுரம் 111
படுத்தல் 165
படுமலைக் கவ்வாணம் 112
படுமலைப் பாலை 70,77,80, 81,82,84,86
பட்டடை 51
பணை 135
பண் 90,91,92,93,94,95,97,98, 198
பண்ணல் 54,55
பண்ணாளத்தி 151,152,199
பண்ணியற்றிறம் 91,93,198
பண்நீர்மை 152
பதுமம் 44
பத்தல் 39,40,41
பத்திய வண்ணம் 180,181
பரத சங்கிரகம் 11,12,15,193
பரிவட்டணை 54,55
பரிவாதினி 49
பல்லியம் 143
பழந்தக்கராகம் 113
பழம் பஞ்சுரம் 111
பனுவற்றொகை 16
பாத்திப வண்ணம் 180
பாடை 112

பாயிரம் 1,5
பாய்தல் 187
பாரணை 150,151
பாலை 70.71,72,73,74,75,197
பாலைப்பெரும்பண் 99
பிங்கல நிகண்டு 17,134
பிள்ளையார் பாணி 176
பின்ன பஞ்சமம் 120
பீர் கண்டம் 171
புங்காளி 123
புட்டில் 39,41
புரைத்தல் 155
புல்லாங்குழல் 135
புள்ளி மூலம் 44
புறநிலை 92,127
புற்கலம் 146
பெயர்திறம் 123
பெரியவராடி 104
பெருகியல் 92
பெருக்குரல் 155
பெருங்கலம் 38
பேரியாழ் 36,38,39
பையுள் காஞ்சி 125,127
பொதுப்பண் 99
போர்வை 41
புலுதம் 165
மகதியாழ் 36
மகரயாழ் 36,42
மகரவீணை 42,48
மகாபாரத சூடாமணி 66
மங்கலப் பண்கள் 97
மங்கல வாத்தியம் 143
மண்டலம் 108
மண்டைப் பாணன் 188
மரக் கொம்பு 38
மருதம் 34
மருப்பு 40
மருள் 108,113
மலகரி 110
மவுரி 108,109
மறம் 167
மன்றல் 103
மாடகம் 42,43
மாத்திரை 165
மாது 164,187
மாதுங்கராகம் 120
மாயோண்பாணி 176
மாளுவ கிரி 114
மிடற்றிசை 145
மித்ர ராகங்கள் 128
முகத்தல் 187
முடிவு 152
முதல் 152
முதல்வாய் 137
முதனடை 165,166
முதிர்ந்த விந்தளம் 113
முத்திரை 137
முரளி 134
முல்லை 124
முறை 152
முறைகண்டம் 172
முன்னிசை 171
மூவிசை 34, 145
மெட்டுக்கள் 48,49,50.
மெலிவு 152
மென் இயக்கு 140
மென் முருக்கு 37
மேகாஞ்சி 125,127

யாமை 124
யாழ் மரபு 1,34 ,35
லகு 165
லவம் 165
வகுணை 166
வங்கியம் 134,143
வஞ்சி 119
வடித்தல் 51,52
வடுகு 184
வட்டப்பாலை 63,72,75,78
வட்டப்பாலை மண்டலம் 72
வணர் 42
வண்ணம் 168,178,179,180,181
வம்புறு மரபு1,77
வம்ஸி 134
வயிரவம் 125
வரையறை 153
வர்ணமெட்டு 164
வலமுறை 75,81
வலிவு 152
வறுவாய் 41
வன் இயக்கு 140
வாச்சியம் 1,159,194
வாரம் 165,166
வாரி 134
வார்தல் 51,52
விட்டோசை யாகுதல் 158
விந்து 165
வியந்தம் 123
வியனிலைச் சிந்து 169
வியர்த்தி 166
வியாழக் குறிஞ்சி 115
விரல்பலகை 49
விலங்கல் 155
வில்யாழ் 37
விபஞ்சி 48,111
விளரி52,53,63,64,65,67,74,77
78,79,80,81,82,83
விளரிப்பாலை 70,71,77,79,80,
81,82,85
விளையாட்டு 54,57
வீணை 35,47,48,50,150
வெண்டுறை 168,174
வேடு 167
வேணு 135
வேய்ங்குழல் 135
வேளாவளி 121
வேறுபாடு 186
வேனிற்காதை 68,76,79,80

பிழை — திருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
7	பாதிப்பாசிரியர்	பதிப்பாசிரியர்
8	மரயாழ்பு	யாழ்மரபு
12	இடை டுயீ	இடையீடு
13	துணைநூலாப்	துணைநூலாகப்
32	Inscriptian	Inscription
39	வடிவு அளவு	வடிவ அளவு
39	புட்டி	புட்டில்
41	அமைக்கப்பட்டிருந்தாக	அமைக்கப்பட்டிருந்ததாக
65	குறுப்பிடப்பட்டுள்ளன	குறிப்பிடப்பட்டுள்ளன
68	குறுப்பிடத்தகுந்தது	குறிப்பிடத்தகுந்தது
69	13 அல்லது 9 சுருதிகள்	13 அல்லது 9 சுருதிகள்
70	குறிகின்றது	குறிக்கின்றது
74	எழிசையின்	ஏழிசையின்
83	25 சிலப்பதிகாரத்தின்	25 சிலப்பதிகாரத்தின்
91	பயன்படுகிறன	பயன்படுகின்றன
92	செல்வழியாழ்	செவ்வழியாழ்
95	அதற்குறிய	அதற்குரிய
96	பண்கோள	பண்கொள
98	வசையறுக்கப்பட்ட	வரையறுக்கப்பட்ட
100	உரையாசிரியாரன	உரையாசிரியரான
105	ஈசனாவும்	ஈசனாகவும்
106	கொல்லிவாரடி	கொல்லிவராடி
112	குறிப்பிட்டுள்ளது	குறிப்பிடப்பட்டுள்ளது
113	குறிபிப்டபப்ட்டுள்ளது	குறிப்பிடப்பட்டுள்ளது
113	பாடப்பட்வருகின்றன	பாடப்பட்டுவருகின்றன
113	யிறந்த	பிறந்த
140	மெலியர	மெலிய
140	த7ற்போதைய	7தற்போதைய
157	அடைத்த	அமைத்த
165	முதனிலை	முதனடை
165	திறள்	திரள்
179	எஃகுமே விலங்கு	எஃகுமேவிலங்கு

166643
NR441
N89

22A
2-62